# தேசவளம்

பேராசிரியர்
பொன். பாலசுந்தரம்பிள்ளை

மணி விழாச்சபை
யாழ்ப்பாணம்.
2002

# தேசவளம்

பேராசிரியர்
பொன். பாலசுந்தரம்பிள்ளை

தொகுப்பாசிரியர்கள்: கலாநிதி எஸ். சிவலிங்கராஜா,
திரு. ந. விஜயசுந்தரம்

மணிவிழாச்சபை,
குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
2002

Title : **THESA VALAM**

Author : ***PROFESSOR P.BALASUNDARAMPILLAI***

Address:- ***Vice Chancellor, University of Jaffna.***

First Edition: ***23-03-2002***

Copy Right: ***AUTHOR***

Printed: ***THIRUVALLUVAR PRESS, NALLUR.***

Publishers: ***DIAMOND JUBILEE COMMITEE***

Price: **200/=**

# வெளியீட்டுரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை அவர்களின் அகவை அறுபது விழாவைக் கொண்டாட வேண்டும் என்று, ஆசிரியர் க.சிவராமலிங்கம் தலைமையிலான மணிவிழாச் சபை தீர்மானித்தது. அவ்விழாவின் நிலையான தடமாக அவர் எழுதிய கட்டுரைகள் சிலவற்றைத் தொகுத்து வெளியிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் அவ்வப்போது எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடுதல் மாணவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் பயனுடையதாக இருக்கும் என்று கருதினோம்.

புவியியல்துறையின் மூத்த முதுநிலைப் பேராசிரியராகத் திகழும் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை பன்முக ஆளுமை கொண்டவர். நிர்வாகக் கடமைகள் அவரது நேரத்தை முழுமையாக விளங்கிய போதிலும் அவர் கற்றலிலும் கற்பித்தலிலும் ஆய்வுசெய்வதிலும் அதிக ஆர்வம் காட்டி வருபவர்.

பேராசிரியர் தனித்தும் தமது மாணாக்கர்களுடன் இணைந்தும் எழுதிய கட்டுரைகள் சில இத்தொகுப்பிலே இடம்பெறுகின்றன.

ஆய்வுகள் கூட்டுமுயற்சியாகச் செய்யப்பட வேண்டுமென்பதில் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை அதிக கரிசனை காட்டுபவர். மூத்த பேராசிரியர் ஒருவரின் வழிகாட்டலில் இளைய தலைமுறையினர் சிறந்த ஆராய்ச்சிசெய்து முன்னேற வேண்டுமென்று விரும்புபவர் மூத்த பேராசிரியர்கள் தமது ஆளுமையை அடுத்த தலைமுறையினரிடம் கையளித்துத் தமது வழியில் அவர்களையும் உயர்த்தவேண்டும் என்ற பெருமனம் கொண்டவர்.

இக்கட்டுரைத் தொகுப்பு பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையின் பல்துறை அறிவாளுமையைப் புலப்படுத்துவதாக அமைகின்றது.

மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் இத்தொகுப்பு நன்கு பயன்படும் என்று உறுதியாக நம்புகின்றோம்.

கட்டுரைத் தொகுப்பு முயற்சிகளுக்கு எல்லாவகையிலும் எமக்கு உதவிய திருமதி இ.பால சுந்தரம்பிள்ளை அவர்களுக்கும் மூதறிஞர் கலாநிதி சொக்கன் அவர்களுக்கும் மயிலங்கூடலூர் பி.நடராஜன் அவர்களுக்கும் என்றும் நன்றியுடையோம்.

இந்நூலை அழகுற அச்சிடுவதில் பேருதவி புரிந்த திருவள்ளுவர் அச்சகத்தினருக்கும் அச்சக ஊழியர்களுக்கும் நன்றி உரியதாகுக.

**- தொகுப்பாசிரியர்கள்.**

**கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா,**

**ந.விஜயசுந்தரம்**

## பொருளடக்கம்

1 யாழ்ப்பாண மாவட்ட இடஞ்சார்பு அபிவிருத்தியில்
தேர்தற்றொகுதிகள் - உள்ளூராட்சிப் பிரிவுகள்....

2) துணைவேந்தர், பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை
அவர்கள் வாழ்வும் பணியும்
யாழ்ப்பாண மாநகர அபிவிருத்தி

3) யாழ்ப்பாண நகரில் நீர் நிலைகளின் அபிவிருத்தி வாய்ப்புகள்

4) ஊர்காவற்றுறைத் தேர்தற்றொகுதித் தேர்தல்கள் 86

5) சம்மாந்துறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவின்
அபிவிருத்தி
ஒரு புவியியல் நோக்கு

6) நிலப்பயன்பாடு - ஓர் அறிமுகம்

7) பாடசாலைகளில் புவியியற்கல்வியின் இன்றையபோக்கும்
இதனைக் கற்பித்தலில் கவனிக்கவேண்டிய சில குறிப்புக்கள்


8) அபிவிருத்திப் பிரச்சினையும் குடிசனத்தொகையும் 3ஆம் உலகம்

9) ஜேர்மனி 90 களுக்கு முன்னரும் 90களுக்கு பின்னரும்

10) பலஸ்தீனப் பிரச்சினையும் வேறுபட்ட நிலைப்பாடுகளும்



லண்டன், ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில்



துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை

துணைவேந்தர், பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்

# வாழ்வும் பணியும்

கலாநிதி. என். சண்முகலிங்கன்

எங்கள் பண்பாட்டின் உயர் தனி ஆளுமையாய், காலம் எங்களுக்குத் தந்த உன்னதமாய், துணைவேந்தர் பேராசிரியர் பொன்பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் தரிசனம் எங்களுக்கு வாய்த்திருக்கிறது.

## *அறிவுத் துணிவும், ஆற்றலின் உறுதியும்*

அறிவுத் துணிவு, ஆற்றலின் உறுதி, அயரா உழைப்பு, அனைத்தையும் நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் நேர்சிந்தனை, அனைவரிடத்தும் நிறைவான அன்பு –

எங்கள் துணை வேந்தரின் ஆளுமை முழுமைக்கான அடிப்படைகளால் நெஞ்சில் நிறையும் பண்புகள் அவை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறைப் பேராசிரியராக உலகளந்த அவரின் கல்வி ஞானம், தொடரும் கால வெளியிடை கலைப் பீடாதிபதி, துணைவேந்தர் எனும் பாத்திரங்களின் வழி பல பயனான கனிகளை எங்கள் சமூகத்திற்காய்த் தரும்.

மிக நெருக்கடியான ஓர் காலச் சூழலிலே, அழிவுக் குவியல்களிலிருந்து ஆக்கம் காணும் எங்கள் சமூகத்தின் எழுச்சியிலே, துணைவேந்தர் பேராசிரியர் பொன்பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் பங்கும் பணியும் அளவிலாதது. அந்த ஆற்றலைப் போற்றவே இந்த 60ம் ஆண்டு நிறைவு மணிவிழா மங்கலம்.

## இளமையில் வாய்த்த சமூகமயமாக்கம்

பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் ஆளுமை முழுமைக்கான அடிப்படைகளை, இளமைக்காலமுதல் அவருக்கு வாய்த்த சமூகமயமாக்கச் சூழல்களிடையே காணமுடியும்.

யாழ்ப்பாணத்தின் மரபு வழிக் கிராமம் வேலணை. அங்கு நம் பண்பாட்டின் விழுதுகளாய் விளங்கிய ஆசிரியர் பண்டிதர் பொன்னுத்துரை – ஆசிரியை நாகரத்தினம் தம்பதிகளின் இரண்டாவது புதல்வனாக 1941 ஏப்ரல் 29ம் திகதி பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் தோற்றம் நாகேஸ்வரி, கல்யாணசுந்தரம், கமலாதேவி, விமலேந்திரன், பாலேந்திரன், விமலாதேவி, யோகேந்திரன், ரவீந்திரன், புவனேந்திரன், நிர்மலாதேவி, வத்சலாதேவி எனப் பதினொரு சகோதரங்களுடனான அன்புப் பிணைப்பாய்ப் பாலசுந்தரம்பிள்ளையின் பிள்ளைப் பருவம் அழகாய் அமையும்.

அப்பா – அம்மா தந்த ஆசிரிய விழுமிய சூழலும், அன்புக் கனிவும், சகோதரங்களுடனான கூட்டு வாழ்வுப் பயிற்சியும் துணை வேந்தருக்கு வாய்த்த ஆரம்பப் பள்ளிகள் எனலாம். அர்ப்பணிப்புடனான கடமை உணர்வு, ஆசிரியப் பணிக்குமப்பாலான சமூக மேம்பாட்டு அக்கறை எனத் தந்தை வழி, தனையன் கண்ட பண்புகள் பல.

ஊர்காவற்றுறைக் கிராமியச் சூழலிலேயே கரம்பன் சண்முகநாத வித்தியாசாலையிலும் (1946 – 1949), புனித அந்தோனியார் கல்லூரியிலும் (1950–1953), ஆரம்பக்கல்வி அமைந்து சிறந்தது. தொடரும் கனிஷ்ட உயர்தரக் கல்விக் களமாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (1954–1960) விளங்கியது.

நல்ல பல ஆசிரியர்களின் அன்பும் வழிகாட்டலும் யாழ்.இந்துக் கல்லூரி அனுபவமாய் மேலும் செழுமை தரும். எட்டாம் வகுப்பு முதல் பல்கலைக் கழகப் புகுமுகம்வரை புவியியலுக்கான முதல் பரிசு பொன்.பாலசுந்தரம் பிள்ளைக்காகும். இந்தப் புவியியல் துறை அறிவும் ஆர்வமும் தனக்கு அன்று வாய்த்த புவியியல் ஆசிரியர்களான திரு.எம்பி.செல்வரத்தினம், திரு.வி.மகாதேவா ஆகிய ஆசிரியர்களின் வழியது

என்றவாறே பேராசிரியர் இன்றும் தன்னை வழிப்படுத்திய ஆசான்களை நன்றியுடன் நினைவு கூர்வார். பேராசிரியரின் இளமைக் காலச் சமூக, மனவெழுச்சி வளர்ச்சியிலே விடுதியாசிரியராகப் பணிபுரிந்த திரு. கே.எஸ்.சுப்பிரமணியம் மற்றும் க.சிவராமலிங்கம் மாஸ்டர், கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் மாஸ்டர் என நீளும் ஆசிரிய குழாத்தின் அன்பும் அரவணைப்பும் என்றும் குன்றாது கிடைக்கும்.

மிக இள வயதிலேயே விடுதி வாழ்க்கை, சுயமாக முடிவுகளை எடுக்கும் துணை வேந்தரின் தற்றுணிவுக்கான பயிற்சிக்களமாக இந்தக்காலம் அமைந்திருக்க வேண்டும். அவ்வாறே கூட்டு வாழ்வின் நலன்களை மேலும் உரமாக உணரவைத்த காலமுமாகலாம்.

*பல்கலைக்கழகக் கல்வி*

பேராசிரியரின் பல்கலைக்கழகக் கல்வி, பேராதனையிலமைந்த இலங்கைப் பல்கலைக்கழகத்து அமையப் பெறும். (1961–1965) புவியியல் இவரது சிறப்புக்கலைத் தேர்வாகும். பேராசிரியர்கள் குலரத்தினம், செல்வநாயகம், பண்டிதரத்ன ஆகியோரின் வழிகாட்டலிலே புவியியல் அறிவு வளர்ச்சி பெறும்.

இந்தக் காலப்பகுதியிலேயே இவரின் வாழ்க்கைத் துணைக்கான தேர்வும் நிகழும். பேராதனைப் பல்கலைக்கழகத்துத் தமிழைச் சிறப்புக் கலையாக தேர்ந்து கற்ற இராஜலக்ஷ்மியுடனான மணவாழ்வின் கனிகளாக ஜனகன், ஜயந்தி, முரளீதரன் என மூன்று குழந்தைச் செல்வங்கள் அர்த்தங்கள் சேர்க்கும்.

பட்டப்படிப்பினைத் தொடர்ந்து 1965முதல் பேராதனைப் பல்கலைக் கழகத்திலேயே இள நிலை விரிவுரையாளராக இவரது ஆசிரியப் பணி தொடங்கும். 1972ல் உயர்பட்டப்படிப்பினை ஐக்கிய ராச்சியத்தின் புகழ்பூத்த டர்ஹம் (Durham) பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளும் வாய்ப்பு கைவசமாகும். தற்போது அபடீன் பல்கலைக்கழகத்துப் பேராசிரியராக விளங்கும் பி.டி.கிளாக் (Prof. B.D.Clark) பேராசிரியர் ஜோன் கிளாக் (Prof John.Clarke) ஆகியோரின் வழிகாட்டலில் நகரப் புவியியலில் கலாநிதிப்பட்ட ஆய்வு அனுபவம் கிடைக்கும் "வடபகுதியின் மைய

இடங்களின் படிமுறையாக்கம்" (The Hierachy of Central Places in Northern Ceylon) என்பது ஆய்வுப் பொருளாகும். கலாநிதிப் பட்டத்தினைத் தொடர்ந்து பேராதனையில் முதுநிலை விரிவுரையாளர்ப் பணி தொடரும். அடுத்த கட்டமாக மிக இளவயதிலே, 1980 இல் எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் புவியியல்துறைப் பேராசிரியராக இவரது அறிவும் ஆற்றலும் எங்களுக்காகும்.

## *ஆசிரிய வாண்மையும் ஆய்வு ஆர்வமும்*

பேராசிரியரின் ஆசிரிய வாண்மையிலே, பல இளைய புவியியல் அறிவுக் குழந்தைகள் வளர்ச்சி பெறும். அவரது ஆய்வுத் திறத்தாலே எங்கள் பிரதேசம் பற்றிய புதிய புதிய அறிவு வெளிச்சங்கள் எம் வசமாகும்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் அவர் முன்வைத்த ஆய்வுக் கட்டுரைகள், உலக ஆய்வு அரங்கங்களிலும் உள்ளூர் ஆய்வுப் பீடங்களிலும் முதன்மைபெறும். இந்தவகையில் "இலங்கையின் பிரதேச பிரச்சினைகளும், பிரதேச திட்டமிடலும்" (Regional Problems and Regional planning in Sri Lanka) என்ற தலைப்பில் 1986 இல் ஜேர்மனிய டிரையர் பல்கலைக் கழகத்தில் (University of Trier) எங்கள் பேராசிரியர் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரை இன்றைய சமூக மேம்பாடு, சமூக திட்டமிடல் ஆய்வறிவுப் புலங்களில் சிறந்த வழிகாட்டியாகக் கொள்ளப்படும்.

பிரதேச திட்டமிடல் தொடர்பான பேராசிரியரின் ஆய்வு ஆர்வம், தென்னாசிய பிராந்தியம் தொடர்பான அவரது ஆழ்ந்த ஈடுபாட்டின் வழியது. இந்த வகையில் பாகிஸ்தான் குடித்தொகைப் புவியியல் ஆணையம் ஒழுங்குசெய்த ஆய்வரங்கில் அவர் சமர்ப்பித்த "தென்னாசிய மேம்பாடும் குடித்தொகையும்" தொடர்பான ஆய்வுக் கட்டுரையும் குறிப்பான கவனத்திற்குரியதாகும். இதுபோன்றே நேபாளப் பல்கலைக் கழகம், மைசூர் பல்கலைக் கழகம் போன்றவற்றில் இக் காலத்து நிகழ்ந்த ஆய்வரங்குகளிலும் பேராசிரியரின் ஆய்வநுபவங்கள் பதிவு பெறும்.

இவ்வாறாக உலக ஆய்வரங்குகளில் தடம்பதித்த பேராசிரியரின் ஆய்வு முடிவுகள், நிறைந்த கள ஆய்வுகளின் – அவதானங்களின் வழியது. எங்கள் தமிழின் தேச மரபு வழிக்கிராமங்கள் அனைத்தையும்,

வடதீவுகளிலிருந்து குமண கிராமம் வரை ஆழத் தரிசித்த அனுபவ ஞானமே எங்கள் பேராசிரியரின் அறிவுப் பலமாகும். இன்றைய எங்கள் அரசியலின் மைய நிலைப் பிரச்சினைகளான குடியேற்றத் திட்டங்கள், அவற்றின் வழியான குடித் தொகை - பண்பாட்டு மாற்றங்களை விளங்கிக் கொள்ளுதலில் பேராசிரியரின் அரசியல், புவியியல் சார் கட்டுரைகள் பெரிதும் துணையாவன. இந்த வகையில் திருகோணமலையின் புவிசார் அரசியல் இனத்துவ முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தும் பேராசிரியரின், Trincomalee, Geo - Politics, Ethnic Dimension and Development Potential எனும் ஆய்வேடு மிகுந்த கால முக்கியத்துவம் பெறுவது.

இவ்வாறாக, சுதேச எல்லைகளைத் தெரிந்த, தெளிந்த இவரின் புவியியல் ஞானம், உலக எல்லைகள் வரை நீள்வது. சர்வதேச விவகாரம் அவரது ஆர்வப் பரப்பாகும். இன்றைய உலகின் நெருக்கடிகளை, இட அமைவுசார், இன அமைவுசார் பிரச்சினைகளை நேரடியான அனுபவ அவதானமாகத் தரும் அவரின் வல்லமையை அவர் கலந்துகொள்ளும் எங்கள் ஆய்வரங்குகள் பலவற்றிலும் காணமுடியும். பல்வேறு பல்கலைக்கழகக் கடமைகளிடையேயும் ஒரு நடமாடும் நூலகமாக, அறிவுப் பகிர்வுக்கான களமாகப் பேராசிரியர் அவர்களின் கருத்தரங்குகள் நிறைந்த பயன்விளைவிப்பன.

*செயற்படும் அறிவும் உயர்கல்வி மேம்பாடும்*

அறிவு என்பது செயற்படும் அறிவாக வேண்டும் என்பது இன்றைய கல்வியியல் இலக்கு. பேராசிரியரின் கல்வி நிர்வாகப் பணிகளிடை தன் அர்த்தங்களைக் காணும். ஏறத்தாழ 10 ஆண்டுக் காலப் புவியியல் துறைத் தலைமைப் பொறுப்பு (1981-1991), தொடர்ந்து 2 தடவைகளில் கலைப் பீடாதிபதியாகத் தெரிவு (1991 -1997), பல தடவைகளில் பதில் துணை வேந்தராகவும் பின் 1977முதல் இன்றுவரை இரு தடவைகள் துணைவேந்தராகவும் முதன்மைத் தேர்வு. பேராசிரியரின் செயல் வீரத்தின் ஆக்கக் களங்களாய் இந்த நிர்வாகப் பதவிகள் அனைத்துமே சிறப்புப் பெறும். பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் சிறந்ததோர் கல்விப் புலமாகப் புவியியல் துறை கண்ட வளர்ச்சியிலிருந்து இலங்கைப் பல்கலைக்கழகங்களின் இன்றைய கலைப்பீடங்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாக, யாழ்பல்கலைக் கழகக் கலைப்பீடம் காட்டும் மேம்பாடுகள் வரை எங்கள் பேராசிரியரின் தடங்கள் பதிவு பெறுவன.

இன்றைய உயர் கல்விச் சீர்திருத்தங்கள் அவாவி நிற்கும் பல அடிப்படை மாற்றங்களை அன்றே தீர்க்க தரிசனத்துடன் யாழ். பல்கலைக் கழகம் காண உந்து சக்தியாக இருந்தவர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளை. இன்றைய எங்கள் காலத்தின் ஆதார சுருதிகளை உணர்ந்த பேராசிரியரின் ஆளுமை வழிகாட்டலில், ஒருங்கிணைந்த செயற்பாட்டில், பண்பாட்டின் செழுமைக்கான கற்கைநெறிகள் பலவும் எங்கள் பல்கலைக் கழகத்தில் விரிவான இடத்தினைப் பெறும். அவ்வாறே பண்பாட்டினை அறிவின் வழி புதுக்கும் புத்தம் புதுக் கல்வி நெறிகளும்.

எங்கள் பண்பாட்டின் தனித்துவ அடையாளங்களான இசையும் நடனமும் இராமநாதன் நுண்கலைக்கழக மேம்பாட்டின் வழி உறுதியான தளத்தினையும் உயர்வினையும் பெறுதலில் எங்கள் பேராசிரியரின் பங்கும் பணியும் குறிப்பிடத்தக்கன. அவ்வாறே சித்திரமும் வடிவமைப்பும் புதிய கலை வரவாகும். மரபுவழிச் சித்தாந்த சிந்தனைகளுக்கான களங்களும் விரிவுபெறும். சமாந்தரமாகப் புத்தம்புது அறிவுகளும் எங்கள் வசமாகும்.

இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றிலே, நீண்ட காலமாக உணரப்பட்ட சமூகவியல் கல்வி தமிழில் கைவசமாகும். கூடவே உளவியல், மனைப் பொருளியல், மானுடவியல் எனப் புதிய அறிவுக் குழந்தைகள் எங்கள் அறிவுப் புலத்து வரவுகளாகும்.

மட்டுப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகக் கல்வி வாய்ப்புக்களை மேலும் இன ரீதியாகத் தடைசெய்யும் தரப்படுத்தல் முதலாய பாரபட்ச நிலைமைகளில் தளர்ந்து போன எம் இளைஞர்களின் உயர்கல்விக்கென வெளிவாரிப்பட்டப் படிப்பு வசதியினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பித்ததிலும் எங்கள் பேராசிரியர் துணையாய் விளங்கியவர். தன் கலைப்பீடப் பணிகளோடு, வெளிவாரிப் பட்டப்படிப்பின் இணைப்பாளராகவும் தொடக்கப் பணிகளை நெறிப்படுத்தியவர்.

இவ்வாறே பல்கலைக்கழகச் சுவர்களுக்கு அப்பால் பல்வேறு வாழ்க்கை நிலைமைகளினாலும் கல்வி வாய்ப்புக்களை இழந்து போனவர்களின் அறிவுக் களமாகப் புறநிலைப் படிப்புக்கள் அலகினை ஆரம்பித்த பேராசிரியரின் முயற்சியும் இன்று தேசம் தழுவியதாக விரிவு பெறும். இந்த வகையில் தொழிலாளர்களின் மேம்பாட்டுக்கெனத் தொடங்கப்பட்ட கற்கை நெறியும் இன்று புதிய வளர்ச்சி நிலைகளை எய்தும்.

புதிய கல்வி நெறிகளைப் போலவே, புதிய துறைகளின் தோற்றத்திற்கும், பீடங்களின் வரவுக்கும் துணைவேந்தர் எடுத்த முயற்சிகளை அண்மைய தன் வாழ்த்துச் செய்தியிலே முன்னாள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் விதந்து குறிப்பிடுவார். இந்த வகையில் அரசறிவியல் – சமூகவியல்துறை, முகாமைத்துவ – வர்த்தக பீடம், உயர் பட்டப் படிப்புக்கள் பீடம் என்பன பல்கலைக் கழக மேம்பாட்டின் புதிய வெளிப்பாடுகளாகும். உயர்பட்டப் படிப்புக்கள் பீடம் இன்று பல்கலைக் கழகத்தின் உயர் ஆய்வுக் களமாக விளங்குவதுடன் புதிய பல கற்கை நெறிகளுக்கும் காலமாகும். அண்மையில் வடிவம் பெற்ற பண்பாட்டியல் முதுமாணிக் (M.A in Cultural Studies) கற்கைநெறியின் தோற்றத்திலும் எங்கள் துணை வேந்தரின் ஆர்வமும் வழிகாட்டலும் உடனிருக்கும்.

இவற்றினை விட உடலியல்துறைக் கல்வி அலகு (Physical Education Unit), மீன்பிடித்துறைக் கற்கைக்கான மேம்பாட்டு மையம் (Centre for Development of Fisheries) எனும் பேராசிரியரின் நெடுநாளைய கனவுகளும் இன்று மெய்ப்படும். பழைய மாணவர் சங்கம், பழைய மாணவர் செயலகம் (Alumni Association, Alumni office), மாணவர்களுக்கான வழிகாட்டல் அமைப்பு (Career Guidance Office), ஆசிரிய மேம்பாட்டு மையம் (Staff Development Centre) எனப் பல்கலைக்கழக மேம்பாட்டுக்கான புதிய அமைப்புக்களை உருவாக்கி எதிர்கால மேம்பாட்டுக்கு வழிசமைத்தலிலும் பேராசிரியரின் திட்டமிடல் திறன் புலப்படும்.

பல்கலைக்கழக உட்கட்டமைப்பு, சூழல் அழகு என்பவற்றின் மேம்பாட்டிலும் எங்கள் பேராசிரியரின் அர்ப்பணிப்பும் பணிகளும் அளவிட முடியாதவை. போரின் கொடு முகத்தில் ஆழப் புதைத்த கண்ணி வெடிகளுக்கு அஞ்சாமல் அறிவுத் துணிவோடு பல்கலைக் கழகத்தையும் அது சார்ந்த பிரதேசத்தையும் எங்கள் எதிர்கால நம்பிக்கைக்கான சின்னமாக்கியதில் எங்களின் இன்றைய சமூக வரலாற்றில் சிறப்பான இடம் பெறுகின்றார். ஒவ்வொரு புத்தாக்கப் படிமுறையிலும் உடனிருந்து நெறிப்படுத்தல் தினமும் காலையில் வளாகத்தின் சூழல் அழகை – தூய்மையை உறுதிப்படுத்திய பின்னரே துணைவேந்தர் அலுவலகக் கடமைகள் ஆரம்பமாகும். சுத்திகரிப்புத் தொழிலாளரிலிருந்து கட்டடக்கலைப் பொறியியலாளர் வரை துணைவேந்தரின் நேரடி உற்சாகப்படுத்தலில் தம் கடமைகளில் நிறைவினைக்காண முடிகின்றது. புனர்வாழ்வு, புதுவாழ்வு

எனும் நம்பிக்கையுடன் புத்தம்புதிய உள்ளகக்கட்டமைப்புகள், துணை வேந்தரின் அயராத முயற்சியினால் நீண்ட காலத்துக்குப் பின் எங்கள் வசமாகும். கைலாசபதி கலையரங்கின் வலப்புறத்து மொழி–பண்பாட்டுத் துறைக்கான புதிய கட்டடத்தொகுதி, இராமநாதன் நுண்கலைக்கழகப் புதிய அமைப்புகள் வித்தியானந்தன் நூலகத்தின் முழுமையாக்கம், மருத்துவ பீடக் கலையரங்கம் எனப் பற்பல புத்தாக்கப்பணிகள்.

பல்கலைக்கழகம் என்பது மாணவர்களுக்கானது. அவர்களின் அறிவு–உள– பண்பாட்டு விருத்திக்கானது எனும் துணை வேந்தரின் கொள்கை உறுதிப்பாட்டினை, எங்கள் மாணவத்தலைவர் துணைவேந்தருக்கான அண்மையைத் தன் வாழ்த்து ஒன்றின் கருப்பொருளாகக்குவார். மாணவர் வளர்ச்சி என்பது வகுப்பறைக் கற்றலுடன் முடிந்துவிடாதது. இதன்வழி உடல் உள மேம்பாட்டுக் களமாக வளமானதொரு விளையாட்டு மைதானம் துணைவேந்தரின் நேரடிக் கண்காணிப்பில் தயாராகும். மாணவர்களின் ஒன்றிணைந்த இடைவினைக்கான மையநிலையமாக மாணவர் கட்டடத் தொகுதி (Student Complex) வடிவம் பெறும்.

மாணவர்களின் தேசிய– பண்பாட்டு உணர்வின் வழியான செயற்பாடுகளை, நிலவும் சூழல் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு உரிய முறையில் வழிப்படுத்தும் ஒரு தந்தையாகவும் துணைவேந்தரின் செயற்பாடுகள் மாணவர் நெஞ்சங்களிலும், சமூக மனங்களிலும் இடம்பெறும்.

இன்று பல்கலைக்கழகச் சூழல் அழகின் குறியீடாக, வளாகத்தின் வாட்சன் பூங்கா மீள் உயிர்ப்புப் காண்பதிலும் துணைவேந்தரின் சிந்தையும் செயலும் உந்துசக்தியாதலைக் காணமுடிகின்றது.

கல்வி மேம்பாடு தொடர்பான பேராசிரியரின் இந்த முழுதளாவிய (Holistic) நோக்கிலும், நிர்வாகத் திறனிலும் உலகக் கல்விப்புலங்கள் தொடர்பான அநுபவ ஞானமும், துணையாக இருந்திருக்க வேண்டும். இங்கிலாந்து, கனடா, சைப்பிரஸ், கானா, சிங்கப்பூர் என அவர் கலந்து கொண்ட பொது நலவாய மாநாடுகள் பலவும் உயர்கல்வி தொடர்பான இன்றைய சிந்தனைகளின் களங்களாகும். இவற்றினைவிடச் சிறந்த கல்வி மரபினைக் கொண்ட உலகப் பல்கலைக்கழகங்கள் பலவற்றிலுமான அவரின் நேரடி அநுபவங்கள் புத்தாக்கச் செயற்பாடுகளுக்கான உந்து சக்தியாகும். இந்த வகையில் பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகம், ஒக்ஸ்போட்

பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப பல்கலைக்கழகம், இராமுச்சந் திரா மருத்துவக்கல்லூரி ஆகியவற்றுக்கான விஜயங்கள் குறிப்பிடத்தக்கன. மேலும் சீடா (SIDA) , சார்க் (SARCF) ஆய்வுத்திட்டங்கள் தொடர்பான சுவீடன், டென்மார்க் நாடுகளுக்கான விஜயமும் புதிய வளர்ச்சிகளுக்கு வித்தாகும்.

உள்நாட்டில் துணைவேந்தர் மற்றும் பணிப்பாளர் சபையின் (CUCD)தலைமைப்பொறுபின்வழி இலங்கையின் ஏனைய பல்கலைக்கழகங்கள் தொடர்பான ஒப்பியல் அறியும் வாய்க்கும்.

## *சமூக உறவும் மேம்பாடும்*

பல்கலைக்கழக மீள்வாழ்வு, மேம்பாடு என்பவற்றில் தன்னை அர்ப்பணித்த அதே வேளையில் பல்கலைக்கழகம் அமைந்த சமூகத்தின் மேம்பாட்டிலும் தன்னைப் பெரிதும் ஈடுபடுத்தி நிற்பவர் துணைவேந்தர். யாழ்ப்பாணத்தின் கிராமிய–நகர மேம்பாட்டுத்திட்டங்களில் யாழ் செயலகம், மாநகரசபை, கல்வியமைப்புக்கள், வடக்கின் புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை என்பவற்றின் வழி தன் அறிவையும் அனுபவத்தையும் சமூகத்துக்காய்த் தருபவர்.

யாழ். வளாகத்தின் முதல் தலைவராகப் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் தொடக்கி வைத்த மரபின் தொடர்ச்சியாக எங்கள் துணைவேந்தர் கள் எல்லோரும் மக்கள் துணைவேந்தர்களாய், பல்கலைக்கழக–சமூக இனசனப் பாலங்களாகத் திகழ்பவர்கள். இந்த மரபின் உச்சக்கனிவாகத் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் சமூக உறவும் இணைவும் கவனத்துக்குரியனவாகும்.

தேசத்து மக்கள் அரங்குகளில், கல்விச்சாலைகளில் விருந்தினராய் அவர் வழங்கும் அறிவுக் கனிகள் இன்றைய தலைமுறையினரதும், சமூகத்தினதும் எதிர்கால நம்பிக்கைக்கு உரம் தருவன. ஊக்கமும் உள்வலியும் தந்து பயனான செயலுக்குத் தூண்டுவன. செயல் எனும் பெரு வெள்ளமாய், எங்கள் துணைவேந்தர், பேராசிரியர். பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் ஆளுமை எங்கள் சமூகத்து வாழ்வை வளம்படுத்தி ஓடிக்கொண்டிருக்கின்றது.

துணைவேந்தரின் அர்த்தம் நிறைந்த வாழ்வின் பக்கபலமாக அவர் வாழ்க்கைத்துணை நலமாகத் திருமதி இராஜலக்ஷ்மி நிறைந்திருக்கின்றார். நீண்ட கால ஆசிரியப் பணியிடை எதிர்கால மாணவர்சமூகம்—அதன் மேம்பாடு தொடர்பான அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட அவர் உளப்பாங்கு, பேராசிரியர் பணிகளுக்கெல்லாம் உவப்பாய் அமைந்து விளங்கு வது.

நவ்லதொருகுடும்பம் பல்கலைக்கழகமானது.
பல்கலைக்கழகமோ நல்லதொரு குடும்பமானது.

துணைவேந்தருக்கு எடுக்கப்படும் இந்த மணிவிழா மங்கலம், எங்கள் உள்ளங்களின் செயல் அழகினை மேம்படுத்தட்டும். எங்கள் தேசத்து வாழ்வினை மேலும் அர்த்தமுடையதாக்குதற்கான வல்லமைகளைத் தந்திடட்டும்.

எங்கே மனம் அச்சமற்றிருக்கிறதோ,
தலை நிமிர்ந்திருக்கிறதோ
எங்கே அறிவு உரிமையுடனிருக்கிறதோ
எங்கே உலகம் குறுகிய குடும்ப எல்லைகளால்
துண்டாகப் பிளவுபடாதிருக்கிறதோ
எங்கே உண்மையின் ஆழ்ந்த அடிப்படையிலிருந்து
சொற்கள் பிறக்கின்றனவோ
எங்கே சலியாத விழுமிய நிலையை
நோக்கி நீளுகின்றதோ
எங்கே பகுத்தறிவுவெனும் தெளிந்த நீரோடை
மூடப்பழக்க வழக்கமெனும் வரண்ட பாலையில்
சுவறிப்போகாதிருக்கிறதோ
எங்கே என்றும் விரிந்து நோக்கும் எண்ணத்திலும்
செயலிலும் மனத்தை நீ முன்னின்று
அழைத்துச் செல்கிறாயோ
அங்கே அந்த உரிமையுள்ள தேசத்தில்
என் தந்தையே, எனது தேசம் விழிப்புறுக.

—தாகூர் (கீதாஞ்சலி 35)

# யாழ்ப்பாண மாவட்ட இடஞ்சார்பு அபிவிருத்தியில் தேர்தற்றொகுதிகள், உள்ளூராட்சிப்பிரிவுகள், பொது நிர்வாகப் பிரிவுகள் வகிக்கக்கூடிய பங்கு

யாழ்ப்பாண மாவட்டம் வட மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களுள் ஒன்றாகும். 1978இல் முல்லைத்தீவு மாவட்டமும் 1983இல் கிளிநொச்சி மாவட்டமும் அமைக்கப்பட்டதால் யாழ்ப்பாண மாவட்டத்தின் பரப்பு 2250 சதுர கிலோமீற்றரிலிருந்து 1016 சதுர கிலோமீற்றராகக் குறைவடைந்துள்ளது. இம்மாவட்டம் தற்பொழுது இதன் முன்னைய நிலப்பரப்பின் 40 வீதத்தையும், குடிசனத் தொகையில் 85 வீதத்தையும் கொண்டதாக உள்ளது. கூடிய சனத்தொகையையும், உயர்வான குடிசனவடர்த்தியையும், நகராக்கத்தையும் செறிவான கிராமிய நிலப்பயன்பாட்டையும் பெற்ற பகுதியாக இருக்கும் இம் மாவட்டம், இதன் பௌதீக அமைப்புக் காரணமாகத் தனித்துவமான நிலத்துண்டுகளைக் கொண்டுள்ளது. வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுகள் ஆகியன கடல் நீரேரிகளால் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. இத்தகைய பௌதீக அமைப்பினால் ஒவ்வொரு புவியியற் பிரிவும் சிற்சில சிறப்புப் பண்புகளைக் கொண்டதாகவும், ஏதோ ஒரு மட்டத்தில் அத்தனித்துவமான பண்புகளைப் பாதுகாப்பதாகவும் விரும்புகின்றது. இம்மாவட்டத்தின் இடஞ்சார்பு அபிவிருத்திமுறையில் இத்தோற்றப்பாடு முக்கியமாகக் கொள்ளப்பட வேண்டும்.

பாராளுமன்றம், மாகாணசபை, உள்ளூராட்சிச் சபைகள் ஆகியவற்றுக்கான மக்கள் பிரதிநிதிகள் தொகுதிகள் /பிரதிநிதிகள் தெரிவு, அபிவிருத்தி முயற்சிகளுக்குச் சாதகமாக அமையின் திட்டங்களை முன்னெடுப்பது இலகுவாக அமையும். அதேபோல் மக்கள் பிரதிநிதித்துவத் தொகுதிகள் / பரப்புகள் நிர்வாகப்பரப்புகளுடன் இணைவாக இருப்பின் நிர்வாகத்துக்கும், அபிவிருத்திக்கும் சாதகமாக அமையும். இதனைக் கருத்திற் கொண்டு 1970களில் பாராளுமன்றத் தொகுதிகள் அடிப்படையில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்பட்டன. (உதாரணமாக நல்லூர் பராளுமன்றத் தொகுதியும், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவும்.)

1978ஆம் ஆண்டு குடியரசு யாப்பின்படி தற்பொழுது இலங்கை 22 தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படடுள்ளது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் (இலக்கம் 10) யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரு நிர்வாக மாவட்டங்களையும் உள்ளடக்கியது. வாக்காளர் எண்ணிக்கை அடிப்படையில் 1980களில் 11 அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யும் தகுதியைப் பெற்றிருந்தது. 1994ஆம் ஆண்டில், தெரிவு செய்யும் அங்கத்தவர்கள் எண்ணிக்கை 10 ஆகக் குறைந்தது. 2000 ஆண்டில் இம்மாவட்டத்திற்குரிய பாராளுமன்ற அங்கத்தவர் எண்ணிக்கை மேலும் ஒன்றால் குறைந்து 9 ஆகியது. இன்னும் தேர்தல் நிர்வாகத்துக்காகப் பழைய 11 தேர்தற் றொகுதி களை வாக்களிப்புப் பிரிவுகளாகப் பயன்படுத்துகின்றார்கள். தேர்தல் இடாப்பு, வாக்களிப்புச் செயற்பாடுகள், தேர்தல் முடிவுகள் போன்றன வாக்களிப்புப்பிரிவு அடிப்படையிலேயே வெளியிடப்பட்டு வரப்படுகின்றன. இதனால் முன்னர் இருந்து, இன்று நடைமுறையில் இல்லாது போயிருக்கும் 11 தேர்தற் றொகுதிகள் பற்றிய விளக்கம் இன்னும் மக்கள் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. தேர்தல் மாவட்டம் முழுவதையும் ஒரு தொகுதியாகப் பிரதிநிதித்துவப்படுத்திய போதும் மக்கள் ஒவ்வொரு பிரதிநிதியையும் அவரவருக்குரிய இடத்துடன் சேர்த்துப் பழைய முறைப்படி சிந்தித்து வருகின்றார்கள். அதேபோல் மக்கள் பிரதிநிதிகள் சிலரும் தத்தம் ஆதரவுப் பகுதியுடனேயே தங்களை இனங்காட்டிக் கொள்கிறார்கள். மாவட்ட மட்ட தேர்தற்றொகுதி பெரிய அளவு அபிவிருத்திச் செயற்பாட்டிற்குச் சார்பாக இருப்பினும் சகல உறுப்பினர்களும் முழு மாவட்டத்தினதும் அபிவிருத்தியில் கவனஞ்செலுத்தாது விட்டால் சில பகுதிகள் அபிவிருத்திக்குரிய வாய்ப்புக் களையும் சந்தர்ப்பங்களையும் இழந்து விடும். மேலும் வாக்கு எண்ணிக் கையை வைத்துச் செயற்படுமிடத்து மக்கள் குறைந்த, புறப்பரப்புக்கள் கவனிக்கப்படாது விடுபடலாம். இதனால் இன்றைய மாவட்ட மட்ட, அங்கத்தவர்கள் பலர் பிரதிநிதித்துவப்படுத்தும் தொகுதி அபிவிருத்தியில், எல்லாப் பகுதிகளுக்கும் அபிவிருத்தி நன்மைகள் கிடைக்கக்கூடிய உட் கட்டுப்பாடுகள் உருவாக்கப்பட வேண்டும். இதனால் மக்களும் பிரதிநிதிகளும் பழைய முறைகளிலிருந்து விடுபட்டு முழுமையாகப் புதிய நிலைமைக்கேற்பச் செயற்பட வேண்டும். இப்பிரச்சினைக்குத் தீர்வாக 1988இல் பத்து அங்கத்த வர்களுக்கு மேற்பட்ட தேர்தற்றொகுதிகளை ஒன்றுக்கு மேற்பட்ட வலயங் களாகப் பிரிக்க ஆலோசிக்கப்பட்டது. இதன்படி யாழ்ப்பாணத் தேர்தற்றொகுதியை யாழ்ப்பாணம் மேற்கு, யாழ்ப்பாணம் கிழக்கு என இரு வலயங்களாகப் பிரிக்கச் சிபார்சு செய்யப்பட்டது. ஆனால் பின்னர் இது கைவிடப்பட்டது. யாழ்ப்பாணம் மேற்கு வலயம் ஊர்காவற்றுறை,

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம், நல்லூர், மானிப்பாய், காங்கேசன்துறைத் தேர்தல் வாக்களிப்புப் பிரிவுகளைக் கொண்டதாகவும், யாழ்ப்பாணம் கிழக்கு வலயம், கோப்பாய், சாவகச்சேரி, உடுப்பிட்டி, பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய வாக்களிப்புப் பிரிவுகளை உள்ளடக்கியதாகவும் இருக்கும். இவ்விரண்டு வலயங்களின் சமூக, பொருளாதாரப் பண்புகள் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

இம்மாவட்டத்தின் பாராளுமன்றத் தொகுதிகளின் அமைப்பு வாலாற்றை நோக்கின் இன்றைய யாழ்ப்பாண மாவட்டம் 1960– 1989க்கு இடைப் பட்ட காலத்திற் பத்து தேர்தற்றொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. அவையாவன: ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம், நல்லூர், மானிப்பாய், கோப்பாய், காங்கேசன்துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி. 1947–1960க்கும் இடைப்பட்ட காலத்தில் இம்மாவட்டம் ஏழு தேர்தற்றொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. அவைாயவன: ஊர்காவற்றுறை, வட்டுக் கோட்டை, யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி, இதில் சாவகச்சேரி தேர்தற்றொகுதி யாழ்ப்பாணத்தில் செம்மணி பாகத்திலிருந்து துணுக்காய் வரை வியாபித்திருந்தது. இன்றைய தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி, கரச்சி கண்டாவளை, துணுக்காய்ப் பிரதேச செயலாளர் பிரிவுகள் அன்று இத்தொகுதியின் பகுதிகளாக இருந்தன. 1931–1947க்கும் இடைப்பட்ட காலத்தில் ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, பருத்தித்துறை என நான்கு பெரிய தேர்தற்றொகுதிகள் இருந்தன. 1924–1931க்கு இடைப்பட்ட காலத்தில் வடமாகாணத்தில் ஐந்து தேர்தல் தொகுதிகள் இருந்தன. இவை ஒவ்வொன்றும் குடாநாட்டின் பகுதிகளை முழுமையையோ அல்லது ஒரு பகுதியோ கொண்டிருந்தன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் இடஞ்சார்பு அபிவிருத்தியில் தேர்தற் றொகுதி அமைப்புக்களுக்கு இடையே நெருங்கிய தொடர்பு இருந்தது. 1930, 1940 களில் இருந்த சட்டசபை, பாராளுமன்றப் பிரதிநிதிகள் தேசிய மட்டப் பிரச்சினைகள், சட்டவாக்காகச் செயற்பாடுகளினாலேயே கூடுதலாக ஈடுபாடு கொண்டவர்களாக விளங்கினர். 1960களிலிருந்து குறிப்பாக 1970க்குப் பின்னர் பாராளுமன்றப் பிரதிநிதிகள் தொகுதி அபிவிருத்தி கூடிய ஈடுபாடுகாட்டத் தொடங்கினார்கள். மாவட்ட அரசியல் அதிகாரி நியமனம், பாராளுமன்ற அங்கத்தவர்களுக்குத் தொகுதி நிதி ஒதுக்கீடு, பன்முக வரவு

செலவுத் திட்டம், திட்டங்களைத் தெரிவுசெய்தல், சிபாரிசு செய்தல், பதவி நியமனங்களுக்குரிய பங்கும் பணியும் அதிகரித்தன. குறிப்பாக அரசாங்கக் கட்சி அங்கத்தவர்கள் முக்கிய பங்கு வகிக்கத் தொடங்கினார்கள். இந்நிலையில் இன்று மேலும் அதிகரித்து அபிவிருத்திக்கு ஏற்ற முறையில் வளஒதுக்கீடுகள், முன்னுரிமைகள், எதிகால அபிவிருதிக்குத் திட்டமிடல் போன்ற செயற்பாடுகளுக்குச் சகல பாராளுமன்ற அங்கத்துவர்களும் இணைந்து செயற்படாவிடில், சில பகுதிகள் பின்தங்க வேண்டிய நிலையேற் படும், அல்லது இன்றைய தேர்தல் முறை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

மாகாணசபைச் சட்டம், அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தம் ஆகியவை மூலம் மாகாணசபையும் அதற்குரிய அதிகாரமும் வரையறுக்கப்பட்டுள்ளன. மாகாணசபை தேர்தல் மாவட்டமாக இருப்பதுடன் 1000 சதுர கிலோ மீற்றர் பரப்புக்கு ஒரு அங்கத்தவர், 40,000 மக்களுக்கு ஒரு அங்கத்தவர் என்ற விகிதத்தில் மாவட்டங்கள் அங்கத்தவர் எண்ணிக்கையைப் பெறத் தகுதியுள்ளன. எச்சப்பரப்பு குடிசனத்தொகை அரைவாசிக்கு மேற்பட்டு இருப்பின் அதனை முழுமையாகக் கவனிக்கப்பட்டு இடம் ஒதுக்கப்படும். பரப்பு, குடிசனத்தொகை அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டம் 19 அங்கத்தவர்களை விடகிழக்கு மாகாணசபைக்கு அனுப்பத் தகுதி பெற்றுள்ளது. மாவட்டங்களுக்குத் தேர்தற் தொகுதி இருக்காதது இடஞ்சார் அபிவிருத்திக்குப் பெரும் தடையாக இருக்கின்றது. பாராளுமன்றத் தேர்தலுக்கும் யாழ்ப்பாண மாவட்டம் ஒரு தொகுதியாக இருப்பதால் எழுந்த பிரச்சினை ஏற்கனவே மேற்காட்டப்பட்டுள்ளது. மாாகாண சபையும் இதே பிரதிநிதி முறை அமைப்பில் பெற்றிருப்பது மாவட்டத்தின் சமமான பிரதேச அபிவிருத்திக்குப் பெரும் இடைஞ்சலாக இருக்கின்றது. இப்பிரச்சினைக்கு இன்றைய அமைப்புக்குள் அரசியற் கட்சிகள் தங்கள் ஒழுங்கமைப்பில் ஓரளவு தீர்வுகாணலாம் யாழ்ப்பாண மாவட்டத்தையும் பின்வரும் உப பிரிவுகளாகக் கொண்டு செயற்படின் பிரச்சினைகளை ஓரளவு குறைத்துக் கொள்ளலாம்.

***உபபிரிவுகளாவன:***

| | |
|---|---|
| 1) தீவுகள் தெற்கு | 2) தீவுகள் வடக்கு |
| 3) வடடுக்கோட்டை | 4) பண்டத்தரிப்பு |
| 5) மானிப்பாய் | 6) சுன்னாகம் |
| 7) தெல்லிப்பளை | 8) காங்கேசன்துறை |

| | |
|---|---|
| 9) கோப்பாய் | 10) அச்சுவேலி |
| 11) உரும்பிராய் | 12) நல்லூர் |
| 13) யாழ்ப்பாணம் | 14) யாழ்ப்பாணம் மத்தி |
| 15) வடமராட்சி தெற்கு | 16) வடமராட்சி வடக்கு |
| 17) வடமராட்சி கிழக்கு | 18) சாவகச்சேரி |
| 19) கொடிகாமம் | |

மேற்குறிப்பிட்ட பிரதேச அடிப்படையில், மாகாணசபை அங்கத்தவர்களின் செயற்பாடுகளினால் மாவட்டத்தின் சமமான பிரதேச வளர்ச்சிக்கு வழி வகுக்கலாம்.

## உள்ளூராட்சி

1981இல் மாவட்ட அபிவிருத்திச்சபை அமைக்க முதல் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு மாநகரசபையும், மூன்று நகரசபைகளும், எட்டு நகர சபைகளுக்கும் முப்பத்தேழு கிராமசபைபளும் இருந்தன. மாவட்டத்தில் மொத்தமாக நாற்பத்தொன்பது உள்ளூராட்சி மன்றப் பிரிவுகள் இருந்தன. இச்சபைகளுக்கு வட்டார அடிப்படையில் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.1951இல் யாழ்ப்பாண மாநகரசபை 18,12, 15,11,81,21,5 மக்களைக் கொண்டிருக்க, மிகச்சிறிய உள்ளூர்ட்சிப் பிரிவான எழுவைதீவுக் கிராமசபை 410 மக்களைக் கொண்டிருத்தது. 1980இல் இருந்த உள்ளூராட்சி மன்றப் பிரிவுகள் பன்வருமாறு:

| மாநகரசபை | பட்டினசபை | நகரசபை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | ஊர்காவற்றுறை | பருத்தித்துறை |
| | சங்கானை | வல்வெட்டித்துறை |
| | சுன்னாகம் | சாவகச்சேரி |
| | காங்கேசன்துறை | |
| | நெல்லிடியடி | |
| | பண்டத்தரிப்பு | |
| | உரும்பிராய் | |
| | மானிப்பாய் | |

*கிராமசபைகள்*

| | | |
|---|---|---|
| நெடுந்தீவு | பண்டத்தரிப்பு | உடுப்பிட்டி |
| புங்குடுதீவு | உடுவில் | கட்டைவேலி |
| நயினாதீவு | ஏழாலை | புலோலி |
| அனலைதீவு | தெல்லிப்பளை | குடத்தனை |
| எழுவைதீவு | மல்லாகம் | செம்பியன்பற்று |
| வேலணை | மைலிட்டி | |
| அல்லைப்பிட்டி | அச்சுவேலி | |
| மண்டதீவு | புத்தூர் | |
| காரைதீவு தெற்கு | கோப்பாய் | |
| நல்லூர் | கைதடி | |
| கொக்குவில் | நாவற்குழி | |
| மானிப்பாய் | சாவகச்சேரி | |
| சுழிபுரம் | மிருசுவில் | |
| வட்டுக்கோட்டை | கச்சாய் | |
| அராலி | வரணி | |

மாநகரசபை, நகரசபைகள் தவிரப் பட்டினசபைகள், கிராம சபைகளில் ஒரு சிலவற்றைத் தவிர ஏனையவை நிதிநிலைமை குறைவாக இருந்தாலும் குறிப்பிடத்தக்க சேவைகளைச் செய்துள்ளன. சிறு வீதிப்பராமரிப்பு, சந்தை, மின்சாரம், குடிநீர் வழங்கல், நூல்நிலையம் நடாத்தல் போன்ற சேவைகளைப் பல உள்ளூராட்சி நிறுவனங்கள் செய்து வந்தன. மேலும் கிராம தலைமைத் துவ வளர்ச்சிக்கு இவ் உள்ளூராட்சி நிறுவனங்கள் பெரும்பங்காற்றின. 1950களிலும் 1960களிலும் உள்ளூராட்சி அமைப்புக்கள் சிறப்பாகச் செயலாற்றின. 1970களுக்குப் பின்னர் உள்ளூராட்சி அமைப்புக்களுக்குத் தேர்தல் நடைபெறாததால் பல சபைகள் கலைக்கப்பட்டு, விசேட அதிகாரிகளின்கீழ் செயற்பட்டன. சில சபைகளின் ஆட்சிக்காலம் நீடிக்கப்பட்டது. 1978இல் மாநகர சபைக்கும் நகரசபைகளுக்கும் மாத்திரமே தேர்தல் நடைபெற்றது. அரசாங்கம் இவ்விரு பெரிய (மாநகரசபை, நகரசபை) உள்ளூராட்சி அமைப்புக்களையே தொடர்ந்து செயற்பட வைத்தது. பட்டினசபை, கிராம சபைகள் உள்ளடங்கிய பரப்புப்க்களில் புதிய உள்ளூராட்சி அமைப்பை உருவாக்க விரும்பியது. இந்நிலையில் 1081ஆம் ஆண்டு மாவட்ட சபை அமைக்கப்பட்ட பொழுது பட்டினசபை, கிராடசபை முறைகள் ஒழிக்கப்பட்டு எல்லாக் கிராம, பட்டின சபைகளும் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின்கீழ்

கொண்டுவரப்பட்டன. மாவட்ட அபிவிருத்திசபைகள் செயற்படத் தொடங்கிய சிறிது காலத்துக்குள் நிதி, அதிகாரப்பகிர்வு போன்ற விடயங்களில் பிரச்சினைகள் தலைதூக்கிச் சிறிது காலத்துக்குள் வடக்கு கிழக்குப் பகுதிகளில் அவை செயலிழந்தன. மேலும் 1083ஆம் ஆண்டு யூலைக்குப் பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி ஆசனங்களை இழந்ததாலும், மாவட்ட சபை நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கியதாலும் யாழ்ப்பாண மாவட்டசபைச் செயற்பாடுகள் முடக்கப்பட்டன. மாவட்டசபை அமைக்கப் பட்ட பின்னர் பழைய காரியாலயங்களாகச் செயற்பட்டன. மாவட்ட அபிவிருத்தி சபை அமைப்பின் கீழ் பட்டினசபை, கிராமசபை முறைகள் இல்லாது ஒழிக்கப்பட்டது தவறெனப் பின்னர் உணரப்பட்டது. அதேநேரத்தில் ஏற்கெனவே இருந்த பட்டினசபைகள், சிறியனவாகவும் போதிய வருமானம் இல்லாதும் திறம்பட இயங்கமுடியாததாகவும் இருந்ததால் இயங்கு தன்மைகொண்ட மூன்றாவது உள்ளூராட்சி அமைப்பொன்றை நிறுவ அரசு தீர்மானித்தது. இதன்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மாகாணசபை, நகரசபைப் பகுதிகளைத் தவிர்த்து எஞ்சிய பகுதிகளுக்குப் பிரதேதசச பை அமைக்க தீர்மானிக்கப்பட்டது. சில இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் இணைத்து பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன. (உதாரணமாக வடமராட்சி வடக்கு பிரதேசசபை) இப்பிரதேசசபைகள் ஒப்பீட்டு ரீதியில் பெரிய பரப்புக்களையும், அதிக குடித்தொகையையும் கொண்டதாக இருக்கின்றது. இதனால் இச்சபைகள் சிறப்பாக இயங்க முடியுமென எதிர்பார்த்தபோதும் முன்னைய பல கிராம சபைகளை ஒன்றிணைத்தால் முழுப்பிரதேசமும் ஒன்றிணைந்த பிரதேசமாகச் செயற்படுவது சிரமமாக இருக்கிறது. இப்பொழுதும் பழைய உபசெயலகங்கள் தொடர்ந்து செயற்படுகின்றன.

## அட்டவணை I

### *யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகள்*

| பெயர் | அந்தஸ்து | மக்கள் தொகை | அங்கத்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | மாநகரசபை | 118215 | 20 |
| பருத்தித்துறை | நகரசபை | 15087 | 09 |
| வல்வெட்டித்துறை | நகரசபை | 13982 | 09 |
| சாவகச்சேரி | நகரசபை | 19640 | 11 |

| | | | |
|---|---|---|---|
| நெடுந்தீவு | பிரதேசசபை | 5008 | 09 |
| வேலணை | பிரதேசசபை | 34411 | 11 |
| ஊர்காவற்றுறை | பிரதேசசபை | 36581 | 11 |
| வலிகாமம் மேற்கு | பிரதேசசபை | 47620 | 14 |
| வலிகாமம் தென்மேற்கு | பிரதேசசபை | 56657 | 16 |
| வலிகாமம் தெற்கு | பிரதேசசபை | 54762 | 16 |
| வலிகாமம் வடக்கு | பிரதேசசபை | 72448 | 21 |
| வலிகாமம் கிழக்கு | பிரதேசசபை | 73133 | 21 |
| நல்லூர் | பிரதேசசபை | 41376 | 12 |
| வடமராட்சிதெற்கும்மேற்கும் | பிரதேசசபை | 54117 | 18 |
| வடமராட்சிவடக்கும்கிழக்கும் | பிரதேசசபை | 48150 | 09 |
| தென்மராட்சி | பிரதேசசபை | 51905 | 15 |

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சிப் பிரதேசங்கள் சரியான முறையில் நிர்ணயம் செய்யப்படவில்லை. பல பிரதேச சபைகளின் எல்லைகள் மீளாய்வுசெய்யப்பட வேண்டும். இப்புதிய நிர்ணயம் நிலப்பயன்பாடு, சமூக, பொருளாதாரப் பண்புகள், போக்குவரத்து, உள்ளூர் மக்களின் அபிலாசைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு மீள்நிர்ணயம் செய்யப்பட வேண்டும். பல்வேறு காரணங்களைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாண மாவட்டத்தைப் பின்வரும் உள்ளூராட்சிப் பிரிவுகளாகப் பிரிக்க வேண்டும். மேற்கூறிய முறையில் நிர்ணயிக்கப்படின்,அது பிராந்திய அபிவிருத்திக்கு இலகுவாக அமையும்.

1) யாழ்ப்பாண மாநகரசபை
2) பருத்தித்துறை நகரசபை
3) சாவகச்சேரி நகரசபை
4) வல்வெட்டித்துறை நகரசபை
5) சங்கானை நகரசபை
6) மானிப்பாய் நகரசபை
7) சுன்னாகம் நகரசபை
8) காங்கேசன்துறை நகரசபை – மீள்குடியேற்றம் செய்யவேண்டும்
9) நெல்லியடி நகரசபை
10) நெடுந்தீவு பிரதேச சபை

11) புங்குடுதீவு –நயினாதீவு பிரதேச சபை
12) ஊர்காவற்றுறை பிரதேச சபை
13) காரைநகர் பிரதேச சபை
14) வட்டுக்கோட்டை பிரதேச சபை
15) பண்டத்தரிப்பு பிரதேச சபை
16) தெல்லிப்பளை பிரதேச சபை
17) உரும்பிராய் பிரதேச சபை
18) கோப்பாய் பிரதேச சபை
19) அச்சுவேலி பிரதேச சபை
20) தென்மராட்சி மேற்கு பிரதேச சபை
21) தென்மராட்சி கிழக்கு பிரதேச சபை
22) உடுப்பிட்டி பிரதேச சபை
23) வடமராட்சி கிழக்கு பிரதேச சபை

யாழ்ப்பாண மாநகரசபை 1970களின் பின்னர் மீள்பாகுபாடு செய்யப்படவில்லை. நகரம் கிழக்கு, மேற்காக ஓரளவு விரிவடைந்தாலும் வடக்கு நோக்கியே கூடுதலாக வளர்ச்சி பெற்றது. நகரின் வடபகுதியிலுள்ள திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் பகுதிகள் தற்பொழுது கூடுதலாக நகரப் பண்பைப் பெற்றுள்ளதுடன் செயல ரீதியிலும், யாழ்ப்பாண நகரின் ஒரு பகுதியாக மாறிவிட்டன. நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவு யாழ்ப்பாண நகரசபையில் ஒரு பகுதியையும், திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் பகுதிகளையும் கொண்டதாக இருக்கிறது. இதனால் மேற்குறித்த பகுதிகளை உள்ளடக்கிய யாழ்ப்பாண மாநகரசபை எல்லையை விஸ்தரிப்பதால் இரு பகுதிகளும் நன்மையடையலாம். மேற்குறித்த பரப்புகளை யாழ்ப்பாண மாநகர சபைக்குள் கொண்டு வருவதால் இந்நகரின் பரப்பும் குடிசனத்தொகையும் அதிகரிப்பதுடன் இதன் செயற்பாடுகளும், வருமானமும் அதிகரிக்க வாய்ப்பு உண்டு. நகரின் தற்போதைய பரப்பு 20.28 கிலோ மீற்றராகும்.1981இல் 118224 மக்களை நகர் கொண்டிருந்தது. குறிப்பிட்ட பகுதி பரப்புகள் நகரின்கீழ் கொண்டுவரப்படின் நகரின் பரப்பு 46.24 சதுரகிலோமீற்றராகவும், குடிசனத்தொகை 159000 ஆகவும் அதிகரிக்கும். இவ் விஸ்தரிப்பின் மூலம் நகர அபவிருத்திக்குத் தேவையான நிலங்களைப்பெறக் கூடியதாக இருப்பதுடன் நகர சேவைகளைப்பயன்படுத்தும் இப்பகுதி மக்களை நகர எல்லைக்குள் கொண்டுவரக் கூடியதாக இருக்கும் . இப்பகுதி மீள்பாகுபாடு செய்யப்படுமிடத்து. யாழ்ப்பாண நகரம் குடிசனத்தொகை, பரப்பு சேவை அடிப்படையில் நாட்டின் இரண்டாவது முக்கிய நகரமாக வரமுடியும்.

### பருத்தித்துறை நகரசபை

பருத்தித்துறை நகரம் 1981இல் 15023 மக்களைக் கொண்டும் பரப்பில் மிகச் சிறியதாகவும் இருக்கின்றது. இந்நகரின் பரப்பளவு 3 சதுர கிலோ மீற்றருக்குக் குறைவாக இருப்பதால் சிறப்பான பௌதீக திட்டமிடலை மேற் கொள்ளுதல் கடினமாக இருக்கின்றது. இந்நகரினதும் இதன் அயற் கிராமங்களினதும் முன்னேற்றத்திற்காக இதனது நிர்வாகப் பரப்பு துன்னாலை வடக்கு அல்வாய் மேற்கு, அல்வாய் வடக்கு, புலோலி, தும்பளை, கற்கோவளம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதாக விஸ்தரிக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட விஸ்தரிப்பு ஏற்படுமாயின் இந்நகரின் பரப்பு 28 சதுர கிலோ மீற்றராகவும் குடிசனத்தொகை 35000 பேரைக் கொண்டதாகவும் இருக்கும். குறிப்பிட்ட கிராமங்கள் விவசாயச் சார்பில்லாத பொருளாதாரப் பண்புடையனவாக இருக்கின்றதால் நகரசபைப் பகுதியாக இருத்தல் உள்ளூராட்சி அபிவிருத்திக்கு உதவியாக அமையும்.

### சாவகச்சேரி நகரசபை

இந்நகரம் 19.5 சதுர கிலேமீற்றர் பரப்புடையதாகவும் 1981இல் 19,707 பேரையும் கொண்டிருந்தது. இது சாவகச்சேரி, நுணாவில், மீசாலைப் பகுதிகளைக் கொண்டதாகவும் இருக்கின்றது. இந்நகரின் பௌதீக அபிவிருத்திக்கு மட்டுவில், சரசாலை, மீசாலை பகுதிகள் முழுவதும் நகர நிர்வாகத்திற்குக் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட கிராமப் பகுதிகள் முழுவதும் உள்ளடக்கப்படும் பொழுது இந்நகரின் பரப்பு 65 சதுர கிலோமீற்றராகவும் குடிசனத்தொகை 34,000 ஆகவும் அதிகரிக்கும்.

### வல்வெட்டித்துறை

இந்நகரம் 7.8 சதுர கிலோமீற்றர் பரப்புடையதாகவும் 1981–19982இல் 14,121 பேரையும் கொண்டிருந்தது. இந்நகரின் வரலாறு, சமூக, பொருளாதாரப் பின்னணியை நோக்குமிடத்து தற்போதைய பரப்பின் எல்லைகளில் அதிகளவு மாறறம் தேவையில்லை.

### மானிப்பாய் நகரசபை

மானிப்பாய்ப் பிரதேசம் தற்பொழுது வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் ஒரு பகுதியாக இருக்கின்றது. இப்பிரதேசத்தில் முன்னர் ஒரு பட்டின சபையும், ஒரு கிராம சபையும் இருந்தன. இப்பிரதேசம் கல்வியிலும் பொருளாரத்திலும் தனித்துவமான பிரதேசமாக இருப்பதடன் குடிசன

வடர்த்தி உயர்வான, நகராக்கப்பட்ட பரப்பாகவுள்ளது. முன்மொழியப்படுகின்ற மானிப்பாய் நகரசபை -மானிப்பாய்நகரம், ஆனைக்கோட்டை, சுதுமலை, நவாலி ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இது 18 சதுர கிலோமீற்றர் பரப்புடையதாகவும் 25,000 மக்களைக் கொண்டதாகவும் இருக்கும். யாழ்ப்பாண நகரத்திற்கு அண்மையாக இருப்பதால் இதவொரு பிரதான வாழ்விடமாக மாறிவருகின்றது.

### *சங்கானை நகரசபை*

சங்கானை நகரம் யாழ்ப்பாணக் குடநாட்டிலுள்ள முக்கிய சந்தை நகருள் ஒன்றாகும். மாவட்ட சபை அமைப்புக்கு முன்னர் இது பட்டின சபையாக இருந்தது. ஆலோசிக்கப்பட்ட சங்கானை நகரசபைப் பகுதி சங்கானை, சுழிபுரம், மூளாய், தொல்புரம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கயதாக இருக்க வேண்டும். மேற் குறிப்பிட்ட பரப்புகளை உள்ளடகியதாக அமைக்கப்படுமிடத்து 24 சதுர கிலோமீற்றர் பரப்புடையதாகவும், 27,000 மக்களைக் கொண்டதாகவும் (1981இல்) இருக்கும். இந்நகரசபைப் பிரதேசம் விவசாயச் சார்பற்ற பண்புகளையே கூடுதலாகக் கொண்டுள்ளது.

### *சுன்னாகம் நகரசபை*

ஆலோசிக்கப்பட்ட சுன்னாகம் நகரசபைப் பகுதி பழைய சுன்னாகம் பட்டின சபைப்பகுதியையும், உடுவில், ஏழாலை கிராமங்களையும் உள்ளடக்கியதாக அமையவேண்டும். இந்நகரின் பரப்பளவு 1981இல் 21 சதுர கிலோ மீற்றராகவும் 46,000 மக்களைக் கொண்டும் மிகவும் உயர்வான குடிசன அடர்த்திமிக்க பிரதேசமாக உள்ளது. இப்பிரதேசம் விவசாயச் சார்பற்ற குடியிருப்புப் பண்புகளை அதிகளவு கொண்டதாகவும் காணப்படுகின்றது. இப்பிரதேசம் முழுவதையும் ஒரு நகரசபைக்குள் உட்படுத்துவதால் பௌதீக திட்டமிடல் அபிவிருத்தி நடவடிக்கைக்குச் சிறந்ததாக இருக்கும். யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறந்த சந்தை நகராகச் சுன்னாகம் விளங்குகிறது. இந்நகர சபைப் பிரதேசத்தின் பரப்பளவு 21 சதுர கிலோ மீற்றராக இருக்கின்றது.

### *காங்கேசன்துறை நகரசபை*

இது இப்பொழுது வலிகாமம் பிரதேச சபையின் ஒரு பகுதியாகவுள்ளது. காங்கேசன்துறை வட இலங்கையின் முக்கிய துறைமுகப்பட்டினமாகவும்

கைத்தொழில் நிலையமாகவும் இருக்கின்றது. காங்கேசன்துறைப்பகுதியை உள்ளடக்கி • முன்னர் பட்டினசபை ஒன்றிலிருந்தது. ஆலோசிக்கப்பட்ட நகரசபைப் பகுதி காங்கேசன்துறை, கீரிமலை, மைலிட்டி, பலாலி, வீமன்காமம், மாவிட்டபுரம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாகவும் இருக்கவேண்டும். இவ்வாறு அமையுமிடத்து இந்நகரம் 27 சதுர கிலோமீற்றர் பரப்புடையதாக வும் 35,000 மக்களைக் கொண்டதாகவும் இருக்கும். காங்கேசன்துறைத் துறைமுக வளர்ச்சிக்கு இப்பகுதியை உள்ளடக்கிய நகரசபை ஒன்றிருத்தல் முக்கியமானதாகும்.

### நெல்லியடி நகரசபை

நெல்லியடி நகரசபைப் பகுதி, கரவெட்டி மேற்கு, மத்தி, வடக்கு, கிழக்கு பகுதிகளையும் துன்னாலை தெற்கு, அல்வாய் தெற்குப் பகுதிகளையும் உள்ளடக்கியதாக அமைக்கப்பட வேண்டும். இந்நகரின் பிரதேசம் 28 சதுர கிலோமீற்றர் பரப்புடையதாகவும் 28,000 மக்களைக் கொண்டதாகவும் இருக்கின்றது. இந்நகர்ப்பிரதேசம் விவசாயச் சார்பில்லாத பொருளாதாரப் பண்பைப் பெற்றுள்ளதுடன், நெல்லியடி நகரத்தையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. இந்நகர் 1981இல் 14,000 மக்களைக் கொண்டிருந்தது.

### நெடுந்தீவுப் பிரதேசசபை

தற்பொழுது இருக்கும் பிரதேச சபை ஒழுங்கில் மாற்றம் தேவையில்லை.

### புங்குடுதீவு–நயினாதீவு பிரதேசசபை

தீவுகள் தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு தற்பொழுது ஒரு பிரதசே சபையாக இருக்கின்றது. ஒழுங்கமைப்பு புங்குடுதீவு–நயினாதீவு அபிவிருத் திக்கும் அப்பகுதி மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கும் ஏற்றதொன்றாகக் காணப்படவில்லை. இதனால் தீவுகள் தெற்கு பிரதேச சபை புங்குடுதீவு–நயினாதீவு,வேலணை என இரண்டாகப் பிரிக்கப்படல் வேண்டும். இப்பிரதேசசபை 35 சதுர கிலோமீற்றர் பரப்புடையதாகவும் 19,000 மக்களைக் கொண்டதாகவும் இருக்கின்றது. மேலும் இப்பிரதேச சபையின் பொருளாதாரம் விவசாயமல்லாத நடவடிக்கைகளில் தங்கியிருப்பதனைக் காணலாம்.

### வேலணைப் பிரதேச சபை

வேலணைப் பிரதேச சபை வேலணை கிழக்கு, வேலணை மேற்கு, சரவணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய கிராமப் பகுதிகளை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். இப்பிரதேச சபையின் பொருளாதாரம் ஓரளவு விவசாயத்தில் தங்கியிருப்பதனைக் காணலாம். இது 20,000 மக்களைக் கொண்டதாகவும் 54 சதுர கிலோமீற்றர் பரப்புடையதாகவும் இருக்கும். இது முன்னர் இருந்த வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு கிராம சபைப் பிரதேசங்களை உள்ளடக்கிறது.

### ஊர்காவற்றுறைப் பிரதேச சபை

இப்பிரதேசத்திற்குள் இருக்கும் காரைநகரை இப்பரிவிலிருந்து வெளியே எடுப்பது நல்லதாகும். இது முன்னைய ஊர்காவற்றுறைப் பட்டினசபை, நாரந்தனை, அனலைதீவு, எழுவைதீவு கிராம சபைகளை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். இப்பிரதேசத்தின் பரப்பு 28 சதுரகிலோமீற்றராகவும் குடிசனத்தொகை 20,000 ஆகவும் இருக்கின்றது.

### காரைநகர் பிரதேச சபை

இப்பிரதேச சபை காரைநகரை மாத்திரமே கொண்டதாக இருக்கவேண்டும். இப்பிரதேச சபையின் பரப்பு 24சதுர கிலோ மீற்றராகவும், குடிசனத் தொகை 18,000 ஆகவும் இருக்கின்றது. தனித்தன்மைகொண்ட அபிவிருத்தியடைந்த தீவாக இருப்பதால் இதற்கென்று தனியானதொரு பிரதேச சபை இருப்பது சிறந்தது. இதனை ஏனைய தீவுகளுடன் அல்லது வலிகாமம் மேற்குப் பகுதியுடன் இணைத்தல் விரும்பத்தக்கதன்று.

### வட்டுக்கோட்டைப் பிரதேச சபை

இப்பிரதேச சபை வட்டுக்கோட்டை, அராலிக் கிராமப் பகுதிகளை உள்ளடக்கியதாக அமையவேண்டும். வலிகாமம் மேற்குப் பகுதி தனியொரு பிரதேச சபையாக, உள்ளூர் அபிவிருத்திக்கு ஏற்றதாகவில்லை. இப்பிரதேச சபை 19 சதுர கிலோ மீற்றர் பரப்புடையதாகவும் 20,000 மக்களைக் கொண்டதாகவும் உள்ளது. இப்பிரதேசம் விவசாயச் சார்பில்லாத கிராமப் பகுதியாக இருக்கின்றது. அராலிப் பகுதியில் மாத்திரமே சிறிதளவு நெற் செய்கை முக்கியமாக இருக்கின்றது. வட்டுக்கோட்டை, அராலிப் பகுதிகள்

நெடுங்காலமாக ஒருங்கிணைந்து செயலாற்றி இருப்பதால் இப்பகுதிக்குத் தனியானதொரு பிரதேச சபை இருப்பது சிறந்ததொன்றாகும்.

### பண்டத்தரிப்புப் பிரதேச சபை

பண்டத்தரிப்புப் பிரதேசம் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் ஒரு பகுதியாக இருக்கிறது. இப்பிரதேச சபையிலிருந்து மானிப்பாய் நகரசபை ஒன்று அமைக்கப்படுமிடத்து ஏனைய பகுதி பண்டத்தரிப்புப் பிரதேச சபையாக வரலாம். இச்சபை சில்லாலை, பண்டத்தரிப்பு, பெரியவிளான், சிறுவிளான், சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளை உள்ளடக்கலாம். இது 30 சதுர கிலோமீற்றர் பரப்பையும் 39,000 மக்களையும் கொண்டுள்ளது. இப்பிரதேசம் உள்ளூர் வரலாறு சமூகப் பொருளாதார ரீதியில் பல ஒற்றுமைகளைக் கொண்டிருப்பதுடன் நல்ல விவசாயப் பகுதியாகவும் இருக்கின்றது. பண்டத்தரிப்பு நகர் யாழ்ப்பாண மாவட்டத்திலிருக்கும் முக்கிய சந்தை நகர்களில் ஒன்றாகும்.

### தெல்லிப்பளைப் பிரதேச சபை

இப்பிரதேச சபைக்குள் மல்லாகம், அளவெட்டி, தெல்லிப்பளை, கட்டுவன் ஆகிய பகுதிகளை உள்ளடக்க வேண்டும். இப்பிரதேசம் குடிசனத் தொகை மிக்கதாகவும் விவசாயச் சார்பில்லாத கிராமியப் பண்பைப் பெற்றதாகவும் காணப்படுகின்றது. இப்பிரதேச சபை 25 சதுர கிலோமீற்றர் பரப்புடையதாகவும் 33,000 மக்களைக் கொண்டதாகவும் உள்ளது.

### உரும்பிராய் பிரதேச சபை

இப்பிரதேச சபை முன்னைய உரும்பிராய், ஊரெழு பட்டின சபைப் பகுதி புன்னாலைக்கட்டுவன், வசாவிளான், பலாலி, குப்பிளான் பகுதியை உள்ளடக்கியதாக அமைக்கப்படவேண்டும். இப்பிரதேசம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சிறந்த விவசாயப் பகுதிகளில் ஒன்றாகவும் 22 சதுர கிலோமீற்றர் பரப்புடையதாகவும் 26,000 மக்களைக் கொண்டதாகவும் உள்ளது.

### கோப்பாய்ப் பிரதேச சபை

இப்பிரதேச சபைக்குள் கோப்பாய் வடக்கு, கோப்பாய் தெற்கு, இருபாலை, சிறுப்பிட்டி, நீர்வேலி ஆகிய பகுதிகள் உள்ளடக்கப்படவேண்டும். இதன் தெற்குப் பகுதி விவசாயச் சார்பில்லாத தன்மையையும் வடபகுதி விவசாயப் பண்புகளையும் பெற்றுள்ளது. இது 38 சதுர கிலோ மீற்றர் பரப்புடையதாகவும் 285,000 மக்களையும் கொண்டதாகவும் இருக்கும்.

### அச்சுவேலிப் பிரதேச சபை

இப்பிரதேச சபை பத்தைமேனி, இடைக்காடு, அச்சுவேலி, புத்தூர் கிழக்கு, புத்தூர் மேற்கு ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக அமையவேண்டும். இது ஒரு விவசாயப் பிரதேசமாக இருப்பதுடன் சிறந்ததொரு சேவை நிலையமாகவும் இருக்கின்றது. மேலும் இது தனியானதொரு பிரதேச சபையாக இருப்பதற்குப் போதியளவு வளம் கொண்டதொரு பிரதேசமாகும். இது 45 சதுர கிலோமீற்றர் பரப்புடையதாகவும் 31,000 மக்களைக்கொண்டதாகவும் இருக்கின்றது.

### தென்மராட்சி மேற்குப் பிரதேச சபை

இப்பகுதி வளர்ச்சி பெறாத மக்கள் தொகை குறைவான பகுதியாக இருந்தாலும் புதிதாகப் பல கைத்தொழில்கள், குடியிருப்புகள் இடவமைவு பெற்று வருவதனைக் காணலாம். இது சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடைப்பட்ட பிரதேசமாக உள்ளது. இப்பிரதேச சபைக்குள் கைதடி, கோயிலாக்கண்டி, மறவன்புலவு, தச்சன்தோப்பு ஆகிய கிராமங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். இதன் பரப்பு 55 சதுர கிலோமீற்றராகவும் 14,000 மக்களைக் கொண்டதாகவும் உள்ளது.

### தென்மராட்சி கிழக்குப் பிரதேச சபை

இப்பகுதி ஒப்பீட்டு ரீதியில் பின்தங்கியதாகவும் கிராமியப் பண்புகளைக் கொண்டும் காணப்படுகிறது. இப்பிரதேசத்துக்குள் கச்சாய், கொடிகாமம், உசன், எழுதுமட்டுவாள், நாவற்காடு, வரணி, இடைக்குறிச்சி, மந்துவில், தாவளை, இயற்றாலை ஆகிய கிராமங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். அபிவிருத்தி நோக்கில் தென்மராட்சி கிழக்கிற்குப் பிரதேச சபை ஒன்று தேவையாகும். இப்பிரதேச சபை 114 ச.கி. பரப்புடையதாகவும் 26,000 மக்களைக் கொண்டதாகவும் உள்ளது.

### பொது நிர்வாகம்

1954ஆம் ஆண்டு இலங்கையில் மாகாண நிர்வாகம் கைவிடப்பட்டு மாவட்டமே உயர்நிர்வாக அலகாக அமைந்தது. மாவட்டத்துக்கு அடுத்தபடியாகஅமைந்தது காரியாதிகாரி பிரிவுகளாகும். (DRO) முன்னர்

செயற்பட்டுவந்த மணியகாரர் பிரிவுகள், அப்பிரிவுகளுக்குரிய மணியகாரர் ஓய்வுபெற்றும் சேவையில் இருக்கையில் ஏற்பட்ட இறப்பை அடுத்தும் அவ்விடங்களுக்குக் காரியாதிகாரி பிரிவுகள் உருவாக்கப்பட்டு மணியகாரர்முறை 1950களின் முன்பே முற்றுப்பெற்றுவிட்டது. காரியாதிகாரி பிரிவுகளுக்கு அடுத்த நிர்வாக அலகாக இருந்த உடையார் பிரிவுகள் 1954உடன் முடிவுக்கு வந்தன. இதனால் இக்காலத்தின் பின் ஐந்து மட்ட நிர்வாக அமைப்புகளான மாகாணம், மாவட்டம், காரியாதிகாரி பிரிவு, உடையார் பிரிவு, விதானை பிரிவு ஆகியன மாவட்டம், காரியாதிகாரி பிரிவு, விதானை பிரிவுஎன மூன்றாகக் குறைந்தன.

மணியகாரர் பிரிவாக இருந்த பகுதி பின்னர் காரியாதிகாரி பிரிவாகப் பெயர் மாற்றம் பெற்றது. 1970களில் இப்பெயர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு என மாற்றம் பெற்றது. இம்மாற்றத்துடன் அதிகாரங்களும் குறிப்பாக நில அதிகாரங்களும் காரியாதிகாரி பிரிவிடம் கையளிக்கப்பட்டன. மேலும் திட்டமிடல், கலாசார நடவடிக்கைகள் போன்ற செயற்பாடுகளும் அவற்றிற்கு உரிய அதிகாரங்களும் கையளிக்கப்பட்டன. 1980களின் பிற்பகுதியில் இவை பிரதேச செயலகங்களாகப் பெயர் மாற்றப்பட்டு, அவற்றின் செயற்பாடுகளும் அதிகாரங்களும் அதிகரிக்கப்பட்டன. பிரதேச செயலகங்களின் செயற்பாடுகள் மேலும் அதிகரிக்கக்கூடிய போக்கு காணப்படுகின்றது. ஆரம்பத்தில் சட்டம், ஒழுங்கில் கூடிய கவனம் எடுக்கப்பட்டு, பின்னர் வரி, வருமானம் சேகரிப்பதில் முக்கிய பங்குகொண்டு 1970களில் பிரதேச மட்டத் திட்டமிடல் அபிவிருத்தி கலாசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு, 1990களில் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுடன், ஓய்வூதியம் மற்றும் மாவட்ட, செயலக செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றன. இப்பிரதேச செயலகங்கள் இன்று பல்துறை சார்ந்த பயிற்சிபெற்ற உயர்மட்ட ஆளணியினரைக் கொண்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று 13 பிரதேச செயலகங்கள் உள்ளன. இப்பிரதேச செயலகப் பிரிவுகளின் குடிசனத்தொகையும் (8,12,001) பரப்பும் அட்டவணை II இல் காட்டப்பட்டுள்ளன:

அட்டவணை II

| | பரப்பு | குடிசனத் தொகை 1981 | குடிசனத் தொகை 2001 |
|---|---|---|---|
| நெடுந்தீவு | 27.4 | 5624 | 5332 |
| தீவுகள் தெற்கு | 98.4 | 38475 | 11768 |
| தீவுகள் வடக்கு | 65.1 | 38015 | 15798 |
| யாழ்ப்பாணம் | 27.7 | 77469 | 42516 |
| நல்லூர் | 27.4 | 82000 | 72965 |
| வலிகாமம் தென்மேற்கு | 50.2 | 56839 | 51650 |
| வலிகாமம் மேற்கு | 49.3 | 47720 | 41636 |
| வலிகாமம் தெற்கு | 32.3 | 54729 | 56079 |
| வலிகாமம் வடக்கு | 61.1 | 72214 | 22404 |
| வலிகாமம் கிழக்கு | 102.2 | 73472 | 70386 |
| தென்மராட்சி | 229.4 | 71545 | 5996 |
| வடமராட்சி தெற்கும்மேற்கும் | 65.9 | 62512 | 71237 |
| வடமராட்சி வடக்கு | 54.5 | | 70772 |
| வடமராட்சி கிழக்கு | 118.5 | 49982 | 2824 |

அட்டவணைIII இல் யாழ்ப்பாண மாவட்டத்தினதும் யாழ்ப்பாணக் குடாநாட்டினதும் குடிசனத்தொகை விபரங்கள் காட்டப்பட்டுள்ளன.

பிரதேச செயலகங்களின் அதிகரிப்பை நோக்குமிடத்து தீவுகள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு, தீவுகள் தெற்கு, தீவுகள் வடக்கு எனவும் யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவு யாழ்ப்பாணம், நல்லூர் எனவும் வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு எனவும் வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்குஎனவும் வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு வடமராட்சி தெற்கும் மேற்கும் வடமராட்சி வடக்கும் கிழக்கும் எனவும் பிரிக்கப்பட்டன. இப்பிரிவுகள் அன்று இருந்த தேர்தற்றொகுதிகளின் எல்லைகளைப் பெருமளவு ஒத்தவையாக 1970களின் முற்பகுதியில் பிரிக்கப்பட்டன.

1988இல் வடமராட்சி வடக்கும் கிழக்கும் வடமராட்சி வடக்கு எனவும் வடமராட்சி கிழக்கு எனவும் பிரிக்கப்பட்டது. கடந்த காலப்பகுதிகளில் தென்மராட்சி, வலிகாமம் கிழக்கு ஆகியன மாற்றத்துக்கு உட்பட வில்லை. தென்மராட்சிப் பிரிவு பல நூற்றாண்டுகளாக ஒரே பிரிவாக இருந்து வருவது சிறப்பான ஓர் அம்சமாகும். ஒல்லாந்தர் காலத்திலும் அதற்கு முன்னரும், பிரித்தானியர் காலத்திலும் சுதந்திரத்திற்குப் பின் இன்று வரையும் இப்பிரதேசம் ஒரு நிர்வாக அலகாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. காலத்துக்குக்காலம் தென்மராட்சியை இரண்டாகப்பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கையெழும்பியபோது இதன் வரலாற்றுப் பின்னணியை முன்னிட்டு பிரிக்கின்றமுயற்சி கைவிடப்பட்டது. ஆனால் இன்று மக்கள் தொகை, பரப்பளவு மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் காரணமாகவும், அண்மை யில் நடந்த யுத்த அனர்த்தங்களினால் பெரும் சேதத்திற்கு உட்பட்டதாலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகத் தென்மராட்சிப் பிரிவை இருபிரிவாகப் பிரிக்கவேண்டும் என்றகோரிக்கை வலுப்பெற்றுள்ளது. ஆகவே தென்மராட்சியை இரண்டாகப் பிரிப்பது அபிவிருத்தியை முன்னெடுக்க இலகுவாக அமையும்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் நிர்வாக சேவையின் தரத்தை உயர்த்தவும். புனர்வாழ்வு, புணருத்தாரணம், அபிவிருத்தி முயற்சிகளை முன்னெடுப்பதற்கும் ஆறு புதிய பிரதேச பிரிவுகள் அமைக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இவை உடனடியாக முழு அந்தஸ்துடன் அமைக்கப்படாவிட்டாலும் முதலில் மட்டுப்படுத்தப்பட்ட நடமாடும் சேவையுடன் அமைக்க வேண்டியது தவிர்க்க முடியாதது. இன்றைய தேவைகளையும், அவ்வப்பிரதேச மக்களின் நீண்டநாள் கோரிக்கைகளையும் கருத்திற்கொண்டு பின்வரும் புதிய பிரதேச செயலகர் பிரிவுகள் அமையவேண்டும். அவையாவன:

1. தென்மராட்சி கிழக்கு
2. வலிகாமம் கிழக்கு – அச்சுவேலி
3. உரும்பிராய் – கட்டுவன்
4. அரியாலை
5. புங்குடுதீவு – நயினாதீவு
6. காரைநகர்

### 1. தென்மராட்சி கிழக்கு (கொடிகாமம்)

தற்போதைய தென்மராட்சிப் பிரிவைக் கிழக்கு, மேற்கு எனப் பிரிப்பதன்மூலம் இப்புதிய பிரிவு உருவாக்கப்பட வேண்டும். தென்மராட்சிப் பிரதேசம் பரப்பில் பெரிதாகவும் மக்கட்டொகை 2000க்கு முன் 75, 000க்கு மேற்பட்டும், யுத்த அனர்த்தங்களால் பெரும் சேதத்திற்கு உட்பட்டும் இருப்பதால் புதிய பிரிவு உருவாக்கம் பொருத்தமாக அமைகிறது. தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் 60 கிராம சேவகர் பிரிவுகள் இருப்பதால் ஒரு பிரதேச செயலர் 60 கிராம சேவகர்களின் நிர்வாகக் கடமைகளை மேற்பார்வை செய்வது மிகவும் கடினம். மேலும் கிழக்குப் பகுதி மக்கள் பின்தங்கிய நிலையில் இருப்பதால், புதிய பிரிவு உருவாக்கம் அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

### 2. வலிகாமம் கிழக்கு – அச்சுவேலி

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் வடபகுதியைப் பிரித்து இப்பிரதேச செயலர் பிரிவு அமையவேண்டும். தென்பகுதி வலிகாமம் கிழக்கு – கோப்பாயாக அமையும். அச்சுவேலிப் பிரிவில் புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, கதிரிப்பாய், பத்தைமேனி, இடைக்காடு, வளலாய், நவக்கிரி போன்ற கிராமங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். பிரேரிக்கப்பட்ட செயலர் பிரிவு 40, 000 மக்களைக் கொண்டும் எதிர்கால அபிவிருத்தி வாய்ப்புக்களைக் கொண்டும் அமைகின்றது. மேலும் அச்சுவேலி வளர்ந்துவரும் நகராக இருப்பதால் பிரதேச செயலர் பிரிவு அங்கு அமைவது அபிவிருத்தியை முன்னெடுக்கவும் மக்களின் நிர்வாக சேவைத் தேவைகளை நிறைவேற்றவும் வழியேற்படும். வலிகிழக்குப் பிரதேச செயலர்களின் நடமாடும் பிரதேச செயலர்பிரிவு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 3. உரும்பிராய் – கட்டுவன்

புதிதாக உருவாக்கும்பொருட்டு முன்மொழியப்பட்ட பிரதேச செயலர் பிரிவு உரும்பிராய், ஊரெழு, புன்னாலைக்கட்டுவான், வசாவிளான், பலாலி, குப்பிளான் போன்ற பலாலி வீதியை அண்டியிருக்கும் கிராமங்களை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும். இக்கிராமங்கள் தற்போது வலிகாமம்

கிழக்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு ஆகிய 3 பிரதேசச் செயலர் பிரிவுகளுள் அமைந்துள்ளன. இதனால் புதிய பிரதேசச் செயலர் பிரிவு மேற்குறிப்பிட்ட மூன்று பிரதேசச் செயலர் பிரிவுகளிலிருந்து கிராமங் களைப் பிரித்தெடுத்து அமைக்க வேண்டும். புன்னாலைக்கட்டுவனுக்கு வடக்காக அமைந்துள்ள பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக இருக்கின்றது. இப்பகுதி மீள்குடியேற்றத்திற்கு உட்படவிருப்பதால் இப்பிரதேச செயலர் பிரிவு அமைவது முக்கியமாகும். இதனது தலைமைக் காரியாலயம் கட்டுவன் சந்தியில் அமையலாம்.

*4. அரியாலை*

அரியாலை ஒரு தனித்துவமான பிரதேசமாக இருப்பதுடன், அது நீண்டதொரு நிலைப்பகுதியையும் கொண்டுள்ளது. அரியாலைக்கு ஒரு பிரதேச செயலர் பிரிவு அமையவேண்டுமென மக்கள் நீண்டகாலமாகக் கோரி வருகின்றனர். 2000ம் ஆண்டு யுத்தத்தால் ஏறக்குறைய அரியாலைப் பிரதேசம் முழுவதும் பெரும் சேதத்திற்கு உட்பட்டு இன்று குறைவான மக்களைக் கொண்டுள்ளது. நிலப்பரப்பு, மக்கட்டொகை, புனர்வாழ்வு, புனருத்தாரணப் பிரச்சினைகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தி வாய்ப்புகள் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு இப்பகுதியில் ஒரு பிரதேசச் செயலர் பிரிவு அமையவேண்டும். தற்பொழுதுள்ள யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசச் செயலர் பிரிவுகளிலிருந்து புதிய பிரதேசச் செயலர் பிரிவு அமையலாம்.

*5. புங்குடுதீவு – நயினாதீவு*

தீவுகள் தெற்குப் பிரதேசச் செயலர் பிரிவு வேலணையில் அமைக் கப்பட்டபோது, அதன் செயலகத்தைப் புங்குடுதீவில் அமைக்க வேண்டு மெனப் புங்குடுதீவு நயினாதீவு மக்கள் கோரிக்கை விட்டுக் கடும் அழுத்தம் கொடுத்தனர். எனினும் அன்றைய ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் காலக்கிரமத்தில் ஒரு பிரதேசச் செயலர் பிரிவு புங்குடுதீவில் அமைக்கப்படு மென உறுதிமொழி கொடுத்தார். கடந்த இரு தசாப்பத கால நாட்டுச் சூழ்நிலையினால் மக்களின் கோரிக்கை கைகூடவில்லை. இதே நேரத்தில் புங்குடு தீவில் மக்கள் இடம்பெயர்ந்து பல அழிவுகளும் ஏற்பட்டுள்ளன.

மக்கள் மீள்குடியேற்றம், புனரமைப்பு, அபிவிருத்தி ஆகியவற்றை நோக்காகக் கொண்டும், மக்கள் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டும், நயினாதீவின் சமய முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டும். இப்பிரதேசச் செயலர் பிரிவு அமைவது தேவையாகும். இதனால் தீவுகள் தெற்குப் பிரதேசச் செயலர் பிரிவு வேலணை, புங்குடுதீவு – நயினாதீவு என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட வேண்டும்.

*6. காரைநகர்*

தீவுகள் வடக்குப் பிரதேசச் செயலர் பிரிவு ஊர்காவற்றுறை காரைநகர் என இரண்டாய்ப் பிரிக்கப்பட வேண்டும். காரைநகரில் பிரதேசச் செயலகம் ஒன்று அமையவேண்டும் என்பது நீண்டகால எதிர்பார்ப்பாகும். இத்தீவு ஊர்காவற்றுறையிலிருந்து கடலால் பிரிக்கப்பட்டிருப்பதால் காரைநகர் தனித்துவமான பகுதியாக அமைகின்றது. இத்தீவு மக்களின் போக்குவரத்து வலிகாமம் மேற்கு ஊடாகவே நடைபெறுகின்றது. இதனால் இத்தீவு மக்கள் பிரதேசச் செயலக அலுவல்களுக்கு மாத்திரமே கடல்கடந்து ஊர்காவற்றுறைக்கு வரவேண்டியுள்ளது. ஏற்கனவே தீவுகள் வடக்குப் பிரதேசச் செயலர் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இங்கு நடைபெறுகின்றன. இக்கிராமமும் 1990களின் பின் பெரும் பாதிப்புக்குட்பட்டு, மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். ஆகவே புனர்வாழ்வு, புனருத்தாரண நடவடிக்கைகள், அபிவிருத்தி, மக்கள் எதிர்பார்ப்பு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு புதிய பிரதேசச் செயலர் பிரிவு இங்கு அமையவேண்டும். இது தனித்தீவாக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே நடமாடும் செயலகப் பிரிவு இங்கு இயங்குகின்றது.

மேற்குறிப்பிட்ட புதிய பிரதேசச் செயலர் பிரிவுகள் அமையின் பிரதேச நிர்வாகம் இலகுவாக்கப்படுவதுடன், புனர்வாழ்வு, அபிவிருத்தி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வசதியாக இருக்கும் இவற்றைப் படிப்படியாகச் செயற்படுத்தலாம். ஏற்கனவே இயங்கும் நடமாடும் செயலகப் பிரிவுகள் படிப்படியாகத் தரம் உயர்த்தப்படலாம்.

இலங்கையில் கீழ்மட்ட நிலையிலுள்ளதும், மிகச்சிறியதும், தேவையானதுமான நிர்வாக அலகு கிராமசேவகர் பிரிவு ஆகும். முன்னைய

கிராம சேவகர்கள் இன்று கிராம சேவகர் நிலதாரிகளென அழைக்கப்படுவர். கிராம சேவகர் நிலதாரியின் பணிகள் பல தன்மை பெற்று அதிகரித்து வருகின்றன. இவர்கள் பொதுநிர்வாகம், சட்ட ஒழுங்கு, அரசின் வளங்களைப் பாதுகாத்தல், உணவு நிவாரணம், தேர்தல் இடாப்புத் தயாரித்தல் போன்ற மக்கள்சார் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். மற்றும் காலத்திற்குக்காலம் ஏற்படும் இயற்கை, செயற்கை அழிவுகள் துன்பங்களையிட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் முக்கியமான முதல்நிலையில் கடமையேற்பவராகவும் விளங்குவர்.

1960களுக்கு முன்னர் எமது நாட்டில் கிராம விதானைமுறை செயற்பட்டு வந்தது. குறிப்பிட்ட ஒரு கிராமத்தில் செல்வாக்கு மிக்கவரைக் கிராம விதானையாக நியமிப்பது அக்கால வழக்கம். இதனால் விதானைமார் சமூக பொருளாதார நிலையில் உயர் அந்தஸ்து உடையவராக இருப்பர். இவர்கள் முதலாளித்துவ, நிலப்பிரத்துவ நலன்களைப் பேணுபவராக இருக்கின்றார்கள் எனக் குறைகாணப்பட்டு 1963இல் இம்முறை ஒழிக்கப்பட்டது. அத்துடன் இம்முறை கடந்தகால மானியமுறை அமைப்பின் எச்சம் எனவும் கருதப்பட்டது. இதன்பின் கிராமசேவகர் முறை அமுலுக்கு வந்தது. கிராம சேவகர்கள் பொதுப் பரீட்சைமூலம் தெரிவுசெய்யப்பட்டும் இடமாற்றம் பெறத் தகுதியுடையோராகவும் விளங்கினர். இதனால் விதானை முறையில் இருந்த சில குறைபாடுகள் நீக்கப்பட்டபோதும் அன்று அம்முறையில் காணப்பட்ட நல்லம்சங்களில் ஒன்றான சட்டம் ஒழுங்கு பேணல், சமூகத்தை ஒன்று சேர்த்தல் போன்றவற்றில் கிராமசேவகர் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இன்றைய யாழ்ப்பாண மாவட்டத்தில் 1977க்கு முன்னர் 149 கிராம சேவகர் பிரிவுகள் இருந்தன. மக்கள் தொகையிலும் பரப்பளவிலும் கிராம சேவகர் பிரிவுகளுக்கிடையே பெருமளவு வேறுபாடுகள் காணப்பட்டன. அட்டவணை IV இல் வகுப்பு, குடிசன பருமன் (1981) காட்டப்பட்டுள்ளன:

அட்டவணை V

| வகுப்பு | நிகழ்தகவு | விகிதத்தில் | திரண்ட நிகழ்தகவு |
|---|---|---|---|
| 0–2000 | 17 | 11.5 | 11.5 |
| 2001–4000 | 43 | 28.8 | 40.3 |
| 4001–6000 | 48 | 32.2 | 72.2 |
| 6001–8000 | 20 | 13.4 | 85.9 |
| 8001–10000 | 8 | 5.4 | 91.3 |
| 10001–12000 | 10 | 6.7 | 98.0 |
| 12001–14000 | 3 | 2.0 | 100.0 |

ஏழாலை, அளவெட்டி போன்ற கிராம சேவகர் பிரிவுகள் 10,000க்கு மேற்பட்ட மக்களைக் கொண்டிருக்க, எழுவைதீவு, 500க்குக் குறைந்த மக்களையே கொண்டுள்ளது. ஒருசில குடும்பங்களையே கொண்டுள்ள சுண்டிக்குளத்தில் குறித்த பருவகாலத்தில் மீனவர்கள் இடம்பெயர்ந்து தொழில் செய்வது வழக்கம்.

1979இல் அரசாங்கம் கிராம சேவகர்களின் செயற்பாடுகளுக்கு உதவியாக விசேட சேவை உத்தியோகத்தர்களை (550) நியமித்தது. நாட்டின் ஏனைய பகுதிகளில் ஒரு கிராம சேவகருக்கு ஒரு விசேட உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டபோதும், யாழ்ப்பாண மாவட்டத்தில் அவ்வாறு இல்லாமல் 149 விசேட உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக 78 விசேட உத்தியோகத்தர்களே நியமிக்கப்பட்டனர். விசேட உத்தியோகத்தர் முறை பின்னர் கைவிடப்பட்டு, அவர்கள் கிராம சேவகர்களாகப் பதவிமாற்றம் பெற்றபோது, அவ் வெண்ணிக்கைக்குரிய கிராமசேவகர் பிரிவுகளே யாழ்ப்பாண மாவட்டத்தில் உருவாக்கப்பட்டன. ஆரம்பத்தில் விசேட உத்தியோகத்தர்களின் முழுமையான எண்ணிக்கையைப் (149)பெறாதபடியால் பின்னர் கிராம சேவகர்களின் முழுமையான எண்ணிக்கையைப் பெறமுடியாது போய்விட்டது.

1970களில் விவசாய சேவை நிலையங்கள் (APC) அமைக்கப்பட்டபோது, அவை கூடுதலாக நெற்செய்கைப் பிரதேசங்களிலேயே நிறுவப்பட்டன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் நெற்செய்கைக்கான நிலப்பரப்புக்

குறைவாக இருப்பதால் குடாநாட்டிற்கு வெளியில் கிராமச்சேவைப் பிரிவுகளுக்கு ஒன்று அல்லது ஒன்றுக்குமேல் விவசாய சேவை நிலையங்கள் அமைக்கப்பட்டது போல் அமைக்கப்படாது ஒரு தேர்தற்றொகுதிக்கு ஒரு விவசாய சேவை நிலையமே அமைக்கப்பட்டது. நகராக்கம் பெற்ற யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய இரு தேர்தற்றொகுதிகளுக்கும் பொதுவாக ஒரு சேவை நிலையமே நல்லூர் ஆகிய இரு தேர்தற்றொகுதிகளுக்கும் பொதுவாக ஒரு சேவை நிலையமே நல்லூரில் அமைக்கப்பட்டது. இதனால் விவசாயச் சேவை சார்ந்த உத்தியோகத்தர்கள் இம்மாவட்டத்தில் குறைவாக நியமனம் பெறும் நிலையேற்பட்டது. இவர்கள் பதவிமாற்றம் பெற்று, கிராம சேவகர்களாக உள்வாங்கப்பட்டபொழுது, இங்கிருந்து பதவிமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பக் கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கக்கூடியதாக இருந்தது. ஆனால் மாவட்டத்தில் ஏற்பட்ட கிராம சேவகர் அதிகரிப்பு எண்ணிக்கை நாட்டிலும் ஏனைய மாவட்டங்களிலும் ஏற்பட்ட அதிகரிப்பு வீதத்திலும் பார்க்கக் குறைவாக இருந்தது. நாட்டின் கிராம சேவகர் எண்ணிக்கை 1987இல் 4500இல் இருந்து 14,000 ஆக அதிகரித்தது. யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ்வெண்ணிக்கை 225ல் இருந்து 435ஆக அதிகரித்தது. 1981இல் யாழ்ப்பாண மாவட்டம் இலங்கைக் குடிசனத்தொகையில் 5%வீதத்தைக் கொண்டிருந்ததால் ஏறக்குறைய 700 கிராம சேவகர் பிரிவுகளைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் மாவட்டம் 265க்கு மேற்பட்ட கிராம சேவகர் பிரிவுகளை இழந்துள்ளது. 400 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகர் என்ற ரீதியில் கூடுதலான கிராம சேவகர்களைப் பெறத் தகுதியிருந்தும் இந்நியமனங்கள் கிடைக்கவில்லை. 1980, 1988, 2000 ஆகிய ஆண்டுகளில் இருந்த கிராம சேவகர் பிரிவுகள் அட்டவணை VA இல் காட்டப்பட்டுள்ளன.

கிராம மட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அடிமட்டத்தில் இலகுவான, இறுக்கமான, சிறப்பான நிர்வாகத்திற்குச் சிறிய கிராம சேவகர் பிரிவுகள் இருப்பது அவசியம். யாழ்ப்பாண மாவட்டம் முழுவதிலும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள இருப்பதாலும் மற்றும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு இலகுவான முறையில் தீர்வுகாணவும், பொதுவான தரவுகள் சேகரிக்கவும் கிராம சேவகர்களின் பணி அத்தியாவசியமாகின்றது. இதனால் இம்மாவட்டம் கடந்த காலங்களில் இழந்த கிராம சேவகர் பிரிவுகளைப் பெறவேண்டும்.

கிராம சேவகர் பிரிவுகள் சரியான முறையில் மீள்நிர்மாணம் செய்யப்பட்டு, பொருத்தமான பெயர்கள் சூட்டப்பட வேண்டும். நகரம், கிராமங்களில் வாழும் மக்கள் தங்கள் வாழ்விடப் பரப்புகளுடன் தம்மை இணைத்துச் செயற்படக் கூடிய முறையில் அவர்கள் வாழும் பகுதிகளின் பெயர்கள் இடப்படவேண்டும். பல்வேறு திசைகளை அடிப்படையாகக் கொண்டு கிராமசேவகர் பிரிவுகள் பிரிக்கப்பட்டிருப்பது நிர்வாகத்திற்கும், தரவு பேணுவதற்கும், கஷ்டமாக இருப்பதுடன் மக்கள் தங்கள் வாழ்விடத்தைக் கிராம சேவகர் பிரிவுகளுடன் இணைத்து இலகுவாக இனங்காணவும் முடியாதுள்ளனர். உதாரணமாக, தீவுகள் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் புங்குடுதீவுக் கிராமசேவகர் பிரிவுகள் பல அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன. இது மக்களுக்குக் குழப்பத்தைக் கொடுக்கின்றது. ஆகவே இடங்களின் பெயர்கள் கொடுக்கப்படுவது சிறந்தது.

தொகுத்து நோக்கின், தேர்தல் தொகுதிகள், உள்ளூராட்சி அலகுகள், பிரதேச செயலாலர் பிரிவுகள், கிராம சேவகர் பிரிவுகள் ஆகியன சிறப்பான முறையில் அமையின் மக்களின் பங்களிப்பை இலகுவாகப் பெறுவதுடன் இடஞ்சார் அபிவிருத்தி நல்லமுறையில் முன்னெடுக்கலாம்.

அட்டவணை VA

### *கிராமசேவர் பிரிவு 1981 – குடிசனத்தொகையும் பரப்பும்*

### Table: Population and Area by G.S.Divisions - 1981

| A. G. A. Division | G.S. Division | G.S.No | Area (sq.km) | Population |
|---|---|---|---|---|
| | Delft West | 01 | 18.12 | 2169 |
| Delft | Delft Centre | 02 | 5.00 | 2051 |
| | Delft East | 03 | 14.29 | 1388 |
| | Saravanai | 15 | 4.35 | 3463 |
| | Velanai West | 17 | 5.36 | 3863 |
| | Velanai East | 18 | 18.23 | 5434 |
| | Allaipiddy | 19 | 17.53 | 3092 |
| | Mandaitivu | 20 | 10.95 | 3695 |
| Island South | Nainativu North | 04 | 2.00 | 1964 |
| | Nainativu South | 04A | 2.66 | 2284 |
| | Pungudutivu West | 05 | 9.35 | 4512 |
| | Pungudutivu Centre | 05A | 10.51 | 5614 |

| | | | | |
|---|---|---|---|---|
| | Pungudutivu East | 06 | 10.54 | 4490 |
| | Analaitivu | 07 | 6.08 | 3277 |
| | Eluvaitivu | 08 | 1.68 | 528 |
| | Karainagar West | 09 | 8.65 | 5617 |
| | Karainagar East | 10 | 1.64 | 5957 |
| Island North | Karainagar North | 10A | 7.30 | 6299 |
| | Kayts | 12 | 1.08 | 9102 |
| | Karampan | 13 | 7.84 | 5204 |
| | Naranthanai | 14 | 7.07 | 4680 |
| | Suurvil | 16 | 4.89 | 2919 |
| | Columbuturai | 24 | 2.02 | 8200 |
| | Kurunagar | 25 | 1.00 | 13000 |
| | Jaffna Town | 26 | 2.31 | 10800 |
| | Vannarpannai S.E | 27 | 2.01 | 10600 |
| | Vannarpannai S.W | 28 | 2.94 | 10400 |
| | Moor Street | 29 | 1.00 | 11800 |
| | Chundikuli | 24A | 1.30 | 8600 |
| | Ariyalai West | 23A | 2.60 | 9400 |
| | Ariyalai East | 23 | 11.50 | 4200 |
| | Vannarpannai N.W | 31 | 3.04 | 7400 |
| | Vannarpannai N.E | 32 | 2.46 | 15800 |
| Nallur | Nallur | 33 | 2.75 | 10300 |
| | Thirunelvely | 34 | 2.70 | 11000 |
| | Kondavil East | 36A | 2.46 | 8200 |
| | Kondavil West | 36 | 2.00 | 4600 |
| | Kokuvil East | 37 | 2.15 | 8200 |
| | Kokuvil West | 38 | 2.00 | 6600 |

| *A. G. A. Division* | *G. S. Division* | *G.S.No.* | *Area (sq.km)* | *Population* |
|---|---|---|---|---|
| | Suthumalai | 39 | 2.61 | 770 |
| | Annaicota | 40 | 3.60 | 3114 |
| | Navaly | 41 | 7.61 | 3731 |
| | Manipay | 42 | 4.66 | 7667 |
| Valigamam | Sandilipay | 43 | 5.56 | 6894 |
| South - West | Chankanai North | 50B | 4.35 | 7473 |
| | Pandatharippu | 51 | 4.19 | 10432 |
| | Mathakal | 52 | 7.10 | 6332 |
| | Periyavilan | 53 | 8.85 | 7710 |

| | | | | |
|---|---|---|---|---|
| | Vaddu East | 44 | 3.57 | 5553 |
| | Araly North West | 45A | 5.02 | 4433 |
| | Araly South East | 46 | 5.82 | 4111 |
| | Vaddu West | 47 | 4.71 | 6256 |
| Valigamam | Tholpuram | 48 | 6.08 | 5177 |
| | Moolai | 48A | 3.67 | 2506 |
| | Chulipuram West | 49 | 4.50 | 3942 |
| | Chulipuram East | 49A | 3.21 | 3832 |
| | Chankanai East | 50 | 4.22 | 6171 |
| | Chankanai West | 50 A | 1.68 | 5540 |
| | Uduvil | 56 | 6.29 | 7194 |
| | Inuvil | 57 | 2.56 | 6370 |
| | Thavady | 57A | 1.47 | 5020 |
| Valigamam | Chunnakam | 58 | 2.68 | 10518 |
| South | Kandarodai | 58A | 4.00 | 5600 |
| | Elalai | 59 | 3.60 | 11070 |
| | Kuppilan | 70A | 2.35 | 3997 |
| | Punnlaikadduvan | 60 | 5.74 | 4993 |
| | Mallakam | 61 | 2.51 | 5126 |
| | Alaveddy North | 62 | 3.60 | 4915 |
| | Alaveddy South | 62A | 3.00 | 4665 |
| | Tellippallai N.W | 63 | 2.84 | 2501 |
| | Tellippalai S. W | 64 | 4.37 | 4207 |
| | Keerimalai | 64A | 0.85 | 650 |
| | Tellippalai East | 65 | 4.61 | 8510 |
| Valigamam | Maviddapuram | 66 | 3.08 | 5369 |
| North | Kankesanturai | 67 | 6.00 | 6782 |
| | Pallai Veemankamam | 68 | 1.63 | 2273 |
| | Kadduvan | 69 | 3.34 | 3454 |
| | Myliddy South | 70 | 3.39 | 3975 |
| | Vasavillan | 71 | 3.26 | 3302 |
| | Myliddy N | 72 | 5.72 | 4634 |
| | Myliddy Coast | 72A | 1.11 | 4484 |
| | Palaly | 73 | 5.51 | 7211 |

| *A.G.A. Division* | *G S. Division* | *G.S.No.* | *Area (sq.km)* | *Population* |
|---|---|---|---|---|
| | Thondamanaru | 122 | 1.29 | 2200 |
| | Kerudavil | 129 | 3.65 | 2000 |
| | Valvettiturai North | 125 | 0.45 | 5500 |
| | Valvettiturai South | 125A | 0.40 | 3850 |
| | Polikandy | 126 | 2.20 | 3515 |
| | Thunnalai North | 131 | 10.51 | 1492 |
| | Alvai West | 134 | 2.12 | 3071 |
| | Alvai North | 135 | 2.51 | 4773 |
| | Puloly West | 136 | 2.40 | 3400 |
| | Point Pedro | 137 | 1.13 | 5500 |
| Vadamaradchy | Puloly East | 138 | 1.10 | 5000 |
| North & East | Puloly South | 139 | 3.03 | 6018 |
| | Thumpalai | 140 | 3.80 | 5400 |
| | Katkovalam | 141 | 1.26 | 726 |
| | Kudathanaikarayoor | 142 | 12.17 | 1494 |
| | Ampan | 144 | 23.75 | 1330 |
| | Nagarkovil | 145 | 30.30 | 1935 |
| | Chempianpattu | 147 | 18.02 | 1947 |
| | Maruthankeni | 148 | 19.55 | 4484 |
| | Mulliyan | 149 | 63.40 | 2279 |
| | Chundikulam | 151 | 14.29 | 204 |

Part urban and Part rural
Full Urban

All other G.S. Diviaions are rural, (population for rural G. S. Divisions based on census report 1981. Population for bar Iural - Part urban and urban is estimated using census report and other sources)

G. S. Divisions Puloly West (136) and Puloly South (139) transfered from Vadamaradchy South & West to Vadamaradchy North & East from 13-03-1987

| **A.G.A Division** | **G.S. Division** | **G.S.No.** | **Area (sq.km)** | **Population** |
|---|---|---|---|---|
| | Pathaimeny & Iddaikadu | 75 | 15.61 | 9352 |
| | Atchchuvely | 76 | 10.07 | 8717 |
| | Puttur East | 78 | 21.18 | 4957 |

| | | | | |
|---|---|---|---|---|
| | Puttur West | 78 | 9.84 | 7671 |
| Valigamam | Siruppiddy | 80 | 9.22 | 5369 |
| East | Neervely | 82 | 9.32 | 6604 |
| | Urelu | 83 | 2.30 | 2785 |
| | Urumpirai | 84 | 7.66 | 11254 |
| | Kopay North | 85 | 6.91 | 5737 |
| | Kapay South | 86 | 6.00 | 4480 |
| | Irupalai | 86 A | 6.25 | 6217 |
| | Kaithady North | 88 | 5.00 | 3165 |
| | Kaithady South | 89 | 6.73 | 4533 |
| | Koilakandy | 91 | 12.22 | 3732 |
| | Maravanpulavu | 93 | 9.11 | 1612 |
| | Thanankilappu | 94 | 21.75 | 797 |
| | Chavakachcheri South | 95 | 6.39 | 7173 |
| | Chavakachcheri North | 96 | 10.00 | 4102 |
| | Nunavil | 98 | 1.34 | 3776 |
| Thenmaradcy | Madduvil - Nunavil | 99 | 12.74 | 4050 |
| | Madduvil North | 100 | 14.08 | 3951 |
| | Sarasalai | 101 | 11.88 | 2746 |
| | Meesalai North | 102 | 5.17 | 3288 |
| | Meesalai South | 103 | 3.75 | 4650 |
| | Kachchai | 105 | 12.06 | 3916 |
| | Koddikamam | 106 | 5.87 | 2814 |
| | Usan | 107 | 25.12 | 2797 |
| | Eluthumadduval | 110 | 16.08 | 2209 |
| | Mirusuvil | 111 | 13.23 | 2185 |
| | Navatkaddu | 112 | 7.56 | 1545 |
| | Varani North | 114 | 8.28 | 1458 |
| | Iddaikuruchi | 115 | 7.04 | 2298 |
| | Varani Thavalai Iyattalai | 116 | 8.65 | 2391 |
| | Manthuvil | 118 | 9.50 | 2349 |
| | Karanavai South | 119 | 6.07 | 5999 |
| | Kapputhu | 119 A | 14.00 | 540 |
| | Uddupiddy | 121 | 16.36 | 5656 |
| | Valvly | 124 | 1.81 | 5704 |
| | Karanavai North | 127 | 2.25 | 4699 |
| Vadamaradchy | Imayanan | 127 A | 3.10 | 3996 |
| South & West | Karaveddy West | 128 | 4.63 | 4000 |
| | Karaveddy Centre | 128 A | 4.29 | 4800 |
| | Karaveddy East | 129 | 6.68 | 3800 |

| | | | |
|---|---|---|---|
| Thunnalai South | 130 | 7.38 | 4860 |
| Karaveddy North | 132 | 2.02 | 5500 |
| Alvai South | 133 | 2.77 | 5100 |

அட்டவணை **VB**

***யாழ்ப்பாண மாவட்டத்தின் கிராம சேவகர் பிரிவுகள் – முதல் அதிகாரிப்பு***

| | | | |
|---|---|---|---|
| Delft | J.1 | 1. | Delft West |
| | J.2 | 2. | Delft Centre West |
| | J.3 | 3. | Delft Centre, East |
| | J.4 | 4. | Delft East |
| Islands South | J/5 | 1. | Nainativu North |
| | J/6 | 2. | Nainativu South |
| | J/7 | 3. | Pungudutivu North west |
| | J/8 | 4. | Pungudutivu Nrth |
| | J/9 | 5. | Pungudutivu South West |
| | J/10 | 6. | pungudutivu South |
| | J/11 | 7. | Pungudutivu South Easat |
| | J/12 | 8. | Pungudutivu North Easr |
| | J/13 | 9. | Velannai North |
| | J/17. | 13. | Velannai East |
| | J/18 | 14. | Allaipiddy |
| | J/19 | 15. | Mankumpan |
| | J/20 | 16. | Manndaitivu |
| Islands North | J/21 | 1. | Analaitvu |
| | J/22 | 2. | Eluvativu |
| | J/23 | 3. | Karainagar West |
| | J/24 | 4. | Karainagar East |
| | J/25 | 5. | Karainagar South |
| | J/26 | 6. | Karaunagar North |
| | J/27 | 7. | Karainagar Centre |
| | J/28 | 8. | Kayts |
| | J/29 | 9. | Karampon |
| | J/30 | 10. | Karampon East |

| | | | |
|---|---|---|---|
| | J/31 | 11. | Karampon West |
| | J/32 | 12. | Naranthanai |
| | J/33 | 13. | Naranthanai North |
| | J/34 | 14. | Suruvil |
| Jaffna | J/35 | 1. | Columbuthurai |
| | J/36 | 2. | Eachchimoddai |
| | J/37 | 3. | Athiyaddy |
| | J/38 | 4. | Chundikuli |
| | J/39 | 5. | Gurunagar West |
| | J/40 | 6. | Gurunagar East |
| | J/41 | 7. | Jaffna Town |
| | J/42 | 8. | Grand Bazzar |
| | J/43 | 9. | Koddady |
| | J/44 | 10. | Navanthurai |
| | J/45 | 11. | Moor Street |
| Nallur | J/46 | 1. | Ariyalai East |
| | J/47 | 2. | Ariyalai West |
| | J/48 | 3. | Ariyalai Centre |
| | J/49 | 4. | Vannarpannai North - West |
| | J/50 | 5. | Vannarpannai North - East |
| | J/51 | 6. | Kandarmadam |
| | J/52 | 7. | Nallur North |
| | J/53 | 8. | Nallur South |
| Nallur | J/46 | 1. | Ariyalai East |
| | J/47 | 2. | Ariyalai West |
| | J/48 | 3. | Ariyalai Centre |
| | J/49 | 4. | Vannarponnai North - West |
| | J/50 | 5. | Vannarponnai North - East |
| | J/51 | 6. | Kandarmadam |
| | J/52 | 7. | Nallur North |
| | J/53 | 8. | Nallur South |
| | J/54 | 9. | Thirunelveli West |
| | J/55 | 10. | Thirunelveli East |
| | J/56 | 11. | Kondavil West |

| | | | |
|---|---|---|---|
| | J/57 | 12. | Kondavil East |
| | J/58 | 13. | Kokuvil East |
| | J/59 | 14. | Kokuvil West |
| | J/60 | 15. | Kokuvil Centre |
| **Valikamam South West** | J/61 | 1. | Suthumalai |
| | J/62 | 2. | Anaicottai |
| | J/63 | 3. | Uyarapulam |
| | J/64 | 4. | Navaly |
| | J/65 | 5. | Manipay |
| | J/66 | 6. | Sandilipay |
| | J/67 | 7. | Mahiyapiddy |
| | J/68 | 8. | Chankanai North |
| | J/69 | 9. | Pandatharippu |
| | J/70 | 10. | Sillalai |
| | J/71 | 11. | Mathakal |
| | J/72 | 12. | Mathakal East |
| | J/73 | 13. | Periyavilan |
| Valikamam | J/74 | 1. | Vaddukoddai East |
| | J/75 | 2. | Sankarathai |
| | J/76 | 3. | Araly North |
| | J/77 | 4. | Araly West |
| | J/78 | 5. | Araly South &East |
| | J/79 | 6. | Vaddukoddai West |
| | J/80 | 7. | Vaddukoddai North |
| | J/81 | 8. | Tholpuram |
| | J/82 | 9. | Ponnalai |
| | J/83 | 10. | Moolai |
| | J/84 | 11. | Chulipuram West |
| | J/85 | 12. | Chulipuram East |
| | J/86 | 13. | Chankanai East |
| | J/87 | 14. | Chankanai South |
| | J/88 | 15. | Chankanai West |
| Valikamam South | J/89 | 1. | Uduvil South |
| | J/90 | 2. | Uduvil North |

| | | | |
|---|---|---|---|
| | J/91 | 3. | Sanguvely |
| | J/92 | 4. | Inuvil |
| | J/93 | 5. | Thavady |
| | J/94 | 6. | Chunnakam |
| | J/95 | 7. | Kanderodai |
| | J/96 | 8. | Chunnakam East |
| | J/97 | 9. | Earlalai West |
| | J/98 | 10. | Earlalai North |
| | J/99 | 11. | Earlalai South |
| | J/100 | 12. | Punnalaikadduvan |
| | J/101 | 13. | Kuppilan |
| Valikamam North | J/102 | 1. | Mallakam South |
| | J/103 | 2. | Mallakam North |
| | J/104 | 3. | Alaveddy North |
| | J/105 | 4. | Alaveddy East |
| | J/106 | 5. | Alaveddy South |
| | J/107 | 6. | Tellippalai North - West |
| | J/108 | 7. | Pannalai |
| | J/109 | 8. | Naguleswaram |
| | J/110 | 9. | Tellippalai |
| | J/111 | 10. | Thurkapuram |
| | J/112 | 11. | Maviddapuram |
| | J/113 | 12. | Kollankallady |
| | J/114 | 13. | Kankesanthurai North |
| | J/115 | 14. | Kankesanthurai South |
| | J/116 | 15. | Veemankamam |
| | J/117 | 16. | Kaddvan |
| | J/118 | 17. | Myliddy South |
| | J/119 | 18. | Kurumpasiddy |
| | J/120 | 19. | Vasavilan |
| | J/121 | 20. | Myliddy North |
| | J/122 | 21. | Thaiyetty |
| | J/123 | 22. | Myliddy Thurai |
| | J/124 | 23. | Palali East |
| | J/125 | 24. | Palali West |

| | | | |
|---|---|---|---|
| Valikamam East | J/126 | 1. | Pathaimani |
| | J/127 | 2. | Valalai |
| | J/128 | 3. | Atchuveli North |
| | J/129 | 4. | Atchuveli South |
| | J/130 | 5. | Puttur East |
| | J/131 | 6. | Vatharaiwattai |
| | J/132 | 7. | Puttur West |
| | J/133 | 8. | Avarangal |
| | J/134 | 9. | Siruppoddy |
| | J/135 | 10. | Atchelu |
| | J/136 | 11. | Neervely |
| | J/137 | 12. | Urelu |
| | J/138 | 13. | Urumpirai East |
| | J/139 | 14. | Urumpirai West |
| | J/140 | 15. | Kopay North |
| | J/141 | 16. | Kopay South |
| | J/142 | 17. | Irupalai |
| Thenmaradchchi | J/143 | 1. | Kaithady North |
| | J/144 | 2. | Kaithady South |
| | J/145 | 3. | Kaithady West |
| | J/146 | 4. | Kokilakandy |
| | J/147 | 5. | Maravan Pulavu |
| | J/148 | 6. | Thanankilapu |
| | J/149 | 7. | Navatkuli |
| | J/150 | 8. | Chavakachcheri Town |
| | J/151 | 9. | Chavakachcheri East |
| | J/152 | 10. | Chavakachcheri North |
| | J/153 | 11. | Kalvayal |
| | J/154 | 12. | Nunavil West |
| | J/155 | 13. | Nunavil East |
| | J/156 | 14. | Madduvil South |
| | J/157 | 15. | Kaithady Nunavil |
| | J/158 | 16. | Madduvil North |
| | J/159 | 17. | Sarasalai |
| | J/160 | 18. | Meesalai North |

| | | | |
|---|---|---|---|
| | J/161 | 19. | Meesalai South |
| | J/162 | 20. | Kodikamam |
| | J/163 | 21. | Thavasikulam |
| | J/164 | 22. | Kachchai |
| | J/165 | 23. | Allarai |
| | J/166 | 24. | Usan |
| | J/167 | 25. | Vidathalpallai |
| | J/168 | 26. | Eluthumadduval South |
| | J/169 | 27. | Eluthumadduval North |
| | J/170 | 28. | Mirusuvil |
| | J/171 | 29. | Navatkadu |
| | J/172 | 30. | Varany North |
| | J/173 | 31. | Idaikuruchchi |
| | J/174 | 32. | Karampaikuruchchi |
| | J/175 | 33. | Varany Iyathalai |
| | J/176 | 34. | Thavalai Iyattalai |
| | J/177 | 35. | Manthuvil |
| Vadamaradchchi South & West | J/178 | 1. | Karanavai South |
| | J/179 | 2. | Karanavai West |
| | J/180 | 3. | Karanavai East |
| | J/181 | 4. | Kapputu |
| | J/182 | 5. | Uddupiddy |
| | J/183 | 6. | Uddupiddy North |
| | J/184 | 7. | Valvetty |
| | J/185 | 8. | Karanavai North |
| | J/186 | 9. | Karanavai Centre |
| | J/187 | 10. | Imayanan |
| | J/188 | 11. | Karaveddy West |
| | J/189 | 12. | Karaveddy Centre |
| | J/190 | 13. | Karaveddy East |
| | J/191 | 14. | Thunnalai South |
| | J/192 | 15. | Thunnalai East |
| | J/193 | 16. | Thunnalai West |
| | J/194 | 17. | Karaveddy North |
| | J/195 | 18. | Alvai South |
| | J/196 | 19. | Alvai East |

| | | | |
|---|---|---|---|
| Vadamaradchchi North & East | J/197 | 1. | Thondamanaru |
| | J/198 | 2. | Kerudavil North |
| | J/199 | 3. | Kerudavil South |
| | J/200 | 4. | Valvettiturai North |
| | J/201 | 5. | Valvettiturai South |
| | J/202 | 6. | Polikandy West |
| | J/203 | 7. | Polikandy East |
| | J/204 | 8. | Vallipuram |
| | J/205 | 9. | Thunnalai North |
| | J/206 | 10. | Alvai West |
| | J/207 | 11. | Alvai North |
| | J/208 | 12. | Viyaparimooplai |
| | J/209 | 13. | Pointpedro |
| | J/210 | 14. | Pointpedro East |
| | J/211 | 15. | Puloli East |
| | J/212 | 16. | Puloli South |
| | J/213 | 17. | Manthikai |
| | J/214 | 18. | Puloli West |
| | J/215 | 19. | Thumpalai |
| | J/216 | 20. | Katkovalam |
| | J/217 | 21. | Kudathanai Karayoor |
| | J/218 | 22. | Ampan |
| | J/219 | 23. | Kudathanai |
| | J/220 | 24. | Nagarkovil North |
| | J/221 | 25. | Nagarkovil South |
| | J/222 | 26. | Chempiyanpattru |
| | J/223 | 27. | Maruthankeny |
| | J/224 | 28. | Udduthurai |
| | J/225 | 29. | Mulliyan |
| | J/226 | 30. | Pokkaruppu |
| | J/227 | 31. | Chundikulam |

| Ser. No: | G.S.N.No: | Division |
|---|---|---|
| 01. | J/1 | Delft West |
| 02. | J/2 | Delft South |
| 03. | J/3 | Delft Centre West |
| 04. | J/4 | Delft centre |
| 05. | J/5 | Delft centre East |
| 06. | J/6 | Delft East |

## தீவுகள் தெற்கு
## (ISLAND SOUTH)

| | | |
|---|---|---|
| 01. | J/7 | Madnaitivu East |
| 02. | J/8 | Mandaitivu West |
| 03. | J/9 | Mandaitivu South |
| 04. | J/10 | Allaipiddy |
| 05. | J/11 | Mankumban |
| 06. | J/12 | Velanai North |
| 07. | J/13 | Velanai East |
| 08. | J/14 | Velanai North East |
| 09. | J/15 | Velanai South East |
| 10. | J/16 | Velanai East Centre |
| 11. | J/17 | Velanai South |
| 12. | J/18 | Velanai west Centre |
| 13. | J/19 | Velanai West |
| 14. | J/20 | Sarvanai East |
| 15. | J/21 | Saravanai West |
| 16. | J/22 | Pungudutivu North East |
| 17. | J/23 | Pungudutivu East |
| 18. | J/24 | Pungudutivu Sounth East |
| 19. | J/25 | Pungudutivu East West |
| 20. | J/26 | Pungudutivu South |
| 21. | J/27 | PungudutivuNorth |
| 22. | J/28 | Pungudutivu center North |
| 23. | J/29 | Punkudutivu South west |

| | | |
|---|---|---|
| 24. | J/30 | Pungudutivu Centre west |
| 25. | J/31 | Pongudutivu Senter East |
| 26. | J/32 | Ponkudutivu North East |
| 27. | J/33 | Pungudutivu west |
| 28. | J/34 | Nainativu North |
| 29. | J/35 | Nainativu Center |
| 30. | J/36 | Nainativu South |

## KAYTS (ISLAND NORTH) தீவுகள் வடக்கு

| Ser No: | G.S.N. No: | Devision |
|---|---|---|
| 01. | J/37 | Analaitivu North |
| 02. | J/38 | Analaitivu South |
| 03. | J/39 | Eluvaituvr |
| 04. | J/40 | Karainagar West |
| 05. | J/41 | Karainagar North west |
| 06. | J/42 | Karainagar East |
| 07. | J/43 | Karainagar South East |
| 08. | J/44 | Karainagar South |
| 09. | J/45 | Karainagar South west |
| 10. | J/46 | Karainagar North |
| 11. | J/47 | Karainagar Noth west |
| 12. | J/48 | Karainagar Center |
| 13. | J/49 | Kyts |
| 14. | J/50 | Paruthiaddauippu |
| 15. | J/51 | Karampon |
| 16. | J/52 | Karampon East |
| 17. | J/53 | Karampon South East |
| 18. | J/54 | Karampon west |
| 19. | J/55 | Naranthanai North |
| 20. | J/56 | Naranthanai North west |
| 21. | J/57 | Naranthanai |
| 22. | J/58 | Naranthanai south |
| 23. | J/59 | Suruvil |
| 24. | J/60 | Puliyankoodal |

யாழ்ப்பாணம்

## · Jaffna

| Ser.No: | G.S.N..No: | Division |
|---|---|---|
| 0 . | J/61 | Nedunkulam |
| 02. | J/62 | Columbuthurai East |
| 03. | J/63 | Columbuthurai West |
| 04 | J/64 | Pasiyoor East |
| 05. | J/65 | Pasiyoor West |
| 06. | J/66 | Eachchamoddai |
| 07. | J/67 | Thirunagar |
| 08. | J/68 | Recllamation Easr |
| 09. | J/69 | Reclamation West |
| 10. | J/70 | Gurunagar East |
| 11. | J/71 | Gurunagar West |
| 12. | J/72 | Sinnakadai |
| 13. | J/73 | Jaffna Twon West |
| 14. | J/74 | Jaffna Twon East |
| 15. | J/75 | Chundikuli South |
| 16. | J/76 | Chundikuli Nirth |
| 17. | J/77 | Maruthady |
| 18. | J/78 | Athiady |
| 19. | J/79 | Sirampiaddy |
| 20. | J/80 | Grand Bazaar |
| 21. | J/81 | Fort |
| 22. | J/82 | Vannarpannai |
| 23. | J/83 | Koddady |
| 24. | J/84 | Navanthurai South |
| 25. | J/85 | Navanthurai North |
| 26. | J/86 | Moor Sreet South |
| 27. | J/87 | Moor Street North |
| 28.. | J/88 | New Moor Street |

NALLUR

நல்லூர்

| Ser. No: | G.S.N.No: | Division |
|---|---|---|
| 01. | J/89 | Ariyalai South West |
| 02 | J/90 | Ariyalai East |
| 03 | J/91 | Ariyalai North West |
| 04. | J/92 | Ariyalai Centere North |
| 05 | J/93 | Ariyalai South West |
| 06. | J/94 | Ariyalaicnter North |
| 07. | J/95 | Ariyalai Cemter |
| 08. | J/96 | Ariyalai center west |
| 09. | J/97 | Iynarkovilady |
| 10. | J/98 | Vannarpannai North |
| 11. | J/99 | Vannarpannai North west |
| 12. | J/100 | Vannarpannai North East |
| 13. | J/101 | Neeraviyady |
| 14. | J/102 | Kandarmadam North West |
| 16. | J/104 | Kandarmadam South west |
| 17. | J/105 | Kandarmadam East |
| 18. | J/106 | Nallur North |
| 19. | J/107 | Nallur Center |
| 20. | J/108 | Nallur |
| 21. | J/109 | Sangiliyanthoppu |
| 22. | J/110 | Thirunalvely West |
| 23. | J/111 | Thirinalvely Center west |
| 24. | J/112 | Thirunelvely South East |
| 25. | J/113 | Thirunelvely North East |
| 26. | J/114 | Thirunelvely Center North |
| 27. | J/115 | Kondavil North West |
| 28. | J/116 | Kondavil South West |
| 29. | J/117 | Kondavil Center West |
| 30. | J/118 | Kondavil Center East |
| 31. | J/119 | Kondavil North East |
| 32. | J/120 | Kondavil South east |
| 33. | J/121 | Kokuvil North East |
| 34. | J/122 | Kokuvil East |

| | | |
|---|---|---|
| 35. | J/123 | Kokuvil South East |
| 36. | J/124 | Kokuvil North West |
| 37. | J/125 | Kokuvil West |
| 38. | J/126 | Kokuvil Centre |
| 39. | J/127 | Kokuvil South West |
| 40. | J/128 | Kokuvil Centre West |

## SANDILIPAY (VALIKAMAM SOUTH - WEST)
### வலிகாமம் தென்மேற்கு

| *Ser.No:* | *G.S.N. No:* | *Division* |
|---|---|---|
| 01. | J/129 | Suthumalai North |
| 02. | J/130 | Suthumalai South |
| 03. | J/131 | Savakadu |
| 04. | J/132 | Uyarapulam |
| 05. | J/133 | Anaikoddai |
| 06. | J/134 | Navali North |
| 07. | J/135 | Navali East |
| 08. | J/136 | Navali South |
| 09. | J/137 | Manupay North |
| 10. | J/138 | Manipay East |
| 11. | J/139 | Manipay South |
| 12. | J/140 | Manipay West |
| 13. | J/141 | Sandilipay North |
| 14. | J/142 | Sandilipay Cntere |
| 15. | J/143 | Sandilipay West |
| 16. | J/144 | Masiapiddy |
| 17. | J/145 | Vadaliaddaipu |
| 18. | J/146 | Pandatheruppu |
| 19. | J/147 | Piranpattu |
| 20. | J/148 | Silalai North |
| 21. | J/149 | Silalai South |
| 22. | J/150 | Mathagal East |
| 23. | J/151 | Mathagal South |
| 24. | J/152 | Mathagal west |

| | | |
|---|---|---|
| 25. | J/153 | Pariyavilan |
| 26. | J/154 | Naresankoodal |
| 27. | J/155 | Ilavalai |
| 28. | J/156 | Mullanai |

## வலிகாமம் மேற்கு –சங்கானை
## (VALI - WEST) CHANKANAI

| Ser.No.: | G.S.N.No: | Division |
|---|---|---|
| 01. | J/157 | Vaddukoddai East |
| 02. | J/158 | Vaddukoddai North |
| 03. | J/159 | Sangaraththai |
| 04. | J/160 | Araly West |
| 05. | J/161 | Araly Center |
| 06. | J/162 | Araly South |
| 07. | J/163 | Araly East |
| 08. | J/164 | Araly North |
| 09. | J/165 | Vaddukoddai South |
| 10. | J/166 | Vaddukoddai South West |
| 11. | J/167 | Vaddukoddai West |
| 12. | J/168 | Tholpuram East |
| 13. | J/169 | Tholpuram West |
| 14. | J/170 | Ponnalai |
| 15. | J/171 | Moolai |
| 15. | J/172 | Chulipuram West |
| 17. | J/173 | Chulipuam Centre |
| 18. | J/174 | Chulipuram East |
| 19. | J/175 | pannagam |
| 20. | J/176 | Panipulam |
| 21. | J/177 | Sithankerni |
| 22. | J/178 | Chinkanai |
| 23. | J/179 | Chunkanai West |
| 24. | J/180 | Chankanai South |
| 25. | J/181 | Chnkanai Centre |

## VALIKAMAM SOUTH UDUVIL

| *Ser.No:* | *G.S.N.No:* | *Division* |
|---|---|---|
| 01. | J/182 | Uduvil South |
| 02. | J/183 | Uduvil North east |
| 03. | J/184 | Uduvil centre |
| 04. | J/185 | Uduvil Centre North |
| 05. | J/186 | Uduvil North |
| 06. | J/187 | Sanguvely |
| 07. | J/188 | Inuvil south West |
| 08. | J/189 | Inuvil East |
| 09. | J/190 | Inuvil North east |
| 10. | J/191 | Inuvil West |
| 11. | J/192 | Thavady South |
| 12. | J/193 | Thavady East |
| 13. | J/194 | Thavady North |
| 14. | J/195 | Chunnakam North |
| 15. | J/196 | Chunnakam South |
| 16. | J/197 | Chunnakam East |
| 17. | J/198 | Chunnakam Centre |
| 18. | J/199 | Chunnakam West |
| 19. | J/200 | Kandarodai |
| 20. | J/201 | Erlalai West |
| 21. | J/202 | Erlalai South West |
| 22. | J/203 | Erlalai South |
| 23. | J/204 | Erlalai East |
| 24. | J/205 | Erlalai North |
| 25. | J/206 | Erlalai Centre |
| 26. | J/207 | Punnalaikadduvan South |
| 27. | J/208 | Punnalaikadduvan North |
| 28. | J/209 | Evenai |
| 29. | J/210 | Kuppilan South |
| 30. | J/211 | Kippilan North |

## VALIKAMAMNORTH-TELLIPALAI

| *Ser. No:* | *G.S.N.No:* | *Division* |
|---|---|---|
| 01 | J/212 | Mallakam South |
| 02. | J/213 | Mallakam Centre |
| 03. | J/214 | Mallakam North |
| 04. | J/215 | Alaveddy North |
| 05. | J/216 | Alaveddy Centre |
| 06. | J/217 | Alaveddy East |
| 07. | J/218 | Ganeshwaram |
| 08. | J/219 | Alaveddy South |
| 09. | J/220 | Alaveddy west |
| 10. | J/221 | Illavalai North |
| 11. | J/222 | Illavalai North West |
| 12. | J/223 | Vithagapuram |
| 13. | J/224 | Pannalai |
| 14 | J/225 | Kollankaladdy |
| 15. | J/226 | Naguleswaram |
| 16. | J/227 | Tellepallai East |
| 17. | J/228 | Tellepallai |
| 18. | J/229 | Thurgapuram |
| 19. | J/230 | Thanthaiselvapuram |
| 20. | J/231 | Maviddapuram |
| 21. | J/232 | MaviddaPuram South |
| 22. | J/233 | Kankesanthurai West |
| 23. | J/234 | Kankesanthurai Centre |
| 24. | J/235. | Kankesanthurai South |
| 25. | J/236 | Pallai Veemankamam North |
| 26. | J/237 | Pallai Veemankamam South |
| 27. | J/238. | Kadduvan |
| 28. | J/239 | Kadduvan west |
| 29. | J/240 | Thenmulai |
| 30. | J/241 | Varuthalaivilan |
| 31. | J/242 | Kurumbasiddy |
| 32. | J/242 | kurumbasiddy |
| 33. | J/243 | Kurumbasiddy East |

| | | |
|---|---|---|
| 34. | J/244. | Vasavilan East |
| 35. | J/245 | Vạsavilai West |
| 36. | J/246 | Myliddy North |
| 37. | J/247 | Thyiddy East |
| 38. | J/248 | Myliddy South |
| 39. | J/249 | Thyiddy North |
| 40. | J/250 | Thyiddy South |
| 41. | J/251 | Myliddythurai North |
| 42. | J/252 | Palaly South |
| 43. | J/253 | Palaly East |
| 44. | J.254 | Palaly North |
| 45. | J/255 | Palaly Norht West |
| 46. | J/256 | Palay West. |

## VALIKAMAM EAST- KOPAY

| Ser. No: | G..S.N. No: | Division |
|---|---|---|
| 01. | J/257 | Irupalai South |
| 02. | J/258 | Irupalai East |
| 03. | J/259 | Kalviyankadu |
| 04. | J/260 | Kopay South |
| 05. | J/261 | Kopay Centre |
| 06. | J/262 | Kopay North |
| 07. | J/263 | Urumpirai West |
| 08. | J/264 | Urumpirai North |
| 09. | J.265 | Urumpirai South |
| 10. | J/266. | Urumpirai East |
| 11. | J/267 | Urelu |
| 12. | J/268 | Neervaly South |
| 13. | J/269 | Neervaly North |
| 14. | J/270 | Neervaly West |
| 15. | J/271 | Sirupiddy East |
| 16. | J/272 | Sirupiddy West |
| 17. | J/273 | Puttur West |
| 18. | J/274 | Puttur North |
| 19. | J/275 | Navkiri |
| 20. | J/276 | Avarangal East |

| | | |
|---|---|---|
| 21. | J/277 | Avarangal West |
| 22. | J/278 | Puttur East |
| 23. | J/279 | Atehelu |
| 24. | J/280 | Watharawattai |
| 25. | J/281 | Pathameni |
| 26. | J/282 | Pithambalai Kathiripai |
| 27. | J/283 | Edaikadu |
| 28. | J/284 | Valalai |
| 29. | J/285 | Atchuvely North |
| 30. | J/286 | Atchuvely Soth |
| 31. | J/287 | Atchuvely West |

## THEMARADCHCHY - CHAVAKACHCHERI.

| Ser. No: | G.S.N.No: | Division |
|---|---|---|
| 01. | J/288 | Kaithady North |
| 02. | J/289 | Kaithady East |
| 03. | J/290 | Kaithady Centre |
| 04. | J/291 | Kaithady South |
| 05. | J/292 | Kaithady South East |
| 06. | J/293 | Kaithady West |
| 07. | J/294 | Navatkuli west |
| 08. | J/295 | Navatkuli East |
| 09. | J/296 | Koilakandy |
| 10. | J/297 | Kaithady-Navatkuli |
| 11. | J/298 | Mravanpulavu |
| 12. | J/299 | Thanankilappu |
| 13. | J/300 | Chavakachcheri Town |
| 14. | J/301 | Kovilkudiyiruppu |
| 15. | J/302 | Sangathanai |
| 16. | J/303 | Chavakachcheri North |
| 17. | J/304 | Manthuvil |
| 18. | J/305 | Kalvayal |
| 19. | J/306 | Nunavil East |
| 20 | J/307 | Nunavil Centre |
| 21. | J/308 | Nunavil West |
| 22. | J/309 | Kaithady-Nunavil |
| 23. | J/310 | Thenmadduvil |
| 24. | J/311 | Madduvil-Nunavil |

| | | |
|---|---|---|
| 25. | J/312 | Madduvil Centre |
| 26. | J/313 | Madduvil North |
| 27. | J/314 | Madduvil East |
| 28. | J/315 | Chadrapuram |
| 29. | J/316 | Sarasalai South |
| 30. | J/317 | Sarasalai North |
| 31. | J/318 | Meesalali East |
| 32. | J/319 | Meesalali West |
| 33. | J/320 | Ramavil |
| 34. | J/321 | Meesalai North |
| 35 | J/322 | Allarai |
| 36. | J/323 | Vellampokkaddy |
| 37. | J/324 | Kachchai |
| 38. | J/325 | palavi |
| 39. | J/326 | Kodikamam Norht |
| 40 | J/327 | Kodikamam Centre |
| 41. | J/328 | Kodikamam South |
| 42. | J/329 | Usan |
| 43. | J/330 | Karampakam. |
| 44. | J/331 | Vidathalpalai |
| 45. | J/332 | Ketpali |
| 46. | J/333 | Eluthumadduval South |
| 47. | J/334 | Eliuhumadduval North |
| 48. | J/335 | Mirusuvil North |
| 49. | J/336 | Mirusuvil South |
| 50. | J/337 | Kudamuyan |
| 51. | J/338 | Navalkadu |
| 52. | J/339 | Varany North |
| 53. | J/340 | Maseri |
| 54. | J/341 | Idaikurichchi |
| 55. | J/342 | Karambolkurichchi |
| 56. | J/343 | Varaniyatalai |
| 57. | J/344 | Thavalai-Iyatalai |
| 58. | J/345 | Manthvil East |
| 59. | J/346 | Manthuvil west |
| 60. | J/347 | Manthuvil North |

## VADAMARDCHCY SOUTH AND WEST-.KARAVEDDY.

| Set.No: | G.S.N.No: | Division |
|---|---|---|
| 01. | J/348 | Karanavai South |
| 02. | J/349 | Karanavai west |
| 03. | J/350 | Karanavai |
| 04. | J/351 | Karanavai East |
| 05. | J/352 | Udupiddy |
| 06. | J/353 | Udupiddy North |
| 07. | J/354 | Udupiddy South |
| 08. | J/355 | Valvetty |
| 09. | J/356 | Valvetty Centre |
| 10. | J/357 | Samarabahu |
| 11. | J/358 | Imayanan |
| 12. | J/359 | Imayanan west |
| 13. | J/360 | Karanavai North |
| 14. | J/361 | Karanavai North West |
| 15. | J/362 | Karanavai Centre |
| 16. | J/363 | Karaveddy West |
| 17. | J/364 | Karaveddy North |
| 18. | J/365 | Karaveddy South |
| 19. | J/366 | Maththoni |
| 20. | J/367 | Karaveddy Cnetre |
| 21. | J/368 | Karaveddy Eadt |
| 22. | J/369 | Kaddaively |
| 23. | J370 | Thunnalai south |
| 24. | J/371 | Thunnalai East |
| 25. | J/372 | Thunnalai |
| 26. | J/373 | Thunnalai Centre |
| 27. | J/374 | Thunnalai West |
| 28. | J/375 | Nelliyady North |
| 29. | J/376 | Nelliyady |
| 30. | J.377 | Nelliyady East |
| 31. | J/378 | Alvai |
| 32. | J/379 | Alvai South |
| 33. | J/380 | Alvai East |
| 34. | J/381 | Aththai |
| 35. | J/382 | Kappudu |

## VADAMRADCHY NORTH ( POINT-PITRO)

| Ser.No: | G..S.N.No: | Division |
|---|---|---|
| 01. | J/383 | Thondamanaru South |
| 02. | J/384 | Thondamanaru North |
| 03. | J/385 | Korudavil South |
| 04. | J/386 | Kerudavil North |
| 05. | J387 | Kerudavil East |
| 06. | J/388 | Valvettiturai North West |
| 07. | J/389 | Valvettiturai North Centre |
| 08. | J/390 | Valvettiturai North East |
| 09. | J/391 | Valvettiturai South West |
| 10. | J/392 | Valvettiturai South East |
| 11. | J/393 | Polikandy West |
| 12. | J/394 | Polikandy East |
| 13. | J/395 | Polikandy South |
| 14. | J/396 | Alvai West |
| 15. | J/397 | Alvai North West |
| 16. | J/398 | Alvai North Centre |
| 17. | J/399 | Viyaparimoolai |
| 18. | J/400 | Alvai North |
| 19. | J/401 | Point pedro |
| 20. | J/402 | Point pedro South |
| 21. | J/403 | Point pedro East |
| 22. | J/404 | Thumpalai |
| 23. | J/405 | Thumpalai East |
| 24. | J/406 | Katkovalam |
| 25. | J/407 | Puloly North |
| 26. | J/408 | Puloly North East |
| 27. | J/409 | Puloly Centre |
| 28. | J/410` | Puloly West |
| 29. | J/411 | Puloly South West |
| 30. | J/412 | Puloly North West |
| 31. | J/413 | Puloly East |
| 32. | J/414 | Puloly South |
| 33. | J/415 | Manthikai |
| 34. | J/416 | Vallipuram |
| 35. | J/417 | Thunnalai North |

## VADAMARACHY EAST (MARUTHANKERNY)

| Ser.No. | G.S.N.No. | Division |
|---|---|---|
| 01. | J/418 | Manalkadu |
| 02. | J/419 | Kudathanai |
| 03. | J/420 | Kudathanai North |
| 04. | J/421 | Potpathy |
| 05. | J/422 | Ampan |
| 06. | J/423 | Nagarkovil East |
| 07. | J/424 | Nagarkovil West |
| 08. | J/425 | Nagarkovil South |
| 09. | J/426 | Sempiyanpattu North |
| 10. | J/427 | Sempiyanpattu South |
| 11. | J/428 | Maruthankerney |
| 12. | J/429 | Vaththirayan |
| 13. | J/430 | Uduthurai |
| 14. | J/431 | Aliyawalai |
| 15. | J/432 | Vettilaikerny |
| 16. | J/433 | Mulliyan |
| 17. | J/434 | Pokkarappu |
| 18. | J/435 | Chundikulam |

# யாழ்ப்பாண மாநகர அபிவிருத்தி

இலங்கையில் யாழ்ப்பாண மாநகரம் மக்கள் தொகையிலும். சேவை வசதிகளிலும் பல காலமாகக் கொழும்பு நகரத்திற்கு அடுத்த இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தது. ஆனால் இன்று யாழ்ப்பாண நகர் மக்கட் தொகையிலும், சேவை வசதியிலும் ஒப்பீட்டு ரீதியில் முன்னைய இடத்திலிருந்து பின் தள்ளப்பட்டிருப்பதைக் காணலாம். தெகிவளை– கல்கிசை 174,375 மக்களையும், மொறட்டுவை 135, 210 மக்களையும் 1981 இல் கொண்டிருந்தன. கோட்டை 101,561 மக்களையும் கண்டி 101,281 மக்களையும் கொண்டிருந்ததுடன் குறித்த இரு நகர்களும் பொருளாதார ரீதியிலும், அந்தஸ்து ரீதியிலும், பௌதீக ரீதியிலும் யாழ்ப்பாண நகரிலும் பார்க்கக் கடந்த இரு தசாப்தங்களில் கூடுதலான வளர்ச்சி பெற்றிருப்பதைக் காணலாம். யாழ்ப்பாண நகர் 1977 க்குப் பின் ஏற்பட்ட இனக்கலவரங்களால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியது. 1977இல் யாழ்ப்பாண நகரச் சந்தையும், 1981 இல் யாழ்ப்பாண நகர நூல் நிலையமும் மற்றும் வீடுகள் சிலவும் அழிவுக்குள்ளாக்கின. 1984 ஆம் ஆண்டு ஏப்பிரலிலிருந்து 1985 ஜூன் வரைப்பட்ட காலப்பகுதியில நடைபெற்ற சம்பவங்களினால் யாழ்ப்பாண நகரக்கூட்டுறவுச் சங்கக் கட்டடம். ஆஸ்பத்திரி வீதிக் கட்டடங்கள், பலத்த சேதத்திற்குள்ளாகின. குருநகரிலிருந்து யாழ்ப்பாண நகரக் கோட்டைக்கு இராணுவம் இடம்பெயர்ந்த பின்னர் கோட்டையைச் சூழவுள்ள பிரதேசம் செயலிழந்ததுடன் அப்பகுதியைச் சூழவுள் பல கட்டடங்கள் பெரும் சேதத்திற்குள்ளாயின. தபாற்கந்தோர், வீரசிங்கம் மண்டபம், தொலைத்தொடர்பு நிலையம், சத்திரச்சந்தியிலுள்ள கட்டடங்கள், ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதிச் சந்தியிலிருந்து நாவாந்துறை வரையுள்ள கரையோரப்பகுதி பாதிப்புக்குள்ளாயின. நகரில் குறிப்பிடத்தக்க கட்டடங்கள், வாழிடங்கள், மின்சார விநியோகம், தொலைத்தொடர்புகள் போன்றன. பாதிப்புக்குள்ளாயின. யாழ்ப்பாண நகர் பௌதீக ரீதியில் மாத்திரமன்றி, சமூக பொருளாதார ரீதியிலும் பெரும் பாதிப்புக்குள்ளாகியது. பிற பகுதிகளிலிருந்து சேவை, பொருட்களைப் பெற யாழ்ப்பாண நகருக்கு வரும் மக்களின் எண்ணிக்கை

மிகவும் குறைவடைந்ததனாலும், ஷெல் பயம் காரணமாகவும் யாழ்ப்பாண நகரப் பகுதியிலிருந்து பல வர்த்தக நிறுவனங்கள் புற நகர்களுக்கு, பிற நகர்களுக்கு இடமம் பெயர்ந்தன. யாழ்ப்பாண நகரில் ஆரம்ப வளர்ச்சி நிலையிலிருந்த கைத்தொழில் நிறுவனங்கள் சில செயலிழந்தன. சில உற்பத்தித்திறன் குறைந்த. யாழ்ப்பாண நகரக் கரையோரப் பகுதியில் 6 மீன்பிடிக் குடியிருப்புக்கள் இருக்கின்றன. கோட்டை முகாம், மண்டைதீவு மினிமுகாம் அமைக்கப்பட்டதன் விளைவாக, கடனீரேரிப் பகுதியில் மீன்பிடித் தொழில் பெரிதும் பாதிப்புள்ளாகியது. பல துறைகளில் நகரப் பொருளாதாரம் பின்னடைந்த நிலையில் இப்பகுதி சார்ந்த இளைஞர்கள், முயற்சியாளர்கள், வசதியானவர்கள் பெருமளவில் தென்பகுதிக்கும், பிற நாடுகளுக்கும் செல்ல, பாதிக்கப்பட்ட பிற இடங்களிலிருந்து மக்கள் யாழ்ப்பாண நகருக்குள் இடம்பெயர்ந்தன. இந் நிலையில் இந்நகரை எவ்வாறு கட்டியெழுப்பலாம் என்றும் வருங்காலத்தில் வடகிழக்குமாகாணத்தின் வளர்ச்சிக்கு இந்நகர் எத்தகைய பங்கினை ஆற்றலாம் என்றும் நோக்குவது எமது முக்கிய பணியாகும்.

ஒரு பிரதேசத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக, அப்பிரதேசத்திலுள்ள நகர்கள், குறிப்பாக முதல் நகர் இயக்கமானதாகவும், வளர்ச்சிப்போக்கைக் கொண்டதாகவும் இருக்கவேண்டும். இத்தகையதொரு நிலையில் தான் குறித்த நகரமும் அதில் தங்கியுள்ள பிரதேசமும் வளர்ச்சி பெறமுடியும். நகரப் பிரதேச வளர்ச்சி ஒன்றுடன் ஒன்று மிகவும் நெருக்கமான உறவு கொண்டுள்ளது. யாழ்ப்பாண நகரம், இந்த நிலையில் வடக்கு, கிழக்கு இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கும் இலங்கையின் தமிழ் பேசும் மக்களின் கல்வி கலாசார அரசியல் மேம்பாட்டிற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பினைச் செலுத்தக் கூடிய திறனைப் பெறும். இந்நகரின் மூலமே காலத்துக்குக் காலம் குறிப்பிடத்தக்க புதுமைகளை ஏனைய தமிழ்ப் பகுதிகளுக்குப் பரவச் செய்யலாம்.

யாழ்ப்பாண நகரில் மக்கள் தொகை, அடிப்படையான பொருளாதாரம், வேலைவாய்ப்பு போன்றன எவ்வாறு அமையலாம் எனப் பார்ப்போம். யாழ்ப்பாண நகர் ஏற்கெனவே 1 1.:4 லட்சம் மக்களையும் நெருக்கமான குடியடர்த்தியையும் கொண்டு இருப்பதாலும் குடாநாட்டிற்குள் வலிகாமம் பகுதியில் அமைந்திருப்பதானாலும் நகரின் குடித்தொகை அதிகரிப்பு மேலும் விரும்பத்தக்கதல்ல. குடி உள் வரவைக் குறைக்கக்கூடிய நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்படுவதுடன் குறிப்பிடத்தக்க குடிவெளி அகல்வு ஊக்குவிக்கப்பட வேண்டும். பெரிய யாழ்ப்பாணம் (புசநயவநச துயககயெ). 1981இல் 1 லட்சத்து 59 ஆயிரம் மக்களைக் கொண்டிருந்தது. இன்று அத்தொகை 2 லட்சத்தை எட்டிக்கொண்டிருக்கிறது. குடாநாட்டின் சனத்தொகையில் 25% மக்கள் பெரிய யாழ்ப்பாணத்திலி இருப்பது கவனிக்கற்பாலது. யாழ்ப்பாண நகரின் பொருளாதாரம், வேலை வாய்ப்பை நோக்கும்போது இந்நகரம் சேவைத் தொழில்களிலும், வெளிப் பொருளாதாரத்திலுமே தங்கியிருக்கக்கூடிய நிலைமைகள் தென்படுகின்றன. மேலும் இந்நகரம் புதிதாக அமைக்கப்படவிருக்கும் மாகாண சபையின் தலைமை நிர்வாக மையமாக அமைய முடியாது என்பது தெளிவு. இதன் இடஅமைவு மாகாணத்தின் ஒரு அந்தத்தில் இருப்பதுதே இதன் முக்கிய காரணமாகும். இம்மாகாணத்தின் தலைமை நிர்வாகம் கிழக்கு மாகாணத்தின் மத்திய இடமான திருகோணமலையில் அமைவதுதான் பொருத்தமாகும். இதையே வடக்கு, கிழக்கு மக்கள் விரும்புவர். மேலும் யாழ்ப்பாண நகரம் வடபகுதியின் நிர்வாக மையமாக இருப்பதும் பொருத்தமன்று. வடபகுதியின் நிர்வாக மையம் இப்பகுதியின் மையத்தில் அமைந்துள்ள மாங்குளத்திலேயே நிறுவப்படவேண்டும். போக்குவரத்து, நிலம், நீர் மற்றும் ஏனைய நகரங்கள் மாங்குளத்திலிருந்து அமைந்திருக்கும் தூரங்கள், என்னும் அடிப்படையில் மாங்குளத்தை நிர்வாக மையமாக வைப்பது வடபகுதியின் அபிவிருத்திக்குச் சிறந்ததொரு முடிவாக இருக்கும். வடபகுதியில் 75%மான மக்கள் குடாநாட்டுக்குள்ளும், மிகுதி 25%மானோர் பெருநிலத்திலும் வாழ்கின்றனர். மாங்குள நகரின் வளர்ச்சி வட இலங்கையின் குடிசன மீள் பரம்பலை ஊக்குவிக்கக் கூடியதொன்றாக இருக்கலாம். ஆகவே நிர்வாக அந்தஸ்தில் யாழ்ப்பாண நகர் தொடர்ந்தும் யாழ்ப்பாண மாவட்டத்தின் தலைநகராக மாத்திரமே விளங்கமுடியும்.

அடுத்து, யாழ்ப்பாண நகரம் பாரிய கைத்தொழில் மையமாக விளங்கமுடியுமா, என நோக்குகையில், ஏற்கெனவே மக்கள் நெருக்கமாக வாழ்வதனாலும் நிலப்பற்றாக்குறை நிலவுவதனாலும், சூழல் மாசடைதல் போன்ற காரணங்களினாலும் இங்கு பாரிய கைத்தொழிலாக்கம் விருத்தியடைவது கடினம் விரும்பத்தக்கதுமல்ல. எனினும் நகரில் குறிப்பாக இலகு கைத்தொழில்களான உடுபுடைவை, நகை, அச்சுத்தொழில், தளபாடஞ் செய்தல் போன்றனவும், நவீன இலத்திரனியல் தொழில்கள் போன்றனவும் விருத்தியாக்க வாய்ப்புண்டு. நகரப் பொருளாதாரத்தில் கைத்தொழில்துறை

சிறிய பங்கினையே வகிக்கமுடியும். இதனால் நகரப் பொருளாதாரத்தின் எதிர்காலம் கல்வி மருத்துவம் மற்றும் சேவைத் துறைகளின் வளர்ச்சியிலும், மீனபிடியிலுமே தங்கியுள்ளது. இலங்கையின் சுற்றுலாத்துறையில் யாழ்ப்பாண நகரத்தை முக்கிய இடமாக வளர்த்தெடுக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

யாழ்ப்பாண நகரின் பௌதீகத் திட்டமிடலை நோக்கும்போது, தற்போதைய மாநகரசபை எல்லையை விஸ்தரிப்பதும் நல்லூர்ப் பிரதேச சபைப் பகுதியை மாநகரசபை எல்லைக்குள் கொண்டு வருவதும் விரும்பத்தக்கது. (எனினும் இவ்வாலோசனையையிட்டு திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் பகுதி மக்களின் விருப்பத்தைப் பெறுவது சாலச் சிறந்தது.) மாநகரசபை எல்லை மாறுமிடத்து இதன் சனத்தொகை 1 லட்சத்து 59ஆயிரமாகவும், நிலப்பரப்பு 46.24 சதுர கிலோ மீற்றராகவும் அதிகரிக்கும். இன்று யாழ்ப்பாண நகரின் சனத்தொகை 1லட்சத்து 18ஆயிரமாகும். நிலப்பரப்பு 20.2 கிலோ மீற்றராகும். மாநகர சபை எல்லையை விஸ்தரிப்பதன் மூலம் மக்கள் தொகை அதிகரிப்பதிலும் பார்க்க நிலப்பரப்பு அதிகரிப்பு கூடுதலாகவிருப்பது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவியாகவிருக்கும்.

திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் கிராமங்கள் நெருக்கமான குடியிருப்புக்களைக் கொண்டும் கூடுதலான நகரப் பண்புகளைப் பெற்றும் காணப்படுகின்றன. செயலளவில் இவை யாழ்ப்பாண நகருடன் ஒன்றிணைந்துள்ளதைக் காணலாம். நகரங்கள் முன்னர் வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. வட்டாரங்கள் தேர்தல் தொகுதிகளாகவிருந்தன. தற்போதைய தேர்தல் முறையில் வட்டார முறை நீக்கப்பட்டு நகரம் முழுவதும் ஒரு தேர்தல் அலகாக இருப்பது கவனிக்கத்தக்கது. இதனால் நகர நிர்வாகம் நகர அபிவிருத்திக் கண்ணோட்டங்களில் நகரத்தை உப பிரிவுகளாகப் பிரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இப்பிரிவுகள் நகரச் செயற்பாடுகளின் இடஞ்சார் ஒழுங்குகளைப் பிரதிபலிக்கலாம்.

ஒரு நகரின் வளர்ச்சிக்கு அதன் மத்திய வியாபாரப் பகுதி துடிப்புடையதாக அமைதல் வேண்டும். யாழ்ப்பாண நகரின் மத்திய வியாபாரப் பகுதி பல குறைபாடுகளைக் கொண்டிருக்கின்றது. இது இந்நகரின் வளர்ச்சியைப் பெரிதும் பாதித்து வருகிறது. இந்நகரிற்கு வருவோர் தமக்குத்

தேவையான பொருட்களையும் சேவைகளையும் இலகுவாக அலைச்சலின்றிப் பெறமுடியாதிருக்கின்றது. நகரின் மத்தியில் நல்லதொரு சந்தையின்மை நகரின் வளர்ச்சிக்கு வழிகோலவில்லை. கண்டி நகரின் வளர்ச்சிக்கு அந் நகரின் மத்திய சந்தை பெரும் பங்கினை அளித்து வருவதைக் காணலாம். ஆகவே சிறந்த சந்தையொன்று நகரின் மையப்பகுதியில் அமைவது விரும்பத்தக்கது. மத்திய வியாபாரப் பகுதியில் போக்குவரத்து நெரிசல், ஒடுக்கமான வீதிகள், பொருத்தமில்லாத பழைய கட்டிடங்கள் அமைந்திருப்பது வர்த்தக வளர்ச்சிக்குப் பெருங் குறைபாடுகளாகும். மேலும் நகரின் மையப்பகுதிகளை அங்காடி வியாபாரிகள் தமதாக்கிக் கொண்டிருப்பதும் பல பிரச்சினைகளைத்தோற்றுவிக்கின்றன. இங்கு வீதி வலைப்பின்னல் குறைவாகவிருப்பதனால் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருப்பதுடன், இப்பகுதியில் இருக்கும் காணிகளையும் நன்கு பயன்படுத்த முடியாதிருக்கிறது. இங்கு காணப்படும் ஒரு சில பெருஞ்சாலைகளைத் தவிர ஏனையவை ஒடுக்கமான ஒழுங்கைகளாக இருக்கின்றன. இவற்றுள் பல குருட்டு ஒழுங்கைகளாக உள்ளன.

யாழ்ப்பாண நகர வரத்தக, சேவைத்துறை விருத்திக்கு இப்பிரதேசத்தில் போதியளவு போக்குவரத்து, கட்டடம் மற்றும் அடிப்படை வசதிகள் விருத்தி செய்யப்படவேண்டும். யாழ்நகர மத்திய வியாபாரப்பகுதி அபிவிருத்திக்கு முதலில் எவ்வெப் பகுதிகள் இவற்றுள் அடங்கலாம். என வரையறை செய்ய வேண்டும். பின்வரும் வீதிகளுக்குள் உள்ளடங்கும் பரப்பினை மத்திய வியாபாரப் பகுதியாகக் கருத வேண்டும். வடக்கு நாவலர் வீதியையும், கிழக்கு பருத்துறை வீதியையும், மேற்கு சிவன் பண்ணை – மானிப்பாய் வீதியையும், தெற்கு புல்லுக்குளம் – பண்ணை – கொட்டடி வீதியையும் எல்லைகளாகக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட வீதிகள் உள்ளடங்கும் பரப்பினை மத்திய வியாபார உள்வலயம், மத்திய வியாபார வெளிவலயம் என இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். உள்வலயம் பின்வரும் வீதிகளை எல்லைகளாகக் கொள்ளலாம். அவையாவன:– காங்கேசன்துறை வீதி, மானிப்பாய் வீதி, சிவன் கோயில் வடக்கு வீதி, கன்னாதிட்டி வீதி, மணிக்கூட்டுகோபுர வீதி, ஸ்ரான்லி வீதி, பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி ஆகியனவாகும்.

மத்திய பகுதி அபிவிருத்திக்குக் காணி பற்றாக்குறையாக இருப்பது ஒரு பொதுநிலைப்பாடு. இதன் காரணமாகத்தான் நகர் மத்தி, குத்தான

வளர்ச்சி பெறுவது இயல்பாகவுள்ளது. யாழ்ப்பாண நகரில் அரசாங்கத்திற்கும் மாநகரசபைக்கும் சொந்தமாகக் காணிகள் குறைவாக இருக்கின்றன. ஆனால் வர்த்தக நிறுவன சேவைகளை விருத்தியாக்கக் கூடிய காணிகள் தனியார் துறையினரிடம் கூடுதலாக இருப்பதனைக் காணமுடிகின்றது. எனினும் வீதி வலைப்பின்னல் அடர்த்தி மிகக் குறைவாக இருப்பதனால் பின்புற நிலங்களை வர்த்தக நிலப்பயன்பாட்டிற்குக் கொண்டுவர முடியாதுள்ளது. இதனால் முகப்பின்றி இருக்கும் காணிகளை விருத்தியாக்குவதற்குச் சில புதிய பாதைகள் அமைப்பது பிரதான பணியாக அமையவேண்டும். இவ்வகையில் ஸ்ரான்லி – மின்சார நிலைய வீதி, கஸ்தூரியார் வீதி, மணிக்கூட்டுக் கோபுர வீதிகளுக்கிடைப்பட்ட செவ்வகத்துண்டுப் பகுதியினை அபிவிருத்தி செய்வதற்கு இப்பிரதேசத்திற்குள் ஒரு சில வீதிகள் வடக்குத் தெற்காக அமையின், ஸ்ரான்லி வீதி பஸ் நிலையத்துடன் தொடர்பு பெறும். இதன் மூலம் புதிய காணிகளை வர்த்தகப் பயன்பாட்டிற்குள் கொண்டுவர வாய்ப்பு ஏற்படுவதுடன் கஸ்தூரியார் வீதியின் போக்குவரத்து அமுக்கமும் குறைவடையலாம். காங்கேசன்துறை வீதி, மானிப்பாய் வீதி, சிவன் – பண்ணை வீதி ஆகியவற்றை எல்லையாகக் கொண்ட பகுதிக்குள் தற்பொழுது வீதிகள் போதியளவு இல்லை. ஆகவே காங்கேசன்துறை வீதியிலிருந்து மானிப்பாய் வீதி, ஆஸ்பத்திரி வீதிக்குச் சமாந்தரமான வீதியொன்று நடுவில் அமைக்கப்படுமாயின் கோணாந்தோட்டப் பகுதிக் காணிகளை நகர வர்த்தகப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்தலாம். இது போன்று ஆஸ்பத்திரி வீதிக்கும், புல்லுக்குளத்திற்கும் இடையே வியாபார நிலையங்களுக்குப் பின்புறமாகவுள்ள காணிகளை புதிய வீதிகள் திறக்கப்படின் வர்த்தக சேவைக்குப் பயன்படுத்த முடியும். ஆகவே யாழ்ப்பாண நகருள் போக்குவரத்து வீதிகள், வியாபார முகப்புகள் இன்மையால் பயனற்றுக்கிடக்கும் தனியார் காணிகளை விருத்தியாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பெரிய வர்த்தக நகரங்களில் நகரின் 2ஆம் 3 ஆம் தர வர்த்தக சேவை நிலையங்கள் இருப்பது வழக்கம். இந்நிலையங்கள் குறிப்பாக, அந்நகரப் பகுதியில் வாழும் மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிலையங்களாகவுள்ளன. இது போன்று யாழ்ப்பாண நகருள்ளும் தெரிவு செய்யப்பட்ட நிலையங்கள் படி முறையமைப்பில் வர்த்தக சேவை நிலையங்களாக விருத்தி செய்தல் வேண்டும். சுண்டிக்குளி, அரியாலை, கல்வியங்காடு, தட்டாதெரு போன்ற நிலையங்கள் இவ்வாறு விருத்தி செய்யப்படலாம்.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் வீடில்லாப் பிரச்சினை குறிப்பாக கரையோரப் பகுதியில் அமைந்துள்ள கரையூர், பாஷையூர், நாவாந்துறை

ஆகிய மீன்பிடிக் குடியிருப்புகளில் காணக்கூடியதாகவுள்ளது. யாழ்ப்பாண சோனகதெருவும் இப்பிரச்சினையை ஏதிர் நோக்குகின்றது. இது தவிர யாழ்ப்பாண நகரின் பல இடங்களில் சமூக – பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள மக்கள் சிறு சிறு பகுதிகளில் நெருக்கமாக வாழ்கின்றனர். கரையோரப் பகுதியில் பல இடங்களில் ஒழுங்கற்ற குடியிருப்புகள் தோன்றியுள்ளன.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் இன்று ஏற்பட்டுள்ள வீட்டுத்தட்டுப்பாட்டை எவ்வாறு சமாளிப்பது, என்பதும் ஒரு கேள்வியாக அமைந்துள்ளது. நகரப் பகுதியில் குறைந்த வருமானம், நடுத்தர வருமானம் உடையவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கக் கூடிய அல்லது தாமே வீடு கட்டக் கூடிய காணித் துண்டுகள் கிடைப்பது கடினமாகவுள்ளது. கடற்பகுதியிலிருந்து காணி மீட்கப்பட்டு குருநகர் வீட்டுத்திட்டம் அமைக்கப்பட்டது. அண்மைக்காலத்தில் நாவாந்துறை, கண்ணாபுரம் பகுதிகளில் குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பாஷையூர் கடற்கரையோரப் பகுதியில் ஓரளவு காணி கடற்பகுதியிலிருந்து மீட்டெடுக்கக் கூடிய வாய்ப்புண்டு. வீடில்லாப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மூன்று உப நகர்கள் யாழ்ப்பாண நகரைச் சூழ அமைக்கப்பட வேண்டும். நாவற்குளி, அல்லைப்பிட்டி, கல்லுண்டாய் ஆகியனவே இவ் உப நகர்கள். நாவற்குளியிலே ஏற்கெனவே வீடுகள் அமைக்கப்பட்டிருப்பினும், அண்மைக்காலப் பிரச்சினைகளால் இத்திட்டம் நன் முறையில் நிறைவேற்றப்படவில்லை. அது மீண்டும் கைத்தொழில் குடியிருப்பு நிலையமாக வளர வாய்ப்புண்டு. கல்லுண்டாய்ப் பகுதி தாழ் நிலமாகவும் உவர்த்தன்மையான நீரைக் கொண்டிருப்பினும் யாழ்ப்பாண நகருக்கு அண்மையில் இருப்பதனால் அதனைக் குடியிருப்புப் பகுதியாக விருத்தி செய்வது கடினமல்ல. தாழ்நிலங்கள் குடியிருப்புக்களாக, மேட்டு நிலங்களாக மாற்றப்படுவது வழக்கம். குடிநீர்க் குழாய் மூலம் எடுத்துச் செல்லப்படலாம். வீட்டுத் தேவைக்குப் போதியளவு நீர் எங்கும் உண்டு. இந் நிலையே அல்லைப்பிட்டிக்கும் பொருந்தும். எனினும் அது தூரத்தில் இருப்பதால் அபிவிருத்தி ஒழுங்கில் அதனைப் பின்னுக்குச் சேர்த்துக் கொள்ளலாம்.

இன்று யாழ்ப்பாண நகரில் வாகனங்கள் குறைவாக இருந்துமே, இருக்கும் வீதிகளால் போக்குவரத்து நிலையைச் சமாளிக்க முடியாதுள்ளது. ஆகவே, போக்குவரத்து மேலும் அதிகரிக்குமிடத்து இப்பிரச்சினை மேலும் அதிகரிக்கும். வீதிகள் பற்றாக்குறையும், இருப்பவை ஒடுக்கமாகவிருப்பதும், வாகனம் நிறுத்துமிடம் மிகவும் குறைவாகவிருப்பதும் பிரச்சினைக்குரிய காரணிகளாகவிருக்கின்றன. வாகனமோட்டுபவர்கள், பாதசாரிகள் வீதி

ஒழுங்குகளைச் சரிவரக் கடைப்பிடிக்காமையால் இப் பிரச்சினை மேலும் அதிகரித்துள்ளது. தற்பொழுது வீதி விருத்தியில் அபிவிருத்தியடைந்த ஒடுக்கமான வீதிகளை அகலமாக்குவதற்குப் பதிலாக, மாற்று வீதிகளை அமைத்து, போக்குவரத்துப் பாய்ச்சலைச் சீராக்கிப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். வீதி விருத்தியை ஏற்படுத்தி நகருக்கு அழகு கொடுக்கும் அலங்கார வளைவுகள், சுற்று வளைவுகளை அமைக்கலாம். சுற்று வளைவுகளின் மையப் பகுதியில் உருவாகும் தீவுகளில் எமது வரலாற்றுக் கலாசார ஞாபகச்சின்னங்களை நிறுவலாம்.

யாழ்ப்பாண நகருள் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளது போன்று கைத்தொழில்கள் இடவமைவு பெறுவது விரும்பத்தக்கதல்ல. ஒரு சில இலகு கைத்தொழில்களைத் தவிர ஏனையவை நாவற்குளி, காங்கேசன்துறைப் பகுதியிலேயே அமைய வேண்டும். நகரின் அழகிற்கும், பொழுது போக்கிற்கும் நல்ல விளையாட்டு மைதானம், பூங்காக்கள், கடற்கரைகள், கலையரங்குகள் சினிமாக்கள் தேவை. நகரில் இருக்கும் பூங்கா பரப்பளவில் சிறியதொன்றாகும். பெரியளவிலான பூங்காக்கள் ஒரு சில நகரின் வெவ்வேறு பகுதிகளில் அமைய வேண்டும். யாழ்ப்பாண நகர் நீண்ட கடற்கரையைக் கொண்டிருந்தும், பல காரணங்களால் மக்கள் இக் கடற்கரையை பொழுதுபோக்கிற்குப் பயன்படுத்த முடியாதுள்ளது. இக் கடற்கரைப் மணலற்று சேற்றுப் பகுதியாக இருப்பதும், கரையோரத்தில் மீன்பிடிக் குடியிருப்புகள் காணப்படுவதும், சுகாதாரமற்ற நிலைகள் இருப்பதும் கடற்கரையைப் பயன்படுத்துவதில் பெரிதும் வசதியீனங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதற்குரிய மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

யாழ்ப்பாண நகருக்கும் குடாநாட்டு நகரங்களுக்கும், கிழக்குக் கரையோர நகரங்களுக்கும், தென்னிலங்கை நகரங்களுக்கும் தென்னிந்திய நகரங்களுக்குமிடையே சிறந்த போக்குவரத்து நிலவினால் தான் நகரின் வளர்ச்சி உறுதிப்படுத்தப்படும். குடாநாட்டுப் போக்குவரத்தில் பெரியதொரு மாறுதலை ஏற்படுத்த வேண்டுமாயின் குடாநாட்டிலுள்ள முக்கிய நகரங்களை இணைத்த ஒரு சுற்றுப் புகையிரதப்பாதை அமைக்கப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட சுற்றுப்பாதையில் காங்கேசன்துறை – யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் – கொடிகாமம், ஏற்கெனவே பாதை அமைக்கப்பட்டு போக்குவரத்து இடம்பெறுகிறது. கொடிகாமம் – நெல்லியடி – பருத்தித்துறை, பருத்திதுறை – காங்கேசன்துறைப் பகுதிகளுக்கிடையில் புகையிரதப் பாதை அமைக்கப்பட்டால் குடாநாட்டின் முக்கியமான நகரங்கள், கிராமங்கள் யாவும் இலகுவான போக்குவரத்து வசதியைப் பெறும். குடாநாடு

முழுவதும் ஒரு நகரப் பண்பு பெற்ற பிரதேசமாக இருப்பதால் இங்கு வீதிப் போக்குவரத்து மூலம் பிரயாணிகளின் போக்குவரத்தை நடத்துவதி பல சிரமங்களைத் தோற்றுவிக்கும் மேற்கூறப்பட்ட புகையிரதப் பாதை அமைப்பதன் மூலம் குடாநாட்டு நகரங்களுக்கிடையான போக்குவரத்திலும் நகரங்களின் நிலப் பயன்பாட்டிலும் பெரும் மாற்றங்களைத் தோற்றுவிக்கலாம்

யாழ்ப்பாண நகர் இலங்கையின் வடக்கு அந்தத்தில் இருப்பதாலும், கிழக்குக் கரையோர நகரங்களான முல்லைத்தீவு திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, பொத்துவில் ஆகியவற்றுடன் சிறந்த போக்குவரத்துத் தொடர்பைக் கொண்டிருக்காததும் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்குப் பெரும் தடையாக இருக்கின்றது இதனால் பருத்தித்துறையிலிருந்து பானமை வரையும் கிழக்குக் கரையோர பெருஞ்சாலை அமைக்கப்படுவது இன்றியமையாதது. இப்பொழுதுள்ள கரையோரப் பாதை தொடர்ச்சியற்றுக் காணப்படுகிறது. குறிப்பாக பருத்தித்துறைக்கும் வெருகலுக்கும் இடையேயுள்ள வீதி பல இடங்களில் பாலங்கள் அற்ற அபிவிருத்தியடையாத பாதையாகவுள்ளது. ஆகவே இப் பாதை குறுகிய காலத்துக்குள் விருத்தியாக்கப்பட வேண்டும். மற்றும் யாழ்ப்பாணம் – மன்னார் வீதியும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் இதற்கு, சங்குப்பிட்டி – கேரைதீவு பால வேலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இப்பாதை அமையுமாயின் மன்னார் யாழ்ப்பாண நகருக்கு அண்மித்த நகராகிவிடும்.

பலாலியிலிருந்து கொழும்புக்கும், திருச்சிக்கும் விமான சேவை மீண்டும் தொடங்க வேண்டும். இத்துடன் பலாலியில் இருந்து திருவனந்தபுரம் – சென்னை மற்றும் முக்கிய சர்வதேச நகரங்களுடனான விமான சேவையையும் விருத்தி செய்ய முயற்சிக்க வேண்டும் காங்கேசன்துறை – நாகபட்டினம் கப்பற்சேவை தொடங்கப்படுமாயின் இரு நகரங்களுக்குமிடையே வர்த்தக விருத்தி ஏற்பட வாய்ப்புண்டு. இதன் மூலம் யாழ்ப்பாண நகர வர்த்தக வளர்ச்சி மேம்படலாம். ஆகவே யாழ்ப்பாண நகர விருத்தியை நாம் பல கோணங்களிலிருந்து நோக்கிச் செயற்பட வேண்டும். நகரங்களின் வருங்காலப் பொருளாதார அமைப்பு, நகரங்களுக்கிடையேயான தொடர்புகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாண நகரின் பௌதீக அபிவிருத்தியைத் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ள வேண்டும்.

# யாழ்ப்பாண நகரில் நீர் நிலைகளின் அபிவிருத்தி வாய்ப்புகள்

பொ.பாலசுந்தரம்பிள்ளை, மீரா.நவரத்தினம்

நகரங்கள், கிராமங்கள் உருவாக்கம், அவற்றின் உருவவியல், செயற்பாடு மற்றும் அழகிய பண்பைக் கொடுப்பதில் குறித்த பிரதேச குடியிருப் புக்களில் அங்கு காணப்படும் நீர் நிலைகள் முக்கிய பங்கு வகிப்பதனை உலகரீதியாகக் காணமுடிகின்றது. உலகின் பல பெரிய, சிறிய நகரங்களின் வளர்ச்சி, உள்ளூர் நீர்நிலைகளை மையமாகக் கொண்டோ அல்லது நீர் நிலைகள் நகரங்களின் கவர்ச்சி மையமாகவோ விளங்குவதைக் காணலாம். இலங்கையில் கண்டி நகரை எடுப்போமாயின் நகரின் மையத்தில் அமைந் துள்ள ஏரி, நகரை அழகு படுத்துவதுடன் சுற்றுலாத்துறை, பொழுது போக்குத் துறைகளில் ஒரு சிறப்பான, பங்கினை வகிப்பதனைக் காணலாம். கொழும்பு நகரில் பேய்ரா வாவி (Beira lake) அண்மைக்காலத்தில் விருத்தி செய்யப்பட்டு வருவதனையும், மேலும் விருத்தியாக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனைகள், அபிவிருத்தித் திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருப்பதனையும் அறியக்கூடியதாக உள்ளது.

யாழ்ப்பாண நகரம் இன்று சுமார் 1,25,000 மக்களையும், மாநகரசபை நிர்வாகப் பரப்பு 20.2 சதுர கிலோமீற்றரையும் கொண்டு காணப்படுகிறது. இது 23 வட்டாரங்களைக் கொண்டிருந்தது. எனினும் இன்று வட்டாரமுறையில் தேர்தல் நடைபெறாது நகரம் முழுவதும் ஒரு தேர்தல் அலகாகவுள்ளது. நிர்வாக வசதிக்காகப் பழைய வட்டார அடிப்படையில் தரவுகள் பேணப்பட்டு வருவதால் இங்கு தரவுகள் வட்டார அடிப்படையிலேயே நோக்கப்படுகின்றன. குளங்களின் எண்ணிக்கை, நீர் பரந்திருக்கும் பரப்பு, நீர்க் கொள்ளளவு போன்றன இன்றைய நிலையை விடக் கடந்த கால் நூற்றாண்டுக்கு முன்னர் சிறப்பாக இருந்தமைக்குச் சான்றுகள் உண்டு. யாழ்ப்பாண மாநகரசபை உள்நாட்டு நீர் நிலைகளைப் பேணுவதற்குத் தெளிவான கொள்கைகள், செயற்பாடுகள் எதனையும் நீண்டகாலமாகவும், ஆழ

நோக்கிலும் கடைப்பிடிக்காமையும், மற்றும் இப்பிரதேச மக்களின் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்வதற்குக் குளங்கள் பயன் படுத்தப்படாமையும் அவற்றின் விருத்தியின்மைக்குக் காரணமாக அமைகின்றன. மாறாக யாழ்ப்பாண மாநகரசபையினால் நகரக் குப்பை, கூழங்கள், கழிவு, உலோகங்கள் ஆகியவற்றை ஒதுக்கும் இடங்களாக இக்குளங்கள் பயன்படுத்தப்படுவதும், நிலமற்ற வறிய மக்கள் தமது வாழ்விடங்களை அமைப்பதற்கான இடங்களாக இத்தகைய நீர்ப்பரப்புக்களை அண்டிய பகுதிகளைத் தெரிவுசெய்தமையும் காணலாம். தொடர்ந்தும் இக்குளங்கள் இத்தகைய பல்வேறுபட்ட கழிவுப் பொருட்களினால் நிரப்பப்பட்டு வருவதோடு தூர் ஏற்றத்தால் சதுப்பு நிலங்களாக மாறிவருவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. உதாரணமாக, புல்லுக்குளம், கன்னாதிட்டிக்குளம், மறவம்குளம், தேவரீர் குளம் என்பன இவ்வாறு நிரப்பப்பட்டு வருவதோடு தரம் குறைந்த நிலங்களாக உருமாறி வருவதனையும் காணலாம். அட்டவணை 1 இல் யாழ்ப்பாணநகரப் பகுதிக்குள் காணப்படும் உள்நாட்டு நீர் ஏரிகளின் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

நகரில் இன்று 30ற்கும் மேற்பட்ட குளங்கள் காணப்பட்டாலும் கூட இவற்றில் எந்தவொரு குளமும் நன்னிலையிலோ, சிறந்தமுறையில் பேணிப்பாதுகாக்கப்பட்டோ சுத்தமான நீரைக்கொண்டதாகவோ காணப்பட வில்லை. ஆனாலும் இவை நன்னீரைக் கொண்ட குளங்களாக இருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவைகள் நீண்டகாலமாகக் கவனிப்பாரற்று விட்டதனால் சவர் படர்ந்தும், சேறு சகதிகளாக (Muddy) மாறியிருப்பதனைப் பல குளங்களில் காணமுடிகின்றது.

### அட்டவணை 1
### யாழ்ப்பாண நகரப் பகுதிக்குள் காணப்படும் உள்நாட்டு நீர் நிலைகள்

| வட்டார இல | வட்டாரங்கள் | குளங்களின் எண்ணிக்கை | குளங்களின் பெயர் | பரப்பு ஏக்கரில் |
|---|---|---|---|---|
| 1 | கோட்டை | 2 | ★ புல்லுக்குளம்<br>★ வட்டக்குளம் | 3.7<br>0.63 |
| 4 | கதிற்றல் | 1 | தேவரீர் குளம் | 3.6 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | மத்தியூஸ் | 2 | ∴திட்டிக்குளம் | – |
| | | | வண்ணான்குளம் | 0.63 |
| 6 | கொய்யாத்தோட்டம் | 3 | மறவம் குளம் | 1.5 |
| | | | பால் குளம் | 3.75 |
| | | | வண்ணான் குளம் | 0.77 |
| 8 | கொழும்புத்துறை | 4 | நெடுங் குளம் | 1.75 |
| | | | வண்ணான் குளம் | 0.31 |
| | | | இலந்தைக் குளம் | 2.0 |
| | | | உப்புக் குளம் | 1.95 |
| 9 | அரியாலை கிழக்கு | 1 | நீர்நொச்சித் | 0.9 |
| | | | தாழ்வுக் குளம் | 15 |
| 10. | அரியாலை மேற்கு | 1 | பரப்பன் குளம் | 1.7 |
| 11 | கலைமகள் | 2 | நாயன்மார்கட்டுக்குளம் | 3.25 |
| 12. | நல்லூர் | 2 | பண்டாரக் குளம் | 2.0 |
| | | | ஜமுனா ஏரி | 0.95 |
| 13. | கண்டிக்குளி | 2 | மருதடிப் பிள்ளையார் கோவில் குளம் | 1.9 |
| | | | ∴நரியன் குண்டுக் குளம் | – |
| 14. | ஸ்ரேசன் | 1 | ஆரியகுளம் | 3.25 |
| 15. | கைலாய பிள்ளையார் | 3 | பிராமணக் கட்டுக் குளம் | 1.95 |
| | | | வண்ணான் குளம் | 1.35 |
| | | | அம்மச்சியா குளம் | 1.3 |
| 17. | ஆஸ்பத்திரி | 2 | கன்னாதிட்டிக் குளம் | 4.0 |
| | | | வண்ணான் குளம் | 1.9 |
| 18. | பசார் | 1 | கல்லுக் குளம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19. | புதிய பள்ளிவாசல் | 2 | ∴நெடுங் குளம்<br>வண்ணான் குளம் | |
| 20. | நாவாந்துறை | 1 | துடும்பைக் குளம் | |
| 21. | பழைய பள்ளிவாசல் | | வண்ணான் குளம் | |
| 22. | வண்ணார் பண்ணை மேற்கு | 1 | கோவில் குளம் | |
| 23. | வண்ணார் பண்ணை கிழக்கு | 1 | நரிக்குண்டுக் குளம் | |
| | | 32 | | |

∴ மீட்சிக்குட்பட்ட குளங்கள்
மீட்சி நடைபெறும் குளங்கள்

குளங்கள் நீர்த்தாவரங்களால் (Water Plants) குறிப்பாக, பாசி (Moss), சல்வீனியா (Salvenia) வகைத் தாவரங்கள், கோரைப்புற்கள் (Cyprus), தாமரை போன்றவற்றால் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ மூடப்பட்டிருப்பதனைக் காணலாம். நீரும் தடித்ததாகவும், பல சந்தர்ப்பங்களில் பாசி நிறைந்து பச்சைக் கூழாகவும் இருப்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது. ஸ்ரான்லி வீதியிலுள்ள வண்ணான்குளம் இத்தகைய பண்புகளைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இன்று யாழ்ப்பாண நகரில் நுளம்பு உற்பத்திக்கும், தொற்று நோய்களைத் தோற்றுவிக்கும் இடங்களாகவும் மற்றும் மக்களின் சுகாதாரத்தைப் பாதிப்பனவாகவும் இக்குளங்கள் காரணமாக அமைகின்றனவா? என எண்ணத் தோன்றுகின்றது.

யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள குளங்களில் பெரும்பாலானவை இந்துக் கோயில்களை அண்டி இருப்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது. வண்ணார்பண்ணை கிழக்கு, மேற்குப் பகுதிகளில் அமைந்துள்ள கோவில் குளம், நரிக்குண்டுக்குளம், ரக்கா வீதியிலுள்ள மருதடிப்பிள்ளையார் கோவில் குளம் என்பன கோயில்களுடன் இணைந்தவையாகும். சிலகாலங்களுக்கு முன்னர் இக்கோயில்களின் சில உற்சவங்கள் இக்குளங்களில் நடைபெற்றன. இன்று கோயில் தேவைகளுக்கு அவற்றின் அருகாமையிலுள்ள இக்கோயில் குளங்களின் பயன்பாடு குறைவாகவும் பயன்படுத்தக்கூடிய நிலையில்லாமையும் குறிப்பிடத்தக்கதாகும். நகரில் மக்கள் குறைவாகவும் ஓரளவு விவசாய நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்த காலத்தில் கால்நடைகளின் குடிநீர்த் தேவைக்கும், சலவைத் தொழிலுக்குமே இவை அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. அன்றும், இன்றும் நகர்க் குளங்களில் பல சலவைத் தொழிலுக்காகப் பயன்படும் நோக்கமே கூடுதலாக இருந்தமையால் பல குளங்கள் 'வண்ணான் குளம்' என்றே இன்றும் அழைக்கப்பட்டுவருகின்றன. இன்று ஓரிரு குளங்கள் தவிர ஏனையவை சலவைத் தொழிலுக்கே தகுதியற்றவையாகும். அத்துடன் இங்குள்ள எந்தவொரு குளமும் மக்களால் குளிப்பதற்குப் பயன்படுத்தப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

யாழ்ப்பாண நகரம் சமதரையாகவும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஒரு மென்சரிவைக் கொண்டதாகவும், நகரின் தென்மேற்கு (ஓட்டுமடம்), தென்கிழக்கு (செம்மணி)ப் பகுதிகள் தாழ்வான பகுதிகளாகவும் இருக்கின்றன. எனவே இத்தகைய தரைத்தோற்ற அமைப்பை அடிப்படையாகக்கொண்டே வடிகாலமைப்புக்கள் அமைதல் வேண்டும். குறிப்பாக, சரிவின் தன்மையுடன் (Slope Gradient) இணைந்ததாக வடிகாலமைப்புக்கள் மனிதனால் அமைக் கப்படும்போது வெள்ளம் விரைவாகக் கடலைச் சென்றடைய முடியும். யாழ்ப்பாண நகரில் உள்ள குளங்கள் நகரில் இயற்கை வடிகால் அமைப்புடன் ஒருங்கிணைந்து இருந்தமையையும், இருப்பதனையும் விளக்கப்படம் எடுத்துக் காட்டுகின்றது. இதனால் மழைகாலங்களில் மழை நீர் முதலில் குளங்களில் சேர்ந்து நிறைந்தபின் வாய்க்கால்களின் மூலம் குளத்திலுள்ள நீர் ஒன்றிலிருந்து ஒன்றுக்குச் சென்று இறுதியில் கடலைச் சென்றடையும் பண்பைக் கொண்டுள்ளது. இத்தகைய வடிகால் ஒழுங்குகள் (Drainage Patterns)

வடகிழக்கிலிருந்து தென்மேற்குத் திசையில் சரிந்து இறுதியில் கடலை அடையுமுகமாக அமைந்துள்ளன. ஆயினும் இங்குள்ள நகர வடிகால் அமைப்புச் சீரானமுறையில் இயங்கவில்லை என்பதனை அவதானிக்க முடிகிறது. வாய்க்கால்கள் இன்று நீர்வடிகால் பண்பை இழந்துள்ளதாலும் எல்லைக்காணி உடமையாளர்களும் தமது எல்லைகளை வெளிநோக்கி நகர்த்துவதாலும், நடைபாதைகளை அமைத்ததாலும், வாய்க்கால்களின் அகலம் சுருக்கமடைந்து செல்வதுடன் வடிகால் ஒழுக்குகள் தடைப்படு வதும் சில சந்தர்ப்பங்களில் அவை முற்றாக இல்லாமல் போகும் நிலைமை களும் ஏற்படுகின்றன. உதாரணமாக ஆரியகுளத்திலிருந்து தெற்கே கடலை நோக்கிச் செல்லும், வாய்க்கால்கள் தேவரீர் குளத்திலிருந்து குருநகர் கடலை நோக்கிச் செல்லும் வாய்க்கால்கள் என்பனவற்றில் இத்தகைய தன்மைகளை அவதானிக்கலாம்.

புவிச்சரிதவியல் ரீதியாக மயோசின்கால சுண்ணக்கற்படிவுகளையும் கரையோரப்பாகங்களில் அண்மைக்காலப் படிவங்களையும் கொண்ட யாழ்ப் பாண நகரின் நீர்த்தேவை முழுமையாகத் தரைக்கீழ் நீரிலிருந்தே பெறப்படுவதனால் நகரின் தரைக்கீழ் நீர்வளத்தைப் பேணுவதற்கு நகரின் குளங்கள் விருத்தியாக்கப்பட்டுத் தூயநீரைப் பேணிவைத்தல் அவசியமாகும். கோடையில் வற்றி மழைகாலங்களில் நீர் நிரம்பும் குளங்கள், வடிகால்கள் மக்கள் கழிவுப் பொருட்களைக் கொட்டும் பகுதிகளாக மாறிவருவதுடன் இதனால் நீர் அசுத்த மடைதல் மட்டுமல்லாது தரைக்கீழ் நீருக்கான நீர் உட்புகவிடும் செயன் முறையும் (Infiltration) பாதிக்கப்படுகின்றது. மேலும் யாழ்ப்பாண நகரில் உள்ள வாழ்விடங்கள் ஒவ்வொன்றும் அனேகமாகக் கிணற்றைக் கொண்டு காணப்படுவதுடன் மக்கள் இக்கிணற்றை நம்பியே வாழ்வதால் இக்கிணற்று ஊற்றுகள் (Springs) வற்றாதிருக்க இக்குளங்களில் தேங்கிநிற்கும் நீரே துணைபுரிகின்றது.

யாழ்ப்பாண நகரமானது வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காலத்திலேயே மழைவீழ்ச்சியைப் பெற்றாலும் குறிப்பாக ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏற்படும் அமுக்க, இறக்க நிலைமைகளினாலேயே அதிகளவான 1200மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பெறப்படுகின்றது. இக்காலங்களில் சில நாட்களுக்கு அடைமழை பெய்வதுடன் ஏற்கெனவே பரவலாகப் பெய்த மழையின் மூலம் தரைக்கீழ் நீர்மட்டம் வழக்கமாக இருப்பதை விட

உயர்ந்து காணப்படுவதால் ஊடுவடிதலின் விகிதம் (Rate of Infiltration) குறை வடைந்து மேற்பரப்பு வெளியோடையின் அளவு (Surface runoff) அதிகரிக்கின்றது. இச்சந்தர்ப்பங்களில்தான் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதுடன் வடிகால்கள் மழை நீரை வெளியேற்றுவதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றன. இத்தகைய வெள்ள நீர் வழிந்தோடிக் கடலை அடைவதற்காக அமைக்கப்பட்ட வடிகால் அமைப்புக்கள் தடைப்பட்டும் சீரற்றிருப்பது காரணமாகத் தேங்கி நிற்கின்றன. குறிப்பாகப் பொம்மை வெளி, சூரியவெளிப்பகுதி போன்ற தாழ் நிலங்களில் உள்ள வாழ்விடப்பகுதிகளிலும் போக்குவரத்து வழிகளிலும் நிற்கும் நீரை வெளியேற்றும் உடனடித் தேவைக்காக வீதிகளையும் அவைக்கான ஒழுங்கற்ற, சட்டரீதியற்ற முன் வெட்டிவிட்டு நீரை வெளியேற்றறும் பண்பைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆனால் குறிப்பாகப் போக்குவரத்துகள், கட்டங்கள், மதிற்சுவர்கள் அவைக்குட்பட்டுப் பாதிக்கின்றன.

ஒரு இடத்துக்குரிய காலநிலைத் தன்மையை நிர்ணயிருப்பதில் (Topo - Climatology) உளளூர் நீர் நிலைகளின் பங்கு முக்கியமானது இந்தவகையில் யாழ்ப்பாணநகரம் பல குளங்களைக் கொண்டிருப்பதால் இக்குளங்களைச் சிறந்த முறையில் பாதுகாப்பதன்மூலம் குளங்களை அண்டிய பிரதேசங்களில் நகரின் பொது வானிலை, காலநிலையிலும் பார்க்க ஒப்பீட்டுரீதியில் மிதமான இடத்திற்குரிய காலநிலை, வானிலைத் தன்மைகளைக் கொண்டு காணப்படும் இடங்களாக மாற்றலாம். யாழ்ப்பாண நகரப்பகுதி சராசரியாகக் வெப்பம் பெறுவதுடன் வருடத்தின் பெரும்பாலான காலங்கள் வெப்பம், புழுக்கம் வரட்சி, சோளகக்காற்று புழுதி, போன்ற வானிலை, காலநிலைத் தன்மைகளைக் கொண்டிருப்பதால் இத்தகைய குளங்களை நன்முறையில் பேணிப் பாதுகாப்பதன் மூலம் அவை அமைந்திருக்கும் சுற்றாடலின் நிலைக் கடினத்தன்மைகளைத் தளர்த்துவதற்கு அல்லது குறைப்பதற்குத் துணைபுரிவதுடன் மக்களை மேற்குறிப்பிட்ட அசௌகரியங்களிலிருந்து ஓரளவு விடுவிக்க முடியும். குளங்களைச் சூழ இயற்கையாகவே மரங்கள் இருப்பதும் மேலும் செயற்கையாக மரங்களை நடுவதன் மூலமும் இக்காலநிலையின் செல்வாக்கின் மேலும் பரப்பினை சிறிது தூரம்வரை விஸ்தரிக்க முடியும் உதாரணமாக, ரக்காவீதி மருதடிப்பிள்ளையார் கோயிலுடன் இணைந்துள்ள

குளமும் அதனை அண்டி நிற்கும் மருது மரங்களும் இடத்திற்குரிய குளிர்ச்சியான காலநிலை நிலவுவதற்குக் காரணமாகின்றன. இத்தகைய சாதகத்தன்மை காலப்போக்கில் ரக்கா வீதியில் சிறிய சந்தை அமைப்பொன்றை ஏற்படுத்தியுள்ளதை இன்று அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இவற்றைத் தவிர நகரிலுள்ள குளங்களின் நன்கு வரையறுத்து எல்லைப்படுத்தப்படாமலும், பயன்பாட்டிற்குட்படுத்தப்படாமலும் இருப்பதனால் எல்லைகளை அண்டி வாழும் மக்கள் தமது காணிகளைச் சிறிதுசிறிதாக விஸ்தரித்து மேலும் காணியற்ற வறிய மக்கள் இந்நீர் நிலை களை அண்டிய பகுதிகளை அத்துமீறிப் பிடிப்பதுடன் நாட்டாண்மையின் பின்னணியிலும் இத்தகைய அத்துமீறல்களை மேற்கொண்டு சேரிக்குடியிருப்புக்களை அமைத்துள்ளனர். மடத்தடியிலுள்ள தேவரீர் குளப்பகுதியிலும், கன்னாதிட்டிக் குளத்தை அடுத்துள்ள பகுதியிலும், மற்றும் பல குளங்களிலும் இத்தகைய அத்துமீறிய குடியிருப்புக்களைக் காணக் கூடியதாக உள்ளது. குளங்களைச் சுற்றியுள்ள நிலப் பகுதிகளை மக்கள் இன்று ஆக்கிரமித்துக் கொண்டு வருவதால் குளங்களிற்கான வழிகள் அடைக்கப்பட்டுக் குளங்களை இலகுவில் அடைய முடியாத நிலை காணப்படுகிறது. எனவே இக் குளங்கள் சரியாக எல்லைப்படுத்தப்படாமையும். பாதுகாக்கப்படாமையும் ஒழுங்கான முறையில் நிரப்பப்படாமையும் காரணமாக அவை நகரின் வளர்ச்சிக்கும் நகரின் சூழலினைப் பாதுகாப்பதற்கும் தடையாக அமைகின்றன.

பின்வரும் வழிமுறைகளைக் கையாளுவதன் மூலம் யாழ்நகரின் குளங்களைப் பாதுகாக்கலாம். அவையாவன:-

1. குளங்களிற்கான நீர்ப்பரப்பினை வரையறுத்து, எல்லைகளை உறுதிப்படுத்துதல்.

2. குளங்களுக்கான எல்லைகளைச் சீமேந்துச் சுவரினால் அமைத்தல்.

3. குளங்களை அண்டிய பகுதிகளில் ஏற்படுத்தப்படும் அத்துமீறிய குடியிருப்புக்களைத் தடுத்தல்.

4. பொதுமக்கள் குப்பை, கூழங்களை அகற்றுமிடமாகக் குளங்களைப் பயன்படுத்தலைத் தடுத்து நிறுத்தல்.

5. பொதுமக்கள், கால்நடைகள் என்பன நீரை அசுத்தப்படுத்துவதை நிறுத்துதல்.

6. பொதுச்சொத்தான குளக் காணியைத் தனிப்பட்டவர்கள் அபகரிப்பதற்குச் சமூகம் இடமளிக்காதிருத்தல்.

யாழ்ப்பாணநகரில் பல குளங்கள் இருந்தாலும் இக்குளங்களை இயன்றவரையில் நன்னிலையில் வைத்திருப்பதும், பேணிப்பாதுகாப்பதும் முக்கியமானதொன்றாகும். எனினும் நகரின் ஓரிரு குளங்களை விருத்தி செய்வதன் மூலம் நகரை அழகுபடுத்தவும் மற்றும் சுற்றுலா, பொழுதுபோக்குத் துறையை விருத்திசெய்வதுடன் நகரச் சூழல் மாசுபடுவதையும் தடுக்க முடியும்.

நகரின் மத்தியில் வண்ணான்குளம் (கஸ்தூரியார் வீதி) அமைந்து காணப்பட்ட போதும் குளத்தின் பெரும்பகுதி ஏற்கெனவே நிரப்பப்பட்டு ஆறு கடைகள் மேற்கிலும் ஆறு கடைகள் வடக்கிலும் அமைக்கப்பட்டும், வாகனங்கள் நிறுத்தப்படும் இடமாகவும் பயன்படுத்தப்படுகின்றது. 1960ற்கு முன்னர் இக்குளத்தின் மேற்குக்கரையில் மருத மரங்கள் நின்றதுடன் சிறப்பான ஒரு குளச்சூழல் நிலவியதற்கு இக்குளத்திற்கு முன்னர் அமைந்திருந்த Lake View Hotel சான்றாக அமைகின்றது. காலப்போக்கில் இக் குளம் நீண்டகாலமாகக் கவனிக்கப்படாது விட்டதனால் சதுப்பு நிலமாக இன்று காட்சியளிக்கின்றது. இக்குளத்தின் இன்றைய நிலையையும் மற்றும் அப்பகுதியின் அபிவிருத்திச் சேவையையும் நோக்குமிடத்து இக்குளத்தினை மீள அபிவிருத்தி செய்வதற்கு முயற்சி எடுப்பதிலும் பார்க்க முழுப்பகுதியையும் நிரப்பி நகர அபிவிருத்தியை முன்னெடுப்பதே சிறந்ததாகும். இப்பகுதியில் வர்த்தக, போக்குவரத்துத் தேவைக்குக் கூடியநிலம் தேவைப்படுவது குறிப்பிடத்தக்கது. இதனைக் கருத்திற் கொண்டு இவ்வண்ணான் குளத்தை மீட்சிசெய்து யாழ்ப்பாண நகர மினிபஸ் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு யாழ்ப்பாண நகர சபையினால் திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மின்சார நிலைய வீதியையும் கஸ்தூரியார் வீதியையும் இணைக்கும் நோக்கத்துடன் புதிய பாதை ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்தினை 1988ஆம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு யாழ்ப்பாண மாநகரசபை திட்டமிட்டிருந்த போதும் உள்நாட்டுக் குழப்பங்களால் இச்செயற்றிட்டம் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

இக்குளத்தினைவிட நகரின் வியாபாரப்பகுதியில் காணப்படும் ஆரியகுளம், புல்லுக்குளம், கன்னாதிட்டிக்குளம் என்பன விருத்தி செய்யக்கூடிய வாய்ப்பினைக் கொண்டிருக்கின்றன. அடுத்து ஆரியகுளம் ஒப்பீட்டு ரீதியில் விருத்தியாக்கக்கூடிய வாய்ப்பினைப் பெற்றுள்ளது. இது 1.3 ஏக்கர் பரப்பைக் கொண்டு பெரிய நீர் நிலையாக இருப்பதுடன் நகரின் இயற்கை வடிகால் ஒழுங்கில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. திருநெல்வேலி, நல்லூர்ப் பகுதியிலிருந்து தெற்கு நோக்கி வடியும் அரசடி அம்மாச்சியாகுளம், இலுப்பையடி வாய்க்கால் வழியாகச் சென்று யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்குக் கிழக்காகக் கடலை அடைகின்றது. ஆரிய குளத்திற்குக் கிழக்கே அத்தியடி மருதடிப் பகுதியிலிருந்து மேற்கு நோக்கி ஓடும் நீர் அத்தியடிக் கால்வாயின் ஊடாக ஆரியகுளத்தை அடைகின்றது. அண்மை ஆண்டுகளில் யாழ்ப்பாண நகரப்பகுதியில் குடியிருப்புப் பகுதிகளைச் சுற்றிச் சீமெந்து மதில் அமைக்கப்பட்டு வருவதனாலும் இயற்கையான வடிகால் ஒழுங்கு பெருமளவு தடைப்பட்டுள்ளதைக் காணலாம். இதனால் மழை நீர் வளவுகளிலேயே தேக்கப்பட்டு அல்லது ஓட இடமில்லாது சிற்சில இடங்களில் தேங்கி நிற்பதனையும் காணலாம். உதாரணமாக ஆரிய குளத்தின் இயற்கை நீரேந்து பரப்புக்குட்பட்ட குருநகர்க்கோயில் நிலப்பகுதி நீர்வழிந்தோடுவதற்கு வடிகாலற்று அங்கு பெருமளவு நீர் மழை நாட்களில் தேங்கி நிற்பதைக் காணலாம். இதனால் இக்கோயிலைச் சூழவுள்ள மக்கள் பல சிரமத்திற்குட்படுவதைக் காணமுடிகின்றது.

ஆரியகுளத்தின் இன்றைய நிலையை நோக்கின் இதன் மேற்குப் பக்கம் பருத்தித்துறை வீதியாகவும், சீமேந்து அரணைக் கொண்டும் விளங்கு கின்றது. ஆனால் வடக்கு, தெற்கு, கிழக்குப், பகுதிகள் நல்ல முறையில் அரண் செய்யப்படவில்லை. சில இடங்களில் மதிற் சுவர்களையும், சில இடங்களில் வேலிகளையும், சரிந்த பூவரசுமரங்களையும் கொண்டுள்ளது. இம்மூன்று பகுதிகளும் அப்பிரதேசத்தின் குடியிருப்புக்களின் பின்புறமாக இருப்பதால் அழகு குறைவாகவும் கழிவுப்பொருட்கள், குப்பை, கூழங்கள், மற்றும் மலசல கூடங்களைக் கொண்டு காணப்படுவதும் தெரிகின்றது. தெற்குப்பகுதி குளக்கரையை அண்டி, ஒரு நூல் நிலையம், வைரவர்கோயில் என்பன அமைந்ததுள்ளதுடன் குளத்திற்கும், ஸ்ரான்லி வீதிக்கும் இடையில் வெற்றுநிலம் காணப்படுகின்றது. மேற்கில் 4 மருதமரங்கள்

காணப்படுகின்றன. மேற்குப் பதியில் வடபாகத்திலிருந்த மரங்கள் அண்மையில் பட்டுவிட்டதனாலும் தற்போது அப்பகுதியில் நிழலற்றும், வெப்பமாகவும் உள்ளது. இக்குளத்தின் வடமேற்குப் பகுதியில் மேலும் மீன்ஏற்றி, இறக்கல், மீன்பெட்டிகள் அடுக்கப்பட்டிருப்பதன் காரணமாக வெடில் வீசுவதால் பருத்தித்துறைவீதியால் செல்லும் மக்கள் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகின்றார்கள். தெற்குப்பக்கத்தில் அரச மரங்கள், ஆலமரங்கள் என்பன இருப்பதால் இப்பகுதி குளிர்ச்சியாகவுள்ளது. வடக்குக் கிழக்குப் பகுதிகளின் எல்லை அண்டி ஆங்காங்கே வீட்டுக்குப்பை கூழங்கள் குளக்கரையில் கொட்டப்படுவதனால் குளத்தின் சில பகுதிகள் குப்பைகள் நிறைந்து காணப்படுவதும், நீர் அசுத்தமடைந்து வரும் நிலையும் தென்படுகின்றன. இக்குளம் நீண்டகாலமாகத் தூர் அகழாததன் காரணமாக தூர் படிந்து இதன் கொள்ளளவும், நீரின் ஆழமும் குறைவாக உள்ளன. நீர் நிற்கும் காலங்களில் நிலத்தின் படுக்கை சேற்றுத்தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றது. இதைத் தவிர நீர் அசுத்தமாகவும், பாசிநிறைந்து பச்சைக் கூழாகவும் காட்சி அளிப்பதுடன் தாமரை மற்றும் சல்வீனியாவகைப் பூண்டுகளால் மூடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாகப் பார்ப்பின் இக்குளமும் அதன் சூழலும் நீண்டகாலமாகக் கவனிப்பாரற்று இருந்ததாலும், மக்கள் சூழல் பண்பிற்கு முக்கியத்துவம் கொடுக்காமையாலும் அசுத்தமும் அழகுத்தன்மையும் அற்றுக் காணப்படுகின்றன.

ஆரியகுளம் அபிவிருத்தி செய்யப்படுவதற்கான வாய்ப்புகளைக் கொண்டுள் ளது. அதாவது சூழல், சுற்றாடல், நகரப் பொழுது போக்குத் தேவைகளைக் கருத்திற் கொள்ளும் இடத்து விருத்திசெய்வதற்கான வாய்ப்புகளைப் பெற்றுள்ளது. இக்குளத்தினை அழகுபடுத்துவதன்மூலம் நகர மக்களின் பொழுது போக்குத் தேவைகளிற் சிறு பகுதியையாவது நிறைவேற்ற முடியும் என நம்பப்படுகின்றது. இன்று யாழ்நகரில் எந்த இடத்திலாவது நீரை அடிப்படையாகக் கொண்ட பொழுதுபோக்கு வசதிகளோ, விளயாட்டுத்துறைக ளோ இல்லாதது கவனிக்கத்தக்க அம்சமாகும்.

யாழ் நகரம் காக்கைதீவிலிருந்து கொழும்புத்துறைவரை ஏறத்தாழ 10 கிலோ மீற்றர் நீளமான கடற்கரையைக் கொண்டிருந்ததும் இதில் 100 மீற்றர் தூரமாவது மக்களின் பொழுது போக்கு வசதிகளைக் கொண்டிராமை

நகரப்பொழுதுபோக்கு வசதியின் பின்னடைவையே எடுத்துக் காட்டுகிறது. இவ்விடம் குப்பை, கூழங்கள் நிறைந்த சேற்றுக் கடற்கரையாகவோ அல்லது பாதுகாப்புக்காக முட்கம்பிகள், வலைகள் கொண்ட கடற்கரையாகவோ இருப்பதனால் பொழுதுபோக்கு வழிகளுக்குத் தடையாகவுள்ளது. மேலும் ஆரியகுளத்தின் நீர் தூய்மைப்படுத்தப்படுமிடத்து அக்குளத்தைச் சூழவுள்ள குடியிருப்புக்களின் கிணற்று நீர் சுத்தமடைய வழிபிறக்கலாம். மேலும் குளத்தின் செல்வாக்கால் குளத்தைச் சூழவுள்ள பிரதேசங்கள் ஏனைய பகுதிகளிலும் பார்க்க ஓரளவு ஒப்பீட்டளவிற் குளிர்ச்சியான இடத்திற்குரிய காலநிலைத் தன்மையைக் கொண்ட பிரதேசமாக வாய்ப்புண்டு. மேலும் இக்குளப்பகுதியை விருத்தி செய்யுமிடத்து வடக்கு, கிழக்குக் கரையோரப் பகுதியில் வாழும் மக்களின் காணிகளின் பிற்பகுதிகளுக்குப் பாதை அல்லது வழிமுகப்புக் கிட்டவும் சந்தர்ப்பும் உண்டு. தொகுத்து நோக்கும்போது இக்குளத்தினை விருத்தி செய்யுமிடத்து இக் குளக்கரையோரத்திலுள்ள காணிகளின் ஆதனப் பெறுமானம் அதிகரிப்படுவதுடன் கவர்ச்சியான நகரமையமாக இது விருத்தி அடைவதற்கு வாய்ப்புகளையும் கொண்டுள்ளது.

இக்குளத்தின் விருத்திக்குப் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1. இக்குளத்தைச் சுற்றி நான்கு பக்கமும் அரண் அமைத்து இக்குளத்தற்குரிய நிலப்பரப்பினை உறுதிப்படுத்த வேண்டும்.
2. இக்குளத்தைச் சுற்றிவரும் முறையில் ஒரு சுற்றுப்பாதை அமைக்கப்பட வேண்டும். குளத்தில் நீரைத் தேக்கத்தக்க வகையில் தூர், அமைக்கப்பட்டு சிறுவள்ளங்கள் களிப்பு ஓடங்கள் (Pleasure Boats) விடயக்கூடிய அளவிற்கு ஆழமாக்கப்பட வேண்டும்.
3. வடக்கு கிழக்கு கால்வாய் வழியாக வரும் கழிவுநீர் குளத்தைச் சென்றடைவதைத் தடுக்கவேண்டும்.
4. குளத்து நீர் துப்புரவானதாகவும், தெளிவானதாகவும் மாற்றப்படவேண்டும்.
5. குளத்தில் காணப்படும் நீர்த்தாவரங்கள் யாவும் அகற்றப்பட்டு மேலும் சிறு ஓடங்கள் இறக்குவதற்கேற்ற இறங்குதுறை தெற்கு அல்லது

தென்மேற்கு மூலையில் அமைக்கப்பட வேண்டும்.

6. மேலும் இக்குளத்தைச் சூழவுள்ள நிலப்பகுதி மின்ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு அழகிய நிலக்காட்சியைக் கொண்டு காணப்பட வேண்டும். குளத்தைச் சுற்றி மக்கள் அமர்வதற்கு ஆசனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட முறையிற் குளத்தின் அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் யாழ் நகர மக்கள், குறிப்பாகக் குழந்தைகள், சிறார்கள் நன்மை பெறமுடியும். இத்திட்டத்தாற் குறிப்பாக ஆரியகுளம், சிறாம்பியடி, அத்தியடி, ஆனைப்பந்தி மக்கள் கூடியளவு நன்மைபெற வாய்ப்பு உண்டு. எனவே இத்திட்டத்தை மேற்கொண்டு ஆரிய குளத்தை அழகுபடுத்த யாழ்ப்பாண மாநகரசபையும் ஏனையநிறுவனங்களும், நகரமக்களும் கூடிய ஈடுபாடு காட்ட வேண்டும்.

ஆரியகுளத்தைப் போலவே நகரில் காணப்படும் சிறியளவான அல்லது பெரியளவான குளங்கள் அபிவிருத்திக்கு உட்படுத்தப்படல் வேண்டும். இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதவிடத்து ஓரிரு குளங்களையாவது விருத்தி செய்வதற்கு யாழ் மாநகர சபையோ நகர அபிவிருத்திச்சபையோ சூழல் அதிகாரசபை என்பனவோ கூடிய கவனம் செலுத்த வேண்டும். நகரின் பிரபல வர்த்தக நிறுவனங்கள், கம்பனிகள் சில குளங்களை எடுத்து அபிவிருத்தி செய்ய முன்வர வேண்டும். கொழும்பு நகரிலுள்ள பல வீதிச் சுற்று வளையங்களைப் (Roundabouts) பிரபல கம்பனிகள் எடுத்துப் பராமரித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். இந்தவகையில் நகரின் மத்திய பகுதியிலுள்ள புல்லுக்குளம், கன்னாதிட்டிக்குளம் என்பனவற்றை மக்கள் பயன்படுத்தக்கூடிய பொழுது போக்குமையங்களாக மாற்றுதல் நகரின் வளர்ச்சிக்கு மேலும் துணைபுரியும் எனலாம்.

புல்லுக்குள விருத்தி நீண்டகாலமாகப் பேசப்பட்டுச் சிலமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் குறிப்பாக 1960 களிலிருந்து விருத்திசெய்ய எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்காமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். 3.7 ஏக்கர் பரப்பைக் கொண்ட இக்குளம் யாழ்நகரின் முற்றவெளிக்கு அண்மையில் அமைந்து இருப்பதுடன் அதனைச் சூழவுள்ள இடங்கள் பூங்கா,

விளையாட்டுமைதானம், கலையரங்குகள், சினிமாப்பட மாளிகைகள், கடற்கரை போன்ற பொழுதுபோக்கு, மற்றும் கல்விநிறுவன வசதிகளைக் கொண்டு காணப்படுகின்றது. இத்தகைய அம்சங்கள் இக்குளத்தின் விருத்திக்கு ஆதாரமாகவுள்ளதுடன் யாழ்ப்பாண நகரத்தை முக்கிய சுற்றுலாத்துறை இடமாக வளர்த்தெடுக்கக் கூடிய வாய்ப்புக்களை இனிவரும் காலங்களில் ஏற்படுத்த முடியும்.

நகரின் மத்திய பாகத்தில் கன்னாதிட்டிக்குளம் ஏறத்தாழ 5 ஏக்கர் பரப்பளவைக் கொண்டிருப்பதுடன் இதனையும் விருத்தி செய்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. இக்குளத்தின் தென்பாகம் தவிர்ந்த ஏனைய பாகங்கள் மக்களின் வேறுபட்ட பயன்பாடுகளுக்குட்படுகின்றது. குளத்திற்குத் தெற்கே ஏறத்தாழ 1 ஏக்கர் நிலம் மீட்சி செய்யப்பட்டு விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இவ்வாறு தொடர்ச்சியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களுக்காகப் பொழுதுபோக்கு, மையமொன்று ஏற்படுவது குறித்த சூழலுக்கு ஏற்ப அமையும் எனலாம்.

இவ்வாறு நீர் நிலைகளைப் பொழுது போக்கு நிலையங்களாக மாற்றும் போது ஏற்கெனவே அமைக்கப்பட்ட வடிகால் அமைப்பின் வெள்ள நீர் கழிவு நீர் என்பன குறிப்பாக, குளங்களுக்குச் செல்லாமல் தடுப்பது அவை கடலுக்குள் சென்றடைவதற்கு வேறுமார்க்கங்களும் கண்டறியப்பட வேண்டும். அத்துடன் ஏற்கெனவே அமைக்கப்பட்டு இன்று தூர்ந்தும், சீரற்றும் காணப்படும் வடிகால்களைச் சிறந்த முறையில் அமைப்பதுடன் இவ் வடிகால்களின் ஏனைய பகுதிகளில் வாழும் மக்களின் மீது இவ்வடிகால்களை அசுத்தமாக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக யாழ்ப்பாண நகரசபை கடுமையான சட்ட ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் வெள்ள நீர் கழிவு நீ என்பவற்றினால் நகரில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் தீர்க்கப்படுவதுடன் நகரினை அழகாகவும் தூய்மையாகவும் வைத்திருக்க முடியும்

யாழ்ப்பாண நகரின் நீர்ப்பயன் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டு செல்லும் அதேசமயம் நகரமக்கள் இந்நீரைப் பெறுவதற்குத் தரைக்கீழ் நீரையே நம்பி இருப்பதனால் எதிர்கால நீர்த்தேவையினைச் சமாளிக்கக் கூடிய வகையில் கிடைக்கும் நீரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை

மேற்கொள்ள வேண்டும். இந்தவகைகளில் கிடைக்கும் நீரை மீளவும் தரைக்குச் செலுத்துவதற்கான (Recharge) சிறந்த சாதனமாக இக்குளங்கள் காணப்படுவதனால் ஆண்டு தோறும் அவற்றின் கரைகளில் படியும் நுன்கழிவுகளை (Desilting) அணைகளை உயர்த்துவதன் மூலம் நீர் கொள்ளளவையும் ஊடுவடிதலின் அளவையும் அதிகரிக்க முடியும். யாழ்ப்பாண நகரத்தின் பொருளாதாரத்தில் கைத்தொழில்துறை சிறுபங்கினையே வகித்தாலும் நீரை முக்கியமாகக்கொண்ட கைத்தொழில்கள் விருத்தியடையும் போது நீரைப் பெறுவதில் இத்தகைய நீர் நிலைகளின் பங்கு முக்கியமானதாகும். மேலும் இக்குளங்களின் அபிவிருத்திக்கு உட்படுத்துவதன் மூலந்தான் இந்நகரக் குளங்களை, மக்கள் பயன்படுத்தக்கூடிய பொழுது போக்கு மையங்களாகவும் மாற்ற முடியும். இத்தகைய அபிவிருத்தி மையங்களைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாண நகரின் குளங்களைப் பயன்படுத்தல், பாதுகாத்தல் தொடர்பான சில சட்டதிட்டங்கள், உபவிதிகள் என்பனவற்றை யாழ்ப்பாண மாநகரசபை, நகர அபிவிருத்திச் சபை, சூழல் அதிகாரசபை போன்றன இனிவரும் காலங்களிலாவது நடைமுறைப்படுத்த முன்வருவதன் மூலமே நகர அபிவிருத்தியையும் முன்னெடுத்துச் செல்லமுடியும்.

## உசாத்துணை நூல்கள்


1. பாலசுந்தரம்பிள்ளை பொ.–யாழ்ப்பாண மாநகர அபிவிருத்தி : சில திறமுறைகள், யாழ்ப்பாணப் புவியியலாளன் இதழ் 4, 1986/87.

2. யாழ்ப்பாண மாநகரசபை உபகுழு அறிக்கை– 1987.

3. Jaffna Public Works Programme The Urban Development Authority Sri lanka, 1981.




Prof P. Balasundarampillai.
B. A. Hons (Cey) Ph. D. (Durham)
Head, Dept. of Geography,
University of Jaffna.

Miss. Meera Navaratnam B. A (Hons)
Temporary Asst. Lecturer,
Department of Geography.

## யாழ்ப்பாண நகரில் நீர் நிலைகளின் அபிவிருத்தி வாய்ப்புகள்

1. புல்லுக்குளம்.
2. வட்டக்குளம்
3. தேவரீர்குளம்.
4. மறவம்குளம்
5. வண்ணான் குளம்.
6. பால்குளம்
7. வண்ணான் குளம்.
8. நெடுங் குளம்
9. உப்புக் குளம்
10. வண்ணான் குளம்
11. நெடுங் குளம்
12. நீர்நொச்சித்தாழ்வுக் குளம்.
13. பிரப்பங் குளம்
14. நாயன்மார்கட்டுக் குளம்.
15. பண்டாரக் குளம்.
16. வண்ணான் குளம்
17. அம்மச்சியாக் குளம்.
18. பிராமணகட்டுக் குளம்.
19. மருதடிப்பிள்ளையார் கோயில்
20. ஆரிய குளம்.
21. கன்னாதிட்டிக் குளம்
22. வண்ணான் குளம்.
23. கல்லுக்குளம்
24. நரிக்குண்டுக் குளம்
25. வண்ணான் குளம்.
26. கோயில் குளம்.
27. துடுப்பைக் குளம்.

## யாழ்ப்பாண நகரக் குளங்களின் பரம்பலும் வடிகாலமைப்பும்



# ஊர்காவற்றுறைத் தேர்தற்றொகுதித் தேர்தல்கள்

இலங்கையில் சர்வசனவாக்குரிமை வழங்கப்பட்டு 58 ஆண்டுகள் ஆகிவிட்டன. 1931க்கு முன்னரும் 1920 ஆண்டுகளிலிருந்து மட்டுப்படுத்தப்பட்ட வாக்காளர் அடிப்படையில் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத் தேர்தல்கள் இடம் பெற்றுள்ளன. இந்நிலையில் தமிழ்மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு தேர்தல்தொகுதி ஒன்றில் நடைபெற்ற தேர்தல்களை ஆராய்வதன்மூலம், இந்நாட்டில் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய பொதுவான பிரச்சினைகளையும், தேசியப் பிரச்சினைகளில் கடைப்பிடித்த அணுகுமுறை, குறித்த தேர்தற்றொகுதி வெவ்வேறு காலங்களில் எதிர்நோக்கிய, முக்கிய சமூக – பொருளாதாரப் பிரச்சினைகள், ஏற்பட்ட மாற்றங்கள் வாக்களிப்பு நடத்தையைத் தீர்மானித்த காரணிகள் போன்றவற்றை அறியக்கூடியதாக இருக்கும். தேர்தல்களில் பங்குபற்றிய அபேட்சகர்கள், கட்சிகள், தேசியப் பிரச்சினைகளிலும் தொகுதியின் சமூக–பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் கடைப்பிடித்த கொள்கைகளையும் திறமுறைகளையும் மதிப்பீடு செய்ய உதவியாக இருக்கும். இவ்வாய்விற்கு ஊர்காவற்றுறைத் தேர்தல் தொகுதி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாய்வில் எடுக்கப்பட்ட கருதுகோள் பின்வருமாறு: (1) 1931 இல் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்ட காலத்திலிருந்து குறிப்பாக 1947 இல் இருந்து ஊர்காவற்றுறைத் தொகுதி மக்கள் தேர்தலிலும், அரசியலிலும் பங்குகொள்ளும் போக்கு, குறிப்பாக இவர்களது சமூக–பொருளாதார அபிவிருத்தியுடன் வளர்ந்து வந்துள்ளதைக் காணலாம். (11) ஊர்காவற்றுறைத்தொகுதியின் அபிவிருத்திப் பிரச்சினையிலும் பார்க்க இத்தொகுதி வாக்காளர்கள் நாட்டில் தமிழ்ப்பிரச்சினையில் ஈடுபாடு காட்டியதுடன், இதனை முன்னெடுத்த தமிழ் அரசியல் கட்சிகளையுமே ஆதரிக்கும் போக்குக் காணப்பட்டது. (111) பல தீவுகளைக் கொண்டதான

இத்தொகுதியில் தேர்தல்களில் பிராந்திய உணர்வுகள் ஓரளவு தென்பட்டபொழுதும், சாதி, வர்க்கப்பிரிவு அடிப்படையில் வாக்களிப்பு இடம்பெறவில்லை.(IV) இத்தொகுதி மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையினர் தென்னிலங்கைத் தொடர்புடையவர்களாக இருந்தபொழுதும், அத்தொடர்புக்கு ஏற்பத் தேசிய அரசியல் கட்சிகளையும், இணைந்திராது மாறுபாடாகத் தமிழ்த் தேசியப்பிரச்சினைகளில் ஈடுபாடு காட்டிய கட்சிகளுக்கே ஆதரவு நல்கினர்.

ஆய்வின் தரவு: சட்டவாக்கச்சபை சட்டசபை, பாராளுமன்ற வாக்களிப்பு விபரங்கள், அரசவெளியீடுகளிலிருந்து பெறக்கூடியதாக இருக்கிறது. குடிசனத்தொகை விபரங்கள், தேர்தல்தொகுதி அமைப்புக் குறித்த விபரங்கள் தேர்தல்தொகுதி நிர்ணய ஆணைக்குழு அறிக்கைகள் ஆகியவற்றிலிருந்து பெறக்கூடியதாக இருக்கின்றன. வாக்காளரின் நடத்தை, தேர்தல் விஞ்ஞாபனங்கள் முக்கிய பிரச்சினைகள் போன்றவற்றைத் தொகுதியில் போட்டியிட்ட அபேட்சகர்கள் அவர்களின் முக்கிய ஆதரவாளர்கள் மற்றும் இத்தொகுதியில் ஈடுபாடு கொண்டிருந்த பலரை நேரடியாகப் போட்டிகண்டு விபரங்கள் திரட்டப்பட்டது.1952 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலிலிருந்து பின்னைய காலங்களில் இடம் பெற்ற தேர்தல்கள் மற்றும் முக்கிய சமூக–பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றி நேரடியாகப் பெற்ற அனுபவங்களும் இக்கட்டுரை எழுதுவதற்கு உதவியாக அமைந்தன.

1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தில் சர்வசன வாக்குரிமை தொகுதிவாரிப் பிரதிநிதித்துவம் ஆகிய இரண்டும் முக்கிய அம்சங்களாக இருந்தன. 1931 இல் நாடு 50 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கபட்டன. இவற்றுள் ஊர்காவற்றுறைத் தொகுதியும் ஒன்றாகும். இத்தொகுதி எல்லாத் தீவுகளையும் பண்டத்தரிப்பு உடையார் பிரிவு நீங்கலாக வலிகாமம் மேற்குப் பிரிவையும் உள்ளடக்கியதாக இருந்தது. குடிசனத்தொகை குறைவாக இருந்ததால் தீவுகளுக்கென்று தனியானதொரு தொகுதியை உருவாக்க முடியவில்லை. தீவுப்பகுதி வலிகாமம் மேற்குக்கு அண்மையாக இருந்ததால் இரு பகுதிகளையும் இணைக்கவேண்டியதாக இருந்தது 1920களில் காரைதீவுக்கும் பொன்னாலைக்கும் இடைப்பட்ட கடற்பரப்பூடாகப்பாதை அமைக்கப்பட்டதும், அராலிக்கும்–வேலணைக்கும் இடையே செட்டியார் மடம் வழியாகக் கடற் போக்குவரத்து

விருத்திபெற்றிருந்ததும் இவ்விரண்டு பிரதேசங்களும் இணைந்து செயல்பட வழிவகுத்தன.

1931க்கு முன்னர் கல்வி, சொத்து அடிப்படையிலேயே மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை இருந்தது. 1921 ஆம் ஆண்டு மனிங் சீர்திருத்தப்படி சட்டவாக்க சபைக்குப் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ அடிப்படையில் வடமாகாணம் ஒரு தேர்தல் தொகுதியாகியது. 1921 இல் இத்தொகுதியில் இடம்பெற்ற தேர்தலில் வேலணையைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு.வை. துரைசாமி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. ஏ. கனகரத்தினத்தை வென்றார். இவரது வெற்றியுடன் தீவுப்பகுதி ஆரம்பத்திலிருந்தே வட இலங்கை அரசியலில் முக்கியத்துவம் பெற்றது. இவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் வழிவந்த சைவ, தமிழ் மறுமலர்ச்சியுடன் இணைந்து நின்றதும், சேர் பொன்னம்பலம் இராமநாதனுடன் கொண்டிருந்த தொடர்பும் வெற்றிக்கு வாய்ப்பாக இருந்தன. நிலமானியத் தன்மை கொண்ட அன்றைய சமுதாய அமைப்பில் இவரது உறவினர் பலர் மாகாண நிர்வாகத்தில் உடையார், விதானைமார்களாக இருந்தனர். இதனால் இவருக்கு நிலவுடைமைபெற்ற கிராமப்புற உயர் வகுப்பினரின் ஆதரவு இலகுவில் கிடைத்தமை வெற்றிக்கு உதவின. திரு.ஏ. கனகரத்தினம் நகரப்பகுதிகளில் புதிய, படித்த பிரிவினரின் செல்வாக்கைப் பெற்றிருந்தார். இருவருக்குமிடையே இருந்த சாதி வேறுபாடு திரு. வை. துரைசாமிக்குச் சாதகமாக இருந்தது.

1921 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சட்டவாக்கசபைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில், வடமாகாணல் தேர்தற்தொகுதி தேர்தல் முடிவுகள் பின்வருமாறு: பதியப்பட் தேருநர்கள் 13937:-.

| **வேட்பாளர்கள் பெயர்** | **இடப்பட்ட வாக்குகள்.** |
|---|---|
| திரு . துரைசாமி | 5836 |
| திரு.ஏ. கனகரத்தினம் | 4443 |

Source: G.P.H.de Silva - A Statistical Survey of Elections to the Legislatures of Sri Lanka - Marga Institure - Colombo 5.

மொத்தமாக இடப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 10279. வெற்றிபெற்ற அபேட்சகர் திரு. வை. துரைசாமி பெற்ற பெரும்பான்மை வாக்குகள்

1383. இத்தேர்தலில் பின்பு 1922 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்ற சட்டவாக்கசபைத் தேர்தலில் திரு. வை. துரைசாமி போட்டியின்றித் தெரிவு செயப்பட்டார்.

1924இல் மனிங்கின் இரண்டாவது யாப்புத் திருத்தப்படி பிரதேசப் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டு, வடமாகாணம், தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு, மத்தி என ஐந்து தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. வடமாகாணத்தின் மேற்குப் பிரிவுத் தேர்தல்தொகுதி தீவுகளையும், பண்டத்தரிப்பு உடையார் பிரிவு நீங்கலான வலிகாமம் மேற்குப் பிரிவையும் உட்படுத்தியிருந்தது. இத்தொகுதியில் 1924இல் திரு. வை. துரைசாமி போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். இத்தொகையின் குடிசனத்தொகையும், தேநர்கள் விபரமும் பின்வருமாறு:-

## *வடமாகாணம் மேற்குப் பிரிவு*

| | தேருநர்கள் | குடிசனத்தொகை |
|---|---|---|
| நெடுந்தீவு | 20 | 3728 |
| தீவுகள் | 1134 | 34346 |
| வலிகாமம் மேற்கு | 2103 | 37931 |
| (பண்டத்தரிப்பு நீங்கலாக) | 3257 | 76005 |

திரு. துரைசாமியுடன் 1920 இல் போட்டியிட்ட திரு. ஏ. கனகரத்தினம் யாழ்ப்பாண நகரை உட்படுத்திய வடமாகாணத் தெற்குத் தொகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்டார். திரு. எஸ். இராசரத்தினம் வடமாகாண மத்திய தொகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்டார். இவர் இந்துபோட் மூலம் தீவுப்பகுதிகளில் பல சைவப்பாடசாலைகளை அமைத்ததன் மூலம் இத்தொகுதி மக்களுக்கு நன்கு தெரிந்தவராக இருந்து வந்தார்.

1927 இல் மகாத்மாகாந்தியடிகளின் ஊர்காவற்றுறை விஜயம் இப்பகுதி மக்கள் மத்தியில் மேலும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. 1931 இல் டொனமூர் அரசியல் யாப்பின்படி தேர்தல் நடைபெற யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் எதிர்த்ததால் யாழ்ப்பாணப் பகுதியின் நான்கு தேர்தல்

தொகுதிகளில் (ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம்) தேர்தல்கள் நடைபெறவில்லை. யாழ்ப்பாணப் பகுதியில் 1934 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் நடைபெற்ற அரசவை இடைத்தேர்தலிலே ஊர்காவற்றுறைத் தொகுதி மக்கள் முதன் முறையாகச் சர்வசனவாக்குரிமையைப் பயன் படுத்தக்கூடியதாக இருந்தது. இவ்விடைத்தேர்தலில், ஊர்காவற்றுறைத் தொகுதியில் திருவாளர்கள் நெவின்ஸ் செல்லத்துரை, ஜே.சி. அமரசிங்கம், ரி. காராளபிள்ளை ஆகியோர் போட்டியிட்டனர். இவர்களுள் நெவின்ஸ் செல்லத்துரை வெற்றி பெற்றார். தேர்தல் முடிவுகள் பின்வருமாறு:

| | |
|---|---|
| பதியப்பட்ட தேருநர்கள் : | 32408. |
| திரு. நெவின்ஸ் செல்லத்துரை | 6521 வாக்குகள் |
| திரு. ஜே.சி. அமரசிங்கம் | 4346 வாக்குகள் |
| திரு. ரி.காராளபிள்ளை | 2227 வாக்குகள் |

Source: G.H.P. de silva-A Statistical Survey of Elections to the legislatures of Sri Lanka 1911-1977 Marga Institutke, Colombo, 1987.

மொத்தமாக அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகள் 13094. திரு. செல்லத்துரை 2175 மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்றார். இவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபராவார். இவரது வெற்றிக்காக யாழ்ப்பாண இந்துக்கல்லூரிப் பழைய மாணவர்கள் கடுமையாகப் பாடுபட்டனர். இவர் கிறிஸ்தவராக இருந்தபொழுதும் இவரது இந்துக்கல்லூரித் தொடர்பும், அங்கு இவர் ஆற்றிய கல்விப் பணியும் இவரது வெற்றிக்கு வழிவகுத்தன. திரு. ஜே. சி. அமரசிங்கம் புங்குடுதீவைப் பின்னணியாகக் கொண்ட கிறிஸ்தவராகவும், நல்லூர் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகவும் இருந்தார். இவரது குடும்பம் கல்வியில் முன்னணியில் இருந்ததுடன் மலேசியத் தொடர்பும் கொண்டிருந்தது. மானிப்பாயை பின்னணியாகக் கொண்ட திரு. காராளபிள்ளை சிறந்த புரோக்கர். தாராளமனம் படைத்த ஒரு செல்வர். கொழும்பையே பிரதான வதிவிடமாகக் கொண்டிருந்தார். திரு. காராளபிள்ளை தேர்தலில் பங்கு கொண்டபொழுதும் ஆரம்ப ஈடுபாட்டைத் தேர்தலின் இறுதிவரை அவர் தொடர்ந்து கொண்டிருக்கவில்லை என்ற கருத்தும் இன்றும் நிலவுகிறது.

1936 இல் நடைபெற்ற இரண்டாவது சட்டசபைத்தேர்தலில், திரு. வைத்திலிங்கம் துரைசாமி ஊர்காவற்றுறைத் தேர்தத்ல்தொகுதியில் போட்டியின்றித்தெரிவுசெய்யப்பட்டார். திரு. நெவின்ஸ் செல்லத்துரை இம்முறை ஊர்காவற்றுரைத் தொகுதியில் போட்டியிட முன்வரவில்லை. 1931ஆம் ஆண்டு தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் கேட்டபொழுது அதற்கிசைந்து திரு. வை. துரைசாமி போட்டியிட முன்வராததால் பெற்றிருந்த நன்மதிப்பும், 1936 இல் இவர் யாழ்ப்பாணப் பகுதியில் ஒரு மூத்த அரசியல் வாதியாக இருந்ததால் மக்கள் இவரைப் போட்டியில்லாமல் அனுப்பினர். இரண்டாவது அரச சபைக்காலத்தில் சட்ட சபையின் சபாநாயகராகவும் இருந்தார். இரண்டாவது உலக யுத்தம் காரணமாக 1941இல் சட்டசபைக்கான தேர்தல் நடைபெறாததால் சட்ட சபைக்காலம் 1947 வரை நீடிக்கப்படடது. 1930, 1940 களில் பொது மக்களுக்கும் சட்டசபைப் பிரதிநிதிகளுக்கும் இடையே இன்றுள்ளதுபோல் நெருங்கிய தொடர்பு இருக்கவில்லை. மேலும் அங்கத்தவர்கள் தேசியப் பிரச்சினைகளில் ஈடுபாடு கொண்டிருந்ததால் தொகுதி அபிவிருத்தியில் அதிகளவு பங்கு கொள்ளும் வழக்கம் அக்காலத்தில் இருக்கவில்லை. இவரது சட்டசபை அங்கத்துவ காலத்தின் பிற்பகுதியில், இத்தொகுதியின் போக்குவரத்து, கல்வி நிலமையை மேம்படுத்தும் சில முயற்சிகளை மேற்கொண்டார். 1940 களில் தீவுப்பகுதியில் பல அரச பாடசாலைகள் அமைக்கப்பட்டன. வேலணை மத்திய மகா வித்தியாலயம் இவரது முக்கிய பங்களிப்பாகும். இன்று இப்பாடசாலை சேர் வைத்தியலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயம் என அழைக்கப்படுகிறது.

1947 இல் சோல்பரி அரசியல் சீர்திருத்தம் அறிமுகம் செய்யப்பட்டதுடன் நாடு சுதந்திரம் அடையும் திகதியும் நிர்ணயிக்கப்படலாயிற்று. இந்நிலையில் திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் 50க்கு 50 பிரதிநிதித்துவக் கோரிக்கைப் பின்னணியும், தமிழ் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சியும் தமிழர் அரசியலிலும், யாழ்ப்பாணப் பிரதேச அரசியல் நடவடிக்கைகளிலும் முக்கியமானவையாக இருந்தன. இவரது கோரிக்கைப்படி மொத்தப் பிரதிநிதித்துவத்தில் 50 வீதப் பிரதிநிதித்துவத்தைச் சிங்களவரும், மிகுதி 50 விகிதப் பிரதிநிதித்துவத்தை ஏனைய இன மக்களும் பெற வேண்டும் என்பதேயாகும்.

1946 ஆம் ஆண்டு தேர்தல் நிர்ணய ஆணைக்குழுவின் சிபார்சுப்படி, நாடு 89 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இவற்றுள் ஐந்து, பல

அங்கத்தவர்கள் தொகுதிகளாகும். 1946 இல் ஊர்காவற்றுறைத் தேர்தல்றொகுதி . எல்லாத் தீவுகளையும் உள்ளடக்கியதாக இருந்தது. ஊர்காவற்றுறைத் தொகுதி உருவாக்கம் குறித்து 1946 இல் தேர்தல் ஆணைக்குழு முன்னர் சாட்சியம் அளித்தவர்கள் இரு வகையான ஆலோசனைகளை முன்வைத்தனர். ஒரு பகுதியினர் இத்தொகுதி எல்லாத் தீவுகளையும் உள்ளடக்கவேண்டு மென்றும், மறு பகுதியினர் காரைதீவு மற்றத் தீவுகளிலும் வளர்ச்சி பெற்றதாக இருப்பதால் இதனை வலிகாமம் மேற்குடன் சேர்க்கவேண்டுமென்றும் கோரிக்கை விட்டனர். இவ்விரண்டு கோரிக்கைகளையும் பரிசீலனை செய்த பின்னர் எல்லாத்தீவுகளையும் ஊர்காவற்றுறைத் தொகுதிக்குள் அடக்கினர். இதனுள் முன்னர் இருந்த வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை தேர்தற்தொகுதியாக மாறியது. ஊர்காவற்றுறைத் தேர்தல்தொகுதி 1946 இல் 53356 பேரைக் கொண்டிருந்தது. இத்தேர்தல் தொகுதியில் அடங்கும் ஒவ்வொன்றின் குடிசனத்தொகை பின்வருமாறு: லைடன் தீவு 18263, காரைதீவு – 11,784, புங்குடுதீவு – 9149, நெடுந்தீவு – 6372, மண்டதீவு –2461, நயினாதீவு – 2640, அனலைதீவு – 2215 எழுவைதீவு – 400. இத்தேர்தல் தொகுதியின் மொத்தக் குடிசனத்தெகையில் 84 வீதத்தினர் இந்துக்களாகவும், 16 வீதத்தினர் கத்தோலிக்கராகவும் இருந்தனர். கத்தோலிக்க மக்கள் ஊர்காவற்றுறை, கரம்பன், நாரந்தனை ஆகிய இடங்களில் பெரும்பான்மையாகவும், அல்லைப்பிட்டி, நெடுந்தீவு, மண்டைதீவுப் பகுதிகளில் ஓரளவினராகவும் இருந்தனர். இவர்கள் சிறுதொகையினராக இருந்த போதிலும், சமூக–பொருளாதார ரீதியில் பலமான பிரிவினராக அன்று காணப்பட்டனர். 1940களில் சமூக–பொருளாதார ரீதியில் காரைதீவும், லைடன் தீவில் ஊர்காவற்றுறை, கரம்பன் பகுதிகளும் ஏனைய தீவுகளிலும் பார்க்கப் பொருளாதார நிலையில் முன்னேற்றகரமாக இருந்தன. எனினும் தீவுகளில் சமுதாய அமைப்பு ஓரளவுக்குப் பழைய முறையைத் தழுவியதாக இருந்ததெனலாம். பொருளாதாரம் நெற்செய்கை, தோட்டச்செய்கை, மீன்பிடியைத் தழுவியதாக இருந்தது. கல்வி வளர்ச்சி, குறிப்பாக ஆங்கிலக்கல்வியில் மிகவும் பின்தங்கியதாக இருந்தது. சாதிவேறுபாடுகள் காணப்பட்டபொழுதும் சாதி அடிப்படையில் குடாநாட்டில் காணப்பட்ட பெரிய முரண்பாடுகள் காணப்படவில்லை. பொருளாதார ரீதியில் அதிக வேறுபாடு காணப்படவில்லை. பல இடங்களில் நல்ல புரிந்துணர்வு காணப்பட்டது.

1947 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் ஊர்காவற்றுறைத்தேர்தல் தொகுதியில் திரு. ஜே. சி. அமரசிங்கம், திரு. கே. அம்பலவாணர், சேர். வைத்திலிங்கம் துரைசாமி, திரு. ஏ. வி.

குலசிங்கம், திரு. அல்பிரட் தம்பிஜயா ஆகிய ஐவரும் போட்டியிட்டனர். இவர்களுள் சேர்.வைத்திலிங்கம் துரைசாமி ஏற்கனவே சட்சபையில் ஊர்காவற்றுறைத் தொகுதியின் பிரதிநிதியாக இருந்தவர். திரு. ஜே.சி. அமரசிங்கம் 1934இல் ஊர்காவற்றுறைத் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியைடைந்தவர். திரு. அல்பிரட் தம்பிஜயா ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கத்தோலிக்கர்; பெரிய வர்த்தக குடும்பத்தைச் சேர்ந்தவர். கொழும்பு காகோபோட் டிஸ்பாச் கம்பனி உரிமையாளராகவும் கொழும்பில் பெரிய வர்த்தக நிறுவனங்களான காகீள்ஸ், மில்லர்ஸ், போஸ்ரெட், ரக்கோர்ஸ் போன்றனவற்றின் பணிப்பாளராக, இயக்குநராக இருந்து வந்தார்; பெரிய செல்வந்தர். தாராள மனம் படைத்தவர்; தீவுப்பகுதியில் பலருக்குத் தொழில் வழங்கி வாழ்வு கொடுத்தவர். திரு. கே. அம்பலவாணர் புங்குடுதீவைச் சேர்ந்தவர். இத்தீவின் சமூக–பொருளாதார மேம்பாட்டிற்காகக் குறிப்பாக புங்குடுதீவுப் பாலத்தை அமைக்கக் கடுமையாக உழைத்தவர். திரு.ஏ. வி. குலசிங்கம் காரைதீவைச் சேர்ந்தவர். பிரபல வழக்கறிஞர். பத்திரிகைத்துறையில் புகழ்பெற்ற எழுத்தாளர். பரந்தன், கிளிநொச்சிப் பகுதியில் முன்னோடி விவசாயியாகவும் இருந்தார்.

1947 ஆம் ஆண்டு (44 இலக்க) நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஊர்காவற்றுறைத் தேர்தல் தொகுதித் தேர்தல் முடிவுகள் பின்வருமாறு

**பதியப்பட்ட தேருநர் : 33, 045**

| வேட்பாளரின் பெயர் | இடப்பட்டசின்னம் | வாக்குகளின் தொகை |
|---|---|---|
| ஏ. தம்பிஜயா | தராசு | 5552 |
| ஏ. வி. குலசிங்கம் | கை | 5230 |
| கே. அம்பலவாணர் | குடை | 3701 |
| வை. துரைசாமி | துவிச்சக்கரவண்டி | 2438 |
| ஜே.சி.அமரசிங்கம் | விளக்கு | 981 |

Source:- Results of Parlimentary Generl Election in Ceylon 1947 - 1970 Dept. Election, Colombo - 1971

நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 502. இடப்பட்ட வாக்குகள் தொகை 18, 404. வெற்றிபெற்ற அபேட்சகர் திரு. அல்பிரட் தம்பிஐயா பெற்ற பெரும்பான்மை வாக்குகள் 322. வாக்களிப்பில் பங்குபற்றியோர் வீதம் 55.7

திரு. அல்பிரட் தம்பிஐயாவின் செல்வம், தாராளத்தன்மை போன்ற அவரது குணநலன்கள் அவரது வெற்றிக்கு வழிவகுத்தன. தீவுப்பகுதிக்கத்தோலிக்க மக்கள் முழுமையாக திரு. அல்பிரட் தம்பிஐயாவை ஆதரித்தனர். மேலும் இவரது சிறப்பான தேர்தல் ஒழுங்கு முறைகள் இவரது வெற்றிக்கு வழிவகுத்த காரணங்களுள் ஒன்றாகும். அன்று தேர்தலில் நிற்கும் அபேட்சகர்கள் வாக்காளருக்குப் போக்குவரத்து வசதிகளைச் செய்துகொடுப்பதுடன், வாக்குச்சாவடிக்கு அருகாமையில் தேர்தலில் பங்குகொள்ளும் அபேட்சகர்கள் கொட்டகையமைத்து வாக்காளரை உபசரிப்பதும், வாக்குப்போடப் பழக்குவதும் வழக்கம். 1940 களில் குறிப்பாகப் பெண்கள் மத்தியில் எழுத்தறிவு குறைவாக இருந்ததால் இத்தகைய பயிற்சியினால் அவர்கள் சின்னங்களுக்கு எதிராகப் புள்ளியிடும் முறையைக் கற்கக்கூடியதாக இருந்தது. இதற்கு முன்னர் நிறப்பெட்டிகளில் வாக்குச்சீட்டுக்களை இடும் முறையிருந்தது. 1940 களில் இத்தொகுதியில் கட்சி அரசியல் நன்கு வளர்ச்சியடையாதிருந்ததால், அபேட்சகர் மீதான விசுவாசம், தனிப்பட்ட நலன் ஆகியன வாக்கைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாக இருந்தன. மேலும் வாக்காளர் தத்தம் நிலையைத் தமது உறவினர் /அயலவர் நிலைப்பாட்டுடன் இணைந்து எடுக்கும் போக்கு கூடுதலாகத் தென்பட்டது.

திரு. ஏ. வி. குலசிங்கம், திரு. ஏ. தம்பிஐயாவிலும் பார்க்க 332 வாக்குகளைக் குறைவாகப் பெற்றார். 1947 இல் வட இலங்கையில் தமிழ்க் காங்கிரஸ் அலை வீசினபொழுதும் தீவுப்பகுதியில் இதனது தாக்கம் குறைவாக இருந்தது. திரு.ஏ. வி. குலசிங்கம் சிறந்த வழக்கறிஞராக இருந்தும், டெயிலிநியூஸ் பத்திரிகை ஆசிரியர் குழுவில் அங்கத்தவராக இருந்து மக்கள் இடையே மதிப்பைப் பெற்றிருந்தபொழுதும் இவரது தேர்தல் ஒழுங்குமுறை சிறப்பாக அமையாததே இவரது தோல்விக்கு முக்கிய காரணமென்று அன்று தேர்தலை நேரில் அவதானித்த பலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இவரது ஆதரவாளர்களை ஏற்றிக்கொண்டு வந்த வாகனங்கள் காரைதீவிலிருந்து ஊர்காவற்றுறைப் பகுதிக்குப்

பாதைச்சேவை இல்லாது அதனைக் கடக்க முடியாது போனதனால் பெருமளவு வாக்குகளை இழந்தார். இவருக்கு ஆதரவாகக் காரைதீவு முழுமையாகப் பின்னின்ற பொழுதும் யாழ்டன் கல்லூரிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மத்தியில் துரைசாமிக்கு ஆதரவு கிடைத்தது.

திரு. அம்பலவாணருக்குக் கிடைத்த வாக்குகளில் கூடதலான விகிதம் இவரது ஊரான புங்குடுதீவிலேயே கிடைத்தது. திரு. அமரசிங்கமும் புங்குடுதீவில் இருந்தே தனது வாக்குகளைக் கூடுதலாகப் பெற்றார். சேர். வைத்திலிங்கம் துரைசாமியின் தோல்விக்குப் பல காரணங்கள் இருப்பினும், அவரது தேர்தல் அணுகுமுறையே முக்கிய குறைபாடாக இருந்தது. அவர் சபாநாயகராக நீண்டகாலமாகக் கொழும்பில் இருந்ததால் பொதுமக்களுடன் தொடர்புகொள்ளும் வாய்ப்புக் குறைவாக இருந்தது. மேலும் இவர் நன்கு ஒழுங்குபடுத்திய தேர்தல் பிரசாத்தை மேற்கொள்ளவில்லை. இவர் 1920 களில் கடைப்பிடித்த தேர்தல் திறமுறை 1947 இல் பலனளிக்கவில்லை. இவர் பெற்ற வாக்குகளின் கூடிய விகிதம் வேலணைப் பகுதிகளில் இருந்தே கிடைத்தது. திரு. தம்பிஐயா பாராளுமன்ற அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டதை எதிர்த்துத் தேர்தல் வழக்கொன்றும் இடம் பெற்றது. இவ்வழக்கில் திரு. குலசிங்கம் வென்றபொழுதும், இதனையடுத்து அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட சட்ட விதிகள் திரு. தம்பிஐயாவின் தேர்தல் வெற்றியைப் பாதிக்கவில்லை. திரு. தம்பிஐயா, திரு.டி. எஸ். சேனநாயக்காவின் அரசாங்கத்துக்கு ஆதரவு நல்கினார்.

1952 இல். இரண்டாவது பாராளுமன்றத் தேர்தலில் திரு. அல்பிரட் தம்பிஐயா தமிழ் அபேட்சகராகப் போட்டியிட்டார். 1947ல் ஊர்காவற்றுறைத் தொகுதியில் போட்டியிட்டவர்களில் இவரைத் தவிர எவரும் 1952 இல் போட்டியிடவில்லை. இவரை எதிர்த்து திருவாளாகள் சி. பாலசிங்கம், ஏ. தியாகாரசா. வீ. நவரத்தினம். சோ. சேனாதிராசா ஆகியோர் போட்டியிட்டனர். திரு. அல்பிரட் தம்பிஐயா முதலாவது பாராளுமன்றக் காலங்களில் ஆற்றிய பணி சிறந்ததாக இருந்ததால் தீவுப்பகுதி மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரித்து இருந்தது. காரைதீவு இந்துக்கல்லூரி ஆசிரியரும், அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்த வருமான திரு. தியாகராசாவை வர்த்தகத்துறையில் ம்க்கியத்துவம் பெற்றிருந்த இவரது உறவினர்கள் அரசியலில் முன்னுக்குக் கொண்டுவர விரும்பினர். இவர் கல்வி மற்றும் சமூக–பொருளாதார

அபிவிருத்தி முயற்சிகளில் ஈடுபாடு கொண்டிருந்தார். திரு. சி. பாலசிங்கம் வேலணைக் கிராமசபைத் தலைவராக இருந்தவர். மலேசியாவில் வாழ்ந்து பின்னர் நாடு திரும்பிய ஒரு செல்வந்தராகவும் இருந்தார். திரு. வீ. நவரத்தினம் கரம்பன் பகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர். தமிழர் பிரச்சனையில் மிக்க பற்றுக் கொண்டவர். தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர். 1952 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலிலேயே தமிழரசுக்கட்சி. முதன் முதலாகத் தனது அபேட்சகர்களை நிறுத்தியபோது ஊர்காவற்துறைத் தொகுதயில் இக்கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டார். திரு. சேனாதிராசா ஒரு இளைஞராக இருந்ததுடன் தீவுப்பகுதி சாதாரண மக்களின் அபிலாசைகளை வெளிக்கொணரவேண்டுமென்ற நிலையில் போட்டியிட்டார். கொழும்புக் கறுவாக்காட்டார் யாழ்ப்பாணப் பகுதியில் தேர்தல் கேட்டு வெற்றிபெற்றபினர் கொழும்பு திரும்பும் நிலையை வெறுத்தார். இவர் நெடுந்தீவு புங்குடுதீவுப் பின்னணியைக் கொண்டவராக இருந்தார்.

1952 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில் (44 இலக்க) ஊர்காவற்றுறைத் தேர்தல் தொகுதித் தேர்தல் முடிவுகள் பின்வருமாறு: பதியப்பட்ட தேருநர்கள்: 30138.

| வேட்பாளர்களின் பெயர் | சின்னம் | இடப்பட்ட வாக்குகள் தொகை |
|---|---|---|
| திரு. அல்பிரட் தம்பிஐயா | யானை | 9517 |
| திரு. ஏ. தியாகராசா | தராசு | 5649 |
| திரு. பாலசிங்கம் | துவிச்சக்கரவண்டி | 5090 |
| திரு. வீ. நவரத்தினம் | கை | 1420 |
| திரு.சோ. சேனாதிராசா | திறப்பு | 234 |

Source: Results of Parlimentary Elections in Ceylon. 1947-1970 Dept. Election, Colombo 1971.

நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் தொகை 199. மொத்தமாக இடப்பட்ட வாக்குகளின் தொகை 22109. வெற்றிபெற்ற அபேட்சகர் திரு. தம்பிஐயாவின் பெரும்பான்மை வாக்குகள் 3968 ஆகும். வாக்களிப்பில் பங்கு பற்றியோர். விகிதம் 73.4 திரு. பொ. தம்பிஐயா 1947 இல் பெற்ற வாக்குகளிலும், 3965 வாக்குகளை இம்முறை கூடுதலாகப் பெற்றதுடன் இவரது பெரும்பான்மை

வாக்குகள் 332 இலிருந்து 3968 ஆக அதிகரித்தது. 1952 இல் தமிழ்க் காங்கிரசுக்கும் ஐக்கியதேசியக் கட்சிக்கும் இடையே தேர்தல் உடன்பாடு இருந்தது. திரு. தியாகராசாவிற்குக் கூடுதலான வாக்குகள் காரைதீவிலேயே கிடைத்தது. காரைதீவுக்கு வெளியில் அதிகளவு வாக்குகள் கிடைக்கவில்லை. திரு. பாலசிங்கத்துக்கு வேலணைப் பகுதியிலிருந்து கூடுதலான வாக்குகள் கிடைத்தன. சேர். வைத்திலிங்கம் துரைசாமியின் ஆதரவாளர்கள் இவரையே கூடுதலாக ஆதரித்தனர். திரு. நவரத்தினம் பரவலாகத் தமிழத் தேசிய அன்பர்களிடம் இருந்து வாக்குகளைப் பெற்றார். 1952இல் திரு. டட்லி சேனநாயக்கா இரண்டாவது முறையாக அரசாங்கத்தை அமைத்தார். இவரது காலத்தில் திரு. தம்பிஐயா சில தொகுதி அபிவிருத்தி வேலைகளைச் செய்யக்கூடியதாக இருந்தது. 1953 இல் அரிசி விலையேற்றத்தை எதிர்த்துத் தேசிய ரீதியில் நடந்த கர்த்தாலின் விளைவாலும், உடல் நலக்குறைவினாலும் திரு. டட்லி சேனநாயக்கா பிரதமர் பதவியிலிருந்து விலகி அரசியலிலிருந்து ஓய்வு பெற்றார்.

1956 இல் நடைபெற்ற மூன்றாவது பாராளுமன்றத் தேர்தல் நாட்டு மொழிப் பிரச்சனையின் பின்னணியில் நடைபெற்றது. 1954 இல் பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவலைக்கு நெடுந்தீவில் பெரிய வரவேற்புக் கொடுக்கபட்டு முடி சூட்டப்பட்டது. நெடுந்தீவு– ஊர்காவற்றுறைக் கடற் போக்குவரத்துச் சேவையின் பொருட்டு திரு. ஏ. எல். தம்பிஐயா படகொன்றைக் கொடுத்து உதவினார். இப் படகிற்குப் பிரதமர் கொத்தலாவலை இராஜேஸ்வரி எனப் பெயர் சூட்டிச் சேவையை ஆரம்பித்து வைத்தார். நெடுந்தீவுச் சுற்றுலாவை முடித்துக்கொண்டு சேர். ஜோன். கொத்தலாவலை கரம்பனில் திரு. தம்பிஐயா வீட்டில் ஓர் இரவைக் கழித்தார். அன்று அவர் பெருந்தொகையான மக்களைச் சந்தித்து அளவளாவினார். பிரதமர் சேர்.ஜோன் கொத்தலாவலை தீவுப்பகுதி மக்களினது போக்குவரத்துப் பிரச்சினையை நன்கு அறிந்து இருந்ததாலும், போக்குவரத்துப் பாதைகளை விருத்தியாக்க உதவி செய்து வந்ததாலும் தீவுப்பகுதி மக்கள் இவர்மேல் அன்று நன்மதிப்பை வைத்திருந்தனர். இதனால் இவருக்கு நல்ல வரவேற்புக் கொடுக்கப்பட்டது. இச்சுற்றுலாவில் நெடுந்தீவிலும், பின்னர் கொக்குவிலிலும் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்துத் தருவேன் என்று கூறியதும், இதனைத் தொடர்ந்து தென்னிலங்கையில் 24 மணி நேரத்தில் சிங்களத்தை அரசகரும மொழியாக்குவேன் என்ற கொள்கை எஸ். டபிள்யு. ஆர். டி.

பண்டாரநாயக்காவினால் முன்வைக்கப்பட்டதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை. இதனைத் தொடர்ந்து ஐக்கியதேசியக்கட்சி களனி மகாநாட்டில் சிங்களம் மாத்திரம் என்ற கொள்கையை நிறைவேற்றியதும் தமிழ் அங்கத்துவர்கள் ஐக்கியதேசியக் கட்சியிலிருந்து விலகினார்கள். தேசிய நீரோட்டத்தில் இணைந்திருந்த திரு. அல்பிரட் தம்பிஐயாவுக்கு இது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தது. தென் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நிலையின் எதிரொலியாக வடக்கு, கிழக்கில் தமிழரசுக்கட்சி முக்கியத்துவம் பெற்றது. இக்கட்சிக்கு திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமை தாங்கினார். இக்கட்சி தமிழ் மக்களின் மொழி, பிரதேச உணர்வுகளைத் தட்டி எழுப்பியது. இத்தகைய அரசியல் பின்னணியில் ஊர்காவற்றுறைத் தேர்தல் தொகுதியில் திரு. வீ. ஏ. கந்தையா தமிழரசுக் கட்சியில் போட்டியிட முன்வந்தார். இவர் ஏற்கனவே 1947 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் கொழும்பு மத்திய தொகுதியில் போட்டியிட்டவர். தேர்தல் அநுபவம் பெற்றவராகவும் அரசியலில் நல்ல ஈடுபாடு கொண்டவராகவும் தமிழ்-சமய அறிவு மிக்கவராகவும், நகைச்சுவை மிக்க பேச்சாற்றல் கொண்டவராகவும் இருந்தார். இவர் ஊர்காவற்றுறைத் தொகுதியில் போட்டியிடும் நோக்கம் கொண்டு 1955 இலிருந்து தன்னைத் தொகுதிக்கு அறிமுகம் செய்யப்பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். 1955 இல் வேலணையில் இவரது முயற்சியின் பின்னணியில் பெரியளவில் திருமுறை மகாநாடு ஒன்று நடைபெற்றது. இதில் குன்றக்குடி அடிகளார், அ.ச. ஞானசம்பந்தன் போன்றோர் பங்கு பற்றினார்கள். இதனால் தீவுப்பகுதி மக்களுக்குத் தம்மை நன்கு அறிமுகப்படுத்தியதுடன் அவர்களின் தமிழ், சமய உணர்வைத் தட்டி எழுப்பினார். மேலும் தீவுப்பகுதியில் உள்ளூர் விவகாரங்களில் கூடிய ஈடுபாடு கொண்டிருந்த தமிழாசிரியர் பிரிவினரைத் தமது செல்வாக்குக்கீழ் கொண்டுவந்தார். இவர் குடும்ப நலன் விசாரிப்பதிலும், தாய்மார்களிடம் மிகவும் அன்பு காட்டும் திறமுறை இவருக்குக் குறிப்பாகப் பெண்கள் மத்தியில் செல்வாக்கைப் பெருக்கியது. இவர் வேலணையைச் சேர்ந்தவராகவும், காரைதீவில் செல்வாக்கு மிக்க குடும்பத்தில் விவாகம் செய்தராகவும் இருந்ததால் இரண்டு தீவுகளிலும் நெருங்கிய தொடர்பு கொண்டவராக இருந்தார். 1947, 1952 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல்களில் திரு. தம்பிஐயா வெற்றி பெற்றபொழுது, இரு முறைகளிலும் காரைதீவைச் சேர்ந்தவர்களே இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையை இவரது இரு தீவுகளின் தொடர்பும்

காரைதீவுப் பிரச்சினையைத் தவிர்க்கக் கூடியதாக இருந்தது. மேலும், 1956 இல் தமிழரசு அலை வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வீசியது. வடக்கில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வவுனியாத் தொகுதிகள் தவிர ஏனைய தொகுதிகள் யாவிலும் தமிழரசுக் கட்சியே வெற்றிபெற்றது.

1956 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் (44 இலக்க) ஊர்காவற்றுறைத் தேர்தல் தொகுதி முடிவுகள் பின்வருமாறு: 1956 இல் பதியப்பட்ட தேருநர்கள். 32410.

| வேட்பாளர் பெயர். | இடப்பட்ட சின்னம் | வாக்குகளின் தொகை |
|---|---|---|
| வி. ஏ. கந்தையா | வீடு | 16308 |
| ஏ. எல் தம்பிஐயா | தராசு | 6599 |

Source: Results of Parliamentary General Elections in Ceylon. 1947-1970. Dept.of. Election, Colombo. 1971.

நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 189. மொத்தமாக இடப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 23096. வெற்றிபெற்ற அபேட்சகர் திரு. வீ.ஏ. கந்தையா பெற்ற பெரும்பான்மை வாக்குகள் 9709. வாக்களிப்பில் பங்கு பற்றியோர் வீதம் 71.3. திரு. அல்பிரட் தம்பிஐயா 1952, 1956 ஆம் ஆண்டுத் தேர்தல்களில் முறையே 9517, 6599 வாக்குகளைப் பெற்றிருந்தார். இவர் 1952 இல் எடுத்த வாக்குகளிலும் 1956 இல் 2918 வாக்குகள் குறைவாகப் பெற்றிருந்தார். ஊர்காவற்றுறை, கரம்பன் பகுதிகளிலேயே இவருக்குக் கூடுதலான வாக்குகள் கிடைத்தன. திரு. தம்பிஐயாவின் காலத்தில் முக்கிய அபிவிருத்தித் திட்டங்களாவன: (1) புங்குடுதீவுப் பாலம் பூர்த்தியாக்கப்பட்டது. (11) பண்ணைப்பால இடைவெளிகுறைக்கப்பட்டது. (111) ஊர்காவற்றுறை நகரக் குடிநீர்த் திட்டம் (IV) தீர்வுப்பகுதிகளில் கடல் உள் வராது தடுப்புத் திட்டங்கள் மேலும் இவர் தனியார் துறையில் கொழும்பில் தீவுப்பகுதி இளைஞர் பலருக்கு வேலையைப் பெற்றுக் கொடுத்திருந்தார். இவர் மூன்றாவது முறையாகத் தேர்தலில் போட்டியிட்ட பொழுது மொழிப் பிரச்சினையில் தமிழரசுக்கட்சி அபேட்சகரின் நிலைப்பாட்டை மக்கள் விரும்பியதுமே இவரது தோல்விக்கு முக்கிய காரணமாகும்.

1956 இல் சிங்களம் மாத்திரம், உத்தியோகமொழிச் சட்டம், காலி முகத்தில் தமிழரசுக்கட்சியினரின் சத்தியாக்கிரகம், 1957 இல் பண்டாரநாயக்கா– செல்வநாயகம் ஒப்பந்தம், 1958 இல் சிங்கள ஸ்ரீ எதிர்ப்பு, பண்டாரநாயக்கா– செல்வநாயகம் ஒப்பந்தம் கைவிடப்படுதல் ஆகியன தமிழ் அரசியலில் 1956–59 க்கு இடைப்பட்ட முக்கிய அரசியல் நிகழ்ச்சிகளாக இருந்தன. இந் நிகழ்ச்சிகள் இத்தொகுதி மக்களைப் பொதுவாகப் பாதிப்பதாக இருந்தபொழுதும், 1958 ஆம் ஆண்டு இனக்கலவரத்தால் தென்னிலங்கையில் பரவலாக வியாபாரத் தொழிலில் ஈடுபட்டிருந்த இத்தொகுதி மக்கள் பலர் பெருமளவு உடைமைகளை இழந்து நட்டத்திற்குள்ளானார்கள். தொகுதியுள் 1959 இல் குறிகட்டுவான் இறங்குதுறை அமைக்கப்பட்டு நெடுந்தீவு, நயினாதீவுக்கான படகுச் சேவைகள் ஊர்காவற்றுறைக்குப் பதிலாக இங்கிருந்து நடைபெறத்தொடங்கின. இதனால் நெடுந்தீவுக் கடற்பயணத்தூரம் 15 மைலிலிருந்து 7 மைல்களாகக் குறைந்தது. பௌத்த யாத்திரிகர்களும் குறிகட்டுவான் வழியாக நயினாதீவு யாத்திரையை மேற்கொள்ளத் தொடங்கினர்.

1959 இல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் படுகொலையின் பின்னர் இலங்கை அரசியலில் ஏற்பட்ட குழப்பநிலை அடுத்து வந்த திரு. தகநாயக்காவின் அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டு, பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. பாராளுமன்றத்தைக் கலைத்தது தவறென்றும், இது கலைக்கப்படாது, ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சித்தலைவர் திரு. சி. பி. டி. சில்வாவை மாற்று அரசாங்கம் அமைக்க அழைத்திருக்க வேண்டுமென்ற கருத்தும் நிலவிற்று. தேசிய ரீதியில் எதிர்க்கட்சி ஆட்சிக்கு வரும் என்ற நிலை தெரியாது இருந்தது. பிரதான எதிர்க்கட்சியாக இருந்த இலங்கை சமசமாஜக்கட்சி 1990 மார்ச்சில் பொதுத்தேர்தலில் கலாநிதி என்.எம். பெரேரா தலைமையில் ஆட்சியைப் பிடிப்பதற்குப் பெரும் முயற்சியை மேற்கொண்டிருந்தது. ஐக்கியதேசியக்கட்சி, ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி, சமசமாஜக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, இலங்கைப் பிரஜா சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன தேசிய ரீதியில் பெரும்பான்மையான தொகுதிகளில் போட்டியிட்டன. வடஇலங்கையில் லங்காசமசமாஜக்கட்சி ஊர்காவற்றுறை உட்படப் பல தொகுதிகளில் போட்டியிட்டது. இவர்களது மொழிக்கொள்கை அன்று தமிழ் மக்களுக்கு ஏற்புடையதாக இருந்தது.

1959 ஆம் ஆண்டுதேர்தல் தொகுதி நிர்ணயத்தில் ஊர்காவற்றுறைத் தேர்தல் மாவட்டத்திலிருந்து காரைதீவு, வட்டுக்கோட்டைத் தொகுதியின் ஒரு பகுதியாக மாறியது. ஊர்காவற்றுறைத் தேர்தல் தொகுதியின் குடிசனத் தொகை மாவட்டத் தொகுதிகளில் குடிசனத்தொகைச் சராசரியிலும் உயர்வாக இருந்ததும், காரைதீவு ஏனைய தீவுகளிலும் முன்னேற்றமானதாக இருந்ததுமே, காரைதீவை வட்டுக்கோட்டையுடன் இணைக்க முக்கிய காரணங்களாக இருந்தன என 1959 ஆம் ஆண்டு தேர்தல் ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1959 ஆம் ஆண்டு தேர்தல் நிர்ணயப்படி உருவாக்கப்பட்ட ஊர்காவற்றுறைத் தேர்தல் மாவட்டத்தின் குடிசனத் தொகையின் இன, மத வீதங்கள் பின்வருமாறு: சிங்களவர் .6%, இலங்கைத் தமிழர் 98.8% இலங்கைச் சோனகர். 2%, ஏனையோர்.4%, மத அடிப்படையில் பௌத்தர்கள்.5%, இந்துக்கள் 78. 8%, முஸ்லீம்கள்.4%, கிறிஸ்தவர்கள் 20.30% ஆகும். ஊர்காவற்றுறைத் தேர்தல் தொகுதியிலிருந்து காரைநகர் நீக்கப்பட்டதால் இத்தொகுதியின் குடிசனத்தொகையில் கிறிஸ்தவர்களின் விகிதம் 5 வீதத்திற்கு மேல் உயர் வடைந்துள்ளது. காரைதீவு முழுமையானதொரு இந்துக் கிராமமாகும்.

1960 ஆண்டு மார்ச், நான்காவது பொதுத்தேர்தலில் இத்தொகுதியில் திரு. வி. ஏ. கந்தையா தமிழரசுக்கட்சியின் சார்பிலும், திரு. வி. வா. நல்லதம்பி லங்காசமசமாஜக்கட்சியிலும், திரு.அல்பிரட் தம்பிஐயா சுயேச்சையாகவும் போட்டியிட்டனர். திரு. வி. வா. நல்லதம்பி ஒரு தமிழாசிரியர். புங்குடுதீவு கிராமசபைத்தலைவராக இருந்தார். லங்காசமசமாஜக்கட்சியே தேசிய நிலையில் அடுத்த ஆட்சியை அமைக்கப் போகும் கட்சி என்ற நிலையை முன்வைத்தும், தீவுப்பகுதியின் அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுத்தும் இத்தேர்தலில் குதித்தார். மற்றைய இருவரும் இத்தொகுதிப் பாராளுமன்ற அரசியலில் நன்கு பரிச்சயமானவர்கள். 1960 இல் புதிய தேர்தல் விதிமுறைகளில் தேர்தல்கள் நாட்டில் இடம் பெற்றது. வாக்காளரின் வயது 18ஆகக் குறைக்கப்பட்டிருந்தது. தேர்தல் பிரசார முறைகளில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர் வாக்காளருக்குப் போக்குவரத்து வசதி அளிப்பது, வாக்களிப்புக் கொட்டகை அமைப்பது தடைசெய்யப்பட்டிருந்தன. முதன்முதலாகப் பொதுத்தேர்தல் நாடு முழுவதும் ஒரே நாளில் இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும். 1947 ஆம் ஆண்டுப்பொதுத்தேர்தல் நடைபெற்று முடிய அடுத்து 1952, 1956 ஆம் ஆண்டுப் பொதுதேர்தல்கள் ஒரு கிழமை வரை இடம் பெற்றன.

1960 ஆம் ஆண்டு மார்ச் பொதுத்தேர்தல் (44 ஆம் இலக்க) ஊர்காவற்றுறைத் தேர்தல் தொகுதி தேர்தல் முடிவுகள் பின்வருமாறு: 1960 இல் பதிவுசெய்யப்பட்ட தேருநர்கள் 25616.

| வேட்பாளர்பெயர் | இடப்பட்ட சின்னம் | வாக்குகளின் தொகை |
|---|---|---|
| திரு.வி. ஏ. கந்தையா | வீடு | 10820 |
| திரு. அல்பிரட் தம்பிஐயா | கப்பல் | 7574 |
| திரு.வி. வா. நல்லதம்பி | திறப்பு | 719 |

Source: Results of Parliamentary Elections in Ceylon 1947-1970. Dept,. of. Election, Colombo 1971.

நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 186. மொத்தமாக இடப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 19289. வெற்றிபெற்ற அபேட்சகர் திரு.வி. ஏ. கந்தையா பெற்ற பெரும்பான்மை வாக்குகள் 3246. வாக்களிப்பில் பங்குபற்றியோர் விகிதம்.75.3.

திரு.வி. ஏ. கந்தையா 1956 ஆம் ஆண்டுத் தேர்தலில் 16308 வாக்குகளைப் பெற்றிருந்ததுடன் திரு. தம்பிஐயாவிலும் பார்க்க 9709 மேலதிக வாக்குகளைப் பெற்றிருந்தார். 1960 ஆண்டுத் தேர்தலில் இவருக்குக் கிடைத்த வாக்குகள் குறைவடைவதற்குக் காரணம் காரைதீவு ஊர்காவற்றுறைத் தேர்தல் தொகுதியில் இல்லாதிருந்ததேயாகும். 1956 இல் பதிவுசெய்யப்பட்ட தேருநர்கள் எண்ணிக்கை 32410 ஆக இருந்தது. 1960 இல் இவ்வெண்ணிக்கை 25616 ஆகக் குறைவடைந்தது. இத்தொகுதியிலிருந்து காரைதீவு நீக்கப்பட்டது திரு. தம்பிஐயாவுக்குச் சாதகமாக இருந்தது. இவர் 1956 இல் பெற்ற வாக்குகளிலும் பார்க்க 1960 மார்ச்சில் 975 வாக்குகளைக் கூடுதலாகப் பெற்றார். இவரது செல்வாக்குச் சற்று அதிகரித்ததற்குக் காரணம் 1958 ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் கொழும்பில் தமிழர்களுக்கு இவர் செய்த உதவியும் கப்பல்கள் ஒழுங்குசெய்து தமிழர்களை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவந்து சேர்த்ததுமாகும். கொழும்புத் துறைமுகத்தை 1958 இல் அரசாங்கம் தேசியமயமாக்கியதால் கொழும்பில் இவர் முன்னர் மாதிரி வேலை எடுத்துக்கொடுக்க முடியாது போய்விட்டது. மேலும் இவர் இதுதான் தமது கடைசித் தேர்தல் முயற்சி என்ற நிலையில் கடுமையான தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டிருந்தார்.

திரு. வி. வா. நல்லதம்பி பெற்ற வாக்குகளில் கூடுதலான எண்ணிக்கை இவரது சொந்த ஊரான புங்குடுதீவிலேயே கிடைத்தது.

1960 மார்ச் பொதுத்தேர்தலில் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மைப் பலம் பெறாத நிலையில் கூடியளவு அங்கத்தவர்களைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி திரு. டட்லி சேனநாயக்கா தலைமையில் சிறுபான்மை அரசாங்கத்தை அமைத்தது. ஐக்கியதேசியக்கட்சி தமிழரசுக்கட்சியின் ஆதரவை நாடினபொழுதும் தமிழரசுக்கட்சியின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. சபாநாயகர் தெரிவில் எதிர்க்கட்சியினர் முன்மொழிந்த திரு. ரி.பி. சுபசிங்கவே 93 வாக்குகளைப்பெற்று வெற்றி பெற்றார். சிம்மாசனப் பிரசங்க வாக்களிப்பில் தமிழரசுக்கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்துவாக்களித்தது, ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கத்தை 93க்கு 61 வாக்குகள் என்றவித்தியாசத்தில் தோற்கடித்தது. ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு பிரதமர் டட்லி சேனநாயக்கா கவனர் ஜெனரலுக்குச் சிபாரிசு செய்தார். இந்நிலையில் கவனர் ஜெனரல் எதிர்க்கட்சிகளின் தலைவர்களை, ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சித் தலைவர் திரு. சி.பி.டி. சில்வா, மக்கள் ஐக்கிய முன்னணித்தலைவர் திரு. பிலிப் குணவர்த்தனா, சமசமாஜக்கட்சித் தலைவர் கலாநிதி என்.எம். பெரேரா, கம்யூனிஸ்கட்சித்தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, ஜாதிக்கவிமுத்தி பெரமுன தலைவர் திரு.கே.எம்.பி. இராசரத்தினா, தமிழரசுக்கட்சித்தலைவர் திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஆகியோரை அழைத்து திரு.சி. பி. டி.சில்வா தலைமையில் மாற்று அரசாங்கம் அமைப்பது குறித்து ஆராய்ந்தார். திரு. பிலிப். குணவர்தனா காபந்து தேசிய அரசு அமைக்கும்படி கேட்டுக்கொண்டார். ஏனையவர்கள் திரு. சி. பி. டி. சில்வாவுக்கு ஆதரவு கொடுப்பதாகக் கூறினர். தமிழரசுக்கட்சி நிபந்தனையற்ற ஆதரவுகொடுக்க மாட்டாது என்ற நிலையில் கவனர்ஜெனரல் பாராளுமன்றத்தைத் கலைத்துப் பொதுத்தேர்தலுக்கு உத்தரவிட்டார். தமிழரசுக்கட்சி கூட்டுஅரசாங்கம் அமைக்கும் சந்தர்ப்பம் ஒன்றைத் தவற விட்டது என்று தமிழ்மக்களில் ஒரு பகுதியினர் கருதினர். இதனால் 1960 யூலையில் பொதுத்தேர்தல் இடம்பெற்றது. 1960 யூலைப் பொதுத்தேர்தலின் முடிவில் ஐக்கியதேசியக்கட்சியும், ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியும் சமமான இடங்களைப் பெறப்போகிறார்கள் என்றும் இந்நிலையில் தமிழரசுக்கட்சியே யார்

அரசாங்கத்தை அமைக்கப் போகிறார்கள் என்பதைத் தீர்மானிக்கும் என்றும் பெரும் பிரசாரம் செய்தார்கள். வடபகுதியில் .1960 யூலையில் யாழ்ப்பாணம், உடுப்பிட்டி, வவுனியா தொகுதிகள் தவிர ஏனைய தேர்தல் தொகுதிகளில் தேர்தல் மந்தமாக இருந்தது. யாழ்ப்பாணத் தொகுதியில் 1960 மார்ச்சில் திரு. ஜீஜீ. பொன்னம்பலம், திரு. அல்பிரட் துரையாப்பாவிடம் தோல்வியுற்றார். தமிழரசுக்கட்சி அபேட்சகரான திரு.சி கதிரவேற்பிள்ளை எடுத்த வாக்குகள் மிகவும் உயர்வாக இருந்தன. இதனால் 1960 யூலையில் இத்தொகுதியில் மிகவும் கடுமையான போட்டியும், தேர்தல் பிரசாரமும் நடைபெற்றன. 1960 மார்ச்சில் வவுனியாவில் திரு. சி. சுந்தரலிங்கம் திரு. ரி. சிவசிதம்பரத்தினால் தோற்கடிக்கப்பட்டார். புதிதாக உருவாக்கப்பட்ட உடுப்பிட்டித் தொகுதியில் திரு.எம். சிவசிதம்பரம் வெற்றிபெற்று இருந்தார். ஊர்காவற்றுறைத் தேர்தல்தொகுதியில் திரு.வி. ஏ. கந்தையாவும் திரு.சோ. சேனாதிராசாவும் போட்டியிட்டார்கள். சேனாதிராசா 1952 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலிலும் போட்டியிட்டார். 1947 இல் இருந்து இத்தொகுதியில் எல்லாத் தேர்தல்களிலும் பங்கு கொண்டிருந்த திரு.தம்பிஐயா தேர்தலில் இம்முறை பங்கு கொள்ளாதுவிட்டது முக்கிய அம்சமாகும். இவர் பங்கு கொள்ளாததால் தேர்தல் சூடு பிடிக்கவில்லை. மேலும், இத்தேர்தலில் அபேட்சகர்களோ, மக்களோ அதிகளவு அக்கறை காடடவில்லை. தேசிய ரீதியில் தமிழரசுக்கட்சி எதிர்பார்த்ததுபோல் தேர்தல் முடிவு வரவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 88 ஆசனங்களைப்பெற்று திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் தனியான ஆட்சியை அமைத்தது.

1960 ஆம் ஆண்டு யூலை பொதுத்தேர்தலில் (74 ஆம் இலக்க) ஊர்காவற்றுறைத் தேர்தல் தொகுதி தேர்தல் முடிவுகள் பின்வருமாறு: 1960 இல் பதிவு செய்யப்பட்ட தேருநர்கள்: 25616.

| வேட்பாளர் பெயர் | சின்னம் | இடப்பட்ட வாக்குகளின் தொகை |
|---|---|---|
| திரு.வி.ஏ. கந்தையா | வீடு | 12110 |
| திரு.சோ. சேனாதிராசா | கப்பல் | 2671. |

Source: Results of Parliamentary General Elections in Ceylon 1947-1970. Dept.of Elections, Colombo 1971.

நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 151. மொத்தமாக இடப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 14932. வெற்றி பெற்ற திரு.வி. ஏ. கந்தையா பெற்ற பெரும்பான்மை வாக்குகள் 9539. வாக்களிப்பில் பங்குபற்றிய வாக்காளர் வீதம் 58.3.

1960 மார்ச் தேர்தலில் 19289 வாக்குகள் இடப்பட்டன. ஆனால் 1960 யூலைத் தேர்தலில் இடப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 14932 ஆகக்குறைவடைந்தது. 1960 மார்ச்சில் வாக்களித்த எண்ணிக்கையிலும் பார்க்க 1960 யூலைத் தேர்தலில் 4357 வாக்குகள் குறைவாக இருந்தது. திரு.தம்பிஐயா கேட்காததால் அவரது ஆதரவாளர்களில் கூடிய விகிதத்தினர் தேர்தலில் வாக்களிக்கவில்லை. திரு. சேனாதிராசாவுக்குக் கடுமையான தமிழரசு எதிர்ப்பு வாக்குகளே கிடைத்தன.

1961 இல் வடக்குப் பகுதியில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இத்தொகுதி மக்கள் முழுமையாகப் பங்கு கொண்டனர். இத்தொகுதியிலிருந்து கிராமம் கிராமமாக யாழ்ப்பாணக் கச்சேரிக்கு வந்து சத்தியாக்கிரகத்தில் தங்களது பங்களிப்பைச் செய்தனர். கிராமமட்டத்தில் தமிழரசுக்கட்சியின் சிறந்த ஒழுங்கமைப்பை இது வெளிப்படுத்துவதாக அமைந்தது. இதற்கு முன்னர் இந்தளவு முறையிலான ஒழுங்கமைப்பை அரசியல் கட்சிகள் இப்பிரதேசத்தில் கொண்டிருக்கவில்லை எனலாம். இறுதியில் சத்தியாக்கிரகம் அரசாங்க நடவடிக்கையால் முறியடிக்கப்பட்டு தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் கைதுசெய்யப்பட்டுப் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர். இப்போராட்டத்தின் ஆரம்பத்தில் திரு ஸ்ரீகாந்தா அரச அதிபராக இருந்தார். முடிவில் திரு. நிசங்க விஜயரத்தினா அரசாங்க அதிபராக வந்தார். 1961 இலிருந்து 1978 வரையும் யாழ்ப்பாணத்தில் சிங்கள அரசாங்க அதிபர்களே தொடர்ந்து இருந்துவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

1963 இல் திரு. வி.ஏ. கந்தையா தமது பதவிக்காலத்தில் மரணமானார். இவரைப்போலவே கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கு.வன்னியசிங்கம் 1959 லும் மூதூர்த் தொகுதி பாராளுமன்ற முதல் உறுப்பினர் திரு.ஏகாம்பரம் 1961 இலும் மரணமானது தமிழ் மக்களுக்குப் பெரும் இழப்பாக இருந்தது. 1963இல் திரு.வி ஏ. கந்தையாவின்

மரணத்தை அடுத்து இடம்பெற்ற இடைத்தேர்தலில திருவாளர் வி.நவரத்தினமும் ஏ.ஜீ. ராஜசூரியரும் போட்டியிட்டார்கள். திரு.வி. நவரத்தினம் தமிழரசுக்கட்சியின் ஆரம்பகால உறுப்பினர். 1952 ஆம் ஆண்டில் பொதுத்தேர்தலில் ஊர்காவற்றுறைத் தொகுதியில் தமிழரசு அபேட்சகராகப் போட்டியிட்டவர். தீவுப்பகுதியில் தமிழரசுக்கட்சியின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட உறுப்பினர். 1961 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில் முழுமையாகப் பங்குபற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தவர். 1956 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் ஊர்காவற்றுறைத் தொகுதியில் இவர் கேட்டிருந்தால் வெற்றி பெற்றிருப்பார் என்றும் அன்று சந்தர்ப்பத்தைத் தவறவிட்டார் என்றும் மக்கள் இவர்மேல் அனுதாபம் வைத்திருந்தார்கள். திரு. ஏ. ஜி. இராஜசூரியர் பிரபல வர்த்தகர். தமிழக் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட்டார். இவர் யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவராக இருந்ததால் உள்ளூராட்சித் துறையில் அனுபவம் மிக்கவராகவும் விளங்கினார்.

1963 ஆகஸ்ட் (74 ஆம் இலக்க) ஊர்காவற்றுறைத் தேர்தல் தொகுதி இடைத்தேர்தல் முடிவுகள் பினவருமாறு: 1963 இல் பதிவுசெய்யப்பட்ட தேருநர்கள்: 31441.

| வேட்பாளர் பெயர் | சின்னம் | இடப்பட்ட வாக்குகளின் தொகை |
|---|---|---|
| திரு.வி. நவரத்தினம் | வீடு | 14996 |
| திரு.ஏ.ஜீ.இராஜசூரியர் | துவிச்சக்கரவண்டி | 4602 |

Source: Results Parliamentary General Elections in Ceylon. 1947-1970. Dept. of. Election, Coloimbo 1971.

நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 143. மொத்தமாக இடப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 19691. வெற்றிபெற்ற அபேட்சகர் திரு.வி. நவரத்தினம் பெற்ற பெரும்பான்மை வாக்குகள் 10394. தேருநர்களில் பங்குபற்றியோர் வீதம் 62.6

1964 ஆம் ஆண்டு நவம்பரில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் கொண்டுவந்த பத்திரிகைகள் சுவீகரிப்பு மசோதாவுக்கு எதிராக அக்கட்சியின் சபை முதல்வரான திரு.சீ.பி. டி. சில்வாவும் அவரது ஆதரவாளர்களும் எதிர்க்கட்சியுடன் சேர்ந்து வாக்களித்து. சுதந்திரக்கட்சி அரசாங்கத்தைத்

தோற்கடித்தனர். இதனால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 1965 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் ஆறுமாதங்கள் வரை முன்னர். இடம் பெற்றது. 1963 ஆம் ஆண்டு இடைத்தேர்தலில் வெற்றிபெற்றுச் சென்ற திரு. வி. நவரத்தினம் சிறிது காலத்துக்குள்ளேயே 1965 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலை எதிர்நோக்கவேண்டியிருந்தது.

1965 ஆம் ஆண்டு ஆறாவது பொதுத்தேர்தலில் திரு. வி. நவரத்தினம் மீண்டும் தமிழரசுக்கட்சி அபேட்சகராகவும் இவரை எதிர்த்து திரு.என். ரி. சிவஞானம் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராகவும் போட்டியிட்டனர். திரு. சிவஞானம் முன்னாள் சட்டசபை சபாநாயகர் சேர். வைத்தியலிங்கம் துரைசாமியின் மருமகனும், 1952 இல் ஊகாவற்றுறையில் போட்டியிட்ட திரு. சி. பாலசிங்கத்தின் நெருங்கிய உறவினருமாவர். இவர் ஒரு சிறந்த வழக்கறிஞர். ஊர்காவற்றுறை மன்றுகளில் தொழில் செய்ததால் தீவுப்பகுதி மக்களுக்கு நன்கு தெரிந்தவர். மேலும் இவர் கூட்டுறவுத்துறையில் ஈடுபாடு கொண்டவர். வடஇலங்கை விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கம், தீவுப்பகுதிக் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றில் பல தலைமைப்பதவிகளை வகித்தார்.

1965 ஆம் ஆண்டு மார்ச் பொதுத்தேர்தலில் (73 ஆம் இலக்க) ஊர்காவற்றுறைத் தேர்தல் தொகுதி தேர்தல் முடிவுகள் பின்வருமாறு: 1965 இல் பதிவுசெய்யப்பட்ட தேருநர்கள்: 31985.

| வேட்பாளர் பெயர் | சின்னம் | இடப்பட்ட வாக்குகளின்எண்ணிக்கை |
|---|---|---|
| திரு.வி. நவரத்தினம் | வீடு | 13358 |
| திரு.என்.ரி.சிவஞானம் | துவிச்சக்கரவண்டி | 5816 |

Source: Results of Parliamentary General Elections in Ceylon. 1947-1970. Dept. of Election, Colombo 1971.

நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 170. மொத்தமாக இடப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 19544. வெற்றிபெற்ற அபேட்சகர் திரு.வி. நவரத்தினம் பெற்ற பெரும்பான்மை வாக்குகள் 10394. வாக்களிப்பில் பங்குபற்றிய தேருநர் வீதம் 61.1

திரு.நவரத்தினம் 1963 ஆம் ஆண்டு இடைத்தேர்தலில் பெற்ற வாக்குகளிலும் இம்முறை 1438 வாக்குகளைக் குறைவாகப் பெற்றார், மேலும் இவரது பெரும்பான்மை வாக்குகள் 10394 இலிருந்து 7742ஆகக் குறைவடைந்துள்ளது. இவரது பெரும்பான்மை வாக்குகள் குறைந்ததற்குக் காரணங்களில் ஒன்று திரு. சிவஞானம் வேலணைப்பகுதியில் கூடுதலான வாக்குகளைப் பெற்றதே. மேலும் திரு. நவரத்தினம் கரம்பன், ஊர்காவற்றுறை அபிவிருத்தியுடன் கூடுதலாக இனங்காட்டுகிறாரென வேலணைப் பகுதி மக்கள் கருதினார்கள். தொகுதி அபிவிருத்தி முயற்சியில் இவரது இடஞ்சார்புத் திறமுறையை வேலணைப் பகுதி மக்கள் விரும்பவில்லையெனத் தெரிகின்றது. 1965 இல் உள்ளூராட்சி மந்திரி திருச்செல்வம் இத்தொகுதிக்கு விஜயம் செய்தபொழுது இப்பிரதேசத்தின் குடிநீர்ப்பிரச்சனையை திரு. நவரத்தினம் தெளிவாக எடுத்துக்காட்டினார். 1968 இல் திரு பிரேமதாசா உள்ளூராட்சித் அமைச்சராக இத்தொகுதிக்கு விஜயம் செய்தபொழுதும் மீண்டும் குடிநீத் தேவையின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது.

1970 ஆம் ஆண்டு மார்ச்சில் ஏழாவது பொதுத்தேர்தலில் இத்தொகுதியில் திரு.க.பொ.இரத்தினம் தமிழரசுக்கட்சி அபேட்சகராகவும் திரு. என்.ரி. சிவஞானம் காங்கிரஸ் கட்சி அபேட்சகராகவும் திரு.வி. நவரத்தினம் திரு.ப.கதிரவேலு சுயேட்சை அபேட்சகர்களாகவும் போட்டியிட்டனர். திரு.க.பொ. இரத்தினம் ஏற்கனவே 1965–1970 க்கும் இடைப்பட்ட காலத்தில் கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். வேலணைப்பகுதியைச் சேர்ந்தவர். உழைப்பால் உயர்ந்தவர் எனக் கருதப்படுபவர். பயிற்றப்பட்ட தமிழாசிரியராக இருந்து பண்டிதராகிப் பின்னர் லண்டன் பல்கலைக்கழகச் சிறப்புக் கலைமாணி, முதுகலைமாணிப் பட்டங்களும் பெற்றவர். கொழும்பு ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகவும், பின்னர் மலேசியாவிலும் தமிழ் விரிவுரையாளராகவும் இருந்தவர். தமிழ் அறிஞரான இவர் நாட்டில் தமிழ்மொழி விடயங்களில் அதிக ஈடுபாடு காட்டினார். தமிழ்மொழி விடயாமாகப் பாராளுமன்றத்தில் துணிந்து கேள்வி கேட்கக்கூடியவர் என்றும் எடுத்தகருமத்தை நிறைவேற்றுவதில் இடைவிடாமுயற்சி கொள்பவர் என்ற கருத்தும் மக்கள் மத்தியில் இருந்தது. மேலும் தீவு மக்களின் அபிலாசைகளை, உள்ளுணர்வுகளை நன்கு அறிந்தவராகவும், உள்ளூர்ப் பிரச்சனைகளில் மிகவும் தெளிவான விளக்கமுடையவராகவும் தொகுதி மக்களை நன்கு அறிந்தவராகவும் இருந்தார்.

திரு. சிவஞானம் இரண்டாவது தடவையாகத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டவர். இவர் 1965 இல் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையுடன் மேலும் தமது செல்வாக்கை வளர்க்கத் தொகுதியில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். 1968 இல் திரு. வி. நவரத்தினம் தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறியதும், 1970 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழரசுக்கட்சி அபேட்சகருக்கு எதிராக இவர் போட்டியிட முற்பட்டதும், தமிழ்க் காங்கிரசுக்குச் சாதகமாக அமையும் என இவர் எதிர்பார்த்தார்.

திரு. நவரத்தினம் தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறிச் சிறிது காலத்துள் தேசிய அரசாங்கத்தில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த திரு. எம். திருச்செல்வம் கோணேசர் கோயில் அமைந்துள்ள பிரடரிக் கோட்டைப் பகுதியைப் புனித நகராகப் பிரகடனம் செய்ய எடுத்த முயற்சியில் ஏற்பட்ட பிரச்சினையால் தமது அமைச்சர் பதவியைத்துறந்தார். இச்சம்பவத்துடன் தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கத்திலிருந்து விலகியது. தேசிய அரசாங்கத்தால் 1966 இல் தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் நிறைவேற்றப்படபொழுதும் டட்லி—செல்வநாயகம் உடன்பாட்டின்படி வரவிருந்த மாவட்டசபைக்குக் கடும் எதிர்ப்புக் காரணமாகக் கைவிடப்பட்டது.

திரு.வி.நவரத்தினம் 1970 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்டார். 1965 இல் தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கத் தொடங்கிய நாட்களிலிருந்து இவருக்கும் கட்சிக்கும் இடையே கருத்து வேற்றுமை ஏற்படத்தொடங்கியது. 1968 இல் இவர் இலங்கைத் (தமிழரின்)தேசிய அடையாள அட்டை விடயமாக மாறான கருத்துக் கொண்டு கட்சியிலிருந்து வெளியேறி எதிர்கட்சி ஆசனத்துக்குச் சென்றார். இவ்விடயமாக திருவாளர்கள் நவரத்தினமும், அமிர்தலிங்கமும் புளியங்கூடலில் பொதுமக்களிடையே நேருக்குநேர் தத்தம் கொள்கை பற்றி வாதிட்டது பொதுமக்களின் வரவேற்புக்குரியதாக அமைந்தது. இவர் பின்னர் தமிழர் சுயாட்சிக்கழகம் என்ற அரசியல் கட்சியை அமைத்துத் தமது அரசியல் பணியைத் தொடர்ந்தார். இக்கட்சியே தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் (கூட்டணி) 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மகாநாட்டில் தமிழ்ஈழத்தீர்மானத்துக்கு முன்னர் தமிழர் சுயாட்சிக் கோரிக்கையை முன்வைத்திருந்தது. திரு.நவரத்தினத்தின் கொள்கைப் பிடிப்பை மக்கள் மதித்தபொழுதும் இவர் தமிழரசுக்கட்சியை விட்டு விலயகியதை மக்கள் விரும்பவில்லை.

திரு.ப. கதிரவேலு புங்குடுதீவைச் சேர்ந்த சிறந்த வழக்கறிஞர். ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் மன்றுகளில் தொழில் புரிந்தவர். தீவுப்பகுதிக் கூட்டுறவுத்துறைக்கு இவரும், கல்விக்கு இவரது தந்தையாரும் நற்சேவை செய்துள்ளார்கள். இவர்கள் நீண்டகாலமாகப் புங்குடுதீவுக் கிராமசபையின் தலைவர்களாக இருந்தும் பல பணி செய்தார்கள். புங்குடுதீவு மக்களில் ஒருவர் ஊர்காவற்றுறைப் பாராளுமன்றப் பிரதிநிதியாக வந்து நாட்டுக்குச் சேவையாற்றவில்லை என்ற புங்குடுதீவு மக்களின் மனக்குறையை நன்கு அறிந்திருந்தார். பல்முனைப் போட்டியில் இம் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றலாம் என்ற நிலைப்பாடு இருந்தது.

1970 ஆம் ஆண்டு மார்ச் பொதுத்தேர்தலில் (73 ஆம்இலக்க) ஊர்காவற்றுறைத் தேர்தல் தொகுதி தேர்தல் முடிவுகள் பின்வருமாறு:
1970 இல் பதிவு செய்யப்பட்ட தேருநர்கள் : 32015.

| வேட்பாளர் பெயர் | சின்னம் | இடப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| திரு.கே.பி.இரத்தினம் | வீடு | 13079 |
| திரு.ப.கதிரவேலு | சேவல் | 5013 |
| திரு.வி.நவரத்தினம் | தராசு | 4758 |
| திரு.என்.ரி.சிவஞானம். | துவிச்சக்கரவண்டி | 1667 |

Source:Results of Parliamentary General Elections in Ceylon. 1947-1970. Dept. of. Election, Colombo 1971.

நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 95. மொத்தமாக இடப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 24612. வெற்றிபெற்ற அபேட்சகர் திரு.கே.பி. இரத்தினம் பெற்ற பெரும்பான்மை வாக்குகளின் எண்ணிக்கை 8066. வாக்களிப்பில் பங்குபற்றிய வாக்காளர் வீதம் 76.9

1970 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழரசுக்கட்சி அபேட்சகர் 1965 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற தமிழரசுக்கட்சி அபேட்சகர் பெற்ற வாக்குகளிலும் 279 வாக்குகளைக் குறைவாகப் பெற்றார். நாற்கோணப்போட்டியாக அமைந்த இத்தேர்தலில் திரு.கே.பி. இரத்தினம் மொத்த வாக்குகளில் பெற்ற பெரும்பான்மை வாக்குகளின் எண்ணிக்கை பாராட்டுக்குரியது. எனினும் இவருக்கு எதிராக மற்றைய மூன்று அபேட்சகர்களுக்கும் கிடைத்த வாக்குகளின் மொத்த எண்ணிக்கை 11438 என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டாவது இடத்தைத் திரு.கதிரவேலு

பெற்றார். இவருக்குக் கிடைத்த வாக்குகளின் மிகக்கூடிய எண்ணிக்கை புங்குடுதீவிலேயே கிடைத்தது. மண்ணின்மைந்தன் என்ற நிலையிலேயே இவருக்கு அங்கு கூடிய வாக்குகள் கிடைத்தன. இவர் சிறிது காலத்தின் பின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஊர்காவற்றுறைத் தொகுதி அமைப்பாளராக இருந்து தீவுப்பகுதிக்குக் குறிப்பிடத்தக்க சேவைகள் பல ஆற்றினார். திரு. நவரத்தினம் சுயேட்சையாகக் கேட்டு, இவ்வளவு வாக்குகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. திரு.சிவஞானம் எதிர்பார்த்ததுபோல் தமது நிலையை முன்னேற்றவில்லை. திருவாளர்கள் க.பொ. இரத்தினம், நவரத்தினம், கதிரவேலு ஆகியோர் தமிழரசுப் பின்னணியைக் கொண்டவர்களாக இருந்து பின்னர் பிரிந்து போட்டியிட்டதால் இவர்களது போட்டி மக்களுக்குக் கவலையாக இருந்ததுடன் தங்களது நிலையைத் தீர்மானிப்பதிலும் பெரும் சிரமப்பட்டார்கள்.

1970 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் ஊர்காவற்றுறைத் தொகுதியில் திரு.வி.நவரத்தினம் தமிழரசு அபேட்சகர் திரு. கே. பி. இரத்தினத்திடம் தோல்வியுற்றார். தமிழரசுக்கட்சியின் பெயரில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பின்னர் கட்சியிலிருந்து விலகின ஒருவரும் மீண்டும் வெற்றிபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1970 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் யாழ்ப்பாணத்தேர்தல் தொகுதியில் திரு.ஜீ.ஜீ. பொன்னம்பலம் தமிழரசுக்கட்சி அபேட்சகர் திரு.சி.எக்ஸ். மாட்டினிடமும் வட்டுக்கோட்டைத் தொகுதியில் திரு.ஏ. அமிர்தலிங்கம், திரு. ஏ, தியாகரசாவிடமும், உடுப்பிட்டி தொகுதியில் திரு. எம். சிவசிதம்பரம் தமிழரசு அபேட்சகர் திரு.ஜெயக்கொடியிடமும் தோல்வியுற்றனர். இத்தேர்தல் முடிவுகள் இப்பிரதேச அரசியலில் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தின. தமிழரசுக்கட்சி யாழ்ப்பாணம், உடுப்பிட்டி தேர்தல் தொகுதிகளை 1970 ஆம் ஆண்டே முதன்முறையாகக் கைப்பற்றியது. யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழரசுக்கட்சி ஐந்து முறை போட்டியிட்டுத் தோல்வி கண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

1970 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் ஐக்கியமுன்னணி பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றது. புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றப் பிரதிநிதிகள் 19.7.70 ல் ஒன்றுகூடிப் புதிய அரசியல் திட்டமொன்றை வகுப்பதற்குத் தற்போதைய பாராளுமன்ற அங்கத்தவர்கள் அரசியல் நிர்ணய சபையாக இயங்குவதெனத் தீர்மானித்தனர்.

இச்சூழ்நிலையில் தமிழ் அரசியில் கட்சிகள் புதிய குடியரசு அரசியல் திட்டத்தில் தமிழ் நிலை குறித்து ஆராயத்தொடங்கினர். ஆரம்பத்தில் அரசியல் நிர்ணய சபைக் கூட்டங்களில் தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் பங்கு பற்றியபோதும் இவர்கள் தமிழர் விடயமாக முன்வைத்த கோரிக்கைகள் ஒன்றும் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் அரசியல் நிர்ணய சபையில் பங்குபற்றுவதில்லையென முடிவு செய்தனர். இதனைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை அன்பர்களின் முயற்சியால் தமிழர் அரசியல் கட்சிகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஒரு பொதுவான நிலைப்பாட்டை உருவாக்க முயன்றனர். 1772 ஜனவரியில் தமிழரசுக்கட்சி யாழ்ப்பாணத்தில் நடத்திய சிறப்பு மகா நாட்டில் புதிய அரசியல் அமைப்பை நிராகரித்தனர். மீண்டும் 1972 மே மாதத்தில் திருகோணமலையில் தந்தை செல்வநாயகத்தினால் கூட்டப்பட்ட தேசிய மகா நாட்டில் புதிய அரசியல் அமைப்பைத் தமிழினம் நிராகரிக்கின்றது என்ற தீர்மானம் திரு. எம். எஸ். செல்லச்சாமியினால் முன்மொழியப்பட்டு திரு. மு. சிவசிதம்பரத்தினால் வழிமொழியப்பட்டது. இம்மகாநாட்டுடன் தமிழர் கூட்டணி அமைப்பு உருவாகியது. மேலும் இதனைத் தொடர்ந்து அரசியல் யாப்பில் தமிழ் மக்களின் உரிமை குறித்து வாதப்பிரதிவாதம் தமிழர் மத்தியில் இடம் பெறத் தொடங்கித் தனிநாட்டுக் கோரிக்கைக்குரிய போக்குகள் தென்படத் தொடங்கின. 1972 ஜூலையில் கூட்டணி உறுப்பினர்கள் தேசியப் பேரவையில் கலந்துகொண்டு 6 அம்சத் திருத்தம் ஒன்றினையும் இதற்கு மூன்று மாத கால அவகாசமும் வழங்கினர். இக்காலத்தில் அரசாங்கம் எதனையும் செய்யாததால் 1972, செப்டம்பர் 30ம் திகதி தந்தை செல்வநாயகம் தமிழரின் அதிருப்தியைக் காட்டத் தமது பாராளுமன்ற ஆசனத்தை ராஜினாமாச்செய்தார். இது இலங்கை அரசியலிலும் தமிழர் அரசியலிலும் முக்கியமான விடயமாக அமைந்தது. காங்கேசன்துறைத் தொகுதி இடைத்தேர்தல் தாமதத்திற்குட்பட்டு 1974 ஆம் ஆண்டு இடம் பெற்றது என்பது குறப்பிடத்தக்கது. இவ்விடைத்தேர்தலில் தந்தை செல்வநாயகமே வெற்றிபெற்றுக் குடியரசு யாப்பைத் தமிழ் மக்கள் ஏற்கவில்லை என்ற தம் நிலைப்பாட்டை வெளிக்காட்டினார்.

1974 இல் மன்னார்த் தொகுதி உறுப்பினரான திரு. வி. ஏ. அழகக்கோன் மரணமானதையடுத்து நடைபெற்ற இடைத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த திரு. ரஹீம் 67 வாக்குகளால் தமிழரசுக்கட்சி அபேட்சகரை வென்றார். 1974 ஆம் ஆண்டு தமிழாராய்ச்சிமகாநாட்டுத் துக்கசம்பவம் இடம்பெற்றபொழுது, அபேட்சகர் தோற்றது கட்சிக்குப் பெரும் கவலையைக் கொடுத்தது.

1976 இல் இடம்பெற்ற தேர்தல் தொகுதி நிர்ணயத்தில் ஊர்காவற்றுறைத் தேர்தல் தொகுதியில் ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. 1976 இல் இத் தேர்தல் தொகுதி 58030 மக்களைக் கொண்டிருந்ததுடன் இவர்களுள் 57790 பேர் இலங்கைப் பிரஜைகளாக இருந்தனர். இத்தேர்தல் தொகுதியில் குடிசனத்தொகை இன ரீதியான வீதத்தில் பின்வருமாறு: சிங்களவர் 3.20%, இலங்கைத்தமிழர் 94.57%, இலங்கைச் சோனகர் .13%, இந்தியத்தமிழர் 2.05% ஏனையோர் 0.5%, மத அடிப்படையில் குடிசனத்தொகை வீதம் பின்வருமாறு: பௌத்தர்கள் 2.24%, இந்துக்கள் 78.56%, முஸ்லீம்கள் .81%, கிறிஸ்தவர்கள் 20.38%, ஏனையவர்கள் 0.1%.

தமிழரசுக்கட்சிக்கும் தமிழரசுக்கட்சியிலிருந்து பிரிந்த சுயாட்சிக் கழகத்திற்கும் இடையே தமிழர் பிரச்சனை அணுகுமுறை தொடர்பாகக் கருத்து மோதல்களும் சில காலங்களில் இரு பிரிவினரையும் ஒற்றுமையாக்க முயற்சிகள் இடம்பெற்றன. சுயாட்சிக்கழக நடவடிக்கைகள் ஊர்காவற்றுறைத் தொகுதியில் ஓரளவு வளர்ச்சி பெற்றிருந்தது கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விரண்டு கட்சிகளும் மீண்டும் ஒற்றுமைப்படவுமில்லை. சுயாட்சிக்கழகம் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி அங்கமாகவும் வரவுமில்லை. சுயாட்சிக்கழகம் 1970இல் இலிருந்து சுயாட்சிக் கோரிக்கையை முன்னெடுத்து வந்தது. 1976 இல் தமிழர் ஐக்கிய முன்னணியின் வட்டுக்கோட்டை மகாநாட்டில் தமிழீழக் கோரிக்கைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தைக் கூட்டணியின் அங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான் தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. 1976 க்குப் பின்னர் தமிழீழக்கோரிக்கை இப்பிரதேச அரசியலில் முக்கிய இடத்தைப் பெற்றது. 1970க்கும் 1977க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் பல்கலைக்கழக அனுமதிப் புள்ளியைத் தரப்படுத்தல், 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் இறுதிநாளன்று மக்கள் இறந்தமை, றையல் அற்பார் போன்றன முக்கிய அரசியற் பிரச்சினைகளாக இருந்தன.

1974 இல் திரு. அல்பிரட் துரையப்பாவின் கொலையும் 1976 இல் தந்தை செல்வநாயகம், திரு.ஜீ.ஜீ பொன்னம்பலம், திரு. திருச்செல்வம் ஆகியோரின் மரணங்களும் அரசியலில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தின. இதனால் அடுத்த பரம்பரை தமிழரின் அரசியல் தலைமைத்துவத்தை ஏற்க வேண்டியதாயிற்று.

1977 ஆம் ஆண்டு யூலைப் பொதுத்தேர்தலில் ஊர்காவற்றுறைத் தேர்தல் தொகுதியில் திரு. கே. பி. இரத்தினம் தமிழர் ஐக்கிய விடுதலை

முன்னணி, திரு. ம. அமிர்தலிங்கம் ஐக்கியதேசியக்கட்சி, திரு. கே. கனகரத்தினம் இலங்கா சமசமாஜக்கட்சி அபேட்சகர்களாகவும், திரு. வி. நவரத்தினம், திரு. வை. துரைசாமி, திரு.தம்பிஜயா பரநிருபசிங்கம் சுயேட்சை அபேட்சகர்களாகவும் போட்டியிட்டனர். 1977 இல் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் ஈழக்கோரிக்கையின் பின்னணியிலேயே தேர்தல் இடம் பெற்றது. வடக்கு கிழக்கு மகாணங்களில் ஈழத்துக்கோரிக்கையால் கூட்டணிக்குச் சார்பாகப் பெரிய அலை வீசியது. திரு.வி. நவரத்தினம் ஈழக் கோரிக்கையுடன் இணைந்தவராக இருந்ததால், சுயேட்சைக் கோரிக்கையைத் தாமே முதலில் கூறியவர் என்றும் பிரசாரத்தில் ஈடுபட்டார். திரு. கே. பி. இரத்தினம் 1970 க்குப் பின்னர் தீவுப்பகுதித் தொகுதியை அபிவிருத்தி செய்வதில் எடுத்த முயற்சி தீவுப்பகுதி மக்களைத் திருப்பதிப்படுத்தியது. இவர் வேலணையின் அபிவிருத்திக்குக்கொடுத்த முக்கியத்துவம் குறித்து புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, கரம்பன் பகுதி மக்கள் ஓரளவு ஐயப்பாடுடையவர்களாக இருந்தனர். வேலணை, புங்குடுதீவுப் பகுதிகளில் பல காரியாலயங்கள் திறக்கப்பட்டன. மற்றும் தீவுப்பகுதி முழுவதும் பன்முக வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பல அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தொகுதியில் கூடியளவு நேரம் செலவழிப்பவராக இருந்தால் மக்கள் மத்தியில் திருப்தி இருந்தது. திரு.எம். அமிர்தலிங்கம் நெடுந்தீவு, கரம்பன் பகுதிகளுடன் தொடர்புபட்ட அரச ஊழியர். அரசியலுக்குப் புதியவர். திரு. வை. யோகேந்திரா துரைசாமி சேர். வைத்தியலிங்கம் துரைசாமியின் மகன். இலங்கை வெளிநாட்டு நிர்வாக சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர். சைவ சமய விருத்தியில் ஈடுபாடு கொண்டவர். திரு. பரநிருபசிங்கம் நயினாதீவைச் சேர்ந்த ஆசிரியர். திரு. கனகரத்தினம் நெடுந்தீவைச் சேர்ந்த ஆசிரியர். இவர் கிளிநொச்சித் தொகுதியில் தேர்தலில் பங்குகொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1977 ஆம் ஆண்டு யூலை (77 ஆம் இலக்க) பொதுத்தேர்தலில் ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதி தேர்தல் முடிவுகள் பின்வருமாறு:

1971 இல் பதிவுசெய்யப்பட்ட தேருநர்கள் 36372.

| வேட்பாளர் பெயர் | இடப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. கே. பி. இரத்தினம் | 17372 |
| திரு. வி. நவரத்தினம் | 8673 |

| | |
|---|---|
| திரு. எம். அமிர்தலிங்கம் | 661 |
| திரு. வை. துரைசாமி | 279 |
| திரு. தம்பபையா பரநிருபசிங்கம் | 185 |
| திரு. கே. கனகரத்தினம் | 103 |

Source: G.H, de Silva. A Statistical Survery in Elections to the Legislatures of Sri Lanka 1911-1977 Marga Institute, Colombo 5.

மொத்தமாக இடப்பட்ட பெறுமதியான வாக்குகள் 27273. வெற்றிபெற்ற அபேட்சகர் திரு. கே. பி. இரத்தினம் பெற்ற பெரும்பான்மை வாக்குகள் 8667. தேர்தலில் பங்குபற்றிய வாக்காளரின் விகிதம் 75.0% திரு. கே. பி. இரத்தினமும் திரு.வ.நவரத்தினமும் 1970 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் எடுத்த வாக்குகளிலும் இத்தேர்தலில் முறையே 4561, 3915 வாக்குகளைக் கூடுதலாகப் பெற்றனர். 1970 இல் நாற்கோணப்போட்டி இருந்தது. ஆனால் 1977 இல் அறுவர் போட்டியிட்டபொழுதும் திருவாளர்கள் இரத்தினத்திற்கும் நவரத்தினத்திற்குமிடையே தான் போட்டியிருந்தது. இத்தேர்தலில் போட்டியிட்ட ஏனைய நான்கு அபேட்சகர்களும் மொத்தமாக 1225 வாக்குகளையே பெற்றனர். தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி வட மாகாணத்திலுள்ள 14 தொகுதிகளிலும் கிழக்கு மாகாணத்தில் 4 தொகுதிகளிலும் வென்று பிரதான எதிர்க்கட்சியாக வந்ததுடன், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் எதிர்கட்சித் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். இத்தகைய அரசியல் பின்னணியில் 1977 யூலை, ஆகஸ்டில் நாட்டில் சிங்கள, தமிழ் இனக்கலவரம் வெடித்தது. இக்கலவரத்தால் தென்னிலங்கைத் தமிழர் பெருமளவு துன்பத்திற்குள்ளாக நேரிட்டது. தேர்தலின் பின்னர் திரு. யோகேந்திரா துரைசாமி யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராகப் பதவியேற்றார். இவர் 1978–1980 க்கு இடைப்பட்ட இரண்டு வருட காலத்திற்கு அரச அதிபராக இருந்துவந்தார். இவரது நியமனம் குறித்து ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் மிகவும் கடுமையாக எதிர்த்து வந்தார். இவர் 1961 இல் சிறிகாந்தா அரச அதிபராக இருந்ததன் பின் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட முதல் தமிழ் அரசாங்க அதிபராவர். இவரைத் தொடர்ந்து வந்த அரச அதிபர்கள் தமிழர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

1977 பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு பாராளுமன்றத்தேர்தல் இன்னும் இடமபெறவில்லை. 1981 இல். நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட

சபைத் தேர்தல் சிக்கலான சூழ்நிலையிலும் திருப்தியற்ற முறையிலும் நடந்து முடிந்தது. முடிவு வரத் தாமதமாகி இறுதியில் கூட்டணியே மாவட்டத்திலுள்ள 10 ஆசனங்களையும் பெற்றது. புங்குடுதீவைச்சேர்ந்த திரு. சோமசுந்தரம் தீவுப்பகுதி சார்பான கூட்டணி பட்டியலில் இடம்பெற்று அங்கத்தவராகச் தெரிவுசெய்யப்பட்டார். 1982 இல் முதலாவது ஜனாதிபதித் தேர்தல் நாடளாவிய ரீதியில் இடம்பெற்றது. 1982 இல் இத்தொகுதியில் 42,563 பதியப்பட்ட தேருநர்கள் இருந்தனர். ஜனாதிபதித் தேர்தல் யாழ்ப்பாணப் பகுதியில் அதிகளவு முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. இத்தேர்தலில் ஊர்காவற்றுறைத் தொகுதியில் 17130 பேர் வாக்களிதுள்ளார்கள். அபேட்சகர் கட்சி அடிப்படையில் வாக்களிப்பு விபரம் பின்வருமாறு:

| அபேட்சகர் பெயர் | கட்சி | கிடைத்த வாக்குகள் |
|---|---|---|
| திரு.ஜே.ஆர் .ஜெயவர்த்தனா | ஐக்கியதேசியக்கட்சி | 4067 |
| திரு.கே.பி.கொப்பக்கடுவை | ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி | 3393 |
| திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஜூனியர் | தமிழ்க் காகிரஸ் | 8353 |
| திரு.றோகண விஜயவீர | ஜாதிகவிமுத்திபெரமுன | 199 |
| கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா | சமசமாஜக்கட்சி | 157 |
| திரு.வாசுதேவ நாணயக்காரா | நவசமசமாஜக்கட்சி | 98 |

Source: Presidential Elections Results.

ஜனாதிபதி தேர்தலில் ஊர்காவற்றுறைத் தெகுதியின் மொத்த வாக்காளரில் 40.2 விகிதத்தினரே தேர்தலில் பங்கு கொண்டனர். 1982 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மக்கள் முழுமையாகப் பங்குகொள்ளவில்லை. தமிழர் ஐக்கியவிடுதலை முன்னணி தேர்தலில் ஈடுபாடு காட்டவுமில்லை, யாரையும் ஆதரிக்கவுமில்லை. திரு.ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஜூனியர் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டபொழுதும் இவர் வெல்லும் வாய்ப்பு இல்லாததால் இத்தொகுதி மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் முழுமையாகப் பங்கு கொள்ளும் போக்கு இருக்கிவில்லை. எனினும் இத்தொகுதியில் அளிக்கப்பட்ட வாக்கில் 45 விகிதம் திரு. பொன்னம்பலத்துக்கே கிடைத்தது. ஐக்கியதேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகர்களுக்கும் குறிப்பிடத்தக்க தொகையினர் வாக்களித்துள்ளனர். ஜனாதிபதியாக வரக்கூடியவர் இவ்விருகட்சி அபேட்சகர்களில் ஒருவர் என்றும், தமது வாக்கை இருவரில் ஒருவருக்கு இடுவதன்மூலமே நல்ல முறையில் பயன்படுத்தலாம் என்ற நிலையிலே இவ்விரு கட்சிகளுக்கும் வாக்களித்துள்ளார்கள் எனக்கருத இடம் உண்டு. இது இவர்களின் அரசியல் இலகுத் தன்மையைக் காட்டுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் இத்தொகுதி மக்கள் ஒரு கோரிக்கையையும் கேட்கவில்லை.

இத்தேர்தலில் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா நாட்டில் மொத்தமாக இடப்பட்ட பெறுமதியான வாக்குகளில் 52.91 விகிதத்தைப் பெற்று வெற்றி பெற்றார்.

1982 டிசெம்பரில் பாராளுமன்ற ஆயுள் காலத்தை நீடிப்பதற்கு நடந்த சர்வசன வாக்கெடுப்பில் இத்தொகுதியில் மிகப் பெரும்பான்மையான வாக்காளர்கள் எதிராக வாக்களித்துள்ளார்கள். 1982 இல் இத்தொகுதி 42563 பதிவு செய்யப்பட்ட தேருநர்களைக் கொண்டிருந்தது. சர்வசன வாக்கெடுப்பில் ஊர்காவற்றுறைத் தொகுதியில் அளிக்கப்பட்ட வாக்கு விபரங்கள் ( விளக்குச் சின்னம் பாராளுமன்ற ஆயுள் காலத்தை நீடிப்பதற்கு உடன்பாடும், குடம் உடன்பாடின்மையையும் குறித்து நின்றன.)

| தேர்தல் தொகுதி | விளக்கு | குடம் | பெறுமதியான மொத்த வாக்குகள் | நிராகரிக்கப் பட்டவர்கள் |
|---|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | 1927 | 21109 | 23036 | 206 |

மொத்தமாக அளிக்கபட்ட வாக்குகள் 23242. தேர்தற் றொகுதியின் மொத்த வாக்காளரில் 54.6 வீதத்தினர் வாக்களித்துள்ளார்கள். மொத்தமாக அளிக்கப்பட்ட வாக்குகளில் 91.6 வீதம் குடத்துக்கே கிடைத்தது. தமிழர் கூட்டணியும் பாராளுமன்ற ஆயுள்காலத்தை நீடிப்பதற்கு விரும்பவில்லை. யாழ்ப்பணத் தேர்தல் மாவட்டத்தில் குடத்திற்கே அதிப்படியான வாக்குகள் கிடைத்தன. இத்தொகுதி மக்கள 1983 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறுவதையே விரும்பினர் எனக் கொள்ளலாம்.

1982 ஆம் ஆண்டு ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம் 1977 இல் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை மேலும் ஆறு வருட காலம் நீடிப்பதற்கு யாப்பில் கொண்டுவந்த திருத்தத்திற்கு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். 1983 ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி மன்னார் மகாநாட்டில் தமது ஆறு வருடகால முடிவில் பாராளுமன்றப் பதவிகளைத் துறப்பதென்று முடிவுசெய்தனர். இதே நேரத்தில் திருநெல்வேலி, தபால்பெட்டிச் சந்தியில் இடம்பெற்ற முதலாவது கண்ணிவெடித் தாக்குதலில் 13 இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதன் விளைவாகத் தென்னிலங்கையில் பாரியளவில் இனக்கலவரம் தமிழருக்கு எதிராக வெடித்தது. இவ்வினக்கலவரங்களில் தமிழருக்குப்பெருமளவு உயிர், உடைமைச் சேதம் ஏற்பட்டன. இக்காலத்தில் நாட்டில் பிரிவினைக் கோரிக்கையைத் தடைசெய்ய

இலங்கை அரசாங்கம் யாப்பில் 6வது திருத்தத்தைக் கொண்டுவந்தது. இதன்மூலம் இலங்கையை ஒற்றையாட்சி அரசுமுறை கொண்ட நாடாக மேலும் வலுப்படுத்துவதுடன் பிரிவினை கோருதலும் தடைசெய்யப்பட்டதுடன், பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஒற்றையாட்சிக்கு விசுவாசமாக மீண்டும் சத்தியப்பிரமாணம் செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இந்நிலையில் தமிழர் கூட்டணி பாராளுமன்றம் செல்வது பிரச்சனைக்குரிய செயலாகியது. இவற்றினால் கூட்டணி அங்கத்தவர்களில் முக்கிய உறுப்பினர்கள் தமது பாதுகாப்புக்கருதி இந்தியாவுக்குச் சென்று வாழ்ந்தனர். தமிழ்ஈழக் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்றம் சென்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி அங்கத்தவர்கள் பல காரணங்களால் 6வது திருத்தத்திற்கேற்ப மீண்டும் சத்தியப்பிரமாணம் செய்யவில்லை. 1983 யூலைக்குப் பிறகு இலங்கையின் வடக்குக் கிழக்குத் தமிழர் அரசியலில் ஆயுதப்போராட்டங்கள் மூலமாவது தமது உரிமைகளைப் பெறலாம் என்ற நம்பிக்கை கொண்ட இயக்கங்கள் வளர்ச்சி பெற்றன. இந்நிலையில் இலங்கைப்பிரச்சினை தொடர்பாகத் தமிழர் அரசியலில் இந்தியத்தலையீடு ஏற்படத்தொடங்கியது. முதலில் திரு. நரசிம்மராவ் வருகையுடனும் அதனைத்தொடர்ந்து திரு. பார்த்தசாரதியின் வருகையுடனும் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் பங்களிப்புத் தொடரலாயிற்று.

1983 ஆம் ஆண்டு யூலைக்குப் பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் பாராளுமன்றத்தைப் புறக்கணித்ததால் தம் ஆசனங்களை 1983 இறுதிப் பகுதியில் இழந்தனர். இதனால் திரு. கே. பி. இரத்தினம் ஊர்காவற்றுறை பாராளுமன்ற அங்கத்துவப் பதவியை இழக்க நேரிட்டது. இக்காலப் பகுதியிலிருந்து 1989 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் வரையும் இத்தொகுதி உட்பட யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் இல்லாதிருந்தது. 1974 ல் இருந்து படிப்படியாக வளர்ந்துவந்த இளைஞர்களின் அரசியற் பிரவேசமானது 1983 க்குப்பின்னர் முக்கியத்துவம் பெறத்தொடங்கினது. 1979 ஜூலைக்குப் பின்னர் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் உதவியுடன் வடக்கு, கிழக்குப் பகுதியில் இளைஞர்களின் வன்செயலை முறியடிக்க இலங்கை அரசும் பாதுகாப்புப் படைகளும் மேற்கொண்ட முயற்சிகள் முழுமையான வெற்றியைக் கொடுக்கவில்லை.

1984 ஏப்ரலில் முற்பகுதியில் யாழப்பாணத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் பின்னர் வடபகுதி அரசியல் நிலை மேலும் சிக்கலானதுடன் சட்டமும், ஒழுங்கும் பெரமளவு சீர்குலைந்தன. இதனால் இப்பகுதியில் பெருமளவு உயிர், உடைமைச் சேதங்கள் ஏற்பட்டன. அதனைத்தொடர்ந்து பாலமும் போக்குவரத்திற்கு மூடப்பட்டதால் தீவுப்பகுதி மக்கள் அராலியூடாகப் போக்குவரத்தை மிகச் சிரமத்துடன் மேற்கொண்டனர். மண்டைதீவு, குமுதினிப்படகு, அராலித்துறை ஆகிய மூன்று சம்பவங்களும் தீவுப்பகுதியில் மறக்கமுடியாத துக்க சம்பவங்களாகும். 1987 இல் இடம்பெற்ற இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின் ஏற்பட்ட சிறிதுகால அமைதிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சண்டையின்போது 25,000 பேர் யாழ்ப்பாணத்திலிருந்து தீவுப்பகுதியில் தஞ்சம் அடைந்தனர். 1978 ஆம் ஆண்டு குடியரசு யாப்புப்படி 1980 ஆம் ஆண்டு தொகுதி நிர்ணயப்படி நாடு 22 தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, விகிதாசாரத் தேர்தல் முறையில் அங்கத்தவர்கள் தெரிவு செய்ய இடமளிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் இலக்கம் 10 பதினொரு பாராளுமன்ற அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யத் தகுதி பெற்றிருந்தது. புதிய தேர்தல் நடைபெறும்பொழுது முன்னைய பதினொரு தேர்தல்தொகுதிகளும் இல்லாதுபோக இருந்தது. இதனால் 1988 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தேர்தல்தொகுதி நிர்ணய ஆணைக்குழு 10 அங்கத்தவர்களுக்கு மேல் தெரிவு செய்யும் தொகுதிகளை இரண்டு வலயங்களாகப் பிரிக்கத் தீர்மானித்தது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தை வலயங்களாகப் பிரிக்கலாமா என்றும், பிரிக்க முடியுமாயின் எப்படி இரு வலயங்களாகப் பிரிக்கவேண்டுமென்றும் அரசியல் கட்சிகள், பொதுநிறுவனங்கள் மக்களிடம் இருந்து கருத்துக்களைக் கோரின. யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதி தொடர்பாகத் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்த பலர் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தைக் கிழக்கு, மேற்கு என இரண்டு வலயங்களாகப பிரிக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தனர். இதன்படி யாழ்ப்பாணம் மேற்கு வலயம் ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, மானிப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பழைய தேர்தற்றொகுதியினையும் உள்ளடக்க வேண்டுமென்றும், யாழ்ப்பாணம் கிழக்கு வலயம் கோப்பாய், பருத்தித்துறை, உடுப்பிட்டி. சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய பழைய தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கவேண்டுமென்றும் கோரினர். யாழ்ப்பாணம் கிழக்கு வலயத்திலிருந்து சிறுபான்மைத் தமிழர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவதை உறுதி செய்வதற்கே இவ்வலயத்துள் கோப்பாயும், உடுப்பிட்டியும்

உள்ளடக்கப்படவேண்டும் என்று கோரினர். இக்கோரிக்கை தேர்தல் ஆணைக்குழுவினால் ஏற்கப்பட்டு யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் கிழக்கு மேற்கென இரண்டாகப் பிரிக்கப்பட்டது. எனினும் குடியரசு யாப்பில் 15வது திருத்தப்படி தேர்தல் மாவட்டங்களை வலயங்களாகப் பிரிக்கும் செய்முறை கைவிடப்பட்டதுடன், தேர்தல் வெட்டுப்புள்ளி 12.5 விகிதத்திலிருந்து 5 விகிதமாகக் குறைக்கப்பட்டது.

1976 ஆம் ஆண்டு தேர்தல் நிர்ணய ஆணைக்குழு விடுத்த தேர்தல் தொகுதிகள் 1988 இல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதுடன் இல்லது போனாலும், தேர்தல் நிர்வாகத்திற்காக இக் தேர்தல் தொகுதிகள் வாக்களிப்புப் பிரிவுகளை என அழைக்கப்படுகின்றன. இவ் வாக்களிப்புப் பிரிவுகள் அடிப்படையிலேயே தேர்தல் நிர்வாக நடடிவடிக்கைகள் இடம் பெறுகின்றன.

மாகாணசபை சட்ட மூலமும், அரசியல் யாப்பின் 13 வது திருத்தத்தின் மூலமும் மாகாணசபையும், அதற்குரிய அதிகாரமும் வரையறுக்கப்பட்டுள்ளன. மாகாணசபை அங்கத்தவர் தெரிவுக்கு ஒவ்வொரு நிர்வாக மாட்வட்டமும் தனித் தேர்தல் தொகுதியாக இருப்பதுடன், ஒவ்வொரு 1000 சதுர கிலோ மீற்றர் பரப்பிற்கு ஒரு அங்கத்தவர், 40,000 மக்கள் தொகைக்கும் ஒரு அங்கத்தவர் என்ற அடிப்படையில் மாவட்டங்கள் மாகாணசபை அங்கத்துவத்தைப் பெறத் தகுதி பெற்றுள்ளன. பரப்பு, மக்கள்தொகை அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டம் 19 அங்கத்தவர்களைப் பெறத் தகுதி பெற்றுள்ளது. மக்கள்தொகை பரப்பு அடிப்படையில் தீவுப்பகுதி இரண்டு அங்கத்தவர்களைப் பெறத் தகுதி பெற்றுள்ளது. 1988 இல் நடைபெற்ற வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியின்றி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எல்லா ஆசனங்களையும் பெற்றதால் வாக்களிப்பு இடம்பெறவில்லை.

1988 ஆம் ஆண்டு டிசெம்பர் 19ஆம் திகதி நாட்டின் இரண்டாவது ஜனதிபதித் தேர்தல் நாடளாவிய ரீதியில் இடம் பெற்றது. இத்தேர்தலில் திரு.ஆர் பிரேமதாசா தேசிய ரீதியில் 50.43 வீதவாக்குகள் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். ஊர்காவற்றுறை வாக்களிப்புப் பிரிவில். இடம்பெற்ற வாக்களிப்பு இந்த ஜனாதிபதி தேர்தலில் விபரம் பின்வருமாறு: இப்பிரிவில் 1988 இல் 49481 பதியப்பட்ட தேருநர்கள் இருந்தனர்.

| அபேட்சகர் | கட்சி | கிடைத்த வாக்குகள் |
|---|---|---|
| திரு. ஒ.அபயகுணசேகரா | ஸ்ரீலங்கா மக்கள் கட்சி | 4503 |
| திருமதி சிறிமா பண்டாரநாயக்க | ஸ்ரீலங்காசுதந்திரக்கடசி | 3264 |
| திரு.ஆர் பிரேமதாசா | ஐக்கியதேசியக் கட்சி | 4628 |
| பெறுமதியான வாக்குகள் | | 12395 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | | 596 |
| மொத்தமாக அளிக்கப்பட்ட வாக்குகள் | | 12991 |
| பெரும்பான்மை | | 125 |

Source :- The Sunday Observer, Dec. 25th 1988.

இந்த ஜனாதிபதித்தேர்தலில் இப்பிரிவில் மொத்த தேருநர்களில் 28.3 விகிதம் வாக்களித்துள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தின் ஏனைய வாக்களிப்பு பிரிவிலும் வாக்களிப்புப் விகிதம் மிகவும் குறைவாக இருந்தது. இத்தேர்தலில் மக்கள் அதிகளவு ஈடுபாடு காட்டவில்லை. இத்தேர்தல் மாவட்டத்திலுள்ள பதினொரு வாக்களிப்புப் பிரிவில் ஊர்காவற்றுறை வாக்களிப்புப் பிரிவிலேயே ஐக்கியதேசியக் கட்சி முதலிடத்தைப் பெற்றுள்ளது. ஸ்ரீலங்கா மக்கள் கட்சி இரண்டு பிரிவிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முதலிடத்தைப் பெற்றுள்ளன. ஊர்காவற்றுறை வாக்களிப்புப் பிரிவில் எட்டுப்பிரிவிலும் ஐக்கியதேசியக்கட்சி கூடுதலான வாக்குகளைப் பெற்றதற்கு இப் பிரிவைச் சேர்ந்த தென்னிலங்கை வர்த்தகர்களின் ஆதரவும், முயற்சியும் முக்கிய காரணங்களாக இருந்ததென்று கூறப்படுகின்றது..

ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து 1989 பெப்ரவரி 15 ஆம் திகதி நாட்டின் 8வது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் புதிய தொகுதி அடிப்படையில் விகிதாசாரப் பிரிதிநிதித்துவ முறையில் இடம் பெற்றது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் 11 அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யத் தகுதி பெற்றிருந்தது. இத்தேர்தல் தொகுதியில் 5 கட்சிகளும், சுயேட்சைக் குழுவும் போட்டியிட்டன. சுயேட்சைகுழு ஈழப் புரட்சிகர மாகாண அமைப்பினைச் சார்ந்ததாகும் ஒவ்வொரு கட்சியும் ஒரு சுயேட்சைக்குழுவும் தலா 14 பேரைத் தமது அபேட்சர்களாகத் தேர்தலில் நிறுத்தினர் இதன்படி மொத்தம் 84 பேர் தேர்தலில் போட்டியிட்டனர். தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக் கட்சியின் அபேட்சகர் பட்டியலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னண்கி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஈழத்தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி, தமிழ்ஈழவிடுதலை இயக்கம் ஆகிய கட்சிகளின் அபேட்சகர்கள்

அடங்கியிருந்தனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்ட அபேட்சகர் பட்டியலில் ஊர்காவற்றுறை வாக்களிப்புப் பிரிவைச் சேர்ந்த அபேட்சகர்கள் மிகக்குறைவாக இருந்தது. கவனிக்கத்தக்கது. தமிழ் காங்கிரசில் போட்டியிட்ட திரு. என். சீ. சிவஞானம், சுயேட்சைகுழுவில் போட்டியிட்ட திரு. தம்பு லோகநாதபிள்ளை ஆகிய இருவருமே ஊர்காவற்றுறை வாக்களிப்புப் பிரிவுடன் தொடர்புபட்டவர்களாக இருந்தனர். பழைய முறையில் பதினொரு தேர்தல் தொகுதிகள் இருந்தன. ஆனால் தற்பொழுது ஒரு தொகுதியாக மாற்றப்பட்டபோது பின்தங்கிய தீவுப்பகுதி மக்களுக்கு அபேட்சகர் பட்டியலில் போதிய இடம் கிடைக்காதுபோனது இப்பகுதி மக்களை மிகவும் கவலைகொள்ள வைத்தது. திரு. சிவஞானம் தேர்தல் நடைபெற முன்னர் அகாலமரணமடைந்தார்.

யாழ்ப்பாண மாவட்டத் தேர்தல் நடவடிக்கைகளில் பொதுக் கூட்டங்களிலும் பார்க்க வானொலி, தொலைக்காட்சி, சுவரொட்டிகள் மூலமே கூடுதலான பிரசாரமும், மற்றும் அபேட்சகர்களின் இலக்க விபரமும் மக்கள் மத்தியில் பரப்பப்பட்டன. கட்சிகளும், தான் விரும்பும் நபருக்கும் வாக்களிக்கும் முறை மூலம் வழமையிலும் பார்க்கச் செல்லுபடியபகாத வாக்குகள் அதிகமான இருந்தன. வாக்களிப்பு வீதமும் 1977 தேர்தல் வாக்களிப்பு வீதத்திலும் குறைவாக இருந்தும் மாவட்ட தேர்தல் முடிவின்படி சுயேட்சைக்குழு 8 இடத்தையும், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி 3 இடங்களையும் பெற்றன. ஊர்காவற்றுறை வாக்களிப்புப் பிரிவு தேர்தல் விபரங்கள் பின்வருமாறு:

| கட்சி | வாக்குகள் | விகிதம் |
|---|---|---|
| ஐக்கியதேசியக்கட்சி | 354 | 1.57 |
| தமிழர் ஐக்கியவிடுதலை முன்னணி | 3706 | 16.40 |
| ஜனநாயக ஐக்கியவிடுதலை முன்னணி | 572 | 2.53 |
| ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் | 466 | 2.06 |
| அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் | 391 | 1.73 |
| சுயேட்சைக்குழு | 17108 | 75.71 |
| பெறுமதியான வாக்குகள் | 22597 | - |
| நிராகரிக்கப்பட் வாக்குகள் | 2577 | 10.24 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 25174 | 50.96 |

Source - Dailynews - 18th Feb 1989.

ஊர்காவற்றுறை வாக்களிப்புப் பிரிவில் வாக்களிப்பு ஒழுங்கு மாவட்டத்தில் கிளிநொச்சி தவிர ஏனைய ஒன்பது பிரிவுகளின் வாக்களிப்பு ஒழுங்கை ஒத்துக் காணப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் கிளிநொச்சி வாக்களிப்பு பிரிவில் தான் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி சுயேட்சைக் குழுவிலும் பார்க்கக் கூடுதலான வாக்கைப் பெற்றுள்ளமை. குறிப்பிடத்தக்கதாகும்.

சர்வசன வாக்குரிமை அறிமுகம் செய்யப்பட்ட பிறகு ஊர்காவற்றுறைத் தொகுதியில் 2 சட்டசபைத் தேர்தல்களும் 9 பாராளுமன்றத் தேர்தல்களும் இடம் பெற்றன. ஒரு சட்டசபைத் தேர்தலில் போட்டியில்லாததால் வாக்குப்பதிவு நடைபெறவில்லை. 1947 ஆம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலில்களில் இருந்து எல்லாத் தேர்தல்களிலும் போட்டி நிலவியது. 1947, 1960, யூலை பொதுத்தேர்தல்களில் வாக்குப்பதிவுகள் 60 விகிதத்திற்குக் குறைவாக இருந்தது. ஏனைய தேர்தல்களில் வாக்குப் பதிவுகள் 70 – 80 விகிதத்திற்கு இடைப்பட்டு இருந்தன. 1947 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் இருந்து அரசியல் கட்சி சார்பாக அபேட்சகர் போட்டியிட்டு வந்துள்ளனராயினும் 1947 இல் மாத்திரமே சுயேட்சை அபேட்சகர் வெற்றிபெற்றிருந்தார். 1952 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழ்க் காங்கிரசும், 1956 – 1977 வரையிலான பொது இடைத்தேர்தல்களில் தமிழரசுக்கட்சி, தமிழர் கூட்டணியே வெற்றி பெற்றது. தீவுப்பகுதி மக்கள் தமிழ்மொழி, தமிழர்பிரதேசம் மீது பற்றுக்கொண்டவர்களானதால் பல தேர்தல்களிலும் வடக்கு, கிழக்கு மக்களின் பொதுவான தமிழ்த் தேசிய அரசியல் இயக்கத்துடன் ஒத்துப்போய் இருக்கின்றார்கள் எனத் தெரிகின்றது.

1947 – 1960 மார்ச்சுக்கு இடையிலான நான்கு பொதுத்தேர்தல்களிலும் திரு. ஏ. எல். தம்பிஐயா பங்குபற்றி முதல் இரண்டு தேர்தல்களிலும் வெற்றி பெற்றார். இவர் தேர்தலில் நின்ற காலங்களில் குறிப்பாக ஊர்காவற்றுறைத் தொகுதி கத்தோலிக்க மக்களில் மிகப் பெரும்பான்மையினர் இவருக்கு ஆதரவாக இருந்தனர். இவர் அரசியலிலிருந்து, ஓய்வுபெற்ற பின்னர் தான் கத்தோலிக்க மக்கள் தமிழரசுக் கட்சிகக்கும், பின்னர் தமிழர் கூட்டணிக்கும் ஆதரவு நல்கினர்,

1956க்கு முன்னர் சட்டசபை, பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் பெற்வர்கள், கல்வி, செல்வம், அந்தஸ்து மிக்கவர்களாகவும் மானியத்

தன்மை கொண்ட சமுதாய அமைப்புத் தலைமைத்துவத்தைப் பெற்றவர்களாகவும் 1956 க்குப் பின்னைய ஊர்காவற்றுறைப் பாராளுமன்றப் பிரிதிநிதிகள் நடுத்தர வகுப்பினராகவும் இருந்தனர். சேர். வைத்திலிங்கம் துரைசாமி, திரு. அல்பிரட் தம்பிஐயாவின் காலங்களில் இலங்கை அரசியலில் இவர்களுக்கிடையே நல்லுறவு இருந்தது. இவர்களது சட்டசபை, பாராளுமன்ற நடவடிக்கைகளில் மிதவாதப் போக்கைக் காணக்கூடியதாக இருக்கின்றது. 1956க்குப் பின்னர் தமிழர் பிரச்சினை முக்கியபெற்று இருந்ததால் இக்காலத்துப் பிரதிநிதிகளின் பாராளுமன்றப் பேச்சுகள் தீவிரப்போக்குக் கொண்டனவாக இருந்தன. 1970க்குப் பின்னர் பன்முக வரவு செலவுத் திட்டம் வேலைவங்கித் திட்டம், போன்றவற்றாலும், தொகுதி அபிவிருத்தியில் பாராளுமன்ற அங்கத்தவர்களை ஈடுபடுத்தும் போக்கும் அரசமட்டத்திலும் அதிகரித்துக் காணப்பட்டது. இதனால் பாராளுமன்ற அங்கத்தவர்களின் சேவையை, அவரவர் காலப்பகுதியில் இருந்த அரசியல், நிர்வாக செயற்பாட்டு பின்னணியிலே நோக்கவேண்டும். 1956க்கு முன்னர் அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குவதிலும் செயற்படுத்துவதிலும் அரச நிர்வாகமே கூடிய பங்கு கொண்டிருந்தது.

ஊர்காவற்றுறைப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை லைடன் தீவு, காரைதீவு, புங்குடுதீவு மக்கள் பெறமுயன்றபொழுதும் 1934 ஆம் அண்டு இடைத்தேர்தல் தவிர எல்லாத் தேர்தல்களிலும் லைடன் தீவைச் சேர்ந்தவர்களே வெற்றிபெற்று இருக்கின்றார்கள். சேர் வைத்திலிங்கம் துரைசாமி, திரு. வி. ஏ. கந்தையா, திரு. கே. பி. இரத்தினம் வேலணையைச் சேர்ந்தவர்கள். திரு. அல்பிரட்தம்பிஐயா, திரு. நவரத்தினம் ஊர்காவற்றுறை – கரம்பன் பகுதியைச் சேர்ந்தவர்கள். காரைதீவைச் சேர்ந்த திரு. ஏ.வி. குலசிங்கம், திரு. ஏ. தியாகராசா 1947 இலும், 1952இலும் இரண்டாம் இடத்தைப் பெற்றார்கள். புங்குடுதீவைச் சேர்ந்த திருவாளர்கள் அமரசிங்கம், அம்பலவாணர், வி.வா. நல்லதம்பி, சோ. சேனாதிராசா, ப. கதிரவேலு ஆகியோருடைய முயற்சியும் கைகூடவில்லை. திரு. அமரசிங்கம் 1934 இலும் திரு. கதிரவேலு 1970 இலும் இரண்டாம் இடத்தைப் பெற்றிருக்கின்றார்கள்.

இத்தொகுதியில் உள்ளூராட்சித் துறையில் ஈடுபட்டுப் பின்னர் பாராளுமன்ற அரசியலுக்கு ஈடுபட முனைந்தவர்கள் திருவாளர்கள் கி.

பாலசிங்கம், ஆ. தியாகராசா, வி.வா. நல்லதம்பி, பா. கதிரவேலு, ஏ.ராஜசூரியர் ஆகியோரே. திரு. பாலசிங்கம் வேலணைக் கிராமசபையின் தலைவராகவும் திரு. தியாகராசா காரைதீவுக் கிராமசபைத் தலைவராகவும் பின்னைய இருவரும் புங்குடுதீவுக் கிராமங்சபைத் தலைவராகவும் இருந்துள்ளனர். திரு. ஏ. ராஜசூரியர் யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினராக இருந்தவர் .இந்நால்வரும் உள்ளூராட்சித் துறையில் ஏற்பட்ட பயிற்சி மூலமே தேசிய அரசியலில் ஈடுபாடு காட்டினரெனலாம். திரு. ஆ. தியாகராசா 1970 இல் வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

1930களிலும், 1940களிலும், தீவுப்பகுதியின் உள்ளூராட்சி, உள்ளூர்த் தலைமைத்துவம், மணியகாரர், உடையார், விதானையார் மற்றும் இவர்களுடைய உறவினர்கள் கையிலுமே இருந்தது. இக்காலத்தில் மானியமுறை சமுதாய அமைப்பு நிலவியதுடன் , நில புலன்களைக் கூடுதலாக இப் பிரிவினரே கொண்டிருந்தனர். 1950களிலும், 1960களிலும், தீவுப்பகுதியின் உள்ளூராட்சி மற்றும் உள்ளூர்த் தலைமைத்துவம் கூடியளவு தமிழ் ஆசிரியர்கள் கைக்கு வந்தது. இவர்களும் விவசாயப் பின்னணியையும்உயர்குலப் பிரிவையும் சேர்ந்தவர்களாக இருந்தது குறிப்பிடத்தக்கது. ஊர்காவற்றுறை, கரம்பன், காரைதீவுப் பகுதியில் கடல் வணிபம், தென்னிலங்கை வியாபார முயற்சிகளில் சிலர் பெரும் பணம் திரட்டிச் செல்வந்தர்களானார்கள். மேலும் இப்பகுதிகளில் புனித அந்தோனியார் கல்லூரியின் மூலம் ஆங்கிலக்கல்வி கற்றவர்களும் குறிப்பிடத்தக்க தொகையில் தோன்றினர். இதனால் புதிய நிலச் சார்பற்ற செல்வந்தப் பிரிவினரும் ஆங்கிலம், கற்ற நடுத்தர வகுப்பினரும் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் காணப்பட்டனர். இப்பிரிவினரே இத்தொகுதியில் 1947 – 1956க்கு இடைப்பட்ட அரசியலில் முக்கியமாக இருந்தார்கள்.

1961 இல் பண்ணைப்பாலம் அமைமக்கப்பட்டதைத் தொடர்ந்து தீவுப்பகுதிகளுக்கும் யாழ்ப்பாண நகரத்துக்கும் இடையே போக்குவரத்து வசதிகளும் தொடர்பும் விருத்திபெற்றதால் தீவுப்பகுதியில் சமூக – பொருளாதார மாற்றங்கள் துரிதமாக ஏற்படத்தொடங்கின. இப்பாலம் அமைக்கப்பட முன்னர் 1950 களில் மாருதப்புரவீகவல்லி என்ற யந்திர பாதை சேவையில் ஈடுபட்டிருந்தது. 1961 இல் அரசாங்கம் தனியார்

பாடசாலைக்களைப் பொறுப்பேற்றதும் ஆசிரியர்கள் அரசியலில் முன்னர் மாதிரி ஈடுபடமுடியாது போய்விட்டது. தமிழாசிரியர்களின் இடத்திற்கு 1960 களில் படித்த இளைஞர்கள் பலர் உள்ளூராட்சி மற்றும் உள்ளூர் தலைமைத்துவத்தில் பல இடங்களைப் பெறத்தொடங்கினார்கள் தீவுப்பகுதி தமிழ் ஆசிரியர்களின் பிள்ளைகள் கல்வியில் முன்னேற்றம் கண்டபொழுதும் அவர்கள் நகர வாழ்வை விரும்பிநின்றதால் கிராமத் தலைமைத்துவம் கவர்ச்சியாக இருக்கவுமில்லை. அதனை அவர்கள் நாடவுமில்லை. மேலும், 1950 ஆம் ஆண்டுகளிலிருந்து தீவுப்பகுதியிலிருந்து குடிவெளியேற்றம் முக்கியமாக இருந்து வருகின்றது. முதலில் வருமானம் குறைந்த குடியானவர்களும் குடியேற்றத் திட்டங்களுக்கும் 1960 களின் பின்னர் மத்திய வகுப்பினரும் யாழ்ப்பாண நகரம் நகரப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். 1960 களின் பின்னர் மத்திய தர வகுப்பினரின் குடிவெளியேற்றம் தொகுதி அரசியலில் பொதுமக்களின் பங்களிப்பை மேலும் அதிகரித்ததெனலாம்.

1970 களில் வியாபாரத்தாலும், விவசாய நடவடிக்கைகளாலும் தீவுப்பகுதி மக்கள் பொருளாதார நிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டிருந்தார்கள். புங்குடுதீவு, நயினாதீவு, மக்கள் வியாபாரத்தாலும் வேலணைத்தீவு மக்கள் குறிப்பாக புகையிலை, மிளகாய்ச் செய்கையாலும் வருமானத்தைத் தேடியதால் இவர்களது வாழ்க்கைத் தரம், உயர்ந்தது. சமூக - பொருளாதார முன்னேற்றத்தால் உயர்வான எதிர்பார்ப்புகள் கூடுதலாகக் காணப்பட்டன. மக்கள் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்வு பொது விடயங்களில் ஒரு சிலர் வகித்த முக்கியத்துவம் குறைவடைந்து பொது மக்களின் பங்குபற்றற் பண்பு அதிகரித்துள்ளது,

தீவுப்பகுதியில் சாதிவேறுபாடுகள் இருந்தபொழுதும் அது குடாநாட்டில் உடுப்பிட்டி, கோப்பாய் தொகுதிகளில் காணப்படும் நிலைபோலில்லை. சமூக நிலையில் ஏற்றவிறக்கங்கள் காணப்படினும, சாதி நிலை வேறுபாட்டுக்கு ஏற்பப் பொருளாதார நிலையில் அதிகளவு வேறுபாடு. இல்லை. எனினும் நில உடைமைகளில் குறிப்பாக விவசாய நிலவுடமையில் நலிந்தோர் பிரிவினர் குறைவான நிலத்தைப் பெற்றுள்ளனர் இவர்கள் தற்பொழுது கூடியளவில் சேவைத் தொழில்களில் ஈடுபட்டு உள்ளார்கள். இதனால் ஆரம்பத்தில் இவர்கள் எதிர்நோக்கிய விவசாயக்காணியில்லாப் பிரச்சினையிலிருந்து தங்களை விடுவித்து வருகின்றனர்.

பொருளாதார ரீதியில் பின்தங்கிய தொகுதியாக இருந்த பொழுதும் ஒவ்வொரு தேர்தல்களிலும், தமிழர் தொடர்பான விடயங்களே முக்கியமாக

இருந்ததெனலாம் தொகுதி அபிவிருத்தி சார்ந்த திறமுறைகள் திட்டங்கள் குறித்துப் பெரிய சர்ச்சைகள் எழவில்லை. இத்தொகுதியில் போட்டியிட்ட அபேட்சகர்கள் பலரும் தீவுப்பகுதியின் போக்குவரத்துத்துறையையும் குடிநீர் விநியோகத்தையும் முன்னேற்றக்கூடிய கவனமெடுக்கப்படுமெனக் கூறுவது வழக்கம்.

1940 களிலும், அதற்கு முன்னரும் ஊர்காவற்றுறை துறைமுகம் நவீன முறையில் விருத்தியாக்கப்படவேண்டுமென்று கோரிக்கை விடுத்து வந்தனர். கப்பல்களின் பருமன் பெரிதாக வந்ததும் சிறு துறைப் பட்டணங்கள் பொதுவாக முக்கியத்துவம் இழந்ததைத் தொடர்ந்து இக்கோரிக்கை பின்னர் கைவிடப்பட்டதாகத் தெரிகின்றது.

கச்சதீவு, கச்சதீவுக் கடற்பரப்பில் வெளிநாட்டார் மீன்பிடி, நயினாதீவு பௌத்த தலமும் யாத்திரிகர் வருகையும், காரைதீவுக் கடற்படைத்தளமும் கடற்பாதுகாப்பு நடவடிக்கைகளும் இத்தொகுதியுடன் தொடர்புபட்டதாக இருந்தபொழுதும் இவ்விடயங்கள் தேசியமட்டத்தில் பெற்ற கவனத்திற்கு ஏற்ப இத் தொகுதியில் குறிப்பாகத் தேர்தல்களில் முக்கிய விடயங்களாக இவை இடம்பெறவில்லை என்பது கவனத்திற்குரியது.

1977ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலின் பின்னர் ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற அங்கத்தவரைத் தெரிவுசெய்ய தேர்தல் ஒன்றும் இடம்பெறவில்லை. 1982இல் பொதுத்தேர்தலுக்குப் பதிலாகப் பாராளுமன்ற ஆயுட்காலத்தை நீடிப்பதற்கான கருத்துக்கணிப்பே இடம்பெற்றது. மேலும் தேர்தல்கள் நேரடியாக ஊர்காவற்றுறைத் தொகுதியுடன் தொடர்புபடாது, மாவட்டத்தின் அங்கமாக அல்லது நாட்டின் அங்கமாகப் குழப்பமான அரசியல் சூழ்நிலையில் இடம்பெற்றதால் இத்தொகுதியில் வாக்களிப்பு விகிதங்கள் 1977இற்கு முன்னைய தேர்தல்களில் இடம்பெற்ற வாக்களிப்பு வீதங்களிலும் பார்க்கப் குறைவாகவேயுள்ளன. 1981, மாவட்ட சபைத் தேர்தல், 1982 முதலாவது ஜனாதிபதி தேர்தல், 1989, எட்டாவது பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றில் மொத்த தேருநர்களில் 50 விகிதத்திற்கு குறைவாகவே வாக்களித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. தேர்தல் பிரசாரங்கள் குறைவாக இடம்பெற்றதும் மக்கள் குறைவாக வாக்களித்ததற்கு முக்கிய காரணமாக இருக்கலாம். எதிர்காலத்தில் சமாதானம், அமைதி, ஏற்பட்டுத் தேர்தல்களில் இப்பகுதி மக்களுடன் நேரடியாகத் தொடர்புபடும் பொழுது வாக்களிப்பு விகிதம் அதிகரிக்கும்.

## உசாத்துணை நூல்கள்

| | |
|---|---|
| The Govt.of Ceylon | Report of the Delimitation commission - 1946 Govt.press - Colombo. |
| | Report of the Delimitation commission - 1959 Govt.press - Colombo. |
| | Report of the Delimitation commission - 1976 Govt.press - Colombo. |
| The Govt.of Sri Lanka | Report of the Delimitation commission - 1980 Govt.press - Colombo. |
| | Report of the Delimitation commission - 1988 Govt.press - Colombo. |
| The Dept.of Election | Results of Parlimentary General Elections in Ceylon - 1970 - Colombo. |
| G.A.H.de Silva | A Statistical Survey of Elections to the legislatures of Sri Lanka 1911 - 1977 Marga Institute - Colombo. |
| K.M.de.Silva | Universial Franchise 1931 - 81 The Sri Lankan Experience Dept.of.Information 1981 Colombo. |
| A.J.Wilson | The Governor General and the two Dissolution of Parliment December 1959 and April 23 1960 The Ceylon Journal of Historical and Social Studies-Vol 3, July-December 1980 No:2 188-207. |
| Sivarajah Ambalavannar | The role of the Federal Party in the Parliment 1966 - 1970. Sri lanka Journal of Social Science Vol.5 (1) June 1982. pp 37-51 |

இலங்கைத் தமிழரசுக் கட்சி வெள்ளி விழா மலர் 1974 திருமகள் அச்சகம், யாழ்ப்பாணம்.


(1986)

# சம்மாந்துறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவின் அபிவிருத்தி

# ஒரு புவியியல் நோக்கு

## பொது அறிமுகம்:

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலமைந்துள்ள 3 மாவட்டங்கள்ளுள் ஒன்றான அம்பாறை மாவட்டம், கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட ஒரு நிலக்குடியேற்ற மாவட்டமாகும். இம்மாவட்டம் இலங்கையின் 24 மாவட்டங்களுள் 5ஆவது பெரிய மாவட்டமாகவும், நெல்லுற்பத்தியில் குருநாகல் மாவட்டத்துக்கு அடுத்தபடியாகவும் விளங்குகின்றது. 1963க்கு முற்பட்ட காலங்களில் இம் மாவட்டத்தின் நிர்வாகப் பகுதிகள் யாவும் மடடக்களப்பு மாவட்டத்துடனேயே சேர்க்கப்பட்டிருந்ததனால் அப்பகுதிகள் பற்றிய தனித்துவமான தரவுகள் முற்பட்ட காலங்களில் பெறமுடியாமலுள்ளதுடன், அம்பாறை மாவட்ட நிர்வாகப் பகுதிகளுக்கான தரவுகள் 1963க்குப் பின்னரே சிறப்பாகப் பெறக்கூடிய தாகவுள்ளன. 1961 ஏப்ரல் மாதம் அம்பாறை மாவட்டம் 09 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைக் கொண்ட ஒரு நிர்வாக மாவட்டமாகப் பிரிக்கப்பட்டது. பின்னர் மொனறாகல மாவட்டத்தினுள்ளிருந்த விந்தனைப்பற்று, வடக்கு, தெற்கு, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும், புதிதாகத் திருக்கோவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் சேர்த்து இன்று 12 உதவி அரச அதிபர் பிரிவுகளைக் கொண்டதாக உள்ளது.

சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவானது 1881ஆம் ஆண்டுகளிலிருந்து எடுக்கப்பட்ட குடிசனக்கணிப்புகளின்படி தனியொரு நிர்வாகப் பிரிவாகவே இருந்து வந்துள்ளது. இப்பிரிவு சம்மாந்துறைப்பற்று, நெடுங்காடுப்பற்று என இரு பற்றுக்களைக் கொண்ட ஒரு காரியாதிகாரி பிரிவாக நிர்வகிக்கப்பட்டுவந்துள்ளது.

இப்பிரதேசம் ஆரம்ப காலங்களில் மட்டக்களப்பு வாவியுடன் இணைக்கப்பட்டதான நீர்வழிப் போக்குவரத்தினைக் கொண்டிருந்ததனால் வர்த்தக ரீதியான நீர்வழிப் பிரயாணங்கள் இதனூடாக இடம் பெற்றன. குறிப்பாகக் கண்டி மன்னர்களுக்குத் தேவையான விவசாயப் பொருட்களை ஏற்றிமிறக்க வும், கண்டி, மன்னர்களிலிருந்து பெறப்பட்ட வாசனைத்

திரவியங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும், முஸ்லீம் வர்த்தகர்கள் பெருமளவு ஆர்வம் காட்டினர். இதன்பின்னணியில் மட்டக்களப்புக் கோட்டையில் நிலைகொண்ட ஐரோப்பியர் படிப்படியாகக் கண்டி மன்னர்களுடனான தொடர்புகளை விஸ்தரிக்க, கல்முனையினைத் தளமாகக் கொண்டு இந்நீர்வழிப் போக்குவரத்தினை நன்கு பயன்படுத்தினர். இதனடிப்படையிலேயே இப்பிரதேசம் சம்மாந்துறை என்ற பெயரைப் பெற்றதுடன், பெருமளவு முஸ்லீம்களைக் கொண்ட ஒரு பிரதேசமாக மாற்றம் பெற்றது. வர்த்தக நோக்கில் குடியேறிய முஸ்லீம் இனம் இன்று கல்முனை, சம்மாந்துறைப் பிரதேசங்களில் தமது தனித்துவத்தை நிலை நிறுத்துமளவுக்கு இத்துறைமுகம் வளர்ச்சியடைந்த போதிலும் இன்று இத்துறைமுகம் பயன்பாடற்று மறைந்துவிட்டநிலை காணப்படுகின்றது.

### *1. 0 நிர்வாக எல்லைகள்:*

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 4538.9 சதுர கிலோமீற்றர் பரப்பளவினைக் கொண்ட அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை உ. அ. அ. பிரிவானது 256.7 கி. மீ பரப்பளவினைக் கொண்டுள்ளது. இது மொத்த மாவட்ட நிலப்பரப்பில் 5. 65% உள்ளடக்கியுள்ளது. கீழ்வரும் அட்டவணை அம்பாறை மாவட்ட உ. அ. அ. பிரிவுகளின் நிலப்பரப்பு அளவுகளைக் காட்டுகின்றது:

### *அம்பாறை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் மொத்த நிலப்பரப்புகள் – 1981*

| பிரிவு | பரப்பு சதுர கிலோ மீற்றர் | வீதம் |
|---|---|---|
| பாணமைப்பற்று | 953.6 | 21.0 |
| பொத்துவில் பற்று | 269.0 | 2.69 |
| திருக்கோவில் | 165.2 | 3.63 |
| அக்கரைப்பற்று | 150.2 | 3.3 |
| அட்டாளைச்சேனை | 64.2 | 1.41 |
| கரவாகுப்பற்று | 27.7 | .61 |
| சம்மாந்துறைப்பற்று | 256.7 | 5.65 |
| வெவகம்பற்று தெற்கு | 384.0 | 8.46 |
| வெவகம்பற்று வடக்கு | 673.1 | 14.82 |
| நிரந்தவூர்ப்பற்று | 47.1 | 1.03 |
| விந்தனைப்பற்று வடக்கு | 697.8 | 15.37 |
| விந்தனைப்பற்று தெற்கு | 850.3 | 18.73 |
| | 4538.9 | 100.00 |

அம்பாறை மாவட்டம் பிரிக்கப்படுவதற்கு முன்பு சம்மாந்துறை உ.அ.அ. பிரிவு 378.88 சதுர கி.மீ. (148.0 சதுர மைல்) பரப்பைக்கொண்ட நிர்வாகப் பிரிவாகக் காணப்பட்டது. கல்லோயா அபிவிருத்தித்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட வேளையில் குறித்த பிரதேசங்கள் கல்லோயா அபிவிருத்திச் சபையின்கீழ் வரையறுக்கப்பட்டது. இதன்படி சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழிருந்த மேற்குப் பகுதிக் கிராமங்கள் பல இச்சபையின் கீழ்க்கொண்டுவரப்பட்டு அச்சபையின் எல்லையே பின்னர் அம்பாறை, சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் நிர்வாக எல்லையாக மாற்றப்பட்டது.

## *கல்லோயா அபிவிருத்திச் சபையின் கீழ்க் கொண்டுவரப்பட்ட சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பகுதிகள்*

| | கிராமங்கள் |
|---|---|
| இல. 85 வரிப்பத்தன் சேனை | சங்கத்துறைக்கிராமம் |
| இல. 89 மல்வத்தை | வளத்தாப்பிட்டி, கொண்ட வெட்டுவான் |
| | காளான் காடு, அம்பாறை |

கிராமங்கள் 03, 09, 10,17,18,19,26
கிராமம் 08ன் ஒரு பகுதி
கிராமம் 16ன் ஒரு பகுதி
கிராமம் 20ன் ஒரு பகுதி

இதன்படி சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவினுள்ளிருந்த 122.18 பரப்புகள் பிரிக்கப்பட்டுள்ளது. இன்றுள்ள நிர்வாக எல்லைகளை நோக்கின்:

வடக்கு – மட்டக்களப்பு மாவட்டம்
மேற்கு – வெவகம் பற்று தெற்கு உ.அ.அ. பிரிவு
தெற்கு – அக்கரைப்பற்று உ.அ.அ. பிரிவு
கிழக்கு – கரவாகுப்பற்று உ.அ.அ. பிரிவு.

இப்பிரிவு வடக்கு–தெற்காக 17மைல்களாகவும் மேற்கு–கிழக்காக 11 மைல்களாகவும் காணப்படுகின்றது. இதன்படி வடக்கேயுள்ள அன்னமலை கிராமசேவகர் பிரிவுக்கும், தெற்கேயுள்ள இறக்காமம் கிராம சேவகர்

பிரிவுக்குமிடையில் 17 மைல்கள் தூர இடைவெளிகள் காணப்படுவதால் இவ் உதவி அரசாங்க அதிபர் பிரிவானது வடக்கு–தெற்காக மிக நீண்ட பிரதேசமாகக் காணப்படுகிறது.

சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின்கீழ் 15 கிராம சேவகர் பிரிவுகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அவை பின்வரும் அட்டவணையில் காணலாம்:

## *சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கிராமசேவகர் பிரிவுகளும் பரப்புகளும்*

| கிராமசேவகர் பிரிவு | பரப்பளவு |
|---|---|
| அன்னமலை | 18.92 |
| நாவிதன்வெளி | 21.48 |
| சவளக்கடை | 24.04 |
| சொறிக்கல்முனை | 23.04 |
| வீரமுனை | 5.12 |
| சம்மாந்துறை தமிழ்ப் பிரிவு | 8.68 |
| நகரப்பகுதி (வட்டாரங்கள்) | 2.56 |
| சம்மாந்துறை மேற்கு | 5.12 |
| உடங்கா | 3.56 |
| சம்மாந்துறை கிழக்கு | 3.56 |
| மல்கம்பிட்டி | 30.16 |
| மல்வத்தை | 18.92 |
| மல்லிகைத்தீவு | 25.04 |
| இறக்காமம் | 35.84 |
| வரிப்பத்தன்சேனை | 28.16 |

இக்கிராமசேவகர் நிர்வாக எல்லைகள் பெருமளவுக்கு இப்பிரதேசத்தின் பௌதீக உறுப்புக்களை அடிப்படையாகக்கொண்டு வகுக்கப்பட்டுள்ளன. வீதிகள், ஆறுகள், கால்வாய்கள், அணைக்கட்டுக்கள், குளங்கள், சேற்று நிலங்கள் என்பனவே எல்லைப்பிரிவுகளின் அடிப்படைக் கூறுகளாகவுள்ளன.

இக்கிராம சேவகர் பிரிவுகளுள் அன்னமலை, நாவிதன்வெளி, சொறிக்கல்முனை, வீரமுனை, மல்வத்தை, மல்லிகைத்தீவு போன்ற கிராம சேவகர் பிரிவுகள் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரிவுகளாகவும், சம்மாந்துறைமேற்கு, நகர்ப்பகுதி, உடங்கா, சம்மாந்துறை கிழக்கு, மல்கம்பிட்டி, இறக்காமம், வரிப்பத்தன் சேனை ஆகியன முஸ்லீம்மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரிவுகளாகவும் உள்ளன. சவளக்கடைப் பிரிவில் இரு இனங்களும் சரிசமமாக வாழ்ந்து வருவதுடன், சம்மாந்துறை தமிழ்ப் பிரிவு, தமிழ் மக்களைப் பிரதிநிதிப்படுத்தியபோதும் அங்கு முஸ்லீம் மக்களே பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இதைவிடச் சிங்கள மக்களும் சவளக்கடை, இறக்காமம், வரிப்பத்தன்சேனை, மல்வத்தை கி.சே.பிரிவுகளில் ஓரளவு வாழ்ந்து வருகின்றனர்.

## 2.0. பௌதீகப் பின்னணி

### 2. 1. தரைத்தோற்றமும் மண்ணும்.

சம்மாந்துறைப் பிரதேசமானது கரையோரத்திலிருந்து சராசரி 30 அடி உயரத்தில் அமைந்துள்ளதுடன், சம்மாந்துறை நகரக் குடியிருப்புப் பிரதேசம் 50 அடி உயரத்தில் காணப்படுகின்றது. இப்பிரதேசம் இலங்கையின் மத்திய மலைத் தொகுதியின் கிழக்குப்பக்கமாக அமைந்துள்ளது. எனவே புவிச்சரிதவியலமைப்பில் இப்பிரதேசம் 500 மில்லியன் ஆண்டுக்கு முற்பட்ட தொல்காலப் பாறைகளால் (கோண்டலைற் பாறை, பளிங்குப்பட்டைப் பாறை) ஆனதாகும். இவ்வன்பாறைப் பிரதேசத்தில் மேற்பரப்பு வடிகால்களே நன்கு விருத்தியடைந்துள்ளன. தீவின் மத்திய மலை நாட்டிலிருந்து கிழக்கு, தென்கிழக்குத் திசைகளில் ஆரைவடிகால் ஒழுங்கில் இவை அமைந்துள்ளன. அத்துடன் 1000அடி சுற்று மேல் உயரமுடைய பல சமதளத்திடைக் குன்றுகள் (மொனாட்டு நொக்கு) காணப்படுவதனால் இங்கு பல நீர்பாசனக் குளங்கள் அணைக்கட்டுகள் மூலம் சேகரிக்கப்பட்டு நீர் பாய்ச்சப்படுகின்றன. சேனநாயக்கா சமுத்திர அணை இத்தகைய குன்றுகளின் உதவியுடனேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

குளங்களின் அணைக்கட்டுக்களின் அமைவினை வைத்து நோக்கும்போது இப்பிரதேச தரைத்தோற்றம், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிப் படிப்படியாகச் சரிந்து செல்கிறது. இதனால் நீர்ப்பாசனம் இங்கு இலகுவானதாக உள்ளதுடன் மேற்பரப்பு வடிகால்கள் செறிவாகக் காணப்படுகின்றன.

இப்பிரதேசம் அதிக நதிகளையும், குளங்களையும் கொண்டுள்ளத னால் நதிகள் சார்ந்த தாழ்நிலங்களிலும், கரையோரப்பகுதிகளிலும் வண்டல்மண் படிவுகள் உள்ளன. இதைவிட கல்சியமற்ற கபில மண்ணே இங்கு அதிக மாகக் காணப்படுகின்றது. குறிப்பாக நெற்செய்கைக்கு வண்டல்மண், செங்கபிலநிறமண், கல்சியமற்ற கபிலநிறமண் போன்றவை சிறப்பாக இங்கு காணப்படுவதனால் நெற்பயிர் செறிவாகச் செய்கை பண்ணப்படுகிறது. மேட்டுநிலங்களில் செங்கபில நிறமண் காணப்படுவதால் மேட்டுநிலப் பயிர்ச்செய்கைக்கும், தோட்டச் செய்கைக்கும் உகந்ததாக உள்ளது.

## 2.2. மேற்பரப்பு நீர்வளம்

### 2.2.1. ஆற்றுவடி நிலங்கள்

சம்மாந்துறைப் பிரதேசத்தின் வன்பாறைப்படை மேற்பரப்பில் மேற்பரப்பு வடிகால்களே நன்கு விருத்தியடைந்துள்ளன. மத்திய மலைநாட்டி லிருந்து கிழக்கு, தென்கிழக்குத் திசைகளில் ஆரைவடிகால் ஒழுங்கில் பல ஆறுகள் இப்பிரதேசத்தினூடாகப் பாய்கின்றன. வரண்ட பிரதேசச் சூழலுக் கேற்ப இவை நன்கு விருத்தியடையா ஆரைவடிகால்களாக உள்ளன. பருவகால வறட்சியின் போது இவை நீரின்றியோ அல்லது மிகக் குறைந்த நீரைக் கொண்டோ காணப்படும். இங்குள்ள வடிகால்களின் விருத்தியையும் அவற்றின் நீர் வெளியேற்றத்தையும் நோக்கும்போது சதுரமைல் பிரதேசத்தில் விளையும் நீரின் மதிப்பீடானது சதுரமைலுக்கு 1000−1500 ஏக் அடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கூடுதலான ஆறுகள் இப்பிரதேசத்தின் தென்பகுதியிலேயே ஓடுகின் றன. குறிப்பாக வரிப்பத்தன் சேனை, இறக்காமம், மல்லிகைத்தீவு, மல்கம்பிட்டி கிராம சேவகர் பிரிவுகளூடாக இவை அதிகமாகப் பாய்வதால் இப்பகுதிகள் கூடுதலான நீரேந்துப் பிரதேசங்களாகவும் வெள்ளப்பெருக்குக்குட்படும் பகுதி களாகவும் உள்ளன. சேனநாயக்கா சமுத்திரம், அம்பாறைக்குளம், வளத்தப்பிட் டிக்குளம் போன்ற நீர் நிலைகளிலிருந்து, நீரேந்து வடிகால்கள் இப்பிரதேசத்தி னூடாகப் பாய்கின்றன. பின்வரும் அட்டவணை சம்மாந்துறைப் பிரிவின் ஆற்றுவடிகால்களின் ஒழுங்குகளை எடுத்துக்காட்டுகிறது:

*சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் ஆற்றுவடிநிலை விபரம்.*

| ஆறுகளின் பெயர் | பாயும் பிரதேசங்கள் |
|---|---|
| 1. அன்டெல்ல ஓயா | –சவளக்கடை, சாளம்பகேணியூடாக. |
| 2. வீரக்கொட குளம் | |
| | கிளை 01 : செறிக்கல்முனை ஊடாக |
| | கிளை 02 : மல்வத்தை, சம்மாந்துறை மேற்கு உடங்கா ஊடாக |
| 3. மொறவில் ஆறு | :வரிப்பத்தன் சேனை, இறக்காமம் ஊடாக |
| 4. கல்ஓயா (வலதுகரை) | :வரிப்பத்தன் சேனை, இறக்காமம் ஊடாக |
| 5. உடங்கா ஆறு | : மல்லிகைத்தீவு |
| 6. சாளம்ப வாய்க்கால் ஆறு | : மல்கம்பிட்டி |
| 7. செங்கபாட ஆறு | |
| 8. மானாவாரி ஆறு | |
| 9. சாவத்தை வாய்க்கால் | : மல்கம்பிட்டி |
| 10. வைரையடி ஆறு | : மல்கம்பிட்டி |

### 2.2.2 குளங்கள்

இப்பிதேசத்தில் 50 ஏக் அடியிலிருந்து 500 ஏக் அடி வரையிலான கொள்ளளவுத்திறன் கொண்ட அடையாளஞ் செய்யப்பட்ட 09 குளங்கள் உள்ளன. இவற்றால் பாசனம் செய்யக்கூடிய பரப்பு 200 ஏக்கர்கள் வரை வேறுபட்டுள்ளது. இவற்றுள் சில குளங்கள் வேறு உ.அ.அ. பிரிவினுள்ளிருந்த போதிலும் அவற்றின் மொத்த நீர்ப்பயன்பாடு சம்மாந்துறைப் பிரிவிற்கே கிடைக்கின்றது. குறிப்பாக, கூயந்தலாவைக் குளம் வெகம்பற்று தெற்குப் பிரிவினுள் அமைந்துள்ளபோதும் அதன் வடிநிலம் சம்மாந்துறைப் பிரிவினுள் அடங்குகின்றது. எனினும் இக்குளங்களினது பராமரிப்பு முகாமைத்துவம் சிறப்பாகக் காணப்படாமையினால் பருவமழை தவிர்ந்த நீருடனும் காணப்படுகின்றன. இப்பிரதேசக் குளங்களின் ஒழுங்கான அமைவைப் பின்வரும் அட்டவணை விளக்குகின்றது:

## சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் குளங்களின் பரம்பல்

| குளங்கள் | பிரதேசம் |
|---|---|
| 1. பெரிய குளம் | சவளக்கடை |
| 2. சிறுக்குளம் | செறிக்கல்முனை |
| 3. கரையாடி குளம் | |
| 4. கூயுந்தலாவை குளம் (நீர்விநியோகம்) | சொறிக்கல்முனை |
| 5. சின்னக் குளம் | செறிக்கல்முனை |
| 6. பெரிய குளம் | மல்வத்தை |
| 7. ஆவரணக்குளம் | மல்லிகைத்தீவு |
| 8. குருவில் குளம் | |
| 9. இறக்காமம் | இறக்காமம் |

இயற்கைத் தாவரத்தைப் பொறுத்தவரை இங்கு தாழ்நில உலர் வகைக் காடுகளே அதிகமாக உள்ளன. இவை பருவ கால வரட்சியைத் தாங்கக் கூடியவையாக உள்ளன. குறிப்பாகப் பாலை, முதிரை, கருங்காலி, சமண்டலை, யாவறனை, புளி, வேம்பு போன்ற மரங்களும் மேட்டு நிலங்களில் புதர்க்காடுகளும் காணப்படுகின்றன. இங்கு தாவரங்கள், குடியிருப்புகள், குடியேற்ற நடவடிக்கைகள், பயிர்ச்செய்கை வீட்டுத்தேவை, விறகுத்தேவை போன்றவற்றுக்காகப் பெருமளவு அழிக்கபட்டதனால் இயற்கைத்தாவரம் அதன் தனித்துவத்தை இழந்துவருகிறது. ஆரம்பத்தில் கல்லோயாத் திட்டத்திற்காக அழிக்கப்பட்டதனால் தற்போது புதர்க்காடுகளே பலவிடங்களில் உள்ளன. தவிர சேனைப்பயிர்ச்செய்கைக்காகக் காடுகள் அழிக்கப்பட்டு அவை பின் கைவிடப்படுவதனால் இங்கு 2ஆந்தரக் காடுகளே அதிகமாக உள்ளன.

### 2. 3 காலநிலை

இப்பிரதேசம் நவம்பர், பெப்ரவரி மாத வடகீழ்ப் பருவக்காற்றின் செல்வாக்குக்குட்பட்ட பகுதியாக உள்ளது. வருடச்சராசரி வெப்பநிலை $80^0$பரனைற் ஆகும். தென்மேல் மொன்சூன் இங்கு வரண்ட காற்றாக வீசுகிறது. இப்பிரதேசம் மலை ஒதுக்குப் பகுதியில் அமைந்துள்ளதனால், இக்காற்று வரட்சியுடையதாகவும் அதிக வெப்பமுடையதாகவும் வீசுவதுடன், இதன் வேகம் 30 கி.மீ. - 40 கி. மீ. வரை காணப்படுகின்றது.

மழைவீழ்ச்சி வடகீழ் மொன்சூன் செல்வாக்கினால் நிர்ணயிக்கப்படுகின்றது. வருடச்சராசரி மழைவீழ்ச்சி 50"–75" ஆக உள்ளது. அதிகமழை பெறும் மாதங்களாக ஒக்டோபர்–பெப்ரவரி வரை காணப்படுகிறது. தவிர மார்ச், ஏப்பரல் மாதங்களில் மேற்காவுகை மழையும், ஒக்டோபர், நவம்பர் பருவங்களில் சூறாவழி மழையினையும் பெறுகின்றது.

காலநிலை நிச்சயமற்ற தன்மையினால் இங்கு ஆண்டு ரீதியாக மட்டுமன்றிப் பருவரீதியாகவும் மழைவீழ்ச்சித் தளம்பல்கள் ஏற்படுகின்றன. வடகீழ் மொன்சூன் பருவம் நவம்பர்–பெப்ரவரி வரைக்குமென வரையறுக்கப்பட் போதும், ஜனவரி – பெப்ரவரி மாதங்களிலேயே அதிகமழை பெறப்படுகிறது. சில காலங்களில் பெப்ரவரியின் பின்னரே பருவமழை செறிவாகப் பெறப்படுவதனால் பருவந்தவறிய வெள்ளப்பெருக்குகள் ஆண்டுக்காண்டு ஏற்படுகின்றன.

தென்மேல் மொன்சூன் வரட்சியின் பின் பருவமழைவீழ்ச்சி ஆரம்பமாவதால் மழைப்பருவ ஆரம்பத்திலேயே காலபோகப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் ஆரம்பமாகின்றன. அம்பாறை நிலையத்தின் 30 வருடகாலச் சராசரி மழைவீழ்ச்சி கீழ்வரும் அட்டவணை மூலம் அறியலாம்:

**_அம்பாறை நிலையம்_**

மழைவீழ்ச்சி ஒழுங்கு (மி. மீ.)

| | ஜன | பெப் | மார்ச் | ஏப்பி | மே |
|---|---|---|---|---|---|
| மொத்த மழைவீழ்ச்சி | 362.0 | 202.67 | 132.18 | 136.48 | 97.07 |
| சராசரி மழைவீழ்ச்சி | 12.0 | 6.75 | 4.40 | 4.54 | 3.30 |

| | ஜுன் | ஜுலை | ஓகஸ்ட் | செப். | ஒக். |
|---|---|---|---|---|---|
| மொத்த மழைவீழ்ச்சி | 37.08 | 46.01 | 76.39 | 81.13 | 219.86 |
| சராசரி மழைவீழ்ச்சி | 1.26 | 1.53 | 2.54 | 2.90 | 7.32 |

| | நவம் | டிசம்பர் |
|---|---|---|
| மொத்த மழைவிழ்ச்சி | 329.53 | 429.2 |
| சராசரி மழைவீழ்ச்சி | 10.98 | 14.30 |

வருட மொத்த மழைவீழ்ச்சியில் 52% நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய 3 மாதங்களுள் கிடைத்துவிடுவதனால் மிகுதி 9 மாதங்களும் மிக நீண்ட வரட்சி உடைய பருவத்தைக் கொண்டதாக இப்பிரதேசம் உள்ளது.

சில ஆண்டுகளில் ஒரு மாதத்தினுள்ளேயே இவ் 52% மழைவீழ்ச்சியும் பெறப்படுகின்றதுடன் பாரிய வெள்ள நிலைமைகளும் ஏற்படுகின்றன.

### 3.0 சமூகப் பின்னணி

#### 3.1 குடித்தொகைப் பரம்பலும், அடர்த்தியும்

சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவானது அம்பாறை மாவட்டத்தில் குறைந்த சன அடர்த்தியைக் கொண்டுள்ளதுடன், குடித்தொகைப் பரம்பலும் சமனற்றதாகப் பரம்பிக் காணப்படுகின்றது. இப்பிரிவின் சதுர கிலோ மீற்றருக்கான சன அடர்த்தி 213 ஆக இருக்க, கரவாகுப்பற்றுப் பிரிவின் சன அடர்த்தி சது.கி. மீற்றருக்கு 2375 ஆக உள்ளது. அதே வேளை சம்மாந்துறை நகரசபைப் பிரிவினுள் சன அடர்த்தி மிக நெருக்கமாகக் காணப்படுகிறது.2.56 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்ட நகரசபைப் பகுதியினுள் 15,248 பேர் வாழ்கின்றனர். இதன்படி நகரசபைப் பகுதியினுள் அடர்த்தி 5956 பேராகக் காணப்படுகிறது.

அதேவேளை இப்பிரிவின் கிராம, நகரப் பரம்பல் அமைப்பில் குடிசனத் தொகையில் 74% (40,551)மானோர் கிராம மக்களாகவே உள்ளனர். மிகுதி 26%மானோரே (15,248) நகர்வாசிகளாக உள்ளனர். இதிலிருந்து இப்பிரதேசம் கூடியளவுக்குக் கிராமியப் பண்பினைக்கொண்ட பிரதேசமாகவும், குறைந்தளவுக்குக் குடியடர்த்தியைக் கொண்ட பிரதேசமாகவும் விளங்குகிறது.

குடியிருப்புகள் வயல் நிலங்களினதும், நிரேந்து தாழ் நிலங்களினதும் காட்டுநிலங்களினதும் நடுவே அமைந்துள்ள மேட்டு நிலங்களில் அமைவு பெற்றனவாகவுள்ளன. ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளினதும் பிரதான குடியிருப்புகள் சிறிய சதுர கி.மீ. பரப்புகளிலேயே அமைந்துள்ளதுடன், பெரம்பாலான குடியிருப்புகள் தனிமைப்படுத்தப்பட்ட குடியிருப்புகளாகக் காணப்படுகின்றன. இக்குடியிருப்புகள் குறைந்தளவிலான போக்குவரத்துத் தொடர்புகளைக் கொண்டுள்ளதுடன் பயிர்விளை நிலங்களால் சூழப்பட்டவையாகவும் காணப்படுகினறன.

குறிப்பாக,

1) கல்முனை – அம்பாறை பிரதான வீதி
2) கல்முனை – மத்தியமுகாம் வீதி
3) சம்மாந்துறை – வெல்லாவெளி வீதி
4) அம்பாறை – அக்கரைப்பற்று (இறக்காமம் ஊடாக) வீதி

போன்ற வீதிகளில் இக்குடியிருப்புகள் அமைவு பெற்றுள்ளன. எனினும் அன்னமலை, நாவிதன்வெளி, சொறிக்கல்முனை, வீரமுனை, சம்மாந்துறை

மேற்கு, மல்வத்தை, சம்மாந்துறை கிழக்கு, மல்லிகைத்தீவு, இறக்காமம் என்பன ஓரளவுக்கு நெருங்கிய குடியிருப்புகளைக் கொண்ட கிராம சேவகர் பிரிவுகளாக உள்ளன. கல்லோயா அபிவிருத்தித் திட்டத்திற்கு முன்னர், அன்னமலை, நாவிதன்வெளி, சொறிக்கல்முனை, வீரமுனை, சம்மாந்துறை, இறக்காமம், வரிப்பத்தன் சேனைப் பகுதிகளிலேயே குடியிருப்புகள் செறிவாக அமைந்திருந்தன. கல்லோயாத்திட்டக் குடியேற்றங்களின் பின் மல்வத்தை, சொறிக்கல்முனை, சவளக்கடை, வரிப்பத்தன்சேனை, இறக்காமம் பிரிவுகளில் குடியேற்றங்கள் நிறுவப்பட்டு ஓரளவுக்குச் செறிவடைந்த குடியிருப்புகளாக இப்பகுதிகள் மாறின.

சம்மாந்துறை நகரசபைப் பகுதியைப் பொறுத்தவரை அதன் சனத்தொகை ஆண்டுக்காண்டு பன்மடங்கு அதிகரித்துவருவதனால் குறைந்தளவு சதுர. கி.மீ. பரப்பளவைக் கொண்ட பகுதியினுள் சனஅடர்த்தி பன்மடங்கு உயர்ந்து வருகின்றது. இந்நிலையில் நகரின் கிடையான வளர்ச்சி அதன் வடக்காகவும், கிழக்காகவும் சேற்று நிலங்களாலும், வயல்நிலங்களாலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மேற்கு, தெற்குத் திசைகளில் இடையாக வளர வேண்டிய நிலை காணப்படுகிறது.

### 3 . 2 குடித்தொகைக்கூட்டு

பெருமளவு விவசாய மூலாதார பொருளாதாரத்தைக் கொண்ட பிரிவாக இப்பிரதேசம் விளங்குவதனால், இப்பிரிவின் குடித்தொகை வயதமைப்பில் 0–15 இடைப்பட்ட வயதினரே கூடுதலான பங்கினைக் கொண்டுள்ளனர். அதிகமான குடும்பங்கள் விவசாய பொருளாதாரத்தை நம்பியுள்ளதனால் இனப்பெருக்கு, குடும்ப அளவு அதிகமாகவேயுள்ளது. இதனால் மொத்தக்குடித்தொகையில் 60%தினர் 15வயதுக் கீழ்ப்பட்டோராக உள்ளனர். இதனால் இப்பிரிவில் தங்கிவாழ்வோர் வீதம் அதிகமாகக் காணப்படுகிறது. தவிர நகரத்தன்மையினை விடக் கிராமியத் தன்மை இங்கு முக்கியமாக நிலவுவதனால் பிள்ளைகளின் தொகை குடும்ப மட்டங்களில் அதிகமாகவேயுள்ளது. விவசாயத்திற்கு அதிக மனித வலு தேவைப்படுதல், போதிய கல்வியறிவின்மை என்பன தங்கிவாழ்வோர் தொகையினை அதிகரித்து வருகின்றன. அதேவேளை சம்மாந்துறை நகர மக்கள் மத்தியில் கூட மேற்கு ஐரோப்பிய நகரின் வாழ்க்கை முறை நிலவரத்தினால் குடும்ப அளவுகள் அதிகமாகவே உள்ளது. இந்நிலையில் இப்பிரிவின் வயதமைப்பில் தங்கி வாழ்வோர் தொகையே அதிகமாக உள்ளது.

சம்மாந்துறைப் பிரிவின் பால் அமைப்பைப் பொறுத்தவரை பெண்களை விட ஆண்களே அதிகமாக உள்ளனர். பின்வரும் அட்டவணை சம்மாந்துறைப் பிரிவின் பால் வேறுபாட்டை விளக்குகிறது:

***சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு – பால்வேறுபாடு 1981***

| | | ஆண் | பெண் |
|---|---|---|---|
| மொத்தம் | *54,789* | *28,207* | *26,582* |
| கிராமம் | *40,551* | *21,040* | *19,511* |
| சம்மாந்துறை நகரசபை | *14,238* | *7,167* | *7,071* |

இங்கு பெண்களின் வீதம் *1000:942* என்ற அளவில் காணப்படுகின்றது. குறிப்பாக நகரப்பகுதிகளில் ஆண், பெண் விகிதம் ஓரளவுக்குச் சமமாகக் காணப்படக் கிராமியப் பகுதிகளிலேயே பெண்களின் விகிதம் குறைவாகக் காணப்படுகின்றது.

இனரீதியான ஒழுங்கமைப்பில் இப்பிரிவானது ஆரம்பகாலங்களிலிருந்து தமிழ், முஸ்லீம் மக்களின் பாரம்பரியப் பகுதிகளாக இருந்துவருகிறது. பிரதேச அடிப்படையில் நோக்கும்போது கல்முனை–அம்பாறை பிரதான வீதிக்குத் தெற்கே முஸ்லீம்கள் பெரும்பான்மையராகவும், வடக்கே தமிழ்மக்கள் பெரும்பான்மையாகவும் வாழ்ந்து வருவதனை அவதானிக்கலாம். குறிப்பாக, அன்னமலை, நாவிதன்வெளி, சொறிக்கல்முனை, வீரமுனை, மல்வத்தை, மல்லிகைத்தீவு, சவளக்கடை கிராம சேவகர் பிரிவுகளில் தமிழ் மக்கள் அதிகமாகவும், சம்மாந்துறை நகரப்பிரிவு, உடங்கா, இறக்காமம், வரிப்பத்தன் சேனை, மல்கம்பிட்டி, சம்மாந்துறை, 3ம், 4ம் குறிச்சிகள் என்பன முஸ்லீம்கள் பெரும்பான்மைப் பிரிவுகளாகவும் உள்ளன.

இந்நிலையில் கல்லோயாக் குடியேற்ற நீர்ப்பாசனத் திட்டத்தின் பின் கணிசமான அளவு சிங்களக் குடியேற்றங்கள் உள்வரக் காரணமாயமைந்தது. இதனால் மல்வத்தை, இறக்காமம், வரிப்பத்தன்சேனை, சவளக்கடை கிராமசேவகர் பிரிவுகளில் சிங்களக் குடியிருப்புகள் அதிகமாகவுள்ளன. குறிப்பாக கரும்புச்செய்கை, நெற்செய்கை விவசாயப்பண்ணைகளை அடிப்படையாக வைத்துச் சிங்களக் குடியிருப்புகள் விஸ்தரிக்கப்பட்டன. இனரீதியிலான அமைப்பினைப் பின்வரும் அட்டவணை மூலம் நோக்கலாம்:

**சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சனத்தொகைப் பரம்பல்**
**இனரீதியில் 1971)**

| இல. உ.அ.அபிரிவு | மொத்தசனத்தொகை | சிங்களம் | இல.தமிழ் | இந்.தமிழ் | இல.சோன | பறங்கி | ஏனையோர் |
|---|---|---|---|---|---|---|---|
| 77. சம்மாந்துறை (தமிழ்ப் பிரிவு) | 1294 | 03 | 141 | 18 | 1111 | 20 | 01 |
| 79. சம்மாந்துறை | 5836 | 10 | 197 | 11 | 5622 | – | 06 |
| 80. சம்மாந்துறை 3ம் குறிச்சி | 865 | 03 | – | 15 | 847 | – | – |
| 81 சம்மாந்துறை 4ம் குறிச்சி | 769 | – | – | – | 769 | – | – |
| 82 மல்கம்பிட்டி | 351 | 01 | 50 | – | 300 | – | – |
| 84. இறக்காமம் | 3115 | 263 | 208 | 17 | 2624 | 03 | – |
| 85. வரிப்பத்தன் சேனை | 1179 | 244 | 14 | 05 | 911 | 04 | 01 |
| 89. மல்வத்தை | 3178 | 164 | 1993 | 22 | 993 | – | 06 |
| 90. சொறிக்கல்முனை | 1891 | 09 | 1540 | 14 | 328 | – | – |
| 93. சவளக்கடை | 3343 | 331 | 1242 | 07 | 1739 | 08 | 16 |
| 94. நாவிதன்வெளி | 4130 | 13 | 2505 | 331 | 1274 | 07 | – |
| 95. அன்னமலை | 1834 | 27 | 1749 | 14 | 53 | – | – |

இனரீதியிலான அமைப்பிலேயே மதரீதியிலான ஒழுங்குகளும் அமைந்துள்ளது. எனினும் .சொறிக்கல்முனை கிராம சேவகர் பிரிவு 25% றோமன் கத்தோலிக்கர்களாக உள்ளனர். ஏனைய கிராம சேவகர் பிரிவுகளில் அவ்வவ்வின அமைப்புகளுக்கேற்ப சமய விகிதாசாரமும் உள்ளது. குறிப்பாக வடபகுதியில் இந்துக்கள் அதிகமாகவும், சம்மாந்துறை நகரப்பகுதி, தென் பகுதிகளில் முஸ்லீம்கள் அதிகமாகவும் உள்ளனர். எனினும் நகரப்பகுதியினுள் சிறிதளவு பறங்கியர்களும் உள்ளனர். ஏனைய மேற்குப்பகுதி குடியேற்றங்களில் பௌத்தர்கள் வாழ்கின்றனர். சம்மாந்துறைத் தமிழ்ப்பிரிவுக் கிராம சேவகர் பிரி வினுள் தமிழ் இந்துக்களை விட முஸ்லீம்களே அதிக எண்ணிக்கையைக் கொண்டவர்களாக உள்ளனர்.

இப்பிரிவின் அமைவு அதனுடைய உள்ளார்ந்த இயற்கை மூல வளங்கள் மனிதவளம் என்பவற்றை வைத்து நோக்குகையில் நன்கு முன்னேறிய செறிவான உயர் விளைச்சலைக் கொண்ட விவசாயப் பிரதேசங்க ளுள் சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு முன்னணி வகிக்கின்ற தெனலாம். இப்பிரதேசத்தின் மொத்த நிலப்பயன்பாட்டில் .03%மே நகர நிலப் பயன்பாட்டிற்குட்பட்டதாக உள்ளது. அதேவேளை இங்கு மொத்த நிலப்பயன்பாட்டில் 84.5% விவசாய நிலங்களாக உள்ளதுடன், 9.6% நீர் நிலைகளாக உள்ளன. இதனடிப்படையில் இப்பிரதேசத்தின் தொழிலில் விவசாயம் பிரதானவிடத்தை வகிக்கின்றது. விவசாயத்தைப் பொறுத்தவரை நெற்செய்கை, கரும்புச்செய்கை, உப உணவுப் பயிர்ச்செய்கை, மேட்டுநிலப் பயிர்ச்செய்கை என்பன பயிரிடப்படுகின்றன. ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளில் வாழும் மக்களின் 90%மானோர் விவசாயிகளாகவே உள்ளனர். போதிய நிலவளம், நீர்வளம், மனிதவளம் இங்கு விவசாயத்தொழிலை ஊக்குவித்துள்ளதுடன், போதிய கல்வி வசதிகளின்மை, பாரம்பரிய தொழில் விருத்தியடையாத கிராமியப் பண்பு என்பனவும் விவசாய பொரும்பான்மைக் குடிக்குச் சாதகமாக அமைந்துள்ளன.

அதேவேளை 26%முடைய நகர்வாழ்வோருக்கு அதிகமானோர் விவசாயத் தொழிலை முதன்மையாகக் கொண்ட நகர் வாழ்வோராக உள்ள னர். நகர வாழ்க்கைமுறை, நகரப் பின்னணி யாவும் விவசாயச் சூழலை மையமாகக் கொண்டதாகவேயுள்ளது. அரச உத்தியோகங்களில் கணிசமான ளவு தொகையினர் ஈடுபட்டுள்ளபோதிலும், விவசாயம் பகுதிநேரத் தொழிலாகக்

காணப்படுகிறது. எனவே சம்மாந்துறை நகரம், விவசாயத்துக்கான சேவையினை வழங்கும் ஒரு நகரமாக விளங்குகிறது.

விவசாயத்தைத் தவிரக் கூடியளவு நன்னீர் நிலைகள் இப்பிரதேசத்தில் காணப்படுவதனால் நன்னீர் மீன்பிடியும் முக்கியமான தொழிலாக உள்ளது. தவிரச் சிறந்த கனிவளம், நீர்வளம் உள்ளதால் செங்கல் அறுப்பு, சட்டி, மட்பாண்டச் சிறுகைத்தொழில்கள் அன்னமலை, நாவிதன்வெளி, இறக்காமம், வரிப்பத்தன்சேனை, மல்லிகைத்தீவு கிராம சேவகர் பிரிவுகளில் சிறப்பாக நடைபெறுகின்றன. அத்துடன், ஏற்ற புல்நிலம் (மொத்த நிலப்பயன்பாட்டில் 2.83%) உள்ளதனால் மந்தை வளர்ப்பும், கால்நடைவளர்ப்பும் சிறப்பாக உள்ளன. அன்னமலை, நாவிதன்வெளி, சவளக்கடை, சொறிக்கல்முனை, இறக்காமம், வரிப்பத்தன்சேனை, மல்வத்தை, மல்லிகைத்தீவு கிராமசேவகர் பிரிவுகளில் மந்தை வளர்ப்பு, பாலுற்பத்தி குறிப்பிட்ட தொழிலாக உள்ளது. சிறந்த காட்டுவளம் உள்ளதால் விறகு, மரம்அரிதல், மர உற்பத்தி என்பனவும் குறிப்பிட்ட தொழிலாக உள்ளது.

விவசாயம் இங்கு பிரதான தொழிலாக உள்ளபோதும் இங்குள்ள மக்கள் அனைவருக்கும் போதிய நிலவுடைமை உள்ளதெனக் கூறமுடியாது. அதிகளவு நிலங்கள் சில முதலாளிகளின் கைகளிலேயே உள்ளன. இந்நிலையில் பயிர் விதைக்கும் பருவம் தொடங்கி அறுவடை செய்யும் வரையுள்ள காலங்களுக்கிடையில் மக்கள் உழுதல், நாற்றுநடுதல், களைபிடுங்குதல், நாசினி தெளித்தல், காவல் காத்தல், பசளையிடல், அறுவடை செய்தல், சூடடித்தல் போன்ற விவசாயம் சார் பல்வேறு தொழில்களில் கூலிகளாக அமர்த்தப்படுகின்றனர். பருவம் முடிவடைந்த பின் அதிக மக்கள் பருவகால வேலையற்றவர்களாக உள்ளதுடன், இக்காலங்களில் வேறு தொழில் நாடி, வேறிடங்களுக்குத் தற்காலிகமாக இடம் பெயரும் பண்பு காணப்படுகின்றது.

வளர்ந்துவரும் இக்கிராம விவசாயப் பண்பினால் கல்வி மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. ஏனெனில் இங்கு கல்வி கற்பதனை விட விவசாயக் கூலிகளாக மாறுவதற்கு அதிக அறிவு தேவைப்படாததால் அதிக மக்கள் உடலுழைப்பில் இறங்கி விடுகின்றனர். குறைந்த வாழ்க்கைத்தரம், கிராமிய சமூகப் பின்னணி, குறைந்த வருமானம்,

பொருளாதார வசதிகளின்மை, என்பன போதிய கல்வி வாய்ப்பைப் பெற முடியாமலுள்ளன. அன்றாட ஜீவனோபாயத்துக்கு உழைப்பதே பெரும்பாலான மக்களின் தேவையாக உள்ளதனால் கல்வி விருத்தி அவசியமாகப்படவில்லை. இப்பகுதியின் 5 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளில் ஒவ்வொரு வருடமும் 98%மான பிள்ளைகள் பாடசாலைகளில் சேர்க்கப்படுகின்றனர். ஆனால் பெற்றோர் கவனமின்மை, பிள்ளைகள் ஆர்வமின்மையினால் இத்தொகை படிப்படியாக வீழ்ச்சியடைந்து 5ஆம் வகுப்பில் 2% அல்லது 3%மாகக் குறைவடைகிறது. இச் சிறுதொகையினரே 5ஆம் வகுப்புக்கு மேல் கல்வியைத் தொடர்கின்றனர். ஆனால் இவர்களில் பல இளவயதுத் திருமணங்கள், கூலிவேலைகள், வீட்டுவேலைகள் என்பவற்றினால் இடைநிறுத்தப்படுவதனால் உயர்கல்வியைப் பெறுவோர் மிகக் குறைவாகவே உள்ளனர். 10ஆம் வகுப்புக்கு மேல் 5% குறைவானோரே உயர் கல்வி பெறுகின்றனர். எனினும் சம்மாந்துறை நகரப்பகுதி மக்களே ஓரளவு உயர்கல்வியில் நாட்டமுடையோராக உள்ளதுடன், ஏனைய கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து உயர்கல்வி பெறுவோர் மிகக்குறைவாகவே காணப்படுகின்றனர். எனவே இங்கு கல்வி விருத்தி மிகப் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

குடும்ப அமைப்பை நோக்குகையில் கூட்டுக்குடும்ப அமைப்பே அதிகமாக உள்ளது. குடும்பங்களின் சராசரி அளவு 5பேரைக் கொண்டவையாக உள்ளன. கிராமியப் பண்பினைக் கொண்ட இப்பிரிவில் குடும்பக்கட்டுப்பாடு மிகக்குறை வாகவே உள்ளது. கல்வியறிவின்மை, போதிய மருத்துவ அறிவின்மையினால் குடும்ப அளவு அதிகமாகவே உள்ளது. சம்மாந்துறை நகரப்பகுதியிலும் முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக உள்ளதனால் அவர்களது சமூக அமைப்பும், பெரிய குடும்ப அளவுகளைக் கொண்டதாக உள்ளது. நாகரிகத்துக்கேற்ற தனிக்குடும்ப அமைப்பு இங்கு காணப்படவில்லை.

### 3.3 குடித்தொகை இயக்கம்:

சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிறப்பு, இறப்பு என்பன ஆரம்பகாலங்களில் மிக உயர்வாகவே காணப்பட்டுள்ளன. இப்பகுதி ஆரம்ப காலங்களில் மிக அடர்ந்த காட்டுப் பகுதிகளாக விளங்கியதனால் காட்டு நோய்களின் பரவல், பாம்புக்கடி என்பன தீவிர இறப்புக் காரணிகளாக விளங்கியுள்ளன. போதிய கல்வியறிவின்மை, விவசாய அமைப்பு என்பன

பிறப்பு வீதத்தினை அதிகரித்தபோதும், போதிய மருத்துவ, சுகாதார வசதிகள் காணப்படாமையினால் சிசுமரணம் 1000:48 ஆகக் .காணப்பட்டுள்ளதுடன், தாய் மரணங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. கல்லோயா குடியேற்ற விருத்தியின் பின் மருத்துவ, சுகாதார ஏனைய சமூக நல வசதிகள் ஓரளவு இப்பிரதேசத்தில் விஸ்தரிக்கப்பட்டதனால் பிறப்பு, இறப்பு வீதங்கள் கணிசமான அளவு குறைவடைந்தன. எனினும் புதிதான குடியேற்றப் பிரதேசங்களில் திடீர் சூழல் மாற்றத்தினால் புதிய நோய்களும் இங்கு காணப்பட்டு வந்துள்ளன. அத்துடன் விவசாய களை நாசினிகள், உரப்பாவனைகள் அதிகமாக உள்ள தால் பல்வேறுபட்ட வியாதிகள், தற்கொலைகள், சடுதி மரணங்களுக்கு இவை காரணிகளாக இருந்து வருகின்றன.

அண்மைக்காலங்களில் இறப்புவீதம் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளபோதிலும் பிறப்பு வீதம் அதிகமாகவே உள்ளது. சம்மாந்துறை நகர சமூக அமைப்பு விருத்தியடையாத அமைப்பிலுள்ளதனால் பிறப்பு வீதம் அதிகமாகவே உள்ளது. இப்பிறப்பு வீதம் சமூகத்துக்குச் சமூகம் வேறுபட்டதாகவே உள்ளது. இங்கு தமிழ் மக்களைவிட முஸ்லீம் மக்களிடையே பிறப்பு வீதம் அதிகமாக உள்ளது. குறிப்பாகச் சம்மாந்துறை நகரப்பகுதி, சம்மாந்துறை கிழக்கு, மேற்கு, உடங்கா, இறக்காமம், மல்கம்பிட்டி, வரிப்பத்தன்சேனை, சவளக்கடை, கிராம சேவகர் பிரிவுகளில் பிறப்பு வீதம் அதிகமாவே உளளது. இதனடிப்படையில் நோக்கும்போது சமூக அமைப்பு இங்கு முக்கியம் வகிப்பதனைக் காணலாம்.

இடப்பெயர்வினை நோக்குகையில் சர்வதேச இடப்பெயர்வினை விட உள்ளூர் இடப்பெயர்வே முக்கியமாக உள்ளது. குறிப்பாகப் பருவகால வேலையின்மை காரணமாக வேறு பகுதிகளுக்கு இடம் பெயரல் கல்வி வசதிக்காகவும், அரச தொழில்களுக்காகவும், வேறு பகுதிகளுக்குச் செல்லல் போன்ற கணிசமான இடப்பெயர்வுகள் உள்ளன. தவிர, சேனைப் பயிர்ச்செய் கைக்காக அக்கரைப்பற்று, பொத்துவில், அம்பாறைப் பிரதேசங்களுக்கு இடம் பெயரும் பண்பும் காணப்படுகிறது.

வடகீழ் மொன்சூன் காலங்களில் ஏற்படும் வெள்ள நிலைமைகளி னால் தற்காலிக இடப்பெயர்வுகளும் ஏற்படுகின்றன. வெள்ள நிலைமைகளி னால் வாழ்விடப் பாதிப்பு, போக்குவரத்துத் துண்டிப்பு, அத்தியாவசிய தேவைகள் பாதிப்பு நிலவுவதனால் மக்கள் முன்னமே இடம்பெயரும் தன்மை

காணப்படுகிறது. இவை தவிர அடிக்கடி இடம்பெறும் இனக்கலவரங்களும் இடப்பெயர்வில் கணிச பங்கினைக் கொண்டுள்ளன. எனினும் ஏனைய பிரதேசங்களைப்போல் இங்கு இடப்பெயர்வு முற்று முழுதாக இடம்பெறவில்லையெனலாம்.

### 4.0 பொருளாதாரப் பின்னணி

சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பொருளாதாரம் முழுக்க முழுக்க விவசாயத்துறையினைச் சார்ந்ததாகவே காணப்படுகிறது. இப்பிரதேசத்தின் வளங்கள் விவசாயத்துறையினை மேலும் விருத்தியுறச் செய்வதாகக் காணப்படுகிறது. இப்பிரதேச நிலப்பயன்பாட்டில் 85% விவசாயத்துக்குட்பட்ட நிலங்களாக உள்ளதால் பொருளாதாரப் பின்னணியும் அதன் செறிவிலேயே தங்கியுள்ளது. பின்வரும் அட்டவணை இப்பிரதேச நிலப்பயன்பாட்டினை விளக்குகின்றது:

**_சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் நிலப்பயன்பாடு_**

| வகை | | மொத்த ஹெக்ரேயர் | வீதம் | மொத்தமாவட்டம் |
|---|---|---|---|---|
| நகர நிலம் பயன்படுத்தப்பட்டநிலம் | | 10 | .03 | 200 |
| விவசாய நிலம் | 1. வீட்டுத்தோட்டம் | 2300 | 9.18 | 17910 |
| | 2. பயிர்நிலம் | 15480 | 61.8 | 55850 |
| நெல் குறைந்தஅளவு பயிரிடப்பட்ட நிலம் | | 1650 | 6.59 | 127720 |
| | கரும்பு | 1740 | 6.95 | 7630 |
| காட்டுநிலம் | இயற்கை காடு | 20 | 0.07 | 29500 |
| புல்நிலம் | 1.பற்றைகள் | 690 | 2.83 | 334110 |
| | 2.புல்நிலம் | | | |
| ஈரநிலம் சதுப்பு நிலம் | | 670 | 2.67 | 110 |
| நீர் | | 2420 | 9.6 | 19280 |
| தரிசு நிலம் | | 11270 | 5.07 | 6800 |
| | | 25030 | 100 | 443210 |

### 4 . 1 *விவசாயம்*

குறைந்த முதலுடன் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள ஏராளமான விவசாயிகளையும், அதிக அளவு சிற்றுடைமைகளையும், சுயதேவைப்பூர்த்தியினை யும் முக்கியமாகக்கொண்டு காணப்படுகின்றது.

இங்கு நெற்செய்கை பிரதானமாகவும் மேட்டுநிலப்பகுதிகளில் உப உணவுப் பயிர்ச்செய்கையும் முக்கியமாகக் காணப்படுகின்றன. இங்கு பெரும்போக மானாவாரி பருவமழையை நம்பியதாக நடைபெறுவதுடன், சிறுபோகம் நீர்ப்பாசனம் மூலம் நடைபெறுகிறது. பெரும்போகம் சித்திரை–ஆவணி மாதப் பருவங்களிலும் சிறுபோகம் ஐப்பசி–பங்குனி மாதப் பருவகாலங்களிலும் செய்கை பண்ணப்படுகிறது.

நெற்செய்கையைப் பொறுத்தவரை இப்பிரிவின் மொத்த நிலப் பயன் பாட்டில்61.8% நிலப்பரப்பில் செய்கைபண்ணப்படுவதுடன் மாவட்ட மொத்த விளைபரப்பில் 27.7%தை இப்பிரிவு வழங்குகிறது. எனவே நெற்செய்கை இங்கு பிரதானவிடத்தை வகிக்கிறது. ஆயினும் நிலவுடமையானது குறிப்பிட்ட சிலரிடமே குவிந்து காணப்பட, அதிகமக்கள் நிலமற்றோராகக் காணப்படு கின்றனர். குறிப்பாக இங்கு கண்டங்கள் என்ற பெயரில் தனிப்பட்ட முதலாளிகளின் கீழ் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் காணப்படுகின்றன. மல்வத்தை, மல்கம்பிட்டி, இறக்காமம், மல்லிகைத்தீவு, வரிப்பத்தன்சேனை, உடங்கா கிராம சேவகர் பிரிவுகளில் இத்தகைய தனியுடைமை நில ஆதிக்கம் அதிகமாகக் காணப்படுகிறது.

செய்கைமுறையானது ஆரம்பகாலங்களில் பாரம்பரிய முறையில மைந்த போதும், இன்று கூடியளவுக்கு இயந்திரமயப்படுத்தப்பட்டதாக இங்கு காணப்படுகிறது. உழவு, விதைப்பு, சூடடிப்புப் போன்றன யாவும் இயந்திர உதவியுடன் நடைபெறுகின்றன. எனினும் தாழ்நில, சதுப்புநிலப் பகுதிகளில் மிருக உழவுடன் செய்கை நடைபெறுவதைக் காணலாம். சொறிக்கல்முனை, அன்னமலை, நாவிதன்வெளிப் பகுதிகளில் இவ்விதைப்பி னைக் காணலம். தவிர நடுகை, களைபிடுங்கல், அறுவடை என்பனவற்றுக்கு அதிகளவான மனிதவலு பயன்படுத்தப்படுகின்றது.

இங்கு விவசாயம் சிறப்பாக அமைகின்றபோதும் ஆண்டுக்காண்டு இடம் பெறும் இயற்கையழிவுகளின் தாக்கம் பலமடங்கு பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றன. குறிப்பாக வெள்ளப்பெருக்கு, வரட்சி, நோய்கள் என்பன மாறிமாறிப் பயிர்ச்செய்கையினைப் பாதித்துவருகின்றன.

இப்பிரதேசம் நீர்ப்பற்றாக்குறை ஏற்படுவது போல வெள்ளப்பெருக் காலும் பாதிக்கப்படுகிறது. இதனால் பயிர்ச்செய்கை, போக்குவரத்து, குடியிருப்புகள் பாதிக்கப்படுகின்றன. வெள்ளப்பெருக்கினால் பயிர்வளர்ச்சி

தடைப்படல், அழுகுதல், வாடுதல் என்பன ஏற்பட்டு விவசாயப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

பருவகால வேறுபாடுகளினால் வெள்ளம் அடிக்கடி ஏற்படுகிறது. நவம்பர்–பெப்ரவரி பருவத்தில் வடகீழ் மொன்சூன் செல்வாக்கு நிலவினாலும் சில நாட்களில் 24 மணித்தியாலத்துக்குள் 5" வரையிலான மழை வீழ்ச்சியும் பெறப்படுகின்றது. குறுகிய காலத்தினுள் கூடிய மழைவீழ்ச்சி பெறப்படுவதனால் ஆறுகள், குளங்கள், பெருக்கெடுத்தலுடன், சில குளங்கள் ஆழமின்மையினால் உடைப்பெடுத்துவிடுகின்றன. அத்துடன் நீர்த்தேக்கங்களுக்கருகிலுள்ள காடுகளை வெட்டுதல், நிலப்பகுதிகளை நெற்செய்கைக்காகப் பயன்படுத்தல் போன்றவற்றினால் மண்ணரிமானம் ஏற்பட்டு ஆற்றுப்படுக்கைகளில் வெள்ளப்பெருக்கேற்பட்டு, பயிர் நிலங்களை நிறைத்துவிடுகின்றன.

இதனால் இங்கு விதைப்புக் காலங்களில் வெள்ளம் ஏற்பட்டு, தானியங்கள் பழுதடைவதுடன், அறுவடை காலங்களிலும் வெள்ளம் ஏற்பட்டு நெற்கள் பாழாகின்றன. இதனால் நெல்லைச் சந்தைப்படுத்தலோ, விதைநெல்லுக்காகப் பயன்படுத்தவோ முடியாத பிரச்சினை ஏற்படுகிறது. வெள்ளப்பெருக்கு இங்கு வருடா வருடம் ஏற்படுகிறது. 1920லிருந்து அவதானிக்கையில் 1921, 27, 31, 33, 37, 38, 41, 42, 44, 46, 49, 57, 83, 85, 87, 89 ஆகிய ஆண்டுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வரட்சிநிலை 1920, 22, 23, 24, 25, 26, 28, 29, 30, 32, 34, 35, 39, 40, 43, 45, 47, 48, 50, 52, 53, 81, 83, 86, 89 காலங்களில் மோசமாக ஏற்பட்டது.

1960–70 வரையுள்ள காலப்பகுதியுள் வெள்ளப்பெருக்குக் குறை வாகவே ஏற்பட்டுள்ளது. இங்கு வரட்சி முதலாமிடத்தையும், விவசாய நோய்கள் 2ஆம் இடத்தையும் வெள்ளம் 3ஆம் இடத்தையும் வகிக்கின்றன. வரட்சிக்கு நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தினால் தவிர்த்துக்கொள்ளலாம். ஆனால் வெள்ளப்பெருக்கு ஏற்படின் வடிகாலமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தான் ஓரளவு குறைத்துக்கொள்ளலாமே தவிர, முற்றாகத் தவிர்க்க முடியாது. இங்கு வெள்ளப்பெருக்குக்கான மாற்று நடவடிக்கை குறைவாக உள்ளதனால் வெள்ளமேற்படின் அழிவு நிச்சயமாகிவிடுகிறது.

மாறாக, சராசரி மழைவிழ்ச்சியினை விடக் குறைவாக மழைவீழ்ச்சி பெறப்படின், வரட்சி நிலவுகிறது. இக்காலங்களில் இங்கு நீர்ப்பாசனமூலம் செய்கைபண்ணப்படுகிறது. நீர்ப்பாசனமும் குளங்களும் நீர்ச் சேமிப்பிலும் அது பருவமழை வீழ்ச்சியிலுமே தங்கியுள்ளது. இப்பிரதேசத்தின் உள்ளார்ந்த குளங்கள் சிறப்பாகப் பராமரிக்கப்படாமையினால் அவற்றின் பயன்பாடின்றியே காணப்படுகின்றன. இதனால் வரட்சிக் காலங்களில் நிர் வற்றிக் காய்நதோ குறைந்த நீருடனோ காணப்படுகின்றன. அநேகமான குளங்கள் ஆழமற்ற வையாகவும் காடு வளர்ந்து மூடியும் மிருகங்களால் சிதைக்கப்பட்டும், அணைக்கட்டுகள் உடைந்து தூர்ந்த நிலைகளிலும் காணப்படுகின்றன. நீர்ப்பாசன வாய்க்கால்கள் சிதைந்த நிலைகளிலும் உள்ளன. இந்நிலையில் ஒழுங்கற்ற நீர்முகாமை, பராமரிப்பு, பாதுகாப்பின்மையினால் இங்கு வரட்சி, பாதிப்பு பிரதானவிடத்தை வகிக்கிறது.

தவிர எரிபந்தம், பற்றீரியா, பற்றீரியாக் காடுகள், வெளிறுதல், ரங்கினோ வைரசு, புற்பரட்டை போன்ற பிரதான நோய்கள் இங்குள்ளன. இவை விளைவினை 20%–80% வரை பாதிக்கின்றன. இவற்றுள் பொதுவாக விவசாய நோய்கள் கபில நிறத்துண்டு தத்தி, எரிபந்தம், வெடிப்பூச்சிகள், பங்கசு, மடல் வெளிறல், நெல் ஈ, ஐங்கோணமூட்டுப்பூச்சி இவை மடிச்சுக் கட்டி, பற்றீரியா, புழுக்கள், வண்டுகள், களஞ்சியப்பீடைகள் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இங்கு அதிகமாகத் தாக்கும் நோய் கபிலநிறத்தத்தி, ஏரிபந்தம் என்பனவாகும். கபிலநிறத்தண்டு தத்தியை இங்கு அறக்கொட்டியன் என்பர். இது 1969இன் பின்னர்தான் இங்கு ஏற்பட்டது. இது மிக மோசமாகப் பாதித்து நெற்பயிரை அழிக்கின்றது. 1944, 1979–80, 1989ல் இதன் அழிவு இங்கு மிகப் பாரிய அளவில் ஏற்பட்டுள்ளது. இதற்கு உயர் அடர்த்தி, இவை களின் வளர்ச்சி, நிலையானதண்ணீர், உரப்பாவனை எனபன பிரதான காரணிகளாகும்.

### நெற்செய்கை – 1981 ஏக்கர்களில்

| | சிறுபோகம் | பெரும்போகம் |
|---|---|---|
| சம்மாந்துறை | 21000 | 25000 |
| அம்பாறைமாவட்டம் | 85887 | 122285 |

வரட்சிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் வரட்சியைத் தாங்கக்கூடிய பயிர்களைத் தெரிவு, செய்தல் முக்கியமானதாகும். குறைந்தளவு நீரில் கூடிய விளைச்சலைப் பெற்றுத்தரக் கூடிய பயிர்களைத் தெரிவு செய்வதன் மூலம் வரட்சியின் தாக்கத்தைக் குறைக்க முடியும். 4 மாத நெல்லினத்தை விட 3மாத இனம் விரைவில் அறுவடை செய்யலாம். அத்துடன் குறைந்த அளவு நீரைக் கொள்ளும் பயறு, சோயா, உழுந்து, நிலக்கடலை என்பனவற்றை உற்பத்தி செய்யலாம். 1ஏக். நெல் உற்பத்தி செய்ய 5'' ஏக் நீர் தேவைப்பட தானிய உபஉணவுப் பயிர்செய்கைக்கு 1 ஏக்கருக்கு 2 1/2' ஏக். நீர் தேவைப்படும். எனவே மரவள்ளி, வற்றாளை, சோளம், பயறு, சோயா, குரக்கன், உழுந்து போன்ற பயிரினங்கள் வரட்சியைத் தாங்கக்கூடியனவாகும். அதேபோல்,

1. குளங்களைப் புனரமைத்தல்

2. தரைமேல் நீர்ப்பாய்ச்சும் நடைமுறைகளை விடுத்துக் கால்வாய் மூலம் பாய்ச்சுதல் போன்றன நீர்ப் பயன்பாட்டினை அதிகரிக்கலாம். தவிர மேட்டு நிலப்பகுதியில் நிலநீரைக் கண்டுபிடித்துக் குழாய்க் கிணறுகளை அமைத்து குடிநீர் வசதிகளை ஏற்படுத்தலாம். இங்கு நீர்ப் பாதுகாப்பு, நீர் முகாமைத்துவம் அவசியமாகும்.

இங்கு நீர்ப்பாவனை அதிகமாகும். பெரும்போகத்தில் ஒரு ஏக்கருக்கு 3 ஏக்கர் அடி போதுமானது. ஆனால் பொதுவாக 18 ஏக். அடி நீர் பாவிக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு இதனைச் செய்கை முறைமூலம் விளங்க வைக்கவேண்டும். நீர் வளத்தைப் பாதுகாப்பதற்கு உதவும் நடவடிக்கைகளாக நீர்ப் பிரிநிலப் பிரதேசங்களைக் கவனமாகவும், முறையாகவும் பராமரித்தல் வேண்டும். இலங்கையின் நெல் உற்பத்தியில் 2ஆம் இடம் வகிக்கும் இம் மாவட்டத்துக்கு நீர்ப்பாசன வசதியை அதிகரிப்பது பயிர் விளைவு, தரிசு நிலப்பயன்பாடு என்பனவற்றுக்கு ஏதுவாகும்.

### 4.2 கைத்தொழில்

இப்பிரதேசத்தில் பாரிய கைத்தொழில்களுக்கேற்பக் கனிப்பொருட்கள் காணப்படாமையினால், நடுத்தர சிறு குடிசைக் கைத்தொழில்களே ஓரளவு விருத்தி பெற்றுள்ளன. சிறப்பாக விவசாயம்சார் தொழில்களே முக்கியமாக உள்ளன. நெற்செய்கை பிரதானவிடம் வகிப்பதனால், அரிசி ஆலைகள் பல இங்கு தொழிற்படுகின்றன. சவளக்கடை அரிசி ஆலை, பிரித்தானியரினால் நிறுவப்பட்டதாகும். இது இலங்கையிலேயே மிகப் பிரதான அரிசி ஆலை

களுள் ஒன்றாகும். தற்போது இவ்வாலை இயக்கமற்ற நிலையில் காணப்படு கின்றது. தவிர சம்மாந்துறைப் பகுதியில் பல. அரிசி ஆலைகள் முக்கிய தொழிலாக மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் வாழைச்சேனை காகித ஆலைக்கு வைக்கோல் வழங்கும் நிலையங்களுள் ஒன்று சம்மாந்துறையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் இப்பிரதேச வைக்கோல்களைச் சேகரித்து வழங்கும் ஒரு முக்கிய கைத்தொழிலை மேற்கொண்டு வருகிறது.

தவிர, போதிய களிமண், நீர்வசதி காணப்படுவதனால் செங்கல் அறுப்பு, மட்பாண்ட உற்பத்திகள் கணிசமானளவு இடம்பெற்றுவருகின்றன. இறக்காமம், வரிப்பத்தன் சேனை, அன்னமலை, நாவிதன்வெளி கிராமசேவகர் பகுதிகளில் இத்தொழில் முக்கியவிடம் வகிக்கின்றது. இவற்றுடன் பாய் பின்னல், பன்னவேலைகள் சிறப்பாக இங்கு இடம்பெறுகின்றன. மரத்தளபாட உற்பத்திகள், விறகு அரிதல் என்பனவும் குறிப்பிட்ட கைத்தொழில்களாக உள்ளன. தவிர கல் உடைத்தல் தொழில் இறக்காமம், வரிப்பத்தன் சேனைப் பகுதிகளில் ஓரளவுக்கு இடம்பெற்றுவருகிறது.

இவ்வாறு உள்ளூர் மூலவளம் இங்கு சிறப்பாக அமையப்பெற்றுள்ள போதிலும் அவை பூரணமாகப் பயன்படுத்தப்படவில்லையெனலாம்.

### *4.3 சேவைத்துறை:*

சேவைத்துறையினுள் போக்குவரத்து, தொலைத்தொடர்பு, மின்சாரம், வர்த்தகநிலையங்கள், நிர்வாக நிலையங்களின் வசதிகள் இப்பிரிவில் மிகப் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. ஒரேயொரு பிரதான வீதியே (கல்முனை–அம்பாறை) சம்மாந்துறையினூடாகச் செல்கிறது. இப்பிரதான வீதியில் சம்மாந்துறை நகரமும், மல்வத்தை கிராம சேவகர் பிரிவுக் குடியிருப்பும் அமைந்துள்ளன. ஏனைய கிராம சேவகர் பிரிவுகள் உள்ள தாழ்நிலங்களில் அமைந்துள்ளதுடன் இவைகளுக்கிடையிலான போக்குரத்துப் பாதைகள் வெறும் வண்டில் பாதைகளாகவும், நடைபாதைகளாகவும் உள்ளன. வெல்லாவெளி, சம்மாந்துறை வீதியில் சொறிக்கல்முனை, வீரமுனை, சவளக்கடை என்பன அமைந்துள்ளன.

சம்மாந்துறை உதவி, அரசாங்க அதிபர் பிரிவின் உள்ளார்ந்த, பௌதீக, மனிதவளங்களும் பொருளாதாரச் செயற்பாடுகளும் பற்றி ஆராயப்பட்

டுள்ளன. இவ்விரண்டு வளங்களையும் இணைத்து, சரியான முறையில் அபிவிருத்தித். திட்டங்கள் முன்னெடுக்கப்படுமாயின், பெருளாதார ரீதியில் பின்தங்கி நிற்கும் இப்பிரதேசம் பலதுறைகளில் வளர்ச்சி பெற வாய்ப்புக்கிட்டும் எனலாம்.

## *சம்மாந்துறை உ. அ. அதிபர் பிரிவின் கிராமசேவகர் பிரிவுகளும் கிராமங்களும்.*

இல.

| | |
|---|---|
| 77, 79 | தமிழ்க்குறிஞ்சி |
| | சம்மாந்துறை 1ஆம் வட்டாரம் |
| 79, 72 | வீரமுனை |
| | சம்மாந்துறை 3ஆம் வட்டாரம், 2ஆம், 4ஆம் குறிச்சி |
| 80 | 3ஆம் குறிச்சி சம்மாந்துறை |
| | சம்மாந்துறை 1ஆம் வட்டாரம். |
| 81 | 4ஆம் குறிச்சி சம்மாந்துறை |
| | சம்மாந்துறை 3ஆம் வட்டாரம். |
| 82 | மல்கம்பிட்டி |
| 84 | இறக்காமம் |
| 85 | வரிப்பத்தன் சேனை |
| 89 | மல்வத்தை |
| | மல்வத்தை 3ஆம் வட்டாரம் |
| | மல்வத்தை 4ஆம் வட்டாரம். |
| 90 | சொறிக்கல்முனை |
| | வீரமுனை |
| | 6ஆம் குடியேற்றம். |
| 94 | நாவிதன் வெளி |
| | கிராமம் 13ஆம், 11ஆம் |
| | கிராமம் 12ஆம் |
| | கிராமம் 07 |
| | நாவிதன் வெளி |
| 95 | அன்னமலை |
| | கிராமம் 15 |

சம்மாந்துறை பட்டினசபை மொத்தம் 05.

# நிலப்பயன்பாடு ~ ஓர் அறிமுகம்

நிலப்பயன்பாடு பற்றிய கல்வியும் அது சார்ந்த ஆய்வும் கடந்த சில தசாப்தங்களாக உலகளாவிய ரீதியயில் முக்கியமடைந்து வருவது கவனிக்கத்தக்கது. உலகில் மக்கள் தொகை அதிகரித்து வருவதும் மறு பக்கம் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்டுவரும் உயர்வினால் பல செயற்பாடுகளுக்கு நிலத் தேவை அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் கட்டுப்பாடற்ற நிலப்பயன்பாட்டு மாற்றங்கள் குறிப்பாகக் காட்டு வளத்தில் ஏற்படும் வீழ்ச்சி சூழல் சமநிலையைப் பெரிதும் பாதிக்கக் கூடியதாக அமைகின்றது. இதனால் உலகளாவிய ரீதியிலும் தேச, பிரதேச ரீதியிலும் கிராம மட்டத்திலும் கூடக் கிடைக்கக் கூடிய நிலவளத்தை நல்முறையில் பயன்பாட்டிற்கு உட்படுத்த வேண்டியுள்ளது. ஆகவே ஒவ்வொரு மட்டத்திலும் நிலப்பயன்பாடு திட்டமிடப்பட்டு, அபிவிருத்தி மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன், வெவ்வேறு மட்டத்திட்டமிடல் இலக்குகள் ஒன்றுடன் ஒன்று முரண்படாது அமைய வேண்டியாகவுள்ளது. இவ்வடிப்படையில் எமது நாட்டிலும் நிலப்பயன்பாட்டுக் கொள்கைகளை வகுக்க வேண்டிய நிலையிலுள்ளோம்.

பிரதேசத்தில் நிலப்பயன்பாட்டைத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி உச்ச பலனை பெறுவதற்கு அப்பிரசேத்திலுள்ள நிலப்பயன்பாடு பற்றிய விபரங்களைத் தொகுத்தும், நிலப்பயன்பாட்டிற் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை கண்டறிய வேண்டும். மனித நடவடிக்கைகளால் அபவிருத்திக்குட்பட்ட பிரதேசங்களில் நிலப்பயன்பாடு சிக்கல் தன்மை கொண்டதாகவும் இருப்பதால் அங்கு மாற்றங்களைக் கொண்டு வரும் போது பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளன. அபிவிருத்திக்குட்படாத சிக்கலற்ற நிலப்பயன்பாடு காணப்படும். இடங்களில் மாற்றங்களைக் கொண்டு வருவது ஓரளவு இலகுவானதாகும் முன்னது கீறினவிடத்தில் திருத்தங்களை மேற்கொள்வது போன்றதும் பின்னது புதிதாகப்படத்தைக் கீறுவது போன்றதுமாகும்.

சர்வதேசப் புவியியற் சங்கத்தின் ஊக்கத்தாலும், கொடுத்த ஆதரவாலும் நலப்பயன் பாட்டு ஆய்வுகள் தேசிய மட்டங்களில் இடம் பெறலாயின. ஆரம்பத்தில் வெளிக்கள ஆய்வுகள் மூலமாகவே நிலப்பயன்பாட்டு விபரங்கள் பெறப்பட்டன. பின்னர் விமானப் படங்களின் உதவியுடன் நிலப்பயன்பாட்டு விபரங்கள் பெறப்பட்டு அவை பின் நேரடிவெளிக்கள ஆய்வுகள் மூலம் மேம்படுத்தப்பட்டன. அன்மைக்காலங்களில் செய்மதிகள் மூலம் கிடைக்கும் படங்கள் வழியாகப் பரந்த பரப்புகளுக்கு நிலப்பயன்பாட்டு விபரங்களைப் பெற்க்கூடியதாக இருப்பது இத்துறை ஆய்வுக்கு கிடைத்த முக்கிய வசதியாகும்.

நிலப்பயன்பாடு குறித்துச் சர்வதேச புவியியற் சங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாகச் சர்வதேசத்திற்குப் பொருத்தமான நிலப்பயன்பாடு ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இது பிரதானமாக ஒன்பது பிரிவுகளை முதல் மட்டத்தில்க் கொண்டுள்ளது.

1. கட்டடங்களைக்கொண்ட குடியிருப்புப் பகுதிகள்
2. வீட்டுத்தோட்டமும் சந்தைத்தோட்டமும்
3. வான் பயிர்ச்செய்கைக்கு உட்பட்ட பரப்புக்கள்
4. செய்கைக்கு உட்பட்ட பரப்புக்கள்
5. அபிவிருத்தி செய்யப்பட்ட புல் நிலங்கள்
6. அபிவிருத்தி செய்யப்படாத புல் நிலங்கள்
7. காட்டுநிலங்கள்
8. சதுப்புநிலங்களும், சேற்று நிலங்களும்
9. பயன்படுத்தப்படாத நிலங்கள்

மேற்குறிப்பிட்ட நிலப்பயன்பாட்டுப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு, வெவ்வேறு நாடுகள், பிரதேசங்கள் தத்தம் உள்ளூர் நிலைமைக்கேற்ப் உபபிரிவுகளை வகுத்து நிலப்பயன்பாட்டுப் படங்களைத் தயாரித்துள்ளன. இலங்கையிலும் மேற்குறித்த பாகுபாட்டு அடிப்படையில்தான் முதலில் நிலப்பயன்பாட்டுப்படங்கள் தயாரிக்கப்பட்டன. ஆனால் அண்மைக்காலத்தில் புதிதாகப் பல பாகுபாடுகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டம் 1030 சதுர கிலோமீற்றர் பரப்பையும் 8 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களையும் உயர்வான குடிசன அடர்த்தியையும் (712ச.கீ.மீற்றருக்கு) கொண்டுள்ளது. மாவட்டத்தினுள் உதவி அரசாங்க

அதிபர் பிரிவுகள் அடிப்படையில் பெரிய அளவில் குடிசன அடர்த்தி வேறுபடுவதைக் காணலாம். இப்பிரிவுகள் நிர்வாகப் பிரிவுகளாக இருந்த பொழுதும் அவை ஒவ்வொன்றும் சிறப்பான புவியியற் பண்புகளைக் கொண்டனவாக இருக்கின்றன. யாழ்ப்பாணம், நல்லூர் வலிகாமப்பிரிவுகள் உயர் குடிசன அடர்த்தியைக் கொண்டிருக்க வடமராட்சி கிழக்கு, நெடுந்தீவு ஆகிய இரு பிரிவுகளும் குறைவான அடர்த்தியைக் கொண்டுள்ளன. தென்மராட்சி, வடமராட்சி வடக்கு, வடமராட்சி தெற்கும் மேற்கும், தீவுகள் தெற்கு, தீவுகள் வடக்குப் பிரிவுகள் ஒப்பீட்டு ரீதியில் நடுத்தரக் குடிசன அடர்த்தியைக் கொண்டுள்ளன.

யாழ்ப்பாணப்பகுதி நீண்டகாலமாக மக்கள் குடியிருப்புக்களைக் கொண்ட பிரதேசமாக இருந்தபடியால் மிகவும் சிக்கலானதும் செறிவானதுமான நிலப்பயன்பாட்டு முறைகள் காணப்படுகின்றன. யாழ்ப்பாண மாவட்டம் இலங்கையில் சிறப்பான பிரதேசமாக இருப்பினும் அது தன்னுள் வேறுபாடான பரப்புக்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது. பெரிய யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி நெற்செய்கை, தென்னை செய்கையுடன் சார்பான நிலப்பயன்பாட்டையும் கொண்டிருக்க வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி குறைந்த பிரதேசத்திற்குரிய நிலப்பயன்பாட்டைக் கொண்டுள்ளது. வடமராட்சி மேற்கு, தீவுகள் பகுதிகளில் நெற்செய்கை, பனை புற்றரவை, குடியிருப்புகளுடன் இணைவான வீட்டுத்தோட்ட நிலப்பயன்பாடு முக்கியம் பெறுகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நிலப்பயன்பாட்டுக் கொள்கை வகுப்பதில் பின்வரும் காரணிகள் முக்கிய கவனத்துக்கு எடுக்கப்பட வேண்டும்.

1. நீண்ட காலமாகத் திட்டமிடப்படாது சந்தை சக்திகளினதும் சமூக சக்திகளினதும் தொடர்ச்சியான செயற்பாட்டினால் உருவாகிய நிலை

## பாடசாலைகயில் புவியியற் கல்வியின் இன்றைய போக்கும் இப்பாடத்தைக் கற்பித்தலில்கவனிக்க வேண்டிய சில குறிப்புகளும்.

இலங்கையில் இன்று நடைமுறையிலுள்ள பாடசாலைப் பாடவிதானத்தில் புவியியல் பொதுத்தராதர உயர்தர வகுப்புகளில் ஒருபாடமாக இடம் பெற்றிருக்கின்றது. இவ்வகுப்புகளில் கலை, வர்த்தகப்பிரிவு மாணவர்களே புவியியலை ஒரு பாடமாகக் கற்கின்றார்கள். புவியியல் விஞ்ஞானம் வாா்ந்ததொரு பாடமாக விரும்பினும், விஞ்ஞானத்துறை மாணவர்கள் இதனையொரு பாடமாகக் கற்பது மிக அரிதாகவுள்ளது. இலங்கையில் பல்கலைக் கழகங்களிலும் கூட இத்துறை கலை அல்லது சமூக விஞ்ஞானப் பீடங்களிலேயே இடம் பெற்றுள்ளது. இதனால் நாட்டில் கற்பிக்கப்படும் புவியியல் கலைத்துறை சார்ந்ததொரு பாடமாகக் கணிக்கப்படுகிறது. இதன் பாடவிதானத்திலும் சமூக, பொருளாதார விடயங்கள் கூடிய முக்கியத்துவம் பெற்றுள்ளன.

கடந்த சில வருடங்களாகக் க.பொ.த. உயர்தர வகுப்புகளில் புவியியல் கற்கும் மாணவர்களின் தொகை எண்ணிக்கையில் அதிகரித்து வந்தாலும் பொருளியல், வர்த்தகம், தர்க்கவியல் இந்துநாகரிகம், மாணவர்களின் அதிகரிப்புடன் எடுக்கும் ஒப்பிடுகையில் புவியியல் மாணர்கள் குறைவென்றே கூறலாம். ஆண்டொன்றுக்குச் சராசரி 4000 மாணவர்கள் புவியியலைத் தமிழ் மொழி மூலம் க.பொ.த. உயர்தர பரீட்சையில் ஒரு பாடமாகக் கற்கின்றார்கள். புவியியல் படிக்கும் மாணவர்கள் கூடியஅளவு அதிகரிக்காமைக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் புவியியல் பாடமொன்றுதான் மூன்று வினாத்தாள்களைக் கொண்டுள்ளது. ஏனைய பாடங்கள் இரு வினாத்தாள்களுக்குக் கொண்டுள்ளன. இதனால் புவியியலில் மூன்று வினாத்தாள்க்கு விடையளிப்பது சிரம மென மாணவர்கள் கருதுகிறன்றனர். புவியியலின் முதலாம் வினாத்தாள் படவேலையாக இருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

செம்முறைகளைக் கொண்ட விஞ்ஞானப் பாடங்கள் கூட செய்முறைப் பரீட்சையைக் கைவிட்டு இருவினாத்தாள்களை மாத்திரமே கொண்டிருக்க, புவியியல் பாடத்தில் தொடர்ந்தும் படவேலை வினாத்தாள் இருந்து வருவது பாடத்தின் தரத்தைப் பேண நல்லதொரு அம்சமாக இருப்பினும் போட்டிப் பரீட்சை எடுக்கும் மாணவர்களின் முயற்சிக்கு இது சாதகமற்றதொரு நிலையைக் கொடுக்கலாம் எனக் கருதப்படுகின்றது. படப்பயிற்சியை உள்ளடக்கிய பெரியதொரு பாடத்திட்டத்தைக் கற்றுக் கூடிய புள்ளிகளைப் புவியியலில் எடுப்பது சிரமமென மாணவர்கள் கருதி, இலகுவாகக் கற்றுக் கூடிய புள்ளிகளை எடுக்கக் கூடிய பாடங்களைத் தெரிவு செய்கின்றனர். தற்போதைய புவியியல் பாடத்திட்டத்தைக் குறிக்த இரண்டாண்டு காலத்துக்குள் கற்பித்து முடிப்பதில் ஆசிரியர்களும் பெரும் சிரமப்படுகின்றனர். மேலும் அண்மைகாலத்தில் பல புதிய பாடங்கள் க.பொ.த. உயர்தர வகுப்பில் அறிமுகம் செய்ததால் முன்னர் போலல்லாது பாடத்தெரிவில் மாணவர்கள்களுக்குக் கூடிய சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிலை புவியியல் கற்கும் மாணவர்கள் தொகை ஒப்பீட்டு ரீதியில் குறைவடையக் காரணமாக இருக்கின்றது.

க.பொ.த. உயர்தர வகுப்பில் மாணவர்கள் புவியியலைக் கற்பதற்குச் சமூகக் கல்வியையே அடிப்படையாகக் கொள்ள வேண்டியிருக்கின்றது. தற்பொழுது நடைமுறையிலுள்ள புதிய கல்வித்திட்டம் அறிமுகம் செய்யப்படு முன்னர் புவியியல் 6ம் தரத்திலிருந்து ஒரு தனிப்பாடமாக விருந்தது. 9ஆம், 10ஆம், தரக் கலை வகுப்புகளில் கூடுதலான பாடவேலைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இதனால் மாணவர்கள் 10ஆம் தரத்திலிருந்து 11ஆம் தரத்தையடையும்போது கூடிய பாட அறிவு உள்ளவர்களாகவும் புவியியலைத் தொடர்ந்தும் கற்கக் கூடிய மனோநிலையுடையவர்களாகவும் விளங்கினார்கள். ஆனால் இன்று சமூகக் கல்விப் பாடத்திட்டம் மிகவும் பரந்ததாகவும் ஆழமற்றதாகவும் இருப்பதுடன் குறிப்பிட்ட பாடவேளைக்குள் பாடத்திட்டத்தைச் செவ்வனே கற்பித்து முடிப்பது முடியாத காரியமாகவுள்ளது.

சமூக கல்விப் பாடத்தில் புவியியல் பகுதியைக் கற்பிக்கக் கூடிய அறிவு கொண்ட சமூகக் கல்வி ஆசிரியர்கள் போதியளவு இன்மையும் இன்று பெரும் பிரச்சினையாகவுள்ளது. புவியியலை ஒரு பாடமாகக் கற்ற

பட்டதாரி ஆசிரியர் ஒருவர் சமூகக் கல்விக்குள் அடங்கும் வரலாறு பொருளாதாரப் பகுதிகளை விளக்கமாகக் கற்பிக்கக் கூடியவராக இருப்பினும், புவியியலை ஒரு பாடமாகக் கற்காத ஆசிரியர் ஒருவரால் சமூகக் கல்விப் பாடத்திட்டத்துக்குள் அடங்கும் பகுதிகளைக் குறிப்பாகப் படப்பயிற்சி வேலைகளைச் சரிவரக் கற்பிப்பார்களெனக் கொள்ள முடியாது. இப்பிரச்சினையால் சமூகக் கல்விப் போதனையும் பாதிக்கப்படுவதுடன், புவியியல் கல்வியும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சில மாணவர்கள் சமூகக் கல்விவியைப் புறக்கணிப்பதுடன் க.பொ.த. சாதாரணப பரீட்சையில் இப்பாடத்தைத் தெரிவு செய்யாமல் இருக்கின்றனர். க.பொ.த. சாதாரண பரீட்சையில் சமூகக் கல்வியில் கிடைக்கும் கூடிய புள்ளிகளின் அளவு விஞ்ஞானம், கணிதம் போன்றவற்றில் கிடைக்கும் வெறுபேறுகளுடன் ஒப்பிடுமிடத்து மிகக் குறைவென்றே சொல்லாம்.

நாட்டில், ாபடசாலை நிலையில் புவியியல் கல்வி அண்மைக் காலத்தில் தாழ்வுற்ற பொழுதும் பல்கலைக்கழகத்தில் குறிப்பாகக் கலைப்பிரிவில் பொருளியலுக்கு அடுத்துப் புவியியல் பாடத்திலேயே சிறப்புப் பட்டம் பெற கூடுதலான மாணவர்கள் விரும்புகின்றனர். பாடவிதானம், பயிற்சித் தன்மை தொழில் வாய்ப்பு ஆகியன மாணவர்களின் விருப்பத்திற்குக் காரணங்களாகும். உயர்தர வகுப்பில் புவியியலை ஒரு பாடமாகக் கற்ற மாணவர்தான் பல்கலைக்கழக முதலாண்டு வகுப்பில் புவியியலை ஒரு பாடமாகக் கற்கலாம். இதனை உயர்தர வகுப்பு மாணவர்கள் அறிந்திருப்பது நலமாகும்.

பரீட்சையில் புவியியலை கூடியஅளவு புள்ளிகளைப் பெறுவதற்கு மாணர்கள் படவேலையில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். என்பதை மாணவர்கள் அறிந்திருத்தல் நலம்.க.பொ.த. உயர்தரப் புவியியல் பரீட்சையில் புவியியல் முதலான வினாத்தாள் படவேலையாக இருப்பதுடன் ஏனைய இரு வினாத் தாள்களிலும் கூடக் குறிப்பிடத்தக்க புள்ளிகள் படங்களின் இடங்களை குறிப்பதற்கும், புனையா வரைபடங்கள் வரைப்படங்கள் அமைத்து விடைகள் எழுதுவதற்குக் கொடுக்கப்படுகின்றன.

இதனால் புவியியல் ஆசிரியர்கள் படவேலைக்குக் கூடிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். கற்பித்தலுக்கு உதவியாக, இலங்கை உலக

பொருண்மைப் படங்கள் (வுாநஅயவவைஅிஎ) தேசப்படப்பத்தகங்கள், நிலவுறுப்பு மாதிரிகள், ஏறிய மாதிரிகள் நன்கு பயன் படுத்த வேண்டும். பாடசாலைகளில் இலங்கை ஓரங்குல இடவிளக்கப்படங்கள் கட்டாயம் இருக்க வேண்டும். மாணவர்கள இடவிளக்கப் படங்களைப் பார்த்து வாசித்துப் பழகல் கீறுதல் மூலமே படப்பயிற்சியில் நன்கு புலமை பெறலாம். உயர்தர வகுப்புப் புவியியல் மாணவர்களின் பயன் பாட்டுக்கேற்ற பல படப்பயிற்சி நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதுடன், உள்ளூா ஆசிரியர்களாலும் தரமான நூல்கள் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மாணவர்கள் இந்நூல்களை வாசிக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

மாணாவர்கள் பிரதேசங்கள் பற்றிய வரையறைகளை நன்கு தெரிந்திரக்க வேண்டும். குறித்ததொரு பிரதேசம் உள்ளடங்கிய பரப்பின் வரையறை, அதனுள் அடங்கும் நாடுகள் பற்றித் தெளிவான விளக்கம் வேண்டும்–பிரதேச வயைறை அல்லது பதவிளக்கம் பற்றி மயக்கம் ஏற்படுமிடத்துச் சில சந்தர்ப்பங்களில் முழுவிடையுமே பாதிக்கப்படலாம். தென்னாசியா, தென்கிழக்காசியா போன்ற பிரதேசங்கள் குறிப்பிடும் நாடுகள் பற்றி மாணவர் மத்தியில் பெருமயக்கம் காணப்படுகின்றது. தென்கிழக்காசிய நாடொன்றைத் தெரிந்து கேட்கும் போது பலர் இந்தியா, வங்காளதேசம், பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளைக் குறிப்பிட்டு விடை எழுதுவதினால் விடை பிழையாக அமைகின்றது. மேற்குறித்த நாடுகள் தென்னாசியப் பிரதேசத்தைச் சேர்ந்தன. தென்னாசியா தென்கிழக்காசிய பற்றிய விளக்கமின்மைக்குப் பத்திரிகை வானொலி போன்றவையும் காரணங்களாகவுள்ளன. பத்திரிகையில் இலங்கையைத் தென்கிழக்கு ஆசியாவின் ஒரு பகுதியாகக் குறிப்பிடுவது வழக்கமாகி விட்டது. உதாரணமாகக் கல்வியில், சுகாதாரத்தில் இலஙகை தென்கிழக்காசியாவில் முன்னணியில் நிற்கின்றது. அல்லது யாழ்ப்பாண நூலகம் தென்கிழக்காசியாவிலுள்ள நூலகங்களில் மிகப்பெரியதொன்றாகும். போன்ற செய்திகள் அடிக்கடி பத்திரிகைகளில் வருதல் மாணவர் மத்தியில் இலங்கை தென்னாசியாவின் ஒரு பகுதியாக அல்லது தென்கிழக்காசியாவின் ஒரு பகுதியா, என்ற மயக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது போன்ற மயக்கங்களைத் தருவிப்பதற்கு உலகின் பல்வேறு பகுதிகளைக் குறிக்கும் இடப்பெயர்களை மாணவர்கள் சரியாக அறிந்திருத்தல் வேண்டும்.

# அபிவிருத்திப் பிரச்சினையும் குடிசனத்தொகையும்: மூன்றாம் உலக நிலை

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் மூன்றாம் உலக நாடுகள் எனவும் அழைக்கப்படும். முதலாளித்துவ, கம்யூனிசத்துவ உலகங்களுள் அடங்காத நாடுகளை இப்பிரிவுள் அடக்குவர். மூன்றாம் உலக நாடுகள் பல பொதுவான பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ளன. இந்நாடுகளுள் பெரும்பாலானவை கடந்த 30 வருடங்களுள் அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற புதிய அரசுகளாகும். இந்நாடுகளில் காணப்படும் பொதுவான பிரச்சனைகளை நோக்கும்பொழுது பின்வரும் பண்புகளைக் காணமுடிகிறது. குறைந்த வாழ்க்கைத்தரம், குறைந்த சராசரி வருமானம், குறைவான உணவு நுகர்வு, குறைவான வலு நுகர்வு, குறைந்த கல்வியறிவு, உயர்வான வேலையின்மை யும், கீழ் உழைப்பும், குறைந்த சுகாதார நிலைமை, துரித குடிசனத் தொகை வளர்ச்சி, இளமையான வயதுக்குட்பட்டுத் தங்கிவாழ்வோர் விகிதம் உயர்வாக இருத்தல், விவசாயத்தில், ஈடுபட்டிருப்போரின் விகிதம் உயர்வாக இருத்தல், மட்டான கைத்தொழிலாக்கம் நாட்டின் வளங்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருத்தல், ஒருசில பயிர்களில் அல்லது பொருட்களில் பொருளாதாரம் தங்கியிருத்தல் போன்றன குறிப்பிடத்தக்க சில பண்புகளாகும். எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியான நிலைமைகள் காணப்படவில்லை. நாட்டுக்கு நாடு நிலைமைகள் வேறுபட்டுள்ளன. மேலும் கடந்த 25 வருடங்களில் சில மூன்றாம் உலக நாடுகள் உ+ம் சிங்கப்பூர், தென்கொரியா போன்றன பொருளாதாரத்துறையில் முன்னேற்றம் கண்டு அபிவிருத்தியடைந்த நாடுகளின் நிலைக்கு வந்துள்ளன. இந்தியாவில் ஏற்பட்ட கைத்தொழில் வளர்ச்சி, இலங்கையின் எழுத்தறிவு நிலை, மத்திய கிழக்கு நாடுகளின் செல்வநிலை ஆகியன குறிப்பிடத்தக்கன.

மூன்றாம் உலக நாடுகளின் அபிவிருத்திப் பிரச்சினையில் குடிசனத்தொகை எவ்வளவு காரணமாக இருக்கின்றதெனப்பார்ப்போம். இந்நாடுகளின் குடிசனத்தொகை 1950−1975 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் சராசரி ஆண்டுகளுக்கு 2 வீதத்திற்கு மேலாக வளர்ச்சி பெற்றுள்ளது. சில

நாடுகளில் சராசரி வருட அதிகரிப்பு 2.5க்கு மேற்பட்டிருந்தது. இதனால் பல நாடுகளின் குடிசனத்தொகை குறுகிய காலத்துக்குள் இரட்டிப்பாகியுள்ள தைக் காணமுடிகிறது. கீழே கொடுக்கப்பட்ட அட்டவணையில் அதிகரிப்பு விகிதமும் குடிசனத்தொகை இரட்டிப்பாக எடுக்கும் காலமும் காட்டப்பட்டுள்ளன.

| வருட அதிகரிப்பு விகிதம் | குடிசனத்தொகை இரட்டிப்பாக எடுக்கும் காலம். |
|---|---|
| 0.5 | 137 |
| 1.0 | 70 |
| 1.5 | 47 |
| 2.0 | 35 |
| 2.5 | 28 |
| 3.0 | 23 |
| 3.5 | 20 |
| 4.0 | 18 |

உதாரணமாக இலங்கையின் குடிசனத்தொகை 1946இல் 6.6 மில்லியனாக இருந்தது. 1971இல் 12.7மில்லியனாக அதிகரித்துள்ளது. 25 வருட காலத்துக்குள் நாட்டினது குடிசனத்தொகை 90.6 வீதத்தால் அதிகரித்துள்ளது. ஏற்கெனவே பின்தங்கிய பொருளாதார அமைப்புக் கொண்ட நாட்டின் அபிவிருத்தி செய்ய முற்படும் பொழுது இத்தகைய குடிசனவதிகரிப்பு அபிவிருத்தியைத் தாமதப்படுத்தும் காரணியாகவே இருக்கும். இதேமாதிரியான நிலைமைகள் இந்தியா, வங்காளதேசம், பாகிஸ்தான் போன்ற நாடுகளிலே காணப்படுகின்றன. சுகாதாரத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், தொற்றுநோய்களினால் ஏற்படும் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டதும், பிரசவத்தாய், சிசு மரணங்கள் குறைக்கப்பட்டதும், உணவு நுகர்விலும் விநியோகத்திலும் ஏற்பட்ட முன்னேற்றங்கள் ஆகியன இறப்புக் குறைவடைய முக்கிய காரணங்களாக இருந்தன. இறப்பு வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஒத்துப் பிறப்பு விகிதத்தில் வீழ்ச்சி ஏற்படாமல் உயர்வாக இருந்தத துரித குடிசன வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தது.

மூன்றாம் உலக நாடுகளின் அபிவிருத்திப் பிரச்சினைக்கு முக்கியமாக இருந்ததும், இருப்பதும் துரிதமான குடிசனத்தொகை அதிகரிப்பா?

இதுகுறித்துக் கருத்து வேறுபாடுகள் உண்டு. எனினும் பெரும்பாலான சமூகவிஞ்ஞானிகளின் கருத்துப்படி துரித அதிகரிப்பு அபிவிருத்தியைத் தாமதப்படுத்திய காரணிகளில் முக்கியமானதொன்றாகும். குடிசனத்தொகை வளர்ச்சியைக் குடும்பத் திட்டமிடல் மூலம் குறைப்பதன்மூலம் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தலாம் என்ற கருத்தும் சீரான நிர்வாகத்திறமை மூலம் வளங்களைப் பயன்படுத்திப் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்தி னால் அதன் பக்க விளைவாகக் குடிசனத்தொகை வளர்ச்சி குறைவடையுமென்ற கருத்தும் உண்டு. தென்னாசிய நாடுகளில் காணப்படும் குடிசனத்தொகைப் பிரச்சினை போன்று மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, இலத்தின் அமெரிக்கா நாடுகளில் இல்லை. பின்னரக் கூறிய பிரதேசங்களில் மூலவளங்கள் நல்ல முறையில் விருத்தியாக்கக் குடிசனத்தொகை குறைவாக இருப்பது பிரச்சினையாக இருக்கின்றது.

மூன்றாம் உலக நாடுகளில் பொருளாதார அபிவிருத்திக்கு மனிதவள அபிவிருத்தித் தாமதம் பெரும் தடையாகவுள்ளது. இந்நாடுகளின் மொத்த சனத்தொகையில் 15வயதுக்குக் கீழ்பட்டவர்களில் 50 விகிதத்திற்கு மேற்பட்டோர் எழுத்தறிவற்றவர்களாக இருக்கின்றனர். மொத்தக் குடிசனத்தொகையில் எழுத்தறிவற்றோர் 75 வீதத்திற்கு மேலுள்ளனர். (சில நாடுகள் இதற்குப் புறநடையாகவுளன. உ.ம் இலங்கை, மலாயா). மேலும் பெண்களின் எழுத்தறிவு விகிதம் மேலும் குறைவாகவுள்ளது. கல்வியறிவு, தொழில்நுட்பத்திறமை குறைந்த வேலைப்படை பொருளாதார அபிவிருத்திக்குப் பெரும் தடையாகவுள்ளது. இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு இன்று பெரும் தடையாக இருப்பது வினையாண்மை மிக்க தொழிலாளர் பற்றாக்குறைவென்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா அவர்கள் கூறியிருக்கின்றார். ஆபிரிக்கா, மத்தியகிழக்கு, இலத்தின் அமெரிக்காவில் இந்தப் பற்றாக்குறைவு மிகவும் கூடுதலாகவுள்ளது. ஆரம்பக்கல்வி, இரண்டாந்தரக்கல்வி, உயர்கல்வி, தொழில்நுட்பக்கல்வி பட்டப்படிப்புக்கு மேற்பட்ட கல்வி ஆகிய துறைகளை விருத்தியாக்குவதன் மூலமும் சேவையில் பயிற்சி கொடுப்பதன்மூலமும் வேலைப் படையின் வினைத்திறனை அதிகரிக்க முடியும். குறிப்பாகப் பெண்களின் கல்விக்குக் கூடிய முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கல்வியறிவற்ற சமூகத்தில் புதிய சமூக-பொருளாதாரக் கருத்துக்களைப் பரப்புவது மிகவும் கடினமாகும். இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட கருவள ஆய்வில் குடும்ப அளவுக்கும் கல்வியறிவுத் தரத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதைக் காணமுடிந்தது. கல்வியறிவு குறையக் குறைய குடும்ப

அளவு அதிகரித்துக்கொண்டு போகின்றது. இதே மாதிரி கல்வியறிவுத்தரம் குறையக்ககுறையத் திருமண வயதும் குறைந்து இருப்பதைக்காண முடிந்தது. கல்வியறிவை உயர்த்துவதுபோல் உணவு, சுகாதாரத் துறைகளில் மேலும் முன்னேற்றம் காணப்பட்டால் இப்பகுதி மக்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்க முடியும்.

மூன்றாம் உலக நாடுகளின் அபிவிருத்திப் பிரச்சினையில் நகராக்கமும் நகர வளர்ச்சியும் பிரதானமானதொன்றாக இருக்கின்றது. இந்நாடுகளின் கிராமங்களின் பின்தங்கிய நிலமைகளினால் பெருமளவு கிராமிய மக்கள் நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்கின்றனர். இத்தகைய இடப்பெயர்ச்சி நகரப் பொருளாதார வளர்ச்சியை மையமாகக் கொண்டிருக்காததனால் பல சமூகப் பிரச்சினைகளை உருவாக்குகின்றது. நகரங்களில் மக்கள் நெருக்கமாக வாழவேண்டியிருப்பதுடன் பெரிய சேரிப்பகுதிகள் வளர்கின்றன. சேரிகளின் துரித வளர்ச்சி சமூக – அரசியல் பிரச்சினைகளை உருவாக்கிப் பொருளாதார வளர்ச்சியைத் தாமதப்படுத்துகின்றன. கைத்தொழில் / வர்த்தக வளர்ச்சியை அடிப்படையாகக் கொள்ளாத நகராக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். ஒருங்கிணைந்த கிராமவிருத்திக்கும் விவசாய அபிவிருத்திக்கும் முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றமுடியும். இதன் மூலம் கிராமக் குடிசனத்தொகை வளர்ச்சியை விரும்பத்தக்க அளவுக்கு வைத்துக்கொள்ள வழிவகுக்கலாம்.

கிராமிய விருத்தி, விவசாய வளர்ச்சியுடன் கைத்தொழில் வர்த்தகவளர்ச்சியை விருத்தியாக்கி விவசாயத்துறையில் கூடுதலாக இருக்கும் மக்கள் தொகையை ஏனைய துறைகளுக்கு மாற்றவேண்டும். விவசாயத்தை விருத்தியாக்குகின்ற நேரத்தில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்ற மக்களின் வீதத்தைக் குறைக்க வேண்டும். மூன்றாம் உலகநாடுகளில் கைத்தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதன் மூலம் குடிசனத்தொகையில் குறிப்பாக வேலையின்மைப் பிரச்சினையை ஓரளவு குறைக்கலாம்.

மூன்றாம் உலகநாடுகளில் குடிசனப்பரம்பல் ஒழுங்கற்றுக் காணப்படுவதால் பரம்பல் மாற்றம் கொண்டுவருவதன்மூலம் குடிசனப்பிரச்சனையின் சில அம்சங்களுக்குத் தீர்வு காணலாம். நில அபிவிருத்தி, ஆற்றுப்பள்ளத்தாக்கு விருத்தி, புதிய நகரங்கள் அமைத்தல், பிரதேச அபிவிருத்தி ஆகிய நடவடிக்கைகள் மூலம் குடிசனப் பரம்பலில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டும். குடிசனப்பரம்பல் மாற்றங்கள் கொண்டுவருவது பற்றிய கருத்துப் பல இடங்களில் கவனமாக ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதுடன் அமுல் செய்யப்பட்டு வருவதனைக் காணலாம்.

# ஜேர்மனி 90 களிற்கு முன்னரும் 90களிற்கு பின்னரும்

2ம் உலக மகாயுத்தத்தின் விளைவால் பிளவுபடுத்தப்பட்டு இன்று இரு நாடுகளாக இருக்கும் கிழக்கு, மேற்கு ஜேர்மனிகளை மீளவும் ஒற்றுமைப்படுதல் விவகாரம் சர்வதேச அரசியல் அரங்கில் முக்கிய விடயமாக உள்ளது. சோவியத் குடியரசில் திரு. நிக்கலோய கோபர்ச் சோவ் ஆட்சிக்கு வந்த பின்னர் அவர் அறிமுகம் செய்த மறுசீரமைப்பு திறந்த தன்மை கொள்கைகளால் (Prohimka lalaslnosr) சோவியத் குடியரசில் சமூக,பொருளாதார, அரசியல் விடயங்களில் பல மாற்றங்கள் நிகழலாயின. இதனைத்தொடர்ந்து சோவியத் யூனியனின் செல்வாக்குப் பரபரப்பான கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக போலந்து, சேக்கோசிலாவாக்கியா, உறங்கேரிச கிழக்கு ஜேர்மனி ஆகிய நாடுகளில் சமூக, அரசியல் மாற்றங்கள் அமைதியான முறையில் நிகழலாயின. குறிப்பாக இந்நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சி அரசியலில் கொண்டிருந்த ஏகபோக உரிடைம இல்லாது போன பலகட்சி ஜனநாயக மரபும், சுதந்திரப் பண்புகளும் வளரலாயின. இம்மாற்றங்களுக்கு உட்படாது பழைய கடின போக்கை ரூமோனிய ஜனாதிபதி நிக்கலாய் கோசியஸ்கோ கடைப்பிடிக்க முயற்சித்ததும், அதனால் ஏற்பட்ட மக்களின் எதிர்ப்பை ராணுவ ரீதியில் அடக்க முயனறும் தோல்வி கண்டார். ரூமோனியாவில் பெரமளவு உயிர் இழபின் பின் இவரது ஆட்சி நீக்கப்பட்டு அரசியல் மாற்றம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு ஐரோப்பியாவில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் கிழக்கு ஜேர்மன் மக்களை மேற்கு ஜேர்மனிக்கு அதிகளவு இடம்பெயர வைத்தது. 1989 ம் ஆண்டில் கிழக்கு ஜேர்மனியில் இருந்து பெரியளவில், கட்டுப்பாடற்ற முறையில் ஜேர்மனியர்கள் மேற்கு ஜேர்மனிக்குச் செல்வதைத் தடுக்கமுடியாத நிலையில் கிழக்கு ஜேர்மனி தனது எல்லையைத் திறந்து,

பேர்லின் சுவரைப் பல இடங்களில் உடைதெறிந்து விட்டது. 1961இல் சரிவதேச எதிர்ப்புக்கு மத்தியில் அமைக்கப்பட்ட பேர்லின் சுவர் 1989 இல் திறந்துவிட்டதைத் தொடர்ந்து தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் நிகழ்ச்சிகள் பிரித்து வைக்கப்பட்ட ஜேர்மனிகளை மீண்டும் ஐக்கியப்படுத்துமா என்ற கேள்வி எழுந்துள்ளது. அண்மையில் கிழக்கு ஜேர்மனியில் நடந்த சுதந்திரத் தேர்தலில் ஜேர்மன் ஐக்கியத்தை வலியுறுத்தும் கட்சிகள் மிகப்பெரம்பான்மை வாக்குகள் பெற்று உள்ளன. எனினும் ஜேர்மனிகள் ஐக்கியப்படுவதை ஏனைய ஐரோப்பிய நாடுகள் விரும்புமா, ஜேர்மனியில் இறங்குமா?

2ஆம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஐரோப்பியாவில் ஏற்பட்ட எல்லை மாற்றங்களில் ஏதும் பிரச்சினைகள் எழலாமா? மற்றும் ஐரோப்பிபாவில் இன்றுள்ள பலச்சமநிலையில் ஐக்கிய ஜேர்மனி மாற்றங்களை ஏற்படுத்துமா என்ற கேள்விகளை அரசியல், வரலாறு, பொருளியல், இராணுவத் திறமுறை ஆய்வாளர்கள் முன்வைத்து அதற்குச் சாதகமான, பாதகமான கருத்துக்களைத் தொரிவிக்கின்றனர். இப்பின்னணியில் ஜேர்மனியின் ஐக்கியம் பற்றி நோக்குவோம்.

1970,1914,1939ம் ஆண்டுகள் மக்களின் வரலாற்றில் முக்கிய ஆண்டுகளாகும். 1870க்கு முக்கர் பல சிற்றரசுகளுக்குக்கீழ் ஜேர்மனி இருந்தபோதும், பிராகன்சிய அரசின் தலைமையில் ஒட்டோ பொன் பிஸ்மார்க்கின்கடின உழைப்பால் 2வது ஜேர்மன் சாம்ராச்சியம் (Second Reich) உருவாக்கப்பட்டது. இப்புதிய அரசு குறுகிய காலத்திற்குள் விஞ்ஞானம், தொழில்நுட்பத் துறைகளில் பெரும் முன்னேற்றம் கண்டு அதன் வழியாக விவசாயம், கைத்தொழில் துறையில் பாரிய அபிவிருத்தி கண்டதுடன் இராணுவரீதியில் பலம் பொருந்திய வல்லரசாகவும் மாறியது. ஆயினும், சான்சலர் பிஸ்மார்க் கடைப்பிடித்த கொள்கையுடன் முரண்பட்ட கெஸ்சர் வில்லியம் என்பார் அவரைப் பதவியில் இருந்து விலக்கிப் புதிய கொள்கைகளைக் கடைப்பிடிக்கலானார். குடியேற்ற நாடுகளை ஏற்படுத்துவதற்கும், ஜேர்மன் கடற்படை விஸ்மரிப்புக்கும் முக்கியத்துவம் கொணடக்கப்பட்டது. இதன்மூலம் ஜேர்மனி சர்வதேச அரங்கில் எதிர்ப்பையும் எதிரிகளையும், தேடிக்கொண்டதுடன் நாஜிக ரீதியிலும் தனிமைப்படுத்தப்பட்டது. ஜேர்மனியின் இப்போக்குகளால் நீண்டகாலம் கடும்

போட்டியாளர்களாக இருந்த பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகள் கூடஜேர்மனிக்கு எதிராகச் செயற்பட நெருக்கமாக வந்தன. 1ஆம் மகாயுத்தம் வெடித்தபோது ஜேர்மனி மத்திய அச்சு நாடுகளுடன் (ஆஸ்திரியா, ஹங்கேரி,துருக்கி, பல்கேரியா) இணைந்து நேச நாடுகளுக்கு (பிரித்தானிய, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, இத்தாலி, யப்பான், சேபியா, மொன்ரிநிக்ரோ,போர்த்துக்கல், பெல்ஜியம்) எதிராகப் போரிட்டது. இப்போரில் மத்திய அச்சு நாடுகள் தோல்வி அடைந்ததினால் கிழக்கு ஐரோப்பாவின் அரசியல் வரைபடத்தில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆஸ்ரேலியா, ஹங்கேரிஏற்பட்டன. மற்றும் போலந்து, செக்கோசெலவியா போன்ற நாடுகள் புதிதாக உருவாக்கப்பட்டன. சோவியா, மொன்றிநீக்கிரோ நாடுகள் யூக்கோசொலாவியாவின் பகுதியாக மாறின.

மேலும் ஐரோப்பாவின் பல நாடுகள் எல்லைமாற்றத்திற்கு உள்ளாகின. 1870இல் ஜேர்மனி பிரான்சிடம் இருந்து கைப்பற்றிய அல்சாஸ் லொறேயின் மாகாணங்களைப் பிரான்சிடமும், சிலெஸ்விக் ஒல்ஸ்ரைனின் மாகாணத்தின் ஒரு பகுதியை டென்மார்க் இடமும் யூபென், மல்மொடே, மொறன்சே ஆகியனவற்றை பெல்ஜியத்திடமும் இழந்தது. கிழக்கில் போலந்து மீள உருவாக்கப்பட்டு ஜேர்மன் பரப்பு ஊடாக போரிக் கடலுக்கு வழி கொடுக்கப்பட்டதால் ஜேர்மனியின் நிலத் தொடர்ச்சித் தன்மை துண்டிக்கப்பட்டு கீழக்கு பிரஷ்யா தனித்துண்டாக மாறியது. மேலும் ஜேர்மனி தனது சைலீசிய மாநிலத்தின் சில பகுதிகளைப் போலாந்திடம் இழந்தது. மேலும் ஜேர்மனி தனது சைலீசிய மாநிலத்தின் சில பகுதிகளைப் போலந்திடம் இழந்தது. போல்டிக் கடலோர நகரமான டான்சிக் ஜேர்மனியில் இருந்து பிரிக்கப்பட்டுச் சுதந்திர நகரமாக்கப்பட்டது. மெமல்லாந்து குறித்து லுத்து வேனியாவிற்கும் இடையில் பிரச்சினை உருவாகியது.

1ஆம் மகாயுத்தத்தில் ஜேர்மனி தோல்வியுற்றதும் இதன் விளைவாகக் குறிப்பிடத்தக்க நிலப்பரப்பையும் மக்களையும் போரில் இழந்ததுடன் 33 மில்லியன் டொலர் நட்டஈட்டுத் தொகையையும் நேசநாடுகளுக்குச் செலுத்த வேண்டியதாகவிருந்தது. யுத்தத்தில் தோல்வியுற்ற போதும் ஜேர்மன் ஐக்கியம் பாதுகாக்கப்பட்டு, முடியாட்சியில் இருந்து அது குடியரசாக மாறியது. 1ஆம் மகாயுத்ததில் தோற்றதாலும் அதன் பின் நாட்டுக்கு ஏற்பட்ட அபகீர்த்தியை இல்லாது ஒழிக்கவும், பழிவாங்கும்

பின்னணியிலும் தேசிய கௌரவத்தை மீண்டும் நிலைநாட்டவும் தேசிய சோசலிசக் கட்சி (Nazi) அடோல்ப்கிட்லரின் தலைமையில் ஆட்சியைப் பிடித்துச் சில காலத்திற்குள் கடுமையான சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தியதுடன் கடின யூத எதிர்ப்பு நடவடிக்கைகளையும், மேற்கொண்டது. குறுகிய காலத்தில் ஜேர்மனியின் பொருளாதார, இராணுவ பலத்தை அதிகரித்து இதனை உலகில் மீண்டும் வல்லரசாக மாற்றியது. 1938இல் ஆஸ்திரியாவைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது. பின்னர் செக்கோசிலாவாக்கியாவில் சுடொச்சலாந்து ஜேர்மன் மக்கள் பிரச்சினையைக் காட்டி சிலாவாக்கிய நீங்கலாக செக் பகுதியை இணைத்துக்கொண்டது. 1939ம் ஆண்டு செப்பரம்பர் 1ஆம் திகதி போலந்துக்கு எதிராக மேற்கொண்ட பிளிறிஸ்கிரேக் (BLITZKRIEG) யுத்தம் 2ஆம் மகாயுத்தத்திற்கு வழிவகுத்தது.

2ஆம் மகாயுத்தத்தின் விளைவாக மிகப்பெரிய அளவில் ஜேர்மனி பாதிக்கப்பட்டு, தோலிவியுற்று, நிபந்தனையற்ற முறையில் சரண் அடைந்தது. 1945இல் யுத்தத்தில் பங்குகொண்ட நேசநாடுகளான பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா ஆகியன யால்டா, பொல்ஸ்டாம் உடன்படிக்கைகள் மூலம் ஜேர்மனி குறித்துச் சில தீர்மானங்களை எடுத்தன. ஜேர்மனியை இராணுவமயம் அற்ற அரசாக்குதல், அதன் இராணுவத்தைக் கலைத்தல், அதனது உள்ளார்ந்த யுத்தவளத்தை அழித்தல், கைத்தொழிலைக் கட்டுப்படுத்தல், அரசியல், பொருளாதார அமைப்பைப் பன்முகப்படுத்தல், அந்நிய நாடுகளில் ஜேர்மன் துருப்புக்கள் நிலைகொள்ளாதிருக்கவிடல், என்பனவே அத்தீர்மாணங்கள் மேலும் இதனது பரப்புக்கள் குறித்து சமாதான மகாநாட்டில் தீர்மானம் எடுக்கும்வரை பின்வரும் முறைகளில் அந்நாட்டை நிர்வகிக்கவும் அதனைக் கைப்பற்றப்பட்ட பிரதேசமாக வைத்திருக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

நிர்வகிக்கும் முறைகளாவன:-

(1) கொனிஸ் வேர்க் நகர் உட்பட கிழக்கு பிரஸ்சியாவின் வடபகுதியை ரஷ்யாவின் கீழ் விடுவது.

(2) ஒடர்-நீஸ் நதி முகத்துவாரத்தில் உள்ள செறிரின் நகரை முழுமையாக உட்படுத்தி ஒடர்-நீஸ் நகருக்குக் கிழக்காக உள்ள ஜேர்மன் பரப்புக்களை டான்சிக் நகர் உட்படப் போலந்து நிர்வாகத்தின் கீழ் விடுவது.

(3) ஓடர்–நீஸ் நதிக்கு மேற்காக உள்ள ஜேர்மன் பரப்பை நான்கு வலயமாகப் பிரித்து அவை ஒவ்வொன்றையும் வெற்றியாளர்களான ரஷ்யா, அமரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகியவற்றின் நிர்வாகத்தின் கீழ் விடுவது. ரஷ்யா வலயத்தின் மேற்கு எல்லை அதனது படைகளை யுத்தத்தில் அமெரிக்க பரித்தானிய படைகளை சந்தித்த கோடாகும். ரஷ்சியப்படை கைப்பற்றிய ஜேர்மன் பரப்புக்குள் பேர்ளின் இருந்தபோதும் பெரிய பேர்ளின் நகரை லண்டன் உடன்படிக்கையின் மூலம் நான்கு துண்டுகளகப் பிரித்து ஒவ்வொரு துண்டையும் முறையே ரஷ்யா, அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய நாடுகளின் நிர்வாகத்தின் கீழ் விடுவது.

மேலும் ஆஸ்திரியா ஜேர்மனி இணைப்பை விடுத்து ஆஸ்திரியாவை விடதலையாக்கப்பட நாடாகப் பிரித்தானியாவும் அமெரிக்காவும் ஏற்றுக் கொண்டபோதும் ரஷ்யா தொடர்ந்தும் அங்கு நிலைகொண்டு இருந்தது.

ஆஸ்திரியாவையும் அதன் தலைநகரான வியன்னாவையும் முறையே நான்கு வலயங்களாகவும் துண்டுகளாகவும் பிரித்து அவை வல்லரசுகளால் நிர்வகிக்கப்பட்டன. 1955இல. ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின்படி ஆஸ்திரியா நடுநிலை நாடாக இருக்கவேண்டும் என்ற நிபந்தனையில் சோவியத் படைகள் அங்கிருந்து வெளியேறின.

1945க்குப் பின்னர் ரஷ்யாவிற்கும் மூன்று வெற்றி நாடுகளுக்கும் இடையில் உறவுகள் சீர்குலையலாயின. இதனால் ரஷ்யா நேசநாடுகளின் கூட்டத்தைப் பகிஷ்கரித்து வெளியேறியது. அதே நேரத்தில் அமரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு இடையில் ஜேர்மன் விவகாரம் குறித்து உறவு சீராக இருந்ததுடன் இம்மூன்று நாடுகளாலும் நிச்சயிக்கப்பட்ட ஜேர்மன் பரப்புக்களுக்கு இடையேயும் தொடர்புகள் வளரலாயின.இந்தப் போக்கில் ரஷ்யா நிர்வாகத்தின் கீழ் இருந்த பரப்புக்களுக்கு ஏனைய மேற்கு நாடுகளுக்குக்கீழ் இருந்த ஜேர்மன் பரப்புக்களுக்கும் இடையே உறவு நலிவடைந்து வேறுபட்ட முறையில் செல்லலாயின. இதே போக்கு பேர்லின் நகரத்திலும் காணப்பட்டது. மேற்கு நாடுகளுக்குக் கீழ் இருந்த பேர்ளின் நகரின் மூன்று துண்டுகளும் தங்களுக்கடையே உறவை விருத்திசெய்த வேளையில் இவைக்கும் ரஷ்ய நிரிவாகத்தின்கீழ் இருந்த துண்டுக்கும் இடையே உறவு குறைவடைந்து சென்றது. 1948இல்

மேற்கு நாடுகளின் நிர்வாகத்தின் கீழ் இருந்த பேர்லின் நகருக்கான போக்குவர்தை ரஷ்யா. தடைசெய்தபோதும் மேற்கு நாடுகள் வான் வழியாக பேர்ளின் நகர மக்களுக்குத் தேவையான பொருட்களைக் கொடுத்தன. ரஷ்யா மேற்கொண்ட தடை முயற்சியால் எதிர்பார்க்கப்பட்ட பலன் கிடைக்காததால் 1949இல் இதனை விலக்குக் கொண்டது. இந்தக் தடைக்காலத்தில் 2 லட்சத்து 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விமானப் பயணங்கள் பேரிளினுக்கு இடம்பெற்றன. என்பது குறிப்பிடத்தக்கது.

1949ம் ஆண்டில் அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின்கீழ் இருந்த மூன்று வலயங்களும் ஒருங்கிணைந்து ஜேர்மன் சமஸ்டிக் குடியரசு உருவாகியது. இதுபோலவே பேர்ளினின் மேற்கு நாடுகளின் மூன்று துண்டுகளும் ஒருங்கிணைந்து தன்னாதிக்க மேற்கு பேர்ளின் நகரம் உருவாகியது. 1954ல் மேற்கு ஜேர்மன் தொடர்பாகப் பரிஸில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி 1955ல் இந்நாடு முழுமையான அரசாக மாறிஅதே ஆண்டில் வட அத்திலாந்தின் ஒப்பந்த அமைப்பில் சேர்ந்து கொண்டது.

1957ல் சாரில் (Saar) எடுத்த கருத்துக் கணிப்பின் முடிவாக இம்மாகாணம் மீண்டும் மேற்கு ஜேர்மனியின் பகுதியாக மாறியது. மேற்கு ஜேர்மனியில் ஏற்பட்ட மாற்றம் போல் 1949இல் ரஷ்யாவின் கீழ் இருந்த வலயம் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசாக மாறியது. 1953ல் இக்குடியரசு ரஷ்யாவிடம் இருந்து மேலும் அதிகாரங்களைப் பெற்றதுடன் 1955இல் வார்சோ ஒப்பந்த அமைப்பிலும் சேர்ந்து கொண்டது. இவ்விரு ஜேர்மன் அரசுகளும் படிப்படியாகச் சர்வதேச அங்கீகாரத்தைப் பெறத்தொடங்கின. ஆரம்பத்தில் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசை அங்கீகரிப்பதில் பல நாடுகள் தயக்கம் காட்டின. 1973ஆம் ஆண்டு இரு ஜேர்மனிகளும் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்றன.

1937ஆம் ஆண்டு இருந்த ஜேர்மன்(Third Reich) நாட்டு நிலப்பரப்பில் மேற்கு பேர்ளின் உட்பட மேற்கு ஜேர்மனி 52.8% நிலப்பரப்பையும் கிழக்கு ஜேர்மனி 22.9% நிலப்பரப்பையும் கொண்டிருக்க, ஓடர்–நீஸ்சுக்குக் கிழக்கே போலந்திற்கும், ரஷ்யாவிற்கும் இழந்த நிலப்பரப்பு 24.5% ஆக உள்ளது. ஜேர்மனியின் பொருளாதாரம் யுத்தத்தில்

சின்னபின்னமாக்கப்பட்டும் அதனது நகரங்கள் கிராமங்கள் நிர்மூலமாக்கப்பட்டும் கிழக்குப் பிரதேசத்தில் இருந்தும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் ஜேர்மனியர்கள் மேற்கு ஜேர்மனிக்கு லட்சக்கணக்கில் இடம்பெயர்ந்த வேளையில் மிகக்குறுகிய காலத்தில் உலகம் வியக்கத்தக்க வகையில் மேற்கு ஜேர்மனி தனது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பியது. இதற்குப் பின்னணியில் பேராசிரியர் லுட்லிக் ஏகார்ட் என்பவர் 1950களில் முக்கியமாக இருந்தார். 1960 களில் ஜேர்மனியில் தொழிலாளர் பற்றாக்குறை காரணமாகத் துருக்கி போர்த்துக்கல், இத்தாலி, யூக்கோசிலாவாக்கியா போன்ற நாடுகளில் இருந்து அதிக தொழிலாளர்களை ஜேர்மனி வரவழைத்தது. இன்று மேற்கு ஜேர்மனியின் மக்கள் தொகையில் அதிதித் தொழிலாளர் பிரிவுகளினர் 5% க்கு மேல் உள்ளனர்.

20ம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் உலக சமாதானத்துக்கு அச்சுறுத்தலாக ஜேர்மனி விளங்கியது. இது 1ஆம், 2ஆம் மகாயுத்தகாலங்களில் பங்குகொண்ட முக்கிய நாடாகும். இவ்விரு யுத்தங்களினால் இலட்சக்கணகான போர்வீரர்களும் பொதுமக்களும் போரினாலும் போர் விளைவாலும் இறந்துள்ளனர். 60 லட்சம் யூதமக்கள் நாசிகளால் கொல்லப்பட்டனர். இயற்கை எல்லையற்ற ஜேர்மனியின் அழிப்பின் காரணமாக, அதன் வாலாற்றில் அது அண்டை நாடுகளுடன் நிலப்பிரச்சினை காரணமாக, அடிக்கடி பிரச்சினைகளுக்கு உட்பட வேண்டியதாயிற்று.

ஜேர்மனிளின் சிறிய அயல்நாடுகளாக பெல்ஜியம், லக்சம்பேர்க், டென்மார்க், நெதர்லாந்து போன்ற நாடுகளின் இறைமைத் தன்னாதிக்கத்தை ஜேர்மனி மதிக்காதும், இவைகளின் சிலவற்றின் நடுநிலைக் கொள்கையை மதிக்காதும் செயற்பட்டு இருப்பதும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஜேர்மனிகள் இணைய நடவடிக்கைகளை எடுக்கமுன்னர் இரு ஜேர்மனியும் ஐக்கியப்படுவதனை ஐரோப்பிய நாடுகளும் உலக நாடுகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஐக்கிய செயற்பாட்ற்டினால் புதிய பிரச்சினைகள் தோன்றாமலிருப்பதும் ஐரோப்பாவில் தற்போதைய ஸ்திரத்தன்மை தொடர்ந்தும் பேணப்படுவதும் உறுதியாக்கப்பட வேண்டும். ஏனெனில் ஜேர்மனிகள் ஐக்கியப்படும்போது 80 மில்லியனுக்கு மேற்பட்ட மக்களைக் கொண்ட பலம் பொருந்திய பொருளாதார்த்தையும், உயர்ந்த விஞ்ஞானத் தொழில்நுட்பத்தையும் பெற்ற நடாக அது இருப்பதால் இத்தகைய பொருளாதாரத்தை, விஞ்ஞானத் தொழில்நுட்ப அறிவை இராணுவ அழிவு முயற்சிகளுக்கும் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் பின்னர் தோன்றலாம். ஐக்கிய

ஜேர்மனியே சோவியத் குடியரசுக்கு அடுத்து ஐரோப்பாவில் கூடிய மக்கள் தொகையைக் கொண்ட நாடாகத் திகழும். அத்துடன் இதுவே ஐரோப்பாவில் தொழில்கூடமாகத் திகழும். இதனால் ஐரோப்பிய நாடுகள் குறிப்பாக ஜேர்மனியின் அயல் நாடுகளுக்கும் ஜேர்மனிக்கும் இடையிலான பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு அதன் அடிப்படையிலேயே ஐக்கியத்துக்கு உட்பட வேண்டும். ஜேர்மன் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை இருப்பதை மறுக்கமுடியாது எனினும் அவர்களது ஐக்கிய முயற்றி பிற நாடுகளுக்குப் புதிய பிரச்சினையைத் தோற்றுவிக்கக்கூடாது. ஜேர்மனியின் ஐக்கியத்தை ஏனைய நாடுகள் ஏற்றுக்கொண்ட பின்னரே ஐக்கிய செயற்பாடுகள் தொடர வேண்டும். ஜேர்மன் ஐக்கிய ஏனைய நாடுகளுக்கும் சந்தேகங்களைக் களைவது முக்கியமாகும்.

2ஆம் மகாயுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட எல்லை மாற்றங்களில் புதிய மாற்றங்கள் ஏற்பட இடம் அளிக்கபடலாகாது என்பது பலநாடுகளில் இன்றைய நிலைப்பாடாகும். குறிப்பாக சோவியத்யூனியனும், போலந்தும் எல்லையில் மாற்றம்செய்ய இணங்கமாட்டா. தற்போதுள்ள எல்லைகள் ஒரு சமாதான மகாநாட்டில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது இவர்களின் நிலைப்பாடு. 2ஆம் மகாயுத்தத்தின் பின்னர் பின்வரும் முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

1. 7 ஆயிரம் சதுரமைல் கிழக்கு பிஸ்சியாவின் வடபகுதி ஜேர்மனியிடம் இருந்து சோவியத்திடம் கொண்டுக்கப்பட்டுள்ளது.

2. போலந்தில் (Curzon) கூர்சன் கோட்டுக்குக் கிழக்காகவுள்ள 69,860 சதுரமைல் நிலப்பரப்பு போலந்திடம் இருந்து சோவியத் உக்கிறேயின் பைலோறைசியா குடியரசுகளுக்கு மாற்றப்பட்டது.

3. ஒடர்–நீஸ் நகருக்குக் கிழக்காக இருந்த 38,986 சதுரமைல் நிலப்பரப்பு ஜேர்மனியிடம் இருந்து போலந்துக்குக் கொடுக்கப்பட்டது.

4. 12, 617 சதுரமையில் நிலப்பரப்பு கொண்ட செக்கோசொலாவாக்கியாவின் றுத்தேனியா மாகாணம் சோவியத்துக்குக் கொண்டுக்கப்பட்டது.

5. ரூமோனியாவின் கீழ் இருந்த மொல்டேவியா சோவியத் ஒன்றியத்தின் ஒரு குடியரசாக மாறியது.

6. 1940ஆல் போல்டிக் குடியரசுகளான எஸ்ரோனியா, லற்வியா, லுத்துவேனியா ஆகிய மூன்றும் சோவியத் ஒன்றியத்தின் குடியரசுகளாக மாறின.

7. பின்லாந்தின் பெறஸ்சாமோ மாவட்டம் சோவியத்திற்கும் மாற்றப்பட்டது. இதனால் பின்லாந்து ஆட்டிக்கடல் துறைதுகத்தையும் கடல் வழியையும் அழந்தன.

8. பின்லாந்தின் கீழ் இருந்த கறோலியன் பினிஸ் (Karolian Finnish) பிரதேசம் சோவியத்துக்குக் கைமாறி சோவியத்தின் ஒரு குடியரசாக மாறியது. பின்னர் இப்பிரதேுசம் சோவியத் ஒன்றியத்தின் ரஉஷ்யக் குடியரசின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டுள்ளது.

9. பின்லாந்திற்குச் சேர்மதியான செலின்கிராட் நகரின் அயற்பகுதிகள் சோவியத்துக்குக் கைமாறின.

ஏற்கனவே 2ஆம் மகாயுத்தத்தில் ஏற்பட்ட எல்லை மாற்றங்களைக் குறிப்பாக ஓடர் நீஸ் எல்லைப்பரப்பைப் பல நாடுகள் ஏற்றுள்ளதுடன் ஜேர்மனிகளும் ஏற்றுக் கொண்டன. கிழக்கு மேற்கு ஜேர்மனிகள் சமூக, பொருளாதார, அரசியல் பாதுகாப்பு, வெளியுறவு போன்றவற்றால் கடைப்பிடித்த கொள்கைகள், பொருளாதார இராணுவ கூட்டுகள் ஆகியன வேறுபட்டனவாக இருந்து வருவதைக் காணலாம். மேற்கு ஜேர்மனி முதலாளித்துவம் சார்பான சுதந்திர சந்தைப் பொருளாதார அமைப்பைக் கொண்டும் ஏற்றுமதிப் பொருளாதாரப் பண்பைக் கூடுதலாகக் கொண்டும் ஐரோப்பிய பொருளாதாரச் சந்தையில் முக்கிய அங்கத்துவ நாடாகவிருப்பதுடன் சுதந்திர உலகில் பிரதான ஏழு நாட்டுக் குழுவின் (Curb of seven) அங்கததுவ நாடாகவும் உள்ளது. அதேுநேரத்தில் கிழக்கு ஜேர்மனி பொதுவுடைமைச் சித்தாந்த அடிப்படையில் மையப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தைக் கொண்டதாகவுள்ளது. ஒப்பீட்டு ரீதியில் ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் பார்க்கக் கிழக்கு ஜேர்மனி சிறந்த பொருளாதாரத்தைக் கொண்டிருந்தாலும் மேற்கு ஜேர்மன் பொருளாதார உற்பத்தி அளவுதிறனுடன் ஒப்பிடமுடியாது. இது சோவியத் யூனியன் முக்கிய பங்கு வகிக்கும் கொமிக்கொன் பொருளாதார அமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ளது. ஆகவே கடந்த 45 வருடங்களாக வேறுபட்ட பொருளாதார முறை, நிறுவன அமைப்பு உறவுகளைக் கடைப்பிடித்து வந்த இரு ஜேர்மனிகளும் மீள ஐக்கியப்படுத்தல் மிகக் கடினமாக இருக்கும் எனக் கருதப்படடது.

எனினும் கிழக்க ஐரோப்பாவிலும் கிழக்கு ஜேர்மனியிலும் ஏற்படடுவரும் சமூக பொருளாதார மாற்றங்களால் இரு ஜேர்மனிகளையும் இணைப்பது கடினமாக இருக்கம் எனக் கருத இடமில்லை. இரு பொருளாதார அமைப்புக்களும் ஒன்றை ஒன்று இசைவு படுத்தக்கூடிய பண்பைப் பெற்றுள்ளன.

ஓடர் –நீஸ் போலந்து மேற்கு எல்லையாக ஜேர்மனி ஏற்றுக்கொள்ளும் போது ஜேர்மனி போலந்திடமிருந்து இரு விடயங்களில் சாதகமான நடவடிக்கைகளே எதிர்பார்க்கின்றது. ஐக்கிய ஜேர்மனியிடமிருந்து யுத்த காலத்தில் ஏற்பட்ட உயிர்ச் சேதங்களுக்கு நட்டஈடு கோராது இருந்தாலும், போலந்தில் குறிப்பாக முன்னைய ஜேர்மன் பரப்புகளில் வாழும் சிறுபான்மை ஜேர்மனியர்கள் நல்ல முறையில் போலந்து அரசால் கவனிக்கப்பட வேண்டுமென்பதாகும். இக்கருத்தை ர்சான்சலர் ஹெமட் ஹோல் வலியுறுத்திய பொழுது போலந்திலும் மற்றும் நாடுகளிலும் ஜேர்மனியின் நிபந்தனைகள் குறித்து சாதகமற்ற கருத்துக்கள் தெரிவிக்கப்படடதைக் தொடர்ந்து, மேற்கு ஜேர்மனியின் பண்ஸரக் ஓடர்–நீஸ் எல்லையை வேறுஒன்றடனும் தொடர்புபடுத்தாது ஏற்றுக்கொண்டுள்ளது.

இராணுவக் கூட்டில் மேற்கு நாட்டோவிலும், கிழக்கு ஜேர்மனி வார்சோ அமைப்பிலும் இருக்கின்றன. நாட்டோவில் அமெரிக்காவுக்கு அடுத்து மேற்கு ஜேர்மனியே முக்கிய நாடாக இருக்கின்றது.இதனால் நாட்டோ அமைப்பில் மேற்கு ஜேர்மனியாக அங்கத்துவம் பெற்றிருக்க வேண்டுமென அமெரிக்காவும், மற்றும் மேற்கு நாடுகளும் விரும்பகின்றன. போலந்து கூட ஜேர்மனி நாட்டோவில் அங்க்துவம் பெற்றிருப்பது தனது பாதுகாப்பிற்கு நல்லதென நினைக்கின்றது. ஐக்கியப்பட்ட ஜேர்மனி நாடடோ அமைப்பிலிருந்து விலகி நடுநிலையாளராக இருக்க வேண்மென ரஷ்யா விரும்பினாலும் இக்கருத்துக் குறித்து ரஷ்யா 1950களில் கொண்டிருந்த கடினநிலையை இப்பொழுது தளர்ததியுள்ளதெனலாம். ஜேர்மனி கிறீஸ்தவ ஜனநாயகக் கட்சி, ஜேர்மனி மேற்கு நாடுகளுடன் நாட்டோவுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருக்க வேண்டுமென்றும் விரும்பும்வேளை சோசலிச ஜனநாயகக் கட்சி ஜேர்மனி மேற்கு நாடுகளுடன், நாட்டோவுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருக்க வேண்டுமென விரும்பும்வேளை சோசலிச ஜனநாயகக் கட்சி ஜேர்மனியிலிருந்து அந்நிய துருப்புக்கள் யாவும் வெளியேற வேண்டுமென்றும், சுதந்திரமான நாடாக இருக்க வேண்டுமென்றும் விரும்புகிறது. மேற்கு கிழக்கு ஜேர்மனிகள் ஒற்றமைப்படும் பொழுது

ஐக்கியப்பட்ட ஜேர்மனி இயல்பாக ஐரோப்பிய பொதுச்சந்தை நாடாக மாறும் என்பதும், இதற்கான யாப்பு விதிமுறைக்கு மேற்கு ஜேர்மனியின் அடிப்படைச் சட்டத்தில் இருக்கின்றது. என்பதும் இதன்வாதம். ஆனால் ஏனைய ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகள் கிழக்கு ஜேர்மனி பகுதி பொதுச்சந்தையின் ஒரு பகுதியாக வருவதற்குச் பொதுச்சந்தையின் சில விதிகள் மாற்றப்பட வேண்டுமென்று கருதுகின்றன. மேலும் மலிவான, தரக்குறைவான கிழக்கு ஜேர்மன் பொருட்கள் பொதுச் சந்தைக்குள் வந்துவிடுமென ஐயம் கொள்கிறனர். மற்றும் பொதுச்சந்தை பொருளாதார பண்புக்கு ஏற்பக் கிழக்கு ஜேர்மன் பகுதி பொருளாதாரம் மறுசீரமைக்கப்பட வேண்டும். இத்தகைய மறுசீரமைப்பு, மற்றும் கிழக்கு- மேற்கு ஜேர்மனிகளுக்கிடையில் காணப்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை களைய 10 ஆண்டுகள் எடுக்கலாமெனவும் கருதுகின்றது. ஜேர்மனியும், பொதுச்சந்தையும் கிழக்கு ஜேர்மன் அபிவிருத்திக்குப் பிரதேச அபிவிருத்தி நிதியிலிருந்து கூடியதொகை ஒதுக்கவேண்டியநிலை உருவாகலாம் என அஞ்சப்படுகின்றது.

கிழக்கு ஐரோப்பாவின் பொருளாதாரம் நலிவுற்று இருப்பதனால் அதை மீளக் கட்டியெழுப்புவதற்குப் பெருந்தொகையான பணமும், தொழில் நுட்பமும் தேவையாக இருப்பதலால் இவற்றை மேற்கு உலகத்திடமிருந்து குறிப்பாக மேற்கு ஜேர்மனியிடமிருந்து பெறவேண்டியுள்ளது. இந்நாடுகளுக்குத் தேவையான இயந்திரங்கள், உயர்தொழில்நுட்ப சாதனங்கள் தரமான நுகர்வுப் பொருட்களை ஜேர்மனியே கொடுக்கக்கூடிய நிலையில் உள்ளது. இதனால் ஜெர்மனி தனது பொருளாதார, தொழில்நுட்ப, பணபலம் ஆகியவற்றின் மூலமும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தமது செல்வாக்கின் கீழ்க்கொண்டு வரக்கூடிய பண்பைக் கொண்டுள்ளன. மூலமும் ஏற்கெனவே சோவியத் குடியரசு, போலந்து போன்ற நாடுகளுக்குப் பெருமளவு உதவிகளைக் கொடுப்பதற்கு இந்நாடுகளுக்கும் மேற்கு ஜெர்மனிக்கும் இடையில் உடன்படிக்கைகள் பல செய்யப்பட்டு இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. தற்பொழுது ஜெர்மனியர்கள் ஐரோப்பியர்களாகத் தங்களைக் காட்ட முற்படுகிறார்கள். அல்லாமல் முன்புமாதிரி ஐரோப்பாவை ஜெர்மினியினதாகக் காட்டமுற்படவில்லை. இதனால் ஐரோப்பாவின் 35 நாடுகளின் பாதுகாப்பு கூட்டுறவுமூலமே ஜேர்மன் நாடுகளின் ஐக்கியத்தை வலுப்படுத்த முற்படுகின்றது. மேலும் யுத்தகாலத்திற்குப் பின்னர் ஏற்பட்ட எல்லை மாற்றத்தை குறிப்பாக ஒடர் - நீஸ் எல்லையை ஏற்பதாகக் கூறிவிட்டனர். மேலும் நடைமுறைத் தீர்வாக ஐக்கியப்படும் ஜெர்மனி நாட்டோவிற்குள்ளே தொடர்ந்து நிலைகொண்டு இருக்கும், ஆனாலும்

நாட்டோவின் கிழக்கு எல்லையில் மாற்றம் இருக்காது. என்றும் தற்போதைய கிழக்கு ஜேர்மனிக்குள் நாட்டோ துருப்புக்கள் நிலைகொள்ளமாட்டா என்றும் சோவியத்தின் படைகளே நிலைகொண்டு இருக்கலாம் என்ற நிலைப்பாட்டை மேற்கு ஜேர்மன் ஏற்றுள்ளது.

ஐக்கிய ஜேர்மன் புதிய பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. மேற்கு ஜேர்மனி உலகத்திற்குத் திறந்து இருப்பதன் காரணமாகக் கடந்த வருடம் 7, 20, 000 ஜேர்மனியர்கள் கிழக்கு ஜேர்மனியில் இருந்தும் கிழக்கு ஐரோப்பிய இன ஜேர்மன் மக்கள் மேற்கு ஜேர்மனிக்கு இடம்பெயர்ந்தும் உள்ளார்கள். இவ்வருடம் ஜனவரி மாதத்தில் மாத்திரமே 74,000 ஜேர்மனியர்கள் இடம்பெயர்ந்து உள்ளனர். ஜேர்மன் பிரஜா உரிமை தனியக் கிழக்கு மேற்கு ஜேர்மன் மக்களுடன் நின்றுவிடவில்லை. அது பழைய கிழக்குப் பிராந்தியங்களில் வாழும் ஜேர்மன் இன மக்களும் பெறத்தகுதியுடையவர்கள் இதனால் கிழக்கு ஐரோப்பாவிலும் பழைய கிழக்குப் பிராந்தியங்களிலும் வாழும் லட்சக்கானக்கான ஜேர்மன்கள் ஜேர்மன் இடப்பிரச்சினை தோன்ற இடநெருக்கடி மிக்க ஜேர்மனியருக்குப் போதிய வாழும் இடம் லெபொன்ஸரும் மிக்க ஜேர்மன் நாட்டுக்கு இடம்பெயரலாம். இதனால் ஏற்கெனவே இடநெருக்கடி மிக்க ஜேர்மனியில் வாழும் இடப்பிரச்சனை தோன்றச் சந்தர்ப்பம் உண்டு. 2ஆம் மகா யுத்தத்திற்கு அடிப்படையாக அமைந்த காரணங்களில் ஒன்று ஜேர்மனியருக்குப் போதிய வாழும் இடமும் பொன்ஸ்ரும் இல்லை. என்ற பிரச்சினை மீண்டும் தலைதுஸக்கலாம். மேலும் ஜேர்மனியில் தற்போது தொழில்புரியும் லட்சக்கணக்கான அதிதித் தொழிலாளர்களும் அரசியல் அகதி அந்தஸ்து கோரி நிற்கும் பலநாட்டு மக்களும் ஜேர்மனியை விட்டு வெளியேறவேண்டிய நிலையெற்படலாம் ஜேர்மனி பாரம்பரிய பாணியில் புதியதொரு வல்லரசுசாக வருவதற்கு வாய்ப்புக்கள் இல்லையென்பதே பலரது கருத்து, இதனது நிலப்பரப்பு சிறியதாகவும் (1, 35, 000 சதுர மைல்) குடிசனத்தொகை 80 மில்லியன் ஆகவும் இருப்பதுடன், ஆழ்கடல் கடல்படையோ அல்லது அனுசக்தியால் இயங்கும் படைக்கலங்களையோ கொண்டதாக இல்லை. இதனால் பாரம்பரிய அணுகுமுறையில் ஜேர்மனி வல்லரசாக மாறக்கூடிய நிலையில் இல்லை. எனினும் சமாதானம் நிலவும் காலத்தில் இந்நாட்டினது பொருளாதாரம். கைத்தொழில், வர்த்தகம், தொழில்நுட்ப அறிவு, பணம் போன்றவவைகளால் உலகில் முதல் அல்லது இரண்டாம் இடத்தையும் பெறக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருப்பதால் பொருளாதார ரீதியில் ஒரு வல்லலரசாகவே நிகழக்கூடிய வாய்ப்பைப் பெற்றுள்ளது. என்பது பலரது

கருத்து. மேலும் இதனது பொருளாதார பலமும் தொழில்நுட்ப அறிவு நிலையின் மூலம் தேவைப்படின் அது ஒரு வான்போர் ஒழுங்கு முறையை கட்டமுறப்படலாம் என்று ஆரூடம் கூறுபவரும் உள்ளனர். இதேபோல் மீண்டும் உலகத்திலும் ஐரோப்பாவிலும் ஆதிக்கம் உடையவராக வாழ வேண்டும். என்று முற்படலாம் என்றும் மீண்டும் பழிவாங்கல் நடவடிக்கையில் ஈடுபடலாம். என்றும் ஜேர்மனி குறித்துப் பயம் கொள்கின்றார்கள்.

1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மேற்கு. கிழக்கு ஜேர்மனிகள மீளவும் ஒற்றுமையாக்கப்பட்டு ஒரே நாடாகியது. 1945ம் ஆண்டு முடிந்தது. ஜேர்மன் மக்கள் தமது தந்தையர் நாடு மீளவும் ஒற்றுமை குறித்து ஏனைய ஐரோப்பிய நாடுகளில் கலப்பான உணர்வுகளெ தென்பட்டன. முன்னைய கிழக்கு ஜேர்மன் பகுதியை, அப்பகுதியின் வரலாற்றுப் பின்னணியைத் தழுவி 5 மாநிலங்களாகப் பிரித்து, ஜேர்மன் சம்ஷடிக் குடியரசுடன் இணைத்தனர்.

கிழக்கு ஜேர்மன் பகுதி ஒப்பீட்டு மேற்கு ஜேர்மன் பகுதியிலும் பார்க்கப் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ளது. இதனால் சம்ஷடிக் குடியரசும் வளம் மிக்க மாநிலங்களும், ஐரோப்பிய ஒன்றியமும் கிழக்கு ஜேர்மன் பகுதியில் பெருமளவு முதலீடு செய்து அதன் பொருளாதாரத்தில் பெருமளவு முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. சில வருடங்களில் இரு ஜேர்மன் பகுதிகளுக்கும் இடையே இருக்கும் சமூக, பொருளாதார வேறுபாடுகள் குறைவடைந்துவிடும் என எதிர்பார்க்கலாம்.

1990 களில் ஜேர்மனியில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களைப் போல் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அரசியல் மாற்றங்கள் மிகத் துரிதமாக இடம்பெற்றன. சோவியத் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இருந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தங்களை விடுவித்ததுடன் கொம்யூனிஸ்ட் அடிப்படைக் கொள்கையில் இருந்து விடுபட்டு ஜனநாயக பலகட்சி ஆட்சி முறையையும் சந்தைப் பொருளாதாரத்தையும், திறந்த தன்மையையும் ஏற்றுக்கொண்டன. போலந்து, உறங்கேரி, செக்கோசுலோலவாக்கியா, ரூமேனியா, பல்கேரியா, யூகோசுலாக்கியா நாடுகளில் அரசியல் மற்றும் சமூக பொருளாதார மாற்றங்கள் ஏற்படலாயின. செக்கோசுலோவாக்கியா செக், சுலோகவாக்கியா என இரண்டு நாடுகளாகப் பிரிந்தது. யூலோசுலோவாக்கியா குடியரசுகள் பிரிந்து சென்றபோழுது. அப்பிரிவு செயற்பாடு மிகவும் கடினமானதாக அமைந்தது.

குடியரசுகளுக்கிடையே இன சுத்திகரிப்பு, பாரிய மனித உரிமை மீறல் போன்றன. ஏற்பட்டன. யூகோசுலோவாக்கியாவில் இருந்து சேர்வியாவும் மொண்டி நிக்றோவும் சேர்வியா நாடாக மாறியன. ஏனைய குடியரசுகளான சுலோவேனியா, குரோசியா, வொஸ்னியா, மிசிடோனியா ஆகியன தனித்தனி நாடுகளாகின, சேர்வியாவில் அல்பீனியரைப் பெரும்பான்மையாகக் கொண்ட தன்னாதிக்க மாகாணமாக இருந்த கொசோவோ பிரிந்து செல்ல முற்பட்டபோது சண்டை நிகழ்ந்தது. இப்பிரச்சினையில் சர்வதேச காரணமாக சேர்வியாவின் கடினப்போக்கு தனிந்து முயற்சி தடுக்கப்பட்டது. எனினும் யூகோசுலொவாக்கியாவின் பழைய பிரதேசம் முழுவதும் ஸ்திரமற்ற நிலை தொடர்ந்து இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

1992இல் சோவியத் ஒன்றியம் உடைந்து அதிலுள்ளடங்கிய 14 குடியரசுகளும் தனித்தனி நாடுகளாக மாறின. அவைகளாவன:– ரஷ்யா, வெலுரூல், உக்ரேமின, மெல்பொல்டேலியா, லுத்துவேனியா, லற்வியா, எஸ்ரோனியா, கஷகத்தான், உக்வேஸ்தான், ரபிகல்தான், கிறைஸ்ரான், யோஜியா, ஆமொனியா, அசபஜான், இவ்வுடைவினால் ரஷ்யா முன்னர்போல் பலம்பொருந்திய வல்லரசு நிலையில் இருந்து பலம் குறைந்த ஒரு நாடாக மாறியது. சோவியத் படையணியும் கலைக்கப்பட்டது. வாசோ ஒப்பந்தம் செயல் இழந்தது, மேலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து ரஷ்யப்படை ரஷ்யாவுக்குத் திருப்பி அழைக்கப்பட்டது. 90 களின் ஆரம்பத்தில் கிழக்கு ஜேர்மனியின் இருந்து 5 லட்சம் ரஷ்ய படைகள் திருப்பி அழைக்கப்பட்டன. மேலும் கிழக்கு ஜேர்மனி, ஜேர்மன் நாட்டின் ஒரு பகுதியாக வந்ததால் நாட்டோவின் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டதாக மாறியது. ஜேர்மனியின் எல்லை நாடான போலந்து நாட்டோவில் அங்கத்துவம் பெற்றுள்ளது. இந்த அங்கத்துவத்தினால் நீண்ட பகையாளியாக இருந்த ஜேர்மனியும் போலந்தும் இராணுவ விடயங்களில் ஒன்றிணைந்து செயற்படும் நிலையேற்பட்டது. இதனால் இரு நாடுகளில் இடையே மேலும் ஒற்றுமை ஏற்படவும் வழிவகுக்கலாம்.

கிழக்கு ஜேர்மனி மேற்கு ஜேர்மனியுடன் இணைந்ததும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு பகுதியாக மாறியது. இதனால் கிழக்கு ஜேர்மன் பகுதி ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகளைக் குறிப்பான பொருளாதார மறுசீர் அமைப்பிற்கான உதவிகளைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றது. மற்றும்

கிழக்கு ஜேர்மன் மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் முழுப் பகுதிகளுக்கும் தங்களது செயற்பாடுகளை விஸ்தரிக்கவும் வாய்ப்பு ஏற்பட்டது. ஐரோப்பிய ஒன்றியத்தின் எண்ணிக்கை 6இல் இருந்து 9 ஆக அதிகரித்தது. பின்னர் 12 ஆகியது. தற்போது இதன் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது. இறுதியாக இணைந்த நாடுகளுள் ஆஸ்திரியாவும் ஒன்றாகும். ஆஸ்திரிய மக்கள். ஜேர்மன் மொழி பேசுகின்ற ஒரு இனம் ஆஸ்திரியாவும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்த ஜேர்மனிக்கு மகிழ்ச்சியாக அமைந்தது.

கடந்த காலங்களில் ஆஸ்திரியாவை ஜேர்மன் வலுக்கட்டாயமாக இணைத்ததால் ஐரோப்பியவில் பல பிரச்சினைகள் தோன்றின. ஐரோப்பிய ஒன்றியத்தின் விரிவாக்கத்தால் ஜேர்மன் பல துறைகளில் பலமடையக்கூடியதாக இருக்கின்றதுடன் இவ்விரிவாக்கத்தினால் பல ஐரோப்பிய நாடுகளில் வாழும் சிறுபான்மை ஜேர்மன் இனத்தவர்கள் ஒரு பொதுவான ஆட்சிக்குள் வரக்கூடியதாக இருக்கின்றது. இது அவர்களுடைய கலாசார வளர்ச்சியைப் பேணுவதில் பெரும் உதவியாக அமையும். குறிப்பாக இத்தாலியின் வடபகுதியில் அமைந்துள்ள பகுதியில் ஜேர்மன் மொழி பேசுகின்றவேர்களே பெரும்பான்மையாக உள்ளனர். இவர்களது. பிரச்நசினை ஐரோப்பிய ஒன்றிய விரிவாக்கத்தால் பெருமளவு தீர்க்கப்பட்டுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பெரும் நாடுகளுக்கு இடையே இலகுவான போக்குவரத்துத் குறித்து கடந்த காலங்களில் பல சட்டங்கள் மூலம் இலகுபடுத்தப்பட்டு வந்துள்ளது. இதன் உச்சமாக செக்கள் உடன்படிக்கை (Schengen Agreement) ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஒரு பொதுவான வசாமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையில் பெரிய பிரித்தானியாவும், ஐயர்லாந்தும் கைசாத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் நோடிக் நாடுகளான நோர்வே ஐசிலன்ட் ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவம் இல்லாதபோதிலும் நோட்டிக் நாடுகன் செக்கன் உடன்படிக்கையில் சேர்ந்துள்ளதை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக்கொண்டதால் இந்நாடுகளுக்கு செக்கன் உடன்படிக்கை செல்லுபடியாகும்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அறிமுகம் செய்யப்பட்ட யரோ நாணயத்தை ஐரோப்பிய ஒன்றியத்தின் 12 நாடுகள் தங்களுடைய பொது நாணயமாக ஏற்றுள்ளன. ஐரொப்பிய ஒன்றியத்தில் அங்கத்தவ நாடுகளதன ஐக்கிய இராச்சியம், டென்மார்க், சவீடன் ஆகிய நாடுகள் இன்னும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்துவ நாடுகளான ஐக்கிய இராச்சியம், டென்மார்க், சுவீடன் அகியன இன்னும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தில் பொதுவான பொருளாதாரம், வர்த்தக போக்குவரத்து, நாணயம் மற்றும் சுற்றுச்சூழல் வெறிநாட்டுக் கொள்கைகளில் ஜேர்மனியும் ஐரோப்பிய நாடுகள் பலவும் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

2ஆம் மகாயுத்தத்திற்குப் பின்னர் ஜேர்மனியை வென்ற வெற்றியாளர்கள் ஜேர்மனி மீண்டும் இராணுவ வளர்ச்சியடையாமலும் பிறநாடுகள் மீது தலையீட்டைக் குறைப்பதற்காகவும் ஜேர்மன் இராணுவத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பிற நாடுகளில் அல்லது அந்நிய மண்ணில் ஜேர்மன் துருப்புக்கள் நிலைகொள்ள முடியாதென அவர்களுடைய அடிப்படை யாப்பில் விதி சேர்க்கப்பட்டது. இதனால் நீண்ட காலமாக சர்வதேச ரீதியில் ஜேர்மன் துருப்புக்கள் இராணுவ செயற்பாட்டில் அல்லது குடியியல் செயற்பாட்டில் பங்குகொள்ளவில்லை. ஆனால் அண்மையில் இச்சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து மனிதாபிமான ரீதியில் சிறியளவில் சர்வதேச ஐக்கிய நாடுகள் சபை சமாதான முயற்சிகளுக்கு அதன் படைகளை இனுப்புவதற்கு ஏற்றமுறையில் சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

ஐக்கியப்பட்ட ஜேர்மன் கடந்த 10 வருடங்களாக ஐரோப்பாவுடன் தன்னை முற்றுமுழுதாக இணைத்துக்கொண்டும், சர்வதேச அரங்கில் தனது பங்களிப்பை அதிகதித்தும் வருவதைக் காணமுடிகின்றது. ஜேர்மனி குற்ற உணர்வுகளினால் தன்னை முன்னிலைப்படுத்தாத நிலையிலிருந்து படிப்படியாகக் குறைந்து சமாதானதம் அபிவிருத்தி போன்ற முயற்ச்சிகளுக்கு பங்குகொள்ள விரும்பி நிற்கின்றதுடன் சர்வதேச சமூகத்தில் பிரதான நீரோட்டத்துடன் இணைந்து தனது பங்களிப்பை அளிக்கவேண்டும் எனவும் விரும்புகின்றது. வருங்காலத்தில் ஜேர்மன் பல துறைகளில் பங்களிக்கும் என நாம் எதிர்பார்க்ககூடிய வாய்ப்புக்கள் தென்படுகின்றன.

# பலஸ்தீனப் பிரச்சினையும் வேறுபட்ட நிலைப்பாடுகளும்

பலஸ்தீனப் பிரச்சினையும் கடந்த 80 வருடங்களுக்கு மேலாகச் சர்லதேச அரங்கில் சிக்கலானதும், தீர்க்கப்படாததுமான விடயமாக இருந்துவசருகிறது. இதனால், அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையில் நீண்ட காலமாகப் பிணக்குகள் இருந்து வருவதுடன் முழு அளவு யுத்தங்களும் இடம்பெற்றுள்ளன. இப்பிரச்சினை முதலாம் மகாயுத்தத்தில் பிரித்தானியப்படைகள் துருக்கியைத் தோற்கடித்து, 1917ல் பலஸ்தீனத்தைக் கைப்பற்றியதிலிருந்து ஆரம்பித்ததெனலாம். இக்காலத்தில் பிரித்தானியாவின் வெளிநாட்ட அமைச்சர் பல்பர் பிரபு றொத்சைல்டி பிரித்தானியாவிலுள்ள யூத சமூகத் தலைவருள் ஒருவரான றொத்சைல்ட் பிரபுவிற்குப் பலஸ்தீனத்தில் யூதருக்கு ஒரு தாயகம் அமைப்பதற்கு உதவுவதாக வாக்குறுதி தெரிவித்து எழுதிய கடிதம் வெளியிடப்பட்டதிலிருந்து. பித்தானியாவின் நிலை பலஸ்தீனத்தில் யூதர்களின் தாயகக் ககோரிக்கைக்குச் சாதகமாக அமைந்தது. 1881, 82 லிருந்தே ரஷ்யாவிலிருந்து வந்த யூதர்களால் பலஸ்தீனத்தில் யூதக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டன. 1897ல் தியோட ஹேசலின் யூத அரசுக் கோரிக்கையின் விளைவால் பலஸ்தீனத்தில் யூதக் குடியிருப்புக்கள் அதிகரிக்கத் தொடங்கின. 1917ல் பிரித்தானியாவில் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையின் பிரகாரம் பலஸ்தீனத்தை அரபு, யூத நாடுகாகப் பிரிக்கவும், ஜெருசலம், நஸ்ரத் ஆகிய நகர்களைப் பாதுகாப்புப் பகுதிகளாகப் பிரகடனப்படுத்தவும் ஆலோசிக்கப்பட்டன. எனினும் பலஸ்தீன அராபியர்கள் இந்நாடுகளின் திட்டதைத் தெரிவித்து சிறுபான்மையர் உரிமை கொண்ட ஒரு நாட்டுத் திட்டத்தை வலியுறுத்தியமையால் பிரிவினைத் திட்டம் கைவிடப்பட்டது. இதனையடுத்து, 1939இல் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கை தனியொரு அரசை ஏற்றும் 75,000 யூதர்கள் மாத்திரம் குடியேற அனுமதிப்பதாயும் கூறப்பட்டது. இதனையும் இரு சாராரும் ஏற்கவில்லை. யூதர்களின் குடியுள்வருகை, குடியேற்றம் நிலக்கொள்வனவு, நில அபிவிருத்தி நடவடிக்கைகள் அதிகரிக்க யூதர்களுக்கும்

பலஸ்தீனர்களுக்கும் இடையே முரண்பாடுகள் வரலாயின. 2ஆம் மகாயுத்த ஆரம்பத்தில் பலஸ்தீனத்தில் யூதர்களின் எண்ணிக்கை 5 லட்சமாக அதிகரித்துள்ளது. இது மொத்த குடித்தொகையில் 30% ஆகும். 1946ல் யூதர்களின் எண்ணிக்கை 12,69,000 ஆகவும் காணப்பட்டது.

பலஸ்தீனத்தில் அராபிய யூதப் பிரச்சினைகள் தீர்க்க முடியாமல் மேலும் மேலும் சிக்கலடைய, பிரித்தானியா இப் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபையிடம் கையளித்தது. இச்சபை 1947 நவம்பர் 27ஆம் திகதி பலஸ்தீனத்தை இரண்டாகப் பிரித்து அராபியர்களுக்கும், யூதர்களுக்கும் தனித்தனியான சுதந்திர அரசுகளை உருவாக்கத் தீர்மானித்தது.மேலும் ஜெருசலம் நகரையும் சர்வதேசமயமாக்கத் தீர்மானித்தது. மேலும் பலஸ்தீனத்தைத் தனியொரு அரபு-யூதப் பரப்புக்களாகப் பிரிப்பதில் ஏற்பட்ட பிரச்சினையில், தொடர்ச்சியற்ற நிலப்பரப்புக்களைக் கொண்ட நாடுகளாக அமையும் முறையில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரிவினைத் திட்டம்" அமைந்திருந்தது. இத் தீர்மானத்தைத் தொடர்ந்து பிரித்தானியா தனது காலம் முடிவடைந்ததும் வெளியேற யூதர்கள் இஸ்ரேலைப் பிரகடனப்படுத்தினார்கள். பலஸ்தீனப் பிரிவினையை அராபியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் ஜோடானும், எகிப்தும் இஸ்ரேல் மீது படையெடுத்தபோதும், எதிர்பார்த்த முடிவு கிட்டாது 1949இல் போர் நிறுத்தத்திற்கு உடன்பட்டனர். இந்த யுத்தத்தால் இஸ்ரேலுக்கு ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட நிலப்பரப்பிலும் பார்க்க, 2000 ச.மைல் பரப்பை இஸ்ரேல் கூடுதலாகப் பெற்றது. மேலும், மேற்குக் கரையையும் ஜெருசலத்திற்கான இடைவெளியையும் கைப்பற்றி தொடர்ச்சிலான ஒரு நிலப்பரப்பைக் கொண்ட நாடாக மாற்றியது. 1950ல் ஜோர்டான், பழைய ஜெருசலம் உட்பட மேற்குக் கரையைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. காஸாப் பகுதி எகிப்தின் நிர்வாகத்தின் கீழ் அமைந்தது. இந்நிலையில், பலஸ்தீன அராபியர்களின் நிலை மேலும் சிக்கலானதுடன் இஸ்ரேலியரிடம் கண்டதோல்வி அரபிய உலகிற்கு, குறிப்பாக எகிப்துக்குப் பெரும் சவாலாக அமைந்தது. பலஸ்தீன பிரச்சினையின் விளைவாக மத்திய கிழக்கின் முடியாட்சி நாடுகள் சிலவற்றில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதுடன், எகிப்து, சிரியா, ஈராக் போன்ற நாடுகளில் இராணுவமயமாக்கமும் யுத்த முன்னேறல்களும் இடம்பெறலாயின. இஸ்ரேல் உருவாக்கம் அத்திலாந்திக்கடலில் அராபிக்கடல் வரை பரந்துள்ள ஆசிய உலகில் பௌதீக ரீதியாகப் பிரித்தது மாத்திரமல்ல அரபு நாடுகளுக்கிடையே கருத்து வேற்றுமைகளையும் உருவாக்கியது எனலாம்.

பலஸ்தீனப் பிரச்சினை காரணமாக எழுந்த அராபிய. இஸ்ரேல் பிணக்குகளால் 1949க்குப் பின்னர், 1956, 1967, 1973ம் ஆண்டுகளில் இரு பிரதிநிதிகளுக்குமிடையில் பெரும் யுத்தங்கள் இடம் பெற்றன. இஸ்ரேலுக்கும் எகிப்துக்குமிடையில் நேரடியாக மூன்றும். இஸ்ரேலுக்கும்–சிரியாவுக்கும் இடையில் இரண்டும், இஸ்ரேலுக்கும் – ஜோர்டானுக்குமிடையில் ஒன்றுமாக யுத்தங்கள் இடம் பெற்றுள்ளன. 1956ஆல் எகிப்து, சுயஸ் கால்வாயைத் தேசிய மயமாக்கினதாலும் இஸ்ரேல் நாட்டின் கப்பல்கள் கால்வாய் வழியாகப் போக்குவரத்துச் செய்வதைத்தடைசெய்ததாலும் இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் இஸ்ரேலும் சேர்ந்து எகிப்து மீது படையெடுத்தன. இவ் யுத்தத்தில் இஸ்ரேல், சினாய்ப் பகுதியைக் கைப்பற்றியது எனினும் அமெரிக்காவின் கட்டாயத்தின் பேரில் 3 நாடுகளும் எகிப்து மீது கொண்ட நடவடிக்கைகளைக் கைவிட்டதுடன், இஸ்ரேல் கைப்பற்றிய சினாய்ப் பகுதியிலிருந்தும் பின்வாங்கியது.

1967 ஆண்டு யுத்தத்தின் விளைவாக இஸ்ரேல் எகிப்திடமிருந்து காஸா சினாய்ப் பகுதிகளையும், சிரியாவிலிருந்து கோலன் குன்றையும ஜோர்டானிடமிருந்து கிழக்கு ஜெருசலத்தையும் மேற்குக் கரையையும் கைப்பற்றியது. (படம் 4)மேலும் இந்த யுத்த்தில் கைப்பற்றிய பரப்புகளுள் கிழக்கு ஜெருசலத்தை மேற்கு ஜெருசலத்துடன் இணைத்து ஐக்கியப்பட்ட நகராக்கி ஒரே நகராட்சியின் கீழ் கொண்டு வந்துள்ளது.

1967ஆம் ஆண்டு யுத்தத்தின் பின்னர் எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் சுவெஸ் கால்வாய் ஓரமாக உராய்தல் சண்டை (War ot Attrihion) நடந்ததால் கால்வாய் நகரங்கள் பெரும் அழிவுக்கு உட்பட்டன. இஸ்ரேல் 1967இல் கைப்பற்றிய நிலப்பரப்பை மீளக் கொடுக்கத் தயக்கம் காட்டியும், இவ்விடயம் பற்றிக் கதைப்பதற்கு விருப்பம் காட்டாமலும் இருந்ததாலேயே 1973ஆம் ஆண்டு யுத்தத்தை அராபியர் ஆரம்பிதனர். 1973ஆம் ஆண்டு எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தினால் சுவெஸ் கால்வாய்ப் பகுதிகளின் இரு பக்கத்திலும் இருவரும் நிலைகொண்டனர். இதனால் சர்வதேசரீதியில் பெரும் சிக்கல் உருவானதுடனட எகிப்துக்குச் சார்பாக, சோவியத் யூனியன் நேரடியாகத் தலையிடும் நிலை உருவாகியது. எனினும், சோவியத் யூனியனும் அமெரிக்காவும் ஏற்றுக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானப்படி

இருநாடுகளும் கால்வாய்ப் பகுதியிலிருந்து படைவிலகல் செய்து கொண்டனர். மேலும் 1975இல் அமெரிக்காவின் இராஜதந்திர முயற்சியால் இஸ்ரேலின் இரண்டாம் கட்டப் படைவிலகல் சினாயில் இடம் பெற்றது. இதன் மூலம் இஸ்ரேல் சினாயில் கேந்திரக் கணவாய்களான மிலிற்ரு, கிடியை எகிப்திடம் கொடுத்து, இதற்கு மாற்றாக, எகிப்து இஸ்ரேல் கப்பல்களைச் சுவெஸ்கால்வாய் வழியாகப் போக்குவரத்து செய்ய அனுமதித்தது. 1977இல் எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இருந்த உறவில் ஒரு புதிய திருப்பம் ஏற்படலாயிற்று. எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் அப்துல் நாசார் கடைப்பிடித்த கொள்கை வெற்றியளிக்காமல் பெரும் அழிவைக் கொடுத்ததால் அவர் இஸ்ரேலுடன் சமாதானம் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வந்தார். இதனை இஸ்ரேல் ஏற்றது. இதனைத் தொடர்ந்து சமாதானம் செய்தவர்களின் ஏற்ற இறக்கங்களைக் கடந்து 1979இல் அமெரிக்க இராஜீக உறவு மூலம் எகிப்துக்கும் இஸ்ரேலுக்குமிடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன் விளைவாக, எகிப்து, இஸ்ரேலை அங்கீகரித்து, இழந்த மண்ணை மீட்டெடுத்ததுடன் 1982லிருந்து இஸ்ரேல் சினாயிலிருந்து தனது படைகளை முற்றாக விலக்கிக் கொண்டது. இரு நாடுகளுக்கிடையே தாபா நிலத்துண்டுத் தொடர்பாக ஏற்பட்ட எல்லைப் பிரச்சினை சர்வதேச நீதிமன்றத்துத் தீர்ப்புக்கு விடப்பட்டு அத்தீர்ப்பின் பிரகாரம் இத்துண்டு எகிப்துக்கு மீளக் கொடுக்கப்பட்டது. மேலும் பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் வளர்ச்சியை ஏற்படுத்தவில்லை.

1973ஆம் ஆண்டு இஸ்ரேல்–சிரியா யுத்தத்தின் பின்னர் அமெரிக்க இராஜதந்திர முயற்சியால் இருநாடுகளுக்குமிடையில் படை இணைப்பிரிப்பு ஏற்பட்டது. இஸ்ரேல் 1973இல் கைப்பற்றிய பகுதிகளையும், 1967இல் கைப்பற்றிய பகுதிகளுள் குனிற்றீரா நகர் உட்பட சில பகுதிகளிலிருந்தும் தனது படையை விலக்கியது. சிரியா லெபனானில் தலையீடு செய்திருப்பதும் பெக்கா பள்ளத்தாக்கில் 30,000க்கு மேற்பட்ட படைகளை வைத்திருப்பதும் இஸ்ரேலுக்குப் பெரும் பிரச்சினையாகவுள்ளது. இஸ்ரேலுக்கும்–சிரியாவுக்குமிடையில் பகைமை நிலை காணப்படுவதுடன், பலஸ்தீனப் பிரச்சினையிலும் சிரியா கடின போக்கைக் கொண்டுள்ளது. இஸ்ரேலுடன் அது சமாதானத்தில் ஈடுபட்டு கோலான் குன்றுகளை முழுமையாக மீளப் பெற முயற்சிக்கவில்லை.

1967இல் இஸ்ரேலிடம் இழந்த கிழக்கு ஜெருலாசலம் மேற்குக் கரைப்பகுதிகளை மீளப்பெற ஜோர்டான் நீண்ட காலமாக முயற்சித்த பொழுதும் 1988ஆம் ஆண்டு இவ்விரு பகுதிகளையும் பலஸ்தீனப்பகுதியென ஏற்றுக் கொண்டு அதன் மீது கொண்டிருந்த ஏகாதிபத்திய உரிமையை விட்டுக்கொடுத்துப் பலஸ்தீன பிரச்சினையுடன் நேரடியாகக் கொண்டிருந்த தொடர்பையும் தவிர்த்துள்ளது.

1970க்கு முன்னர் லெபனானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் முக்கியமான இருபக்கப் பிரச்சினை இருக்கவில்லை. 1971ல் பலஸ்தீன விடுதலை இயக்கம் (பி.எல்.ஓ) ஜோர்டானிலிருந்து வெளியேற்றப்பட்டபோது, அவ்வியக்கம் தமது தலைமையகத்தை பெய்ரூட்டிற்கு இடம்மாற்றி, இஸ்ரேலுக்கு எதிரான தமது நடவடிக்கைகளைத் தென்லெபனானை மையமாகக் கொண்டு மேற் கொண்டது. இதனால் தென்லெபனான் பலஸ்தீன விடுதலை இயக்க நிலைகளை இஸ்ரேல் விமானத் தாக்குதலுக்கு உட்படுத்தியது. 1978இல் தென்லெபனானில் உள்ள பலஸ்தீன விடுதலை இயக்க நிலையங்களுக்கு எதிராகப் பெரிய அளவிலான யுத்தத்தை மேற்கொண்ட இஸ்ரேல், அங்கிருந்து 3 மாதங்களின் பின்னரே தனது படைகளைத் திருப்பியழைத்தது. 1981இல் பெக்காப் பள்ளத்தாக்கில் சிரியா சாம் ஏவுகணைகளை அமைத்ததால், இஸ்ரேல் இந்நிலைகளைத் தாக்கிய பின்னர் பேரூட் நகரைக் கைப்பற்றியது. பெய்ரூட் நகரைச் சுற்றிவளைத்தபோது இதற்குள் 10,000 வரையிலான பலஸ்தீன விடுதலை இயக்கம் கொரில்லாக்கள் அகப்பட்டுக் கொண்டனர். பின்னர் அமெரிக்காவின் சமரச முயற்சியினால் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைமையகம் போராளிகளுடன் அங்கிருந்து இடம்பெயர்ந்தது.

1983 வரையில் இஸ்ரேல் படைகள் லெபனானிலிருந்து பின்வாங்கியபோதும் தென்லெபனானில் தனது செல்வாக்கைக் கிறிஸ்தவப் படைகள் மூலம் செலுத்தியது. இஸ்ரேல் லெபனானில் நிலைகொண்டுள்ள ஏனைய அரபுப்படைகள் அங்கிருந்து வெளியேற வேண்டுமென்று வலியுறுத்தியபோதும் சிரியப்படைகள் தொடர்ந்தும் அங்கு நிலைகொண்டிருப்பது கவனிக்கத்தக்கது. இதனால் இஸ்ரேல் லெபனானிலுள்ள கிறிஸ்தவ ரஷியா முஸ்லீம் பிரிவினரைத் தனது செல்வாக்குக்குட்படுத்த முயற்சித்தபோதும் அதில் ஆரம்பத்தில் கிடைத்த

ஆதரவு பின் கிடைக்கவில்லை. ஹிஸ்புல்லா பிரிவினர் ஈரானில் ஏற்பட்டதொரு அரசியல் மாற்றம்போல் லெபனானில் ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பினார்கள். லெபனானில் விற்றானி ஆற்றுக்குத் தெற்காகவுள்ள பகுதிகளில் இஸ்ரேல் தலையீடு செய்வது குறித்தும், பலஸ்தீன அகதிகள் பிரச்சினை குறித்தும் மத்திய கிழக்கில் அமைதியாகவிருந்த லெபனான், பலஸ்தீனப் பிரச்சினையின் விளைவாக வெளிநாட்டுப் படைகள் நிலைகொள்ளும் இடமாகவும் உள்நாட்டில் கிறிஸ்துவ முஸ்லீம்களுக்கிடையில் இருந்த அரசியல் நல்லுறவு சீர்குலைந்து அழிவுக்குட்பட்ட நாடாகவும் திகழ்கின்றது.

1987ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து இஸ்ரேலியர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட காஸா, மேற்குக் கரைப்பகுதிகளில் ஏற்பட்ட பலஸ்தீனர்களின் கிளர்ச்சி, அமைதியின்மையைத் தொடர்ந்து இவர்களின் சுதந்திரம், தன்னாட்சிக் கோரிக்கைகள் வலுப்பெற்றுள்ளன, சுதந்திரப்போராட்டத்தில் புதிய திருப்பமேற்பட்டது. பிறரை நம்பியிராது தாங்களே தமது சுதந்திரத்துக்காகப் போராட முன்வந்தனர். இவர்களது சுதந்திரப் போராட்டத்தில் 1988இல் மேலுமொரு திருப்பமேற்பட்டது. 1988 நவம்பர் 15ஆம் திகதி அல்ஜீரியாவில் கூட்டப்பட்ட பலஸ்தீன தேசிய சபையின் விசேட கூட்டத்தில் பலஸ்தீன சுதந்திரப் பிரகடனம் வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து உலகின் பெரும்பான்மையான நாடுகள் பலஸ்தீனத்தை அங்கீகரித்தது கவனிக்கத்தக்கது.

மேலும் ஐக்கியநாடுகள் சபையில் பலஸ்தீன விடுதலை இயக்கம் அவதானிகள் அந்தஸ்த்தைப் பெற்றிருந்தபோதும், அது மேலும் பல உறுப்புநிறுவனங்களில் அங்கத்துவம் பெற முயற்சித்து வருகிறது. சர்வதேச ரீதியில் பலஸ்தீனத்துக்கு அங்கீகாரமும் அந்தஸ்தும் கிட்டியபோதும் அங்கு இஸ்ரேல் ஆட்சியே தொடர்ந்து நடைபெறுகின்றது. எனினும் பலஸ்தீனம் இஸ்ரேலை அங்கீகரிப்பதாகவும், வன்செயல்களைக் கைவிடுவதாகவும் கூறியிருப்பது முக்கிய திருப்பங்களாகும். பலஸ்தீனம் குறித்து சர்வதேச மகாநாடு நடைபெற வேண்டுமெனப் பல நாடுகள் விரும்புகின்றன. இந்நிலையில் பலஸ்தீன அரசுகுறித்து, பலஸ்தீனம் இஸ்ரேல், அராபிய, அமரிக்க மற்றும் சர்வதேச நிலைப்பாடுகளை நோக்குவோம்.

1948இல் பலஸ்தீனத்தை இரண்டாகப்பிரிப்பதற்கு பலஸ்தீனர், எதிராகவும் யூதர்கள் சாதகமாகவும் இருந்தனர். இன்று இவ்விரு பகுதியினரின் நிலைகள் அவர்களது அன்றைய நிலப்பாடுகளுக்கு நேர்மாறாகவுள்ளன.

இன்று அராபியர் பலஸ்தீனத்தில் தமக்கு ஒரு நாடு அமைக்கப்போராடும் பொழுது அதனை இஸ்ரேலியர் எதிர்த்து நிற்கின்றனர். கடந்த 40 வருடங்களாகத் தம் அயல் அராபிய சகோதர நாடுகள் இஸ்ரேலுடன் நேரடியாக யுத்தம் செய்து ஒரு விடிவைத் தோற்றுவிக்காத நிலையில் தாங்களே வன்முறையில் இஸ்ரேலுடன் போராடித் தமது தாய்நாட்டை மீட்கப் பலஸ்தீன மக்கள் முயற்சிக்கின்றார்கள். பலஸ்தீனத்தை உருவாக்கி, இஸ்ரேல் நாட்டையும் அங்கீகரித்து இருநாடுகளுக்கிடையிலான பல பிரச்சினைகளுக்கு நடைமுறைத் தீர்வு காணலாமென்பது பெரும்பான்மைப் பலஸ்தீனரின் நம்பிக்கையாகவுள்ளது. ஜெருசலம் நகரின் அந்தஸ்து காஸாவிலிருந்து மேற்குக் கரைக்கும், இஸ்ரேல் வழியாகப் போக்குவரத்து, அகதிகள் புனர்வாழ்வு மீள்வருகை போன்றவை இரு நாடுகளுக்கிடையிலான முக்கிய பிரச்சினைகளாக உள்ளன. மேலும் இஸ்ரேல் 1967ஆம் ஆண்டு எல்லைக்குத் திரும்ப வேண்டுமென்றும், காஸா மேற்குக்கரையில் அமைக்கப்பட்டுள்ள யூதகுடியிருப்புக்கள் அகற்றப்படவேண்டுமென்றும் பலஸ்தீனர் கடுமையான நிலைப்பாட்டில் இருக்கின்றனர்.

பலஸ்தீனப்பகுதியில் பிரதானமாக மூன்றுவகை நிலைப்பாடு கொண்டவர்கள் காணப்படுகின்றனர்:-

(1). மிதவாத பாரம்பரிய தலைமைத்துவத்தை ஆதரிப்பவர்கள்.
(2) பலஸ்தீன விடுதலை இயக்க நிலைப்பாட்டை ஆதரிப்பவர்கள்.
(3) கடினபோக்குள்ள தலைமைத்துவத்தை ஆதரிப்பவர்கள்.

பலஸ்தீனத்திலுள்ள மிதவாத போக்கினர் சுதந்திர பலஸ்தீனம் விரைவில் கிட்டாதாயின் ஜோர்டான் அல்லது இஸ்ரேல் மூலம் அரசியல் தீர்வைக் காண விரும்புகின்றனர். இவர்களுக்கு இஸ்ரேல், ஜோர்டான் அமெரிக்க ஆதரவு நேரடியாகவோ, மறைமுகமாகவோ கிட்டுகின்றது. சுதந்திர நாட்டிற்கு மாற்றுத் தீர்வாகக் காஸா மேற்கு கரைப்பகுதிகளில் தன்னாட்சிப் பகிர்வை இவர்கள் ஏற்கக்கூடியவர்களாகவுள்ளனர். இப்பிரிவினரை ஸ்திரப்படுத்த இஸ்ரேல் காலத்துக்குக் காலம் முயற்சி எடுத்துவருவதும், தீவிரவாதிகள் இம் மிதவாதபோக்குத் தலைவர்கள் இஸ்ரேலுக்கு உடந்தையாகவிருந்து வேலை செய்பவர்கள் என அவர்களைப் பழிவாங்கிவருவதும் குறிப்பிடத்தக்கன. பலஸ்தீனத்தில் தற்போழுது இடம்பெறும் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டுவந்து மிதவாதப் பிரிவினரிடம் தன்னாட்சியைக் கொடுக்க இஸ்ரேல் விரும்புகிறது.

பலஸ்தீன விடுதலை இயக்க ஆதரவாளர்கள் பலஸ்தீனத்தில் கூடுதலாக இருப்பதாகக் கருத இடமுண்டு. மேலும்.இவ்வியக்கத்தையே பலஸ்தீனத்தின் குரல் எனப் பலநாடுகளும் சர்வதேச நிறுவனங்களும் அங்கீகரித்துள்ளன. இவ் விடுதலை இயக்கம் காஸா மேற்குக்கரை, கிழக்கு, ஜெருசலம் உள்ளடக்கிய பகுதிகளை முழு இறைமை கொண்ட ஒரு அரசாக நிறுவ முன்னிற்கிறது. முன்னர் வன்செயலிலும் பயங்கரவாதத்திலும் ஈடுபட்டிருந்த பொழுதும் தற்பொழுது சமாதானப் பேச்சு வார்த்தை இராஜரீக, அழுத்தம் மூலமாகவே தமது பிரச்சினைக்குத் தீர்வுகாண இயக்கம் விரும்புகிறது. (படம் 5)பலஸ்தீனத்தில் கடின கோட்பாட்டாளர்களின் செல்வாக்கு இன்றும் குறைந்துவிடவில்லை. இவர்கள் சியோனிஸ இஸ்ரேலை அழித்து அராபியர்களும் யூதர்களும் வாழும் பிரதேசமாக பலஸ்தீனத்தை உருவாக்க வேண்டுமெனறு விரும்புகின்றனர். முன்னர் பலஸ்தீன விடுதலை இயக்கமும் இதே கருத்தைத்தான் கொண்டிருந்தது. இவ்வியக்கத்திலிருந்து பிரிந்து சென்ற அபுநிபால் போன்ற கடின கோட்பாட்டாளர்கள்தான் பயங்கரவாதம், வன்செயல் மூலம் இஸ்ரேலை முறியடிக்க வெண்டும் அல்லது இஸ்ரேலுக்கு எதிராகத் தொடர்ச்சியான தொல்லை கொடுக்க வேண்டுமெனறு விரும்புகின்றனர். இவர்களுகசு சிரியா, லிபியா, அல்ஜீரியா நாடுகளின் உதவி ஓரளவு கிடைத்துவந்துள்ளன. தற்பொழுது காஸா மேறகுக்கரைப் பகுதிகளில் இன்னொரு பிரிவான முஸ்லீம் அடிப்படைவாத இயக்கம் ஆயுதம் ஏந்திப் போராவேண்டுமென முனைகின்றது. பலஸ்தீனத்தில் ஹமாஸ் (Hamas) என்ற முஸ்லீம் அடிப்படைவாத இயக்கத்துக்கு பலஸ்தீன மக்கள் மத்தியில் 30வீத ஆதரவு இருக்கலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கம் ஈரானின் ஆதரவுடன் செயற்படுவதாகக் கருத இடமுண்டு.

***பலஸ்தீனப் பிரச்சினை தொடர்பாக இஸ்ரேலின் முக்கிய நிலைப்பாடு பின்வருமாறு:-***

(1) பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் எத்தகைய பேச்சிலும் இஸ்ரேல் கலந்துகொள்ள மறுத்துவருகின்றது. சர்வதேச அரங்கில் பலநாடுகள் பலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் பலஸ்தீனத்தின் முறையான பிரதிநிதியெனக்கொண்டு இதன் தலைவர் திரு. யசீர் அரபாத்துக்கு ஒரு நாட்டின் தலைவருக்ககுரிய மரியாதையையும் கொடுத்து வருகின்ற போதும்,

இஸ்ரேல் பலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் பயங்கரவாதமென்றும் இது இஸ்ரேலை அழிக்க வேண்டுமென்ற முன்னைய நிலைப்பாட்டிலிருந்து இன்னும் உண்மையான மன மாற்றத்துக்குள்ளாகவில்லையெனவும் கருதுகின்றது. இதனால் பலஸ்தீன விடுதலை இயக்கத்துடனே ஏனைய கடினபோக்குள்ள இயக்கங்கள் தொடர்பு கொள்ள விரும்பவில்லை. பலஸ்தீனத்தின் உண்மையான பிரதிநிதிகளாகவும் இவ்வியக்கத்தை ஏற்கவில்லை.

(2) காஸா மேற்குக்கரையை உள்ளடக்கிய சுதந்திரமான பூரண இறைமையைக் கொண்ட பலஸ்தீன அரசொன்று தனது 1967ஆம் ஆண்டு எல்லைக்கும் ஜோர்டான் நாட்டிற்கும் இடையில் மேலுமொரு அரசிற்கு இடமில்லையெனக் கருதுகின்றது. இப்பிராந்தியதில் புதிய பலஸ்தீன அரசு உருவாக்கப்பட்டால், இது இயங்கக்கூடிய வளங்களைப் பெற்றிருக்காததால் இது பலவீனமான அரசாகமாறி இப் பிராந்தியத்தில் மேலும் ஸ்திரமின்மையைத் தோற்றுவிக்குமென்றும் இஸ்ரேல் கருதுகின்றது. மேலும் இப்பிரதேசத்தில் சர்வதேச தலையீடுகள் அதகரிக்குமென்றும் நாளடைவில் பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்குமிடையில் பலவிடயங்கள் குறித்துப் பல பிரச்சினைகள் எழலாமென்றும், இஸ்ரேல் முழுவதையும் அல்லது அதன் சில பகுதிகளைப் பலஸ்தீனம் உரிமை கோரலாமென்றும் இஸ்ரேல் அஞ்சுகின்றது. பலஸ்தீன அரசு உருவாகுமிடத்து இஸ்ரேலுக்குள் இருக்கும் பலமான அராபிய சிறுபான்மையினர் மேலும் அந்நியப்பட்டு பலஸ்தீனத்துடன் தொடர்புகொள்ள முற்படுவார்கள் எனவும் இஸ்ரேல் கருதுகின்றது. மற்றும் காஸாவிலிருந்து மேற்குக் கரைக்கு இஸ்ரேல் நிலப்பரப்பூடாகப் போக்குவரத்து இடம் பெறவேண்டிய நிலையேற்படும். மேலும் மத்திய தரைக்கடலிலுள்ள காஸா துறைமுகம் பலஸ்தீனத்தினதும் ஜோர்டானினதும் முக்கிய துறைமுகமாக மாறும். மேற்குறிப்பிட்ட காரணங்களால் சுதந்திரமான பலஸ்தீனமொன்று ஏற்படுவதை இஸ்ரேல் விரும்பவில்லை. இதற்கு மாற்று அரசியற் தீர்வாக, விருப்பு ஒழுங்கில் பின்வரும் முறைகளில் ஒன்றினை மேற்கொண்டு பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புகிறது.

(1) காஸா, மேற்குக்கரை (ஜெருசலம் தவிர்ந்த) ஆகிய இரு பகுதிகளையும் இஸ்ரேல் நாட்டின் ஒரு பகுதியாக்கி, இவ்விரு பகுதிகளுக்கும் பொதுவானதொரு அல்லது தனித்திரண்டு தன்னாதிக்கப் பரப்புக்களை

அமைத்து அதனை அராபியர்களை ஏற்கவைப்பதன் மூலம் இப்பிரதேசங்களின் உள்ளூர் விவகாரங்களை அராபியர்களிடம் விட்டுவிட்டுப் பாதுகாப்பு மற்றும் மத்திய அரசிற்குரிய சில முக்கிய பொறுப்புக்களைத் தன்னிடம் வைத்திருக்கலாமென்று இஸ்ரேல் கருதுகின்றது. இத்தீர்வு மூலம் காஸா மேற்குக் கரையைத் தனது ஆட்சியின் கீழ் வைத்திருக்கலாமென்றும் ஜோர்டான் இஸ்ரேலின் கிழக்கெல்லையாக இருக்குமென்றும், காஸாவிலும் மேற்குக்கரையிலும் யூதக் குடியிருப்புக்கள் தொடர்ந்தும் இருக்க வழி கிடைக்கு மென்றும், இஸ்ரேலின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான தொழிலாளர் சந்தை, மூலப்பொருட்கள் வழங்கும் பகுதிகளாக காசா, மேற்குகரை தொடர்ந்து இருக்குமென்றும், இஸ்ரேல் கருதுகிறது. காஸா, மேற்குக்கரைப்பகுதிகளையும் மக்களையும் தனது ஆட்சியின் கீழ் வைத்திருப்பதுடன் தனது பாதுகாப்பு, பொருளாதார நடவடிக்கைகளுக்கு இது சாதகமாக அமையுமெனவும் இஸ்ரேல் கருதுகின்றது. மேலும் ஜோர்டான் ஆற்று ஓரமாக உருவாக்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஒழுங்கமைப்புக்களைத் தொடர்ந்தும் வைத்திருக்கலாமென்றும் இதன் மூலம் ஜோர்டானுக்கும் மேற்குக்கரைக்குமுள்ள தொடர்பினைக் கட்டுப்படுத்தலாமென்றும், நாட்டின் சர்வதேச எல்லையின் நீளமும் குறைக்கப்பட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் இலகுவாக்கப்படலாமென்றும் இஸ்ரேல் எதிர்பார்க்கின்றது.

(2) முல் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வு அராபியர்களால் ஏற்கப்படாத விடத்து, காஸா, மேற்குக்கரைப்பகுதிளை ஜோர்டானுடன் இணைப்பாட்சி அல்லது தன்னாட்சி ஒழுங்கின் அடிப்படையில் இணைத்து அதன்மூலம் அரசியல் திர்வொன்றைக் காணமுற்படுதல், மேற்குக்கரைப்பகுதி 1949–1967க்கும் இடைப்பட்ட காலத்தில் ஜோர்டானின் பகுதியாகவிருந்து. காஸாபகுதியில் வாழும் மக்களும் பாலாஸ்தீனர்கள் இதனால் இவ்விரு பகுதிகளையும் சேர்ந்த மக்கள் ஒரே ஆட்சியின்கீழ் ஒன்றாகவிருக்க விரும்புவர். ஏற்கெனவே ஜோர்டான் நாட்டின் குடித்தொகையில் குறிப்பிடத்தக்க வீதத்தினர் பலஸ்தீனர் என்பதால் காஸா மேற்குக்கரையிலுள்ள பலஸ்தீனரும் அவர்களுடன் சேரும் பொழுது ஜோர்டானின் குடித்தொகயில் இவர்கள் பெரும் பான்மையினராக இருப்பர். இதனால் பலஸ்தீனர்களின் அபிலாசைகளை ஜோர்டான் மூலமாக நிறைவேற்றிக் கொள்ளலாமென்றும் இஸ்ரேல் கருதுகின்றது.

ஜோர்டான் மத்தியதரைக் கடலில் துறைமுக வசதியைப் பெறுவதற்கும் தனது பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கும் மேற்குக்கரையையும் காஸாவையும் தனது ஆட்சிக்குட்படுத்த விரும்பியிருந்தது. எனினும, 1988இல் ஜோர்டான் இவ்விரு பிரதேசங்களின் மீது தான் கொண்டிருந்த ஏகாதிபத்திய உரிமையைக் கைவிட்டு அது பலஸ்தீனரின் நிலப்பகுதியெனக் கூறிவிட்டு, பலஸ்தீனப் பிரச்சினையில் தனது நேரடி ஈடுபாட்டைத் தவிர்த்துக் கொண்டது. இஸ்ரேல் மேற்குறிப்பிட்ட தனது திட்டத்தை ஜோர்டானின் விருப்பமில்லாமல் நிறைவேற்றிக்கொள்ள முடியாது. இதனால் இவ்விடயத்தில் ஜோர்டான் தனது தற்போதைய நிலையை மாற்றலாமென இஸ்ரேல் எதிர்பார்க்கிறது. இஸ்ரேல் இரு நோக்கங்களை அடிப்படையாக் கொண்டு இத்திட்டத்தை மாற்றுத் தீர்வாக வைத்துள்ளது. அவையாவன:- இன்னொரு அரசு ஜெருசலத்திற்கும் அம்மானுக்குமிடையில் ஏற்படுவதைத் தடுத்தல். (2) ஜோர்டான் ஆற்றுக்கு மேற்கே இன்னோரு நாட்டுப்படை இருப்பதனைத்தடுத்தல். ஜோர்டான் ஆட்சிக்குக்கீழ் மேற்குக்கரை காஸாப் பகுதிகள் மீண்டும் வருமிடத்து இப்பகுதிகளை இராணுவமயமற்றதாக்க வேண்டுமென்பது இஸ்ரேலின் நிலப்பாடு.

(3) இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்குமிடையில் சமாதானத்தீர்வு ஒன்று ஏற்பட்டாலும் கூட இஸ்ரேல் 1967ஆம்ஆண்டுக்கு முன்னைய எல்லைக்குத் திரும்ப மறுக்கிறது. முன்னைய எல்லை ஒரு போர் நிறுத்தக் கோடாக இருந்தும் பல இடங்களில் எல்லைகள் பாதுகாப்பு நோக்கில் சீராகவில்லாது உள்நோக்கியும், வெளிநோக்கியும் பல வளைவுகளைக் கொண்டிருக்கும் நிலையில் மாற்றம் ஏற்படுத்த விரும்புகிறது. மேற்குக் கரைக்கும் டெல்சுவில்க்கும் இடையில் 12மைல் தூர இடைவெளியே இருக்கிறது. இதனால் ஐக்கியநாடுகள் சபையின் 242 ஆவது இலக்கத தீர்மானப்படி 1967ஆம் ஆண்டு எல்லைக்கு இஸ்ரேல் மீளச் செல்லும்படி கேட்கப்பட்டபொழுதும், பாதுகாப்பான ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லைக்குள் இப்பகுதி நாடுகள் சுதந்திரமாக இருக்க வேண்டுமென்ற குறிப்பும் காணப்படுகின்றது. இத்தீர்மானப்படி, ஒரு சில சிறிய மாற்றங்களை மாற்றுத்தரப்பினர் ஏற்றுக் கொள்ளுமிடத்துச் செய்யலாம் என்ற கருத்து தொனிக்கின்றது. இஸ்ரேல் மேற்குக்கரையைத் திருப்பிக் கொடுத்தாலும்,

ஜோர்டான் ஆற்றையும், சாக்கடலையும் தனது பாதுகாப்பெல்லையாக வைத்துக் கொள்ளவிரும்புகிறது. 1967ஆம் ஆண்டு யுத்தத்தின் பின் மேற்குக்கரை எல்லையிலுள்ள முன்னரங்கு அராபியக்கிராமங்கள் அழிக்கப்பட்டு, அராபிய யூதர்வாழும் பகுதிகளின் எல்லையின் நீளம் குறைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

1967ஆம் ஆண்டு எல்லையை மீளாய்வு செய்யுமிடத்து அதன் நீளத்தைக் குறைப்பதிலும் பரப்பு, பாதுகாப்பு வியடயங்களிலும் தனக்குச் சாதகமான நிலைமை அமையவேண்டுமென இஸ்ரேல் எதிர்பார்க்கிறது. இதனால் காஸா, மேற்குக்கரை பகுதிகளில் புதிய எல்லைகள் வகுக்க வேண்டுமென்று எண்ணும் இஸ்ரேல் 1967ஆம் ஆண்டு எல்லையை முற்றுமுழுதாக ஏற்க முடியாததென்ற நிலையிலேயே இருக்கிறது.

(4) 1967ஆம் ஆண்டு யுத்தத்தில் இஸ்ரேல் கிழக்கு ஜெருசலத்தைக் (பழையநகரம்) கைப்பற்றி, பிரிக்கப்பட்டிருந்த ஜெருசலம் நகரின் கிழக்கு மேற்குப் பிரிவுகளை ஒன்றாக்கியது. இது ஜெருசலம், இஸ்ரேலின் பிர்க்கமுடியாத நிலைபேறுடைய நகரென்று கருதுகின்றது. கிழக்கு ஜெருசலத்திலேயே யூதர்களின் புலம்பல் மதில் (Wailling wall) அமைந்துள்ளது. ஜெருசலம் நகரைக் கைப்பற்றிய இஸ்ரேல் பழைய நகரில் மதிலுக்குட்பட்ட பழைய யூதக்குடியிருப்புப்பகுதியை மீண்டும் புனருத்தாரணம் செய்ததுடன் புலம்பல் மதிலுக்கு முன்பாகவிருந்த அராபிய வழிபிடப்பரப்பைத் துப்பரவு செய்ததால் 5000க்கு மேற்பட்ட அராபிய மக்கள் இடம்பெயர வேண்டியதாயிற்று. மேலும் கிழக்கு ஜெருசலத்தை இஸ்ரேல் இணைத்தபொழுது முடிந்தளவு கூடிய நிலப்பரப்பு வரக்கூடியதாகவும் அதேநேரத்தில் அராபியக் குடியிருப்புக்களைத் தவிர்த்தும் இணைத்துளய்ளது. 1967இல் 70,000 ஆக இருந்த கிழக்கு ஜெருசலத்தில் அராபியர்களின் எண்ணிக்கை இன்று 10,000க்கு மேற்பட்டுள்ளது. இஸ்ரேல் ஒருங்கிணைக்கப்பட்ட ஜெருசலத்தின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தி பிற நகர்களிலிருந்த நிறுவனங்களை ஜெருசலத்துக்கு நகர்த்தி இந் நகரில் குறிப்பாக கிழக்குப் பகுதியில் யூதர்களின் செல்வாக்கையும் இருப்பதையும் இக்காலத்தில் அதிகரித்துள்ளது. மேலும் பௌதீக ரீதியில் நகரின் கிழக்குப்பகுதியை யூதப் பண்பு கொண்டதாக மாற்றிவருகின்றது. இதனால் ஜெருசலத்தை விட்டுக்கொடுக்கவோ, பிரிக்கவோ இஸ்ரேல்

உடன்படமாட்டாது.ஜெருசலம் இஸ்ரேலின் தலைநகரமாக இருந்த பொழுதும் நாடுகள் இதனை ஏற்றுக் கொள்ளாது தங்கள் தூதுவராலயங்களை டெல்–ஆவீனவிலேயே வைத்துள்ளன. இங்குள்ள தூதுவராலயங்களை ஜெருசலத்துக்கு மாற்றும்படி குறித்த நாடுகளை இஸ்ரேல் கேட்டுவருவது வழக்கம். இதனால் ஜெருசலத்தை இஸ்ஆரலின் நிலைபேறுடைய, பிரிக்க முடியாத தலைநகர் எனக்கொண்டு, இந்நிலைப்பாட்டுக்குள்ளேயே அராபியர்களினதும் ஏனைய சமயத்தவர்களின் சலனங்களைப் போக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க இஸ்ரேல் உடன்படும்.

(5) இஸ்ஆரல் பகுதியிலிருந்து யுத்தங்களினாலும், மற்றும் கட்டாயப்படுத்தலினாலும் வெளியேறியும், வெளியேற்றப்பட்டும் அகதிகளாகப் பலஸ்தீனத்திலும் பிற அராபிய நாடுகளிலும் உள்ள முகாம்களில் வாழ்வோரும். வெளிநாடுகளில் வாழ்வோரும் பலஸ்தீனத்துக்கு மீண்டும் தாயகம் அதாவது இஸ்ரேலுக்குள் மீளக் குடியேறுவதை இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளாது. அராபியாவில் மீளக்குடியேறிவிட்டால் இஸ்ரேலின் குடிசனப்பண்பில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு. இஸ்ரேல் யூதப் பண்பை இழந்து விடுமென்பது இஸ்ரேலின் நிலையாகும்.

(6) பலஸ்தீனப் பிரச்சினை குறித்து சர்வதேச மகாநாடு ஒன்று கூட்டுவதை இஸ்ரேல் இன்று விரும்பவில்லை. சர்வதேச மாநாடு இடம்பெறுமிடத்து அது பலஸ்தீனருக்குச் சாதகமாக அமையும் எனவும் இங்கு பங்குபற்றும் அங்கத்துவ நாடுகள் தன்மீது கூடிய அழுத்தம் செலுத்துமெனவும், அமெரிக்கா தவிர்ந்த ஏனைய வல்லரசுகளும், மூன்றாம் உலக நாடுகளும் பலஸ்தீனப் பிரச்சினையில் சுயநலம் காண்பதில் ஈடுபடலாம் எனவும் இஸ்ரேல் கருதுகிறது. இதற்குப்பதிலாகப் பலஸ்தீனரால் தெரிவுசெய்யப்பட்ட மிதவாதப் போக்குடைய தலைமைத்துவத்துவத்துடன் நேரடியாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட அது விரும்புகிறது. அதாவது தனிநாட்டுக் கோரிக்கையை வலியுறுத்தாத பலஸ்தீனப் பிரிவினருடன் பேச விரும்புகிறது.

இஸ்ரேல் தன்னிலும் பார்க்க அயல் அராபிய நாடுகள் இராணுவ ரீதியில் பலம்பெற்றிருப்பதை விரும்பவில்லை. இராணுவரீதியில் இரு நாடுக்ள

கூடுதலாகப் பலம் பெறும்போது இஸ்ரேல் அவர்களுடன் யுத்தத்தைத் தானே முதல் தொடங்கி அவர்களின் பரப்பிலே குறுகிய. காலத்துக்குள் நடத்தி, எதிரியை முறியடிக்கும் யுத்தத்திறமுறையை இதுவரையும் கடைப்பிடித்து வந்துள்ளது. இஸ்ரேலின் நிலப்பரப்பு சிறியதாக இருப்பதால் எதிரியின் பரப்பில் சண்டையிடும் திருமுறை காணப்படுகின்றது. நாட்டு மக்களே அதாவது தொழிற் சேனையே படைவீரர்களாக மாறுவதால் நீண்டகால யுத்தம் இடம் பெறுமாயின் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படுமானதால் அது செறிவான (BLITZKRIEG) யுத்த தந்திரத்தைக் கைக்கொள்கின்றது. மேலும் அராபிய அல்லது இஸ்லாமிய உலகில் அணு ஆயத உற்பத்தி இடம்பெறுவதையும் இஸ்ரேல் விரும்பவில்லை. அணு ஆயுதம் செய்யப்படுமிடத்து அது தனக்கு எதிராகப் பயன்படுத்தலாம் என அஞ்சுகின்றது. ஈராக்கின் அணுஆராய்ச்சி நிலையத்தைத் தாக்கியதற்கு இதுதான் முக்கிய காரணமென்று கூறப்படுகின்றது.

அமெரிக்க நிலைப்பாட்டை நோக்குமிடைத்து. அது மத்திய கிழக்கில் இராணுவ ரீதியில் இஸ்ரேல் அராபியாவிலும், பலஸ்தீனத்திலும் பார்க்க மேம்பட்ட நிலையில் இருப்பதற்கு உதவவேண்டுமென்றும், பலஸ்தீன அரசு இப்பிரதேசத்தில் தோற்றுவிக்கப்படுமாயின் அது ஸ்திரமின்மையை ஏற்படுத்தக்கூடியதுடன் இஸ்ரேல் நலனையும் பாதிக்குமெனவும் கருதுகிறது. பலஸ்தீனப் பிரச்சினைக்கு ஜோர்டான் மூலம் ஒரு தீர்வு ஏற்படுவதை அமெரிக்கா விரும்புகிறது. இதனால் ஜோர்டான் மூலம் தீர்வை ஏற்கக்கூடிய பலஸ்தீனத்தைத் தலைமைத்துவத்தைப் பலப்படுத்த அது விரும்புகிறது. தற்பொழுது .ஸ்ரேல் கைப்பற்றிய பகுதிகளில் ஏற்பட்டுவரும் கிளர்ச்சியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து சாதாரண நிலையைத் தோற்றுவிக்கவும் விரும்புகிறது. பலஸ்தீனத்தில் கிளர்சசி அராபகிய உலகில் தனக்குள்ள எதிர்ப்பும் வெறுப்பும் குறைவடையலாமென அமரிக்கா உணருகிறது. பலஸ்தீனப் பிரச்சினை குறித்து சர்வதேச மகாநாடு இஸ்ரேல் விரும்புமிடத்துத்தான் இடம்பெற வேண்டுமென்றும் அமெரிக்கா விரும்புகிறது.

எகிப்து, ஜோர்டான் மற்றும் மிதவாத அரபு நாடுகள் பலஸ்தீனப்பிரச்சினையில் முன்னர் மாதிரிக் கடினப்போக்கைக் கடைப்பிடிக்க விரும்பவில்லை. பேச்சுவார்த்தைகள் மூலம் குறிப்பாக அமெரிக்கா மற்றும்

மேற்குலகம் இஸ்ரேல் மீது செலுத்தும் அழுத்தத்தின் மூலமே இப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று அவை நம்புகின்றன. சர்வதேசரீதியில் இராஜீய முறையில் இப்பரச்சினையை மேலும் முன்னெடுத்துச் செல்வதன் மூலம் இஸ்ரேலையும் அதன் நட்பு நாடான அமெரிக்காவையும் மனடாற்றத்துக்குட்படுத்தி பிரச்சினைக்குத் தீர்வுகாணலாமென மேற்குறித்த நாடுகள் நினைக்கின்றன. எனினும் லிபியா, சிரியா, அல்ஜீரியா போன்ற நாடுகள் நிலைப்பாடு இதற்கு வேறுபட்டதாக உள்ளது.

1967ஆம் ஆண்டுப் போருக்குப் பின்னர், ரூமேனியா தவிர்ந்த ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இஸ்ரேலுடன் ராஜீக உறவை முறியடித்துக் கொண்டன. ஹங்கேரி மீண்டும் இஸ்ரேலுடன் உறவை ஏற்படுத்தி உள்ளது. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பலஸ்தீனப் பிரச்சினையில் பலஸ்தீனருக்குச் சாதகமாக இருந்தாலும் இஸ்ரேலுக்கு எதிரான கடின நடவடிக்கைகளைக் குறைத்துக்கொண்டன. மேலும் கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்டுவரும் பெரும் அரசியல் மாற்றங்களினாலும் இந்நாடுகள் சர்வதேச விவகாரங்களில் சிறிது காலத்துக்கு அதிக ஈடுபாடு கொள்ளாதெக் கருத இடமுண்டு.

இத்தகைய சர்வதேச அரசியல் பின்னணியில் பலஸ்தீனரின் கிளர்ச்சி இரண்டு வருடங்களாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் ஏறக்குறைய 700க்கு மேற்பட்ட பலஸ்தீனர்களும், 50 இஸ்ரேலியரும் உயிரிழந்துள்ளனர். 10,000க்கு மேற்பட்ட பலஸ்தீனர் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். இந்த அசாதாரண கிளர்ச்சியின் மூலம் இஸ்ரேல் இராணுவம் மனத்தளர்ச்சி அமைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்நிலையில் பலஸ்தீனர் கட்டுப்பாடாகத் தொடர்ந்து போராடினால் இவர்களது நீண்டகாலப் போராட்டத்திற்குச் சாதகமாக ஒரு முடிவு கிட்டுமென்பதில் ஐயமில்லை. அமெரிக்காவின் முயற்சியினால் சமாதானத்திட்டமொன்று முன்வைக்கப்பட்டு இஸ்ரேலுக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்குமிடையில் எகிப்தின் உதவியுடன் சமரசப் பேச்சுக்கள் இடம்பெறலாமெனச் செய்திகள் வெளிவந்துள்ளன. பலஸ்தீன மக்களும், சர்வதேச சமூகமும், ஐக்கியப்பட்டுச் செயல்படுமிடத்து சுதந்திர பலஸ்தீனத்தை உண்மையில் காணும் காலம் வெகுதூரத்தில் இல்லையெனக் கருத இடமுண்டு.

. நோர்வே அரசின் முயற்சியில் மேற்கொள்ளப்பட்ட சமாதான. முயற்சியில் இஸ்ரேல் பிரதமர் திரு ராஜானுக்கும் பலஸ்தீன தலைவர் திரு. ஜசீர் அரிபத்துக்கம் இடையில் 1990 இல் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கையை Lans-Fir Real என அழைத்தனர். இவ்வுடன்படிக்கையின் இஸ்ரேல் பலஸ்தீன பகுதிகளிலிருந்து படிப்படியாக விலகுமென்றும் பலஸ்தீனர் இஸ்ரேலை அங்கீகரிப்பர் எனவும் பலஸ்தீனப பகுதியில் சுயாட்சி அமைப்பு ஏற்படுத்தப்படும் எனவும் தீர்மாணிக்கப்பட்டது. இதன் முதலில் காசாவிலும், ஜெரிக்கோலிலும் சுயாட்சி நிர்வாகம் அமைக்கப்பட்டது. இதன் பின்னர் ஏனைய பெரிய நகர்களாக ஜெரின், ரமல்லா, ஹெப்ரோண், பெத்தேலிகம் நபூலுஸ் போன்ற ஈரிஸ் நகர்கள் தற்பொழுது பலஸ்தீன அதிகாரசபையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. எனினும் 1967இல் இஸ்ரேலால் பிடிக்கப்பட்ட நிலம் முழுவதும் இன்னும் விலகவில்லை. இஸ்ரேல் பலஸ்தீன பிரச்சினை கடந்த ஒன்றரை வருடங்களாக மிக மோசமான நிலையை அடைந்துள்ளது. இருபகுதியினரிடையே 1000 மேற்பட்டோர் லியத்கெமிலால் இறந்துளளனர். இன்னமும் இரு மருங்கிலும் உயிரிழப்பு, பொருள் இழப்பு ஏற்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அமெரிக்கா, ஐரோப்பிய யூய்னின், அராபிய நாடுகள் சமாதானத்துக் பல முயற்சிகளை மேற்கொண்டு வந்தாலும், இரு. பகுதியினர் மத்தியிலுள்ள கடின கோட்பாட்டாளர்கள், சாதகமான சூழ்நிலைகள் உருவாகவிருந்ததைத் தடுத்து விடுகின்றனர். மேலும் சில விடயங்களில் இரு பகுதியினர் கடினமான நிலையிலிருப்பதும், உ+ம் ஜெருசலம் அகதிகள் மீள்வருகை போன்றன நிலைமைகளைச் சிக்கலாக்கியுள்ளது.

மேலும் இருபிரிவினருக்கும் ஒருவர் மேல் ஒருவர் நம்பிக்கையற்று இருப்பதும், சொல்லுக்கும் செயலுக்குமிடையே தொடர்பற்ற நிலை இருப்பதும் மேலும் பிரச்சினையைச் சிக்கலாக்கியுள்ளது.

இஸ்ரேல்– பலஸ்தீன பிரச்சினையை மேலும் தொடரவிடாது முடிவுக்குக் கொண்டுவரவேண்டியது குறிப்பாக அமெரிக்காவினதும், அராபியநாடுகளினதும் முக்கிய கடமையாகும். ஏனைய நாடுகள் உதவியாக இருத்தல் வேண்டும்.

# VADAMARADCHY'S DEVELOPMENT POTENTIAL

Geographically the Vadamaradchy East is a distinct region in jaffna peninsula. It is a narrow sandy strip extending Vallipuram in the North and Chundikulam to the South. The length of the sandy srtip is nearly 75k.m. and the breadth is 5k m. in the North and less than 3 k.m. in the South. The Vadamaradchy lagoon separates this region from Pachchillaipallai. Sand dunes and long sandy beach are the main physical features of the region. Nallathanithoduwai is the Southern boundary of this region and separates the jaffna District feom the Mullaitivu District.

Prior to 1940's two Maniyakar Divisions Were in existence in Vadamaradchy. They were named as vadamaradchy East and Vadamaradchy West . The vadamardchy West consisted of Udduppiddy, Valvettiturai, Kaddaiveli, Puloly and Pointpedro. Chief Village Headmen Divisions (Udayar divisions). The Vadamaradchy East Manuyakar Division consisted of the Kudathanai and the Chempiyanpattu divisions, In 1950's these two administrative divisions were amalgamated into a single DRO division namely vadamaradchy. In the late 1950's Chempiyanpattu (G S. divisions 147 & 148) was amalgamated with Pachchil. laipallai. In 1960 Vadamaradchy was divided into two electoral districts namely Point-Pedro and Uduppiddy. Based on electoral division, Vadamardchy was devided in two DRO divisions known as Vadamaradchy North

and East and Vadamaradchy South and West. The boundaries of the DRO divisions were identical with that of the electoral districts of point pedro and Uduppiddy until 1977. The boundaries of these electroral dostricts were changed in 1977 but boundaries of the AGA divisions were not changed. After the carving out of the Kilinochchi district the four G.S.DD of the Pachchilapallai AGA division Which fall under Point pedro electoral destrict remained within the Jaffna district. These G.S. Divisions Chempiyanpattu, Maruthan kerny, Mulliyan and ChundiKulam were annexed to the Vadamaradchy North and East AGA division.

The region had Papulation- of 10,678 Persons in 1971 and 13,673 Persons in 1981. The Present Population is around 15,000. The intercensal growth between 1971 to 1981 was 21,9 percent. The region had a low density of population and the density of Population in1981 was 75 Perons per sq. k.m. The following Table shows the density of poppulation by G. S. devisions.

| G. S. division (sq. km.) | Area (sq.km) | Population | Density |
|---|---|---|---|
| Kula - Karaiyoor | 12.17 | 1494 | 123 |
| Ampan | 23.75 | 1330 | 56 |
| NagarKovil | 30.00 | 1935 | 64 |
| Chempiyanpattu | 18.02 | 1947 | 108 |
| Maruthankerni | 19.56 | 4484 | 229 |
| Mulliyan | 63.40 | 2274 | 36 |
| Chundikulam | 14.29 | 20 | 14 |
| Total | 181.48 | 13673 | 75 |

The Maruthankerni G.S. division had a moderate density of population and this division includest he village of Aliyawalai, Uduyhutai, Vatharayan and Maruthankerni. Further, in had nearly one third of the population of the region.

The distribution population in the region is mainly clustered in coastal fishing settlements. Kudathanaikaraiyoor, manalkadu, koddodai, Kudareppu, Chempiyanpattu, Mamunai, Thalaiyady, Uduthurai Alliyawalai, Vatharaiyan. Vettilakerni and Kaddaikadu are the main fidhing settlements. Agriculture and fishing are important in Kudathanai, Ampan, NagarKovil, Pokkaruppu and Muliyan. In Chundikulam there are no permenant settlements except for migrant fishermen. Wadis, nearly sixty percent of the population is Roman Catho;ics and the balance is Hindus.

The settliments lack modern facilities and amentities Almost the entire region is not provided with electricitly or pipe borne water supply, The road network and transport facilities are very poor. There is only a motorble road from Point pedro to Aliyawalai. From Aliyawalai to Chundikkulam there is only a cart track available for transport: There is paucity of educational and health institutions. Most of the schools are under staffed and educational standard of the schools are very poor.

The majority of the gainfully employed population of the region is engaged in fishing. Nearly four thousand persons are working in Karavalai fishing, Karaivalai (Beach seine) is the popular method of fishing in this region during the South West Monsoon. Fishing activities are realatively low durnig

the the North East monsoon period. During the North East monsoon rainy season prawn fishing is inportant in the Elelphant pass lagoon (Eastern part) and fishermen feom other areas also migrate to Chundikulam area for prawn fishing. Agriculture activity is inisignificant. Small scale paddy cultivation and market gardening are found along the Point pedro-Aliyawalai Road. Coconuts are grown mainly as a homestead crop but there are few estates at mulliyan, Maruthankerni and Chempiyanpattu.

This is one of the regions which has untapped natural resources. Land, sand,water lagoon, long sandy beach and continental shelf are some of them. The land area of this region is nearly 185 sq. Kilo meters and the major portion of this region is uninhabited and unutilized. The land and available here could be utilized for several purposes especially for cashew, coconut, casurina, ipil ipil and joyaba cultivation. In manalkadu casurina planting has proved a successful venture and this could be developed in other areas too. The southern part can be utilized for coconut cultivation extension programme. Beside sagriculture the land could be utilizd for land settle ments purpose.

Sand available at Nagar Kovil area is popular for buliding construction. The quality and the grain size of this sand is superior to the sands available in other parts of the Jaffina peninsula. Sand dunes of manalkadu could be utilized for construction purposes Provided adequate conservation methods are taken to maintain the ecological. Government and local authorities as well as individual property oweners of the region could earn sizeable revenue from the sale of sand. Feasibility to set up a glass factory in Nagarkovil in the air for a long time.

Close attention should be paid for the establishment of a glass factory using Nagarkovil sand.

Research study revealed that Manalkadu and Nagar Kovil reegions have good underground water resource. Based on the Manalkadu water resource a market town water supply scheme was initiated to supply water to Chavakachcheri, Point pedro and Valvettiturai towns under a U.S.Aid programme. The construction work has commenced but could not be completed due to the unsettled conditions prevailing in the Jaffna district. Since the situation has now imporoved the work could be recommenced.

The Eastern part of hte Elephant pass lagoon has now been converted into a fresh water lake but it dries up un summer (June, to september). Kangrayan Aru and other streams of the main land discharge water in this lagoon is being carried to Vadamardchy by Mandalai canal. Mandalai canal is not in a proper condition at present to devirt water from the Elepant pass, lagoon to the Vadamaradvhy Lagoon. once the canal is properly rebuilt it will increase the fiow of water into the Vadamaradchy lagoon and in will in turn help the desalination and reclamation processes in the neighbouring areas of the Vadamaradchy lagoon. Land nearly 10,000 acres in extent could be reclaimed along for cultivation and pasture development. In view of many studies and proposala available for the development of the consideration should be paid now for this scheme while accommodating the interest of hte fishing community and other communities.

The region has good sandy beaches and scenic places which could be utilized towards the development of a touurist

industry. Places such as Manalkadu, Vallipuram and NagarKovil can from as centres of attraction for tourist. The entire coastal stretch form Vallipuram to Chundikulam has a prospective future for touristry. This area can be compared with Kovalam and Marina beaches of the South India.

The coastline of the region covers a length of 75 km .The fisheries resources in the coastal fishing area and deep sea fishing area are still not effectively exploited. The region has a vast potential for the development of fisheries indusrty. There was a proposal to build a fisheries harbour at Nagarkovil and this project may be given due consideration, Further fisheries based settlements coild be developed along the coast. Point pedro rehabilitation committee has also put forward proposal to build fisheries settlements in the region to accommodate 5000 fisher families. The project for rehabilitation of Karaveddy fishermen at Chundikulam which was planned earlier could be taken up for implementation.

Low density road network and poor transport facility impede the progress of this region. Though this region is close to the Jaffna. Kand trunk road. It has not been linked properly with Thenmaradchy and Pachilaipalli. This region is linked with pachilaipalli only by the Soranpattu. Maruthankerni Road. In order to improve the transport facility of the region the following roads have to be developed: 1. Nagarkovil Eluthumadduwal 2. Varani Kudathanai 3. Iyakkachchi Mandalai Kovilvaiyal Chundikulam Road 4. Aliyawalai Chundikulam Road 5. Kudathanai-Manalkadu Road 6. Minor Fisheries Poads in the region.

Point pedro- Chudikulam Road may be taken up for ·development as part of the Eastern cosral highway. Converting the above roads in to all whether economic activities to this rcgion and also to the neighbouring especially to Eluth amadduwal. Eluthumadduwal was once a prosperous market town, but it has lost its importance now. Construction of Nagarkovil Eluthumadduwal Road will help to change the economic land scape of he Eastern Vadamaradchy and Eastern Thenmaradchy.

A new A. G. A. division should be created coveing the areas from Kudathanai to (hundikulam. The proposed division may include the following divisions Kudaithanaikaraiyoor, Ampan Kudathanai, Nagarkovil North, Nagarkovil south, Chempiyanpattu, Maruthan kerni, Uduthurai, Mullian, Pokkaruppu and Chundikulam, The proposed A.G.A's division will slightly differ from the readitional vadamaradchy East area. Mulliyan, Pokkaruppu and Chundikulam G.S. divisions of mullipattu of pachilaipalli form part of the proposed A.G.A.'s division has been a long felt need of the people ot his region. Further a new pradheesiya sabha may be created for this region in order to get the people's participation in the development of this erea.

This region needs a well developed small service centre (small town) Either Maruthankerni or Nagarkovil may be chosen for the development. Maruthankerni is located midway between kudathanai and chundikulam and has more than one third of the population of the vadamaradchy East. Maruthankerni is located one junction which has transport access to Jaffna, Point pedro and Killinochchi. Few service insititions are already in

existence at Maruthankerni. Development of Maruthankarni as a important service-centre will help to improve the educational and heaith services in the region and facilitate the development of relalively undeveloped Southern part of the Vadamardchy East such as Nithayaveddai, Vettilaikerni, Kaddaikadu and Chundikulam. Nagarkovil may be developed as the second important service cntre of this area which will assist the development of the Northern part of the Eastern Vadamaradchy:

In order to give effect to this suggestion special arrangements have to be made at district and national level. 1.The destrict administration should treat this region as the most under developed region in the Jaffna District and give priority in allocationg funds for development disregarding the size of the pop lation.

II.To man various social and educational institutions adequate number of personnel may be recruited with special service conditions suited to an under developed region.

III.When siting economic and service institution prefernce may be given to this region.

IV.The plight of htis region may be brought to the notice of national and International organizations which inyolved in socio- economic up Iiftment of the rural community, i ,e. CIDA, SIDA, NORAD, Redbana, Sarvodayam ect.

V.Create awareness among the people of Jaffna about the problems and potentiality of the region.

The Vadamaradchy East region with small population edowed with potential resourves. These resources hava not been properly utilizcd upto now. If proper attention is given to the develipment of the region, the people of hte region as well as the Jaffna destrict will benefit immensely. There is evidence show that the Vadamatdchy East region and Pachchilaipalli devesion had a large population and relatively better economy earlier than at present:

In the process of development particular attention should be paid for the conservation measures relationg to removal of sand and extrations of under ground water for market towns water supply scheme. Removal of mangrove vegetation cover in the Vadamaradchy lagoon area has created a disequilibrium in the ecological balance and this situation should be arrested without delay. The development of this region should be indertaken with proper consider Vation for conservation measures of natural resources.

# POPULATION C
# AS A

| No | DIVISION | நிரந்தர அங்கத்தவர்களின் எண்ணிக்கை Permanent No. of Members | | | | இடம்பெயர்ந்த Disp |
|---|---|---|---|---|---|---|
| | | குடும்பங்களின்எண் No. of Families | ஆண் Males | பெண் Females | மொத்தம் Total | நலன்புரி நிலையங்கள் உள் In W.C.C. |
| 1 | **DELFT** நெடுந்தீவு | 1,771 | 2,619 | 2,733 | 5,352 | 0 |
| 2 | **ISLAND SOUTH** (VELANAI) தீவுகள் தெற்கு | 3,181 | 5,384 | 5,774 | 11,158 | 0 |
| 3 | **ISLAND NORTH** (KAYTS) தீவுகள் வடக்கு | 5,110 | 7,493 | 8,305 | 15,798 | 0 |
| 4 | **JAFFNA** யாழ்ப்பாணம் | 11,005 | 18,687 | 20,352 | 39,039 | 10 |
| 5 | **NALLUR** நல்லூர் | 16,880 | 27,741 | 30,184 | 57,925 | 0 |
| 6 | வலிகாமம் தென்மேற்கு **VALI SOUTH WEST** (SANDILIPAY) | 11,515 | 20,246 | 22,887 | 43,133 | 449 |
| 7 | **VALI WEST** (CHANKANAI) வலிமேற்கு | 9,877 | 15,539 | 17,124 | 32,663 | 441 |
| 8 | **VALI SOUTH** (UDUVIL) வலிதெற்கு | 10,835 | 16,736 | 19,480 | 36,216 | 462 |
| 9 | வலிவடக்கு **VALI NORTH** (TELLIPPALAI) | 5,295 | 8,812 | 9,902 | 18,714 | 239 |
| 10 | **VALI EAST** (KOPAY) வலி கிழக்கு | 17,866 | 28,431 | 30,729 | 59,160 | 160 |
| 11 | தென்மராட்சி **THENMARADCHY** (CHAVAKACHCHERI) | 1,912 | 2,889 | 3,107 | 5,996 | 0 |
| 12 | வடமராட்சி தென்மேற்கு **VADA SOUTH WEST** (KARAVEDDY) | 12,970 | 21,781 | 24,336 | 46,167 | 680 |
| 13 | வட வடக்கு **VADA NORTH** (POINT PEDRO) | 15,196 | 23,152 | 25,061 | 48,213 | 1,170 |
| 14 | வடமராட்சி கிழக்கு **VADA EAST** (MARUTHANKERNY) | 787 | 1,358 | 1,466 | 2,824 | 0 |
| | TOTAL (JAFFNA DISTRICT) | 124,200 | 200,868 | 221,490 | 422,358 | 3,611 |
| 15 | பச்சிலைப்பள்ளி **PACHCHILAIPALLI** (PALLAI) | 0 | 0 | 0 | 0 | 0 |
| | TOTAL (JAFFNA PENINSULA) | 124,200 | 200,868 | 221,490 | 422,358 | 3,611 |

## ATION OF JAFFNA PENINSULA
## AS AT 31-10-2001

| இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை Displaced No. of Families | | | இடம்பெயர்ந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை Displaced No. of Members | | | மொத்த குடிசனத் தொகை Total Population | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நலன்புரி நிலையங்கள் உள் In W.C.C. | நலன்புரி நிலையங்களுக்கு வெளியில் OUT SIDE W.C.C. | மொத்தம் Total | ஆண் Males | பெண் Females | மொத்தம் Total | குடும்பங்களின்எண். No. of Families | ஆண் Males | பெண் Females | மொத்தம் Total |
| 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1,771 | 2,619 | 2,733 | 5,352 |
| 0 | 145 | 145 | 287 | 323 | 610 | 3,326 | 5,671 | 6,097 | 11,768 |
| 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 5,110 | 7,493 | 8,305 | 15,798 |
| 10 | 929 | 939 | 1,600 | 1,877 | 3,477 | 11,944 | 20,287 | 22,229 | 42,516 |
| 0 | 4,465 | 4,465 | 6,771 | 8,269 | 15,040 | 21345 | 34,512 | 38,453 | 72,965 |
| 449 | 1,810 | 2,259 | 3,886 | 4,631 | 8,517 | 13,774 | 24,132 | 27,518 | 51,650 |
| 441 | 2,045 | 2,486 | 4,189 | 4,784 | 8,973 | 12,363 | 19,728 | 21,908 | 41,636 |
| 462 | 5,205 | 5,667 | 9,187 | 10,676 | 19,863 | 16,502 | 25,923 | 30,156 | 56,079 |
| 239 | 1,021 | 1,260 | 1,820 | 1,870 | 3,690 | 6,555 | 10,632 | 11,772 | 22,404 |
| 160 | 2,650 | 2,810 | 5,336 | 5,890 | 11,226 | 20,626 | 33,767 | 36,619 | 70,386 |
| 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1,912 | 2,889 | 3,107 | 5,996 |
| 680 | 5,752 | 6,432 | 11,820 | 13,250 | 25,070 | 19,402 | 33,601 | 37,636 | 71,237 |
| 1,170 | 4,803 | 5,973 | 11,219 | 11,340 | 22,559 | 21,169 | 34,371 | 36,401 | 70,772 |
| 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 787 | 1,358 | 1,466 | 2,824 |
| 3,611 | 28,825 | 32,436 | 56,115 | 62,910 | 119,025 | 156,636 | 256,983 | 284,400 | 541,383 |
| 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 3,611 | 28,825 | 32,436 | 56,115 | 62,910 | 119,025 | 156,636 | 256,983 | 284,400 | 5 41,383 |



*பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளையின் இத் தனையாண்டுக்காலப் பல்கலைக்கழக முகாமை யாழ்.பல்கலைக்கழகத்திற்கு ஒரு ஸ்திரப்பாட்டைக் கொடுத்துள்ளது.*

*யாழ்பல்கலைக்கழகம் இலங்கையின் முக்கிய ஒரு பல்கலைக்கழகமாக இருக்கின்ற அதேவேளை யில் நியாயபூர்வமான நிலையில் இலங்கைத் தமி ழரின் சிந்தனையோட்டச் சுட்டியாகவும் விளங்கு கின்றது.*

*பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை யாழ். பல்கலைக்கழகத்தின் பௌதிக வளங்களையும் புலமை வளங்களையும் மேலும் மேலும் பெருக்கு வாராக.*

**– பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி.**

திருவள்ளுவர் ஓவ்(f)செற் கம்பியூட்டர் பிறிண்டிங், நல்லூர், யாழ்ப்பாணம்.